APPOLO STUDY CENTRE CHENNAI

# APPOLO STUDY CENTRE

**UNIT VIII**

**HISTORY, CULTURE, HERITAGE AND SOCIO- POLITICAL MOVEMENTS IN TAMIL NADU**

**TEST -10**

| | | |
|---|---|---|
| Role of TamilNadu in Freedom struggle, Early Agitations against British Rule- Role of Women in Freedom Struggle | | |
| 8th term 1 | Unit 4 | மக்களின் புரட்சி |
| 10th History | Unit 6 | ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள் |
| | Unit 9 | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் |
| 11th term 2 | Unit 18 | ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்ககால எதிர்ப்புகள் |
| Evolution of 19th and century Socio Political Movements in tamilnadu-Justice Party, Growth of Rationalism- Self Respect Movement, Dravidian Movementsand Principles underlying both these movements, Contributions of Thanthai Periyar, Contributions of Perarignar Anna | | |
| 10th History | Unit 9 | தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம் (9.3-9.4) |
| | Unit 10 | தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்(10.2-10.4) |
| 11th political science vol- 2 | Unit 14 | தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி |
| | Unit 15 | தமிழக அரசியல் சிந்தனைகள்(15.5) |

8ம் வகுப்பு
மக்களின் புரட்சி

**அறிமுகம்:**

1857 ஆம் ஆண்டு பிளாசிப் போருக்குப் பின் நாட்டின் அரசியல், சமூக – பொருளாதார நிலையைப் பாதிக்கும் வகையில் ஆங்கிலேயரால் நாட்டின் ல பகுதிகளில் அரசியல் மற்றும் பொருளாதார ஆதிக்கம் ஏற்படுத்தப்பட்டது. இது பல திறன்மிக்க நிலக்கிழார்கள் மற்றும் தலைவர்களிடையே அதிகார வேறுபாட்டிற்கு வழிகோலியது. இயற்கையாகவே அவர்களுள் பலர் ஆங்கிலேயர்களுக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டனர். ஆங்கிலேயர்கள் பாளையக்காரர்களிடமிருந்து வருடாந்திர கப்பம் வசூலிக்கும் உரிமை பெற்றிருந்ததாகக் கருதப்படுகிறது. ஆங்கிலேயர்களுக்கு முதல் எதிர்ப்பு பூலித்தேவரால் எற்பட்டது. அவருக்குப்பின் மற்ற பாளையக்காரர்களான வீரபாண்டிய கட்டமொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்கள் மற்றும் தீரன் சின்னமலை ஆகியோரும் ஆங்கிலேயருக்கெதிரான எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

பாளையங்களின் தோற்றம்:

விஜய நகர ஆட்சியாளர்கள் தங்கள் மாகாணங்களில் நாயக்கர்களை நியமித்தனர். இதையொட்டி மதுரை நாயக்கர் பாளையக்காரரை நியமித்தார். 1529 ல் விஸ்வநாதர் மதுரை நாயக்கரானார். இவரால் தனது மாகாணங்களில் அதிகாரங்களைப் பெற விரும்பிய சிறுகுடித் தலைவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் அவரது அமைச்சர் அரியநாதருடன் கலந்தாலோசித்து 1529ல் பாளையக்காரர் முறையை ஏற்படுத்தினார். அதன்மூலம் நாடு 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாளையமும் ஒரு பாளையக்காரரின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு பாளையக்காரரும் ஒரு பிரதேசத்தின் அல்லது பாளையத்தின் உரிமையாளராக கருதப்பட்டார். இந்த பாளையக்காரர்கள், நாயக்கர்களுக்கு தேவை ஏற்படும் போது இராணுவம் மற்றும் இதர உதவிகளை முழு மனதுடன் செய்தனர். பாளையக்காரர்கள் வரிகளை வசூலித்து, தாங்கள் வசூலித்த வரிப்பணத்தில் மூன்றில் ஒரு பங்கினை மதுரை நாயக்கர்களுக்கும், அடுத்த மூன்றில் ஒரு பங்கினை இராணுவ செலவிற்கும் கொடுத்துவிட்டு மீதியை அவர்கள் சொந்த செலவிற்கு வைத்துக் கொண்டனர்.

தென்னிந்தியாவில் தொடக்ககால புரட்சிகள்:

பாளையக்காரர்களின் புரட்சி:

17 மற்றும் 18 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் அரசியல் பாளையக்காரர்கள் முக்கிய பங்கு வகித்தனர். அவர்கள் தங்களை சுதந்திரமானவர்களாகக் கருதிக்கொண்டனர். பாளையக்காரர்களிடையே இரண்டு பாளையங்கள் (முகாம்கள்) இருந்தன. அவை கிழக்கு பாளையம் (முகாம்), மேற்கு பாளையம் (முகாம்) என்பன ஆகும். கிழக்கு பாளைங்களில் இருந்த நாயக்கர்கள் கட்டபொம்மனின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர். மேற்கு பாளையங்களில் இருந்த மறவர்கள் பூலித்தேவரின் கட்டுப்பாட்டின் கீழ் ஆட்சி செய்தனர். இந்த இரண்டு பாளையக்காரர்களும் ஆங்கிலேயருக்கு கப்பம் (kisk) கட்ட மறுத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

பாளையக்காரர்களுக்கும், கிழக்கிந்திய கம்பெனிக்குமிடையே ஆரம்ப கால போராட்டங்கள் அரசியலில் ஒரு வலிமையான பரிணாமத்தைப் பெற்றன. 1792 ஆம் ஆண்டு கர்நாடக உடன்படிக்கையால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆங்கிலேய அதிகாரம் பாளையக்காரர்களின் மீது செலுத்தப்பட்டது. இந்த உடன்படிக்கையின் படி ஆங்கிலேயர்கள் வரிவசூல் செய்யும் உரிமையையும் பெற்றனர்.

**பூலித்தேவர்:**

இந்தியாவில் ஆங்கில ஆட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாட்டில் முன்னோடியாக இருந்தவர் பூலித்தேவர் ஆவார். அவர் திருநெல்வேலியின் அருகிலிருந்த நெற்கட்டும் செவல் என்ற பாளையத்தின் பாளையக்காரர் ஆவார். அவரது ஆட்சிக் காலத்தில் ஆற்காட்டு நவாபான முகமது அலிக்கும் ஆங்கிலேயருக்கும் கப்பம் கட்ட மறுத்து அவர்களை எதிர்க்கத் தொடங்கினார். எனவே ஆற்காட்டு நவாப் மற்றும் ஆங்கிலேயரின் கூட்டுப்படைகள் பூலித்தேவரைத் தாக்கின. ஆனால் அக்கூட்டுப் படைகள், திருநெல்வேலியில் பூலித்தேவரால் தோற்கடிக்கப்பட்டன. இந்தியாவில், ஆங்கிலேயருடன் போரிட்டு அவர்களைத் தோற்கடித்த முதல் இந்திய மன்னர் பூலித்தேவரே ஆவார். இந்த வெற்றிக்குப் பிறகு பூலித்தேவர் நவாப் மற்றும் ஆங்கிலேயரை எதிர்க்க பாளையக்காரர்களின் கூட்டமைப்பை உருவாக்க முயன்றார்.

1759 ல் யூசுப்கான் தலைமையிலான ஆற்காடு நவாப்பின் படைகள் நெற்கட்டும் செவலைத் தாக்கின. அந்தநல்லூரில் பூலித்தேவர் தோற்கடிக்கப்பட்டார். 1761ல் ஆற்காடு நவாப்பின் படைகள் நெற்கட்டும் செவ்வலைக் கைப்பற்றிது. பூலித்தேவர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து 1764ல் நெற்கட்டு செவ்வலைக் மீண்டும் கைப்பற்றினார். பிறகு அவர் 1767 ல் கேப்டன் கேல்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். பின்னாளில் பூலித்தேவர் தப்பித்து தலைமறைவாக வாழ்ந்து, தனது நோக்கம் நிறைவேறாமலேயே இறந்து போனார். இருந்தாலும் விடுதலைக்கான அவரது துணிச்சலான போராட்டம் தென்னிந்திய வரலாற்றில் நிலைத்து நிற்கிறது.

**வீரபாண்டிய கட்டபொம்மன்:**

கட்டபொம்மனின் முன்னோர்கள் ஆந்திராவைச் சேர்ந்தவர்கள். 11ஆம் நூற்றாண்டில் அவர்கள்

தமிழ்நாட்டிற்கு இடம் பெயர்ந்தனர். பாண்டியர்களின் கீழ் நிலமானிய அடிப்படையில் பாஞ்சாலங்குறிச்சியைத் தலைநகராகக் கொண்டு ஜெகவீரபாண்டிய கட்டபொம்மன், வீரபாண்டியபுரத்தை ஆட்சி செய்தார். பின்னர் நாயக்கர்களின் ஆட்சியில் பாளையக்காரரானார். ஜெகவீரபாண்டியனுக்குப்பின் அவரது மகன் வீரபாண்டிய கட்டபொம்மன் பாளையக்காரரானார். அவரது மனைவி ஜக்கம்மாள், சகோதரர்கள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா ஆவர்.

**ஆற்காடு நவாப்:**

விஜயநகரப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் முகலாயர்கள் தெற்கில் தங்கள் மேலாண்மையை நிறுவினர். கர்நாடகாவில் நவாப் முகலாயர்களின் பிரதிநிதியாக செயல்பட்டார். பஞ்சாலங்குறிச்சி பாளையமும் நவாப்பின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டது. எனவே அது, நவாப்பிற்கு கப்பம் (வரி) கட்ட பணிக்கப்பட்டது. ஆனால் 1792 ல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கை அரசியல் நிலைமைகளை முற்றிலும் மாற்றியது. கம்பெனி, பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து வரி வசூல் செய்யும் உரிமையையும் பெற்றது. கப்பம் வசூலித்ததே கட்டபொம்மனுக்கும், ஆங்கிலேயருக்குமிடையேயான மோதலுக்கான முதன்மை காரணமானது.

**கட்டபொம்மன் - ஜாக்சன் சந்திப்பு:**

இராமநாதபுர கலெக்டர் காலின் ஜாக்சன் 1798 ல் நிலுவைத் தொகையை செலுத்தச் சொல்லி கட்டபொம்மனுக்கு கடிதங்கள் எழுதினார். கட்டபொம்மனும் நாட்டின் பஞ்சத்தின் காரணமாக நிலுவையைச் செலுத்தும் சூழ்நிலையில் தான் இல்லை என்று பதில் எழுதினார். எனவே கோபமடைந்த ஜாக்சன் கட்டமொம்மனைத் தண்டிக்க ஒரு படையை அனுப்ப முடிவு செய்தார். இருப்பினும் சென்னை அரசாங்கம், கட்டபொம்மனுக்கு அழைப்பு அனுப்பி இராமநாதபுரத்தில் ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யும் படி கலெக்டருக்கு வழிகாட்டியத,

1798ல் கட்டபொம்மன் தனது அமைச்சர் சிவசுப்பிரமணியத்துடன் இராமநாதபுரத்தில் கலெக்டரை சந்தித்தார். 1080 பகோடா பாக்கியை தவிர பெரும்பாலான வரியை கட்டபொம்மன் செலுத்திவிட்டதை கணக்குகள் சரிபார்த்தலுக்குப் பின் அறிந்த ஜாக்சன் சமாதானமடைந்தார். இந்த சந்திப்பின் பொழுது கட்டபொம்மனும் அவரது அமைச்சர் சிவசுப்பிரமணியமும் ஜாக்சனின் முன் மூன்று மணி நேரம் நிற்கவைக்கப்பட்டனர். கலெக்டர், கட்டபொம்மனையும், அவரது அமைச்சரையும் அவமானப்படுத்தி கைது செய்ய முயற்சி செய்தார். கட்டபொம்மன் தனது அமைச்சருடன் தப்பிக்க முயன்றார். உடனே ஊமைத்துரை, தனது வீரர்களுடன் கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்பிக்க உதவி செய்தார். ஆனால் துரதிஷ்டவசமாக சிவசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார்.

**எட்வர்டு கிளைவ் மற்றும் கட்டபொம்மன்:**

பாஞ்சாலங்குறிச்சி திரும்பிய பின் கட்டபொம்மன் கலெக்டர் காலின் ஜாக்சன் அவரிடம் நடந்து கொண்டதை விவரித்து சென்னைக் கவுன்சிலுக்கு ஒரு கடிதம் எழுதினார். கடித்தைக் கண்ட சென்னை கவுன்சிலின் கவர்னர் எட்வர்டு கிளைவ் கட்டபொம்மனை சரணடைய ஆணையிட்டார். சென்னை கவுன்சில், கட்டபொம்மனை ஒரு குழுவின் முன்னிலையில் வர கோரியது. இதற்கிடையில் சிவசுப்பிரமணியம் விடுதலை செய்யப்பட்டதுடன், கலெக்டர்

ஜாக்சன் அவருடைய தவறான அணுகுமுறைக்காக பதவி நீக்கமும் செய்யப்பட்டார். அவருக்குப்பின் கலெக்டராக S.R. லூஷிங்டன் நியமிக்கப்பட்டார்.

**பாளையக்காரர்களின் கூட்டமைப்பு:**

இச்சூழ்நிலையில் சிவகங்கையின் மருது பாண்டியர், அருகில் இருந்த பாளையக்காரர்களை ஒன்றிணைத்து ஆங்கிலேயர்களுக்கு எதிராக "தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் கூட்டமைப்பு" ஒன்றை உருவாக்கினார். இந்த கூட்மைப்பு ஓர் பிரகடனத்தை வெளியிட்டது. அது "திருச்சிராப்பள்ளி அறிக்கை" என அழைக்கப்பட்டது. கட்டபொம்மன் இந்த கூட்டமைப்பின் மீது ஆர்வத்துடன் இருந்தார். இந்த கிளர்ச்சி கூட்டமைப்பில் இணைய மறுத்த சிவகிரி பாளையத்தின் மீது கட்டபொம்மன் தனது செல்வாக்கை செலுத்த முயன்றார். கட்டபொம்மன் சிவகிரியை நோக்கி முன்னேறினார். சிவகிரி பாளையக்காரர், கம்பெனிக்கு கப்பம் கட்டுபவராக இருந்ததால் கம்பெனி, கட்டபொம்மனின் சிவகிரி மீதான படையெடுப்பு தங்கள் அதிகாரத்திற்கு விடப்பட்ட சவாலாகக் கருதினர். எனவே கம்பெனியின் படைகள் பாஞ்சாலங்குறிச்சி நோக்கி செல்ல ஆணையிடப்பட்டது.

**பாஞ்சாலங்குறிச்சி வீழ்தல்:**

1799 செப்டம்பர் ஐந்தாம் நாள் மேஜர் பானர்மேன் தன்னுடைய படையை பாஞ்சாலங்குறிச்சியை நோக்கி நகர்த்தினார். ஆங்கிலேயப்படை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையின் அனைத்து செய்தித்தொடர்புகளையும் துண்டித்தது. கள்ளர்பட்டியில் நடந்த சண்டையில் சிவசுப்பிரமணியம் கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச்சென்றார். களப்பூர் காடுகளில் மறைந்திருந்த கட்டபொம்மனை புதுக்கோட்டை ராஜா விஜயரகுநாத தொண்டைமான் கைது செய்து கம்பெனியிடம் ஒப்படைத்தார். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை வீழ்ந்தபிறகு, பானர்மேன் கைதிகளை பாளையக்கரர்களின் அவைக்கு அழைத்து சென்று ஒரு விசாரணைக்குப் பிறகு அவர்களுக்கு மரணதண்டனை விதித்தார். நாகலாபுரத்தில் சிவசுப்பிரமணியம் சிரச்சேதம் செய்யப்பட்டார். அக்டோபர் 16 ஆம் நாள் பாளையக்காரர் அவையின் முன் கட்டபொம்மன் விசாரிக்கப்பட்டார். அடுத்த நாள் அக்டோபர் 17, 1799 அன்று கட்டபொம்மன் கயத்தாறு கோட்டையில் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறான கட்டபொம்மனின் வீரம் பற்றி பல நாட்டுப்புற கதைப்பாடல்கள் இன்றும் பெருமையாக கூறுகின்றன. அவை அவருடைய நினைவை மக்களிடையே நீங்காமல் வைத்திருக்கின்றன.

**வேலு நாச்சியார்:**

சிவகங்கையின் இராணி வேலுநாச்சியார் ஆவார். இவர் 16 ஆம் வயதில் சிவகங்கையின் இராஜா முத்து வடுகநாதருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டார். 1772ல் ஆற்காடு நவாப் மற்றும் பிரிட்டிஷ் படைகள் சிவகங்கையின் மீது போர் தொடுத்தன. அப்படை, முத்துவடுக நாதரை களையார்கோயில் போரில் கொன்றது. வேலுநாச்சியார் தனது மகள் வெள்ளச்சி நாச்சியாருடன் தப்பித்து, திண்டுக்கல் அருகில் உள்ள விருப்பாச்சியில் கோபால நாயக்கர் பாதுகாப்பில் வாழ்ந்தார். இந்த காலகட்டத்தில் அவர் ஒரு படையை அமைத்து, ஆங்கிலேயர்கள் தங்கள் ஆயுதங்களை எங்கு சேமித்து வைத்திருக்கிறார்கள் என்பதை தனது நுண்ணறிவு படைப்பிரிவின் உதவியுடன் கண்டறிந்தார். பின்னர், தனது நம்பிக்கைக்குரிய படைத்தளபதி மற்றும் தொண்டர், குயிலி என்பவரால் ஒரு தற்கொலை தாக்குதலுக்கு ஏற்பாடு செய்தார். மருது சகோதரர்களின் உதவியுடன் சிவகங்கையைக் கைப்பற்றி மீண்டும் இராணியாக முடிசூட்டிக்கொண்டார். இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் (இந்தியப்) பெண்ணரசி ஆவார். இவர் தமிழர்களால் "வீரமங்கை" எனவும் "தென்னிந்தியாவின் ஜான்சிராணி" எனவும் அறியப்படுகிறார்.

**மருது சகோதரர்கள்:**

மருது சகோதரர்கள் பொன்னாத்தாள் மற்றும் மூக்கைய்யா பழனியப்பன் ஆகியோரின் மகன்கள் ஆவர். மூத்த சகோதரர் பெரிய மருது (வெள்ளை மருது) எனவும், இளைய சகோதரர் சின்ன மருது எனவும் அழைக்கப்பட்டனர். இவற்றில் மருது பாண்டியன் என்றழைக்கப்பட்ட சின்ன மருது பிரபலமானவர். சின்ன மருது, சிவகங்கையின் மன்னர் முத்துவடுக நாத பெரிய உடையதேவரிடம் (1750 -1772) பணிபுரிந்தார். 1772 ல் ஆற்காடு நவாப்பின் படைகள் சிவகங்கையை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றியது. இப்போரின்

போது முத்து வடுகநாத பெரிய உடையதேவர் போரில் இறந்தார். இருப்பினும் சில மாதங்களுக்குப் பிறகு, சிவகங்கை மருது சகோதரர்களால் மீண்டும் கைப்பற்றப்பட்டு பெரிய மருது, அரசராக பொறுப்பேற்றார். சின்னமருது அவரது ஆலோசகராக செயல்பட்டார். ஆங்கிலேயர்களுக்கெதிரான தீவிர நடவடிக்கைகளின் காரணமாக அவர் "சிவகங்கை சிங்கம்" என அழைக்கப்பட்டார். பதினெட்டாம்ட நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவில் மருதுசகோதரர்களால் ஆங்கிலேயர்களுக்கெதிரான கிளர்ச்சி நடைபெற்றது.

**மோதலுக்கான காரணங்கள்:**

கட்டபொம்மனின் இறப்பிற்கு பின், அவருடைய சகோதரர் ஊமைத்துரையும் மற்றவர்களும் சிவகங்கைக்குத் தப்பினர். அங்கு அவர்களுக்கு மருது சகோதரர்கள் பாதுகாப்பளித்தனர். மேலும் சிவகங்கை வியாபாரிகள், தங்களது உள்நாட்டு கொள்கையில் கம்பெனியின் தலையீட்டை விரும்பவில்லை. இந்த இரண்டு காரணங்களுக்காகவே, கம்பெனி சிவகங்கைக்கு எதிராக போர் புரிந்தது.

**தென்னிந்திய கிளர்ச்சி (1800 – 1801)**

பிப்ரவரி 1801ல் கட்டபொம்மனின் சகோதாரர்களான ஊமைத்துரையும் செவத்தையாவும் பாளையங்கோட்டை சிறையிலிருந்து தப்பித்து கமுதியை வந்தடைந்தனர். அங்கிருந்து தனது தலைநகர் சிறுவயலுக்கு அவர்களை சின்னமருது அழைத்து சென்றார். கட்டபொம்மனின் சகோதாரர்கள், மீண்டும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை புனரமைத்தனர். ஏப்ரலில் காலின் மெக்காலே தலைமையில் ஆங்கிலப் படைகள் மீண்டும் கோட்டையை தன் வசப்படுத்தியது. அத்துடன் பாளையக்காரச் சகோதரர்கள் சிவகங்கையில் தான் தஞ்சமடைந்திருக்க வேண்டும் என்று கருதியது. எனவே ஆங்கிலேயர்கள் மருது சகோதரர்களிடம் தப்பித்தவர்களை தங்களிடம் ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுத்தனர். ஆனால் இக்கோரிக்கை மருது சகோதரர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆகையால் கர்னல் அக்னியூ மற்றும் கர்னல் இன்ஸ் ஆகியோர் மருது சகோதரர்களுக்கெதிராக படை நடத்திச் சென்றனர்.

இப்பாளையக்காரர் போர், அதற்கு முன் நடந்த போர்களை விடவும் மிகவும் பெரிய அளவில் நடைபெற்றது. சிவகங்கையின் மருது சகோதரர்கள், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரளவர்மன், மைசூரின் கிருஷ்ணப்பநாயக்கர் மற்றும் துண்டாஜி உள்ளிட்டோர் அடங்கிய கூட்டமைப்பால் போர் தொடங்கப்பட்டது. இக்கூட்டமைப்பிற்கு எதிராக ஆங்கிலேயர் போரை அறிவித்தனர்.

**திருச்சிராப்பள்ளி பிரகடனம் (1801)**

ஜீன் 1801ல் மருது சகோதரர்கள் "திருச்சிராப்பள்ளி பிரகடனம்" என்றழைக்கப்பட்ட "சுதந்திரப் பிரகடனம்" ஒன்றை வெளியிட்டனர். 1801 பிரகடனமே ஆங்கிலேயருக்கு எதிராக இந்தியர்களை ஒன்று சேர்க்கும் முதல் அழைப்பாக இருந்தது. இந்த அறிவிப்பின் ஒரு நகல் ஆற்காடு நவாபின் அரண்மனையான, திருச்சி கோட்டை சுவரிலும், மற்றொரு நகல் ஸ்ரீரங்கம் வைஷ்ணவ கோயில் சுவரிலும் ஒட்டப்பட்டது. இவ்வாறு மருது சகோதாரர்கள், ஆங்கிலேயர்களுக்கெதிரான எதிர்ப்புணர்ச்சியை நாடெங்கும் பரப்பினர். இதன் விளைவாக தமிழ்நாட்டின் பல பாளையக்காரர்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட ஓர் அணியாக சேர்ந்தனர். சின்னமருது, ஆங்கில படைக்கு சவாலாக கிட்டத்தட்ட 20,000 வீரர்களை திரட்டினார். ஆனால் ஆங்கிலேய படைகளுக்கு மேலும் வலுவூட்ட, வங்காளம், இலங்கை, மலாயா போன்ற இடங்களிலிருந்து படைகள் வரவழைக்கப்பட்டன. புதுக்கோட்டை, எட்டயபுரம் மற்றும் தஞ்சாவூர் மன்னர்களும் ஆங்கிலேயருக்கு ஆதரவளித்தனர். ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை பாளையக்காரர்களின் படைகளில் பிளவை ஏற்படுத்தியது.

**ஆங்கிலேயர் சிவகங்கையை இணைத்தல்:**

மே 1801ல் தஞ்சாவூர் மற்றும் திருச்சி பகுதிகளில் கிளர்ச்சியாளர்களை ஆங்கிலேயர் தாக்கினர். எனவே கிளர்ச்சியாளர்கள் பிரான்மலை மற்றும் காளையார் கோயில் பகுதிகளுக்குச் சென்றனர். அவர்கள் மீண்டும் ஆங்கிலேயப் படைகளால் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியில் சிறந்த இராணுவ வலிமை மற்றும் சிறந்த ஆங்கில இராணுவத் தளபதிகளால் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். கிளர்ச்சி தோல்வியுற்றதால், 1801ல் சிவகங்கையை ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர். 1801 அக்டோபர் 24 ஆம்

நாள் மருது சகோதரர்கள், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர். 1801 நவம்பர் 16 ஆம் நாள் ஊமைத்துரை மற்றும் செவத்தையா கைது செய்யப்பட்டு பாஞ்சாலங்குறிச்சியல் தூக்கிலிடப்பட்டனர்.
பினாங்கிற்கு (பின்னர் வேல்ஸ் இளவரசர் தீவு என அழைக்கப்பட்டது.) நாடு கடத்தப்பட்டனர். கிளர்ச்சியாளர்கள் ஆங்கிலேயரிடம் தோல்வியுற்றாலும் தமிழ் மண்ணில் தேசியம் என்ற விதையை விதைத்த முன்னோடிகளாகவர்.

1800 – 1801 ஆம் ஆண்டு கிளர்ச்சி ஆங்கில ஆவணங்களில் இரண்டாவது பாளையக்காரர் போர் என்று கூறப்பட்டாலும், இத்தென்னிந்திய புரட்சி தமிழக வரலாற்றில் ஓர் அடையாளமாகவே இருக்கிறது. 1801 ஜீலை 31ல் செய்துகொள்ளப்பட்ட கர்நாடக உடன்படிக்கைப்படி, தமிழ் நாட்டின் மீது ஆங்கிலேயர் நேரடி கட்டுப்பாட்டைப் பெற்றனர். இதனால் பாளையக்காரர் முறை நீக்கப்பட்டது.

**தீரன் சின்னமலை:**

தீரன் சின்னமலை ஈரோடு மாவட்டம் சென்னிலை அருகிலுள்ள மேலப்பாளையத்தில் பிறந்தார். அவரது இயற்பெயர் தீர்த்தகிரி. அவர், ஆங்கில கிழக்கிந்திய கம்பெனியை எதிர்த்த கொங்கு நாட்டு பாளையக்காரர் ஆவார். கொங்கு நாடு என்பது சேலம், கோயம்புத்தூர், கரூர் மற்றும் திண்டுக்கல் பகுதிகளை உள்ளடக்கிய மதுரை நாயக்க அரசின் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்பகுதி மைசூர் உடையார்களால் இணைக்கப்பட்டது.

மைசூர் உடையார்கள் வீழ்ந்தபிறகு, இந்தப் பகுதிகள் மைசூர் சுல்தான்களால் கட்டுப்படுத்தப்பட்டது. மூன்று மற்றும் நான்காம் மைசூர் போர்களுக்குப் பிறகு கொங்குநாடு முழுவதும் ஆங்கிலேயரின் வசமானது.

தீரன் சின்னமலை, பிரெஞ்சு இராணுவத்தின் நவீன போர் முறை பயிற்சிப் பெற்றிருந்தார். இவர் திப்புசுல்தான் பக்கம் இருந்து ஆங்கிலேயருக்கெதிராக போராடி வெற்றிபெற்றார். திப்புசுல்தான் இறந்த பிறகு, இவர் ஓடாநிலையில் தங்கி ஆங்கிலேயரைத் தொடர்ந்து எதிர்த்துப் போராட, அங்கு ஒரு கோட்டையைக் கட்டினார். 1800 ல் கோயம்புத்தூரில் ஆங்கிலேயரைத் தாக்க, அவர் மராத்தியர் மற்றும் மருது சகோதரர்களின் உதவியைப் பெற முயன்றார். ஆனால் ஆங்கிலப்படைகள் அக்கூட்டுப்படைகளைத் தடுத்து நிறுத்தியதால், தீரன் சின்னமலை மட்டும் கோயம்புத்தூரை தாக்கும் நிலைக்கு உள்ளானார். அதனால் அவரது படை தோற்கடிக்கப்பட்டது. அவர் ஆங்கில படைகளிடமிருந்து தப்பித்து சின்னலை காவேரி, ஓடாநிலை மற்றும் அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கொரில்லா போர் முறையில் ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார். இறுதி போரின் போது சின்னமலை தனது சமையற்காரர் நல்லப்பன் எனபவரால் காட்டிக்கொடுக்கப்பட்டதால் 1805ல் சங்ககிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

**வேலூர் கலகம் (1806)**

நான்காம் மைசூர் போருக்குப் பிறகு திப்புவின் குடும்பத்தினர் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர். மைசூரின் ஹைதர் அலி, திப்பு சுல்தான் ஆகியோரின் பணியாளர்கள் மற்றும் வீரர்கள் 3000 பேரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டதால் அவர்கள் வேலூருக்கு அருகில் இடம் பெயர்ந்தனர்.
இதனால் அனைவரும் துயரமடைந்து ஆங்கிலேயரை வெறுக்கவும் செய்தனர்.

வேலூர் கோட்டையானது பெரும்பாலான இந்திய வீரர்களைக் கொண்டிருந்தது. அதன் ஒரு பகுதியினர் அப்பொழுதுதான் 1800 ல் நடைபெற்ற திருநெல்வேலி பாளையக்காரர் கிளர்ச்சியில் பங்கு பெற்றவர்களாகவும் இருந்தனர். மேலும் பல்வேறு பாளையங்களைச் சேர்ந்த பயிற்சி பெற்ற வீரர்கள் ஆங்கிலப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். எனவே வேலூர் கோட்டை தென்னிந்திய கிளர்ச்சியாளர்களின் சந்திப்பு மையமாக திகழ்ந்தது.

1803-ல் வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் என்பவர் சென்னை மாகாண கவர்னரானார். அவரது காலத்தில் (1805 – 1806) ல் சிலகட்டுப்பாடுகள் இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனை பின்பற்ற வேண்டுமென இராணுவ வீரர்கள் சென்னை மாகாண படைத்தளபதி சர் ஜான் கிரடாக் என்பவரால் கட்டாயப்படுத்தப்பட்டனர். சிப்பாய்கள் அதனை தங்களை அவமானப்படுத்த ஆங்கிலேயரால் வடிவமைக்கப்பட்டது எனக்கருதினார்.

**கலகத்திற்கான காரணங்கள்:**

- கடுமையான கட்டுப்பாடுகள் புதிய ஆயுதங்கள், புதிய முறைகள் மற்றும் சீருடைகள் என அனைத்தும் சிப்பாய்களுக்கு புதிதாக இருந்தன.
- தாடி, மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக்கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.
- சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல், காதுகளில் வளையம் (கடுக்கான்) அணிதல் ஆகியன தடைசெய்யப்பட்டன.
- ஆங்கிலேயர்கள், இந்திய சிப்பாய்க்ளை தாழ்வாக நடத்தியதோடு மட்டுமல்லாமல் சிப்பாய்களிடையே இனபாராபட்சமும் காட்டினர்.

**உடனடிக் காரணம்:**
ஜீன் 1806ல் இராணுவத் தளபதி அக்னியூ, ஐரோப்பிய தொப்பியை ஒத்திருந்த சிலுவை சின்னத்துடன் கூடிய ஒரு புதிய தலைப்பாகையை அறிமுகப்படுத்தினார். அது பிரபலமான 'அக்னியூ தலைப்பாகை' என அழைக்கப்பட்டது. இந்து மற்றும் முஸ்லீம் வீரர்கள் ஒன்றாக இதனை எதிர்த்தனர். இதனால் வீரர்கள் ஆங்கிலேயர்களால் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

**கலகத்தின் போக்கு:**

இந்திய வீரர்கள் ஆங்கில அலுவலர்களைத் தாக்குவதற்கு ஒரு வாய்ப்பினை எதிர்பார்த்து காத்திருந்தனர். திப்பு குடும்பத்தினரும் இதில் பங்கெடுத்துக் கொண்டனர். திப்புவின் மூத்த மகன் பதே ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்த முயன்றார். இதற்கிடையில் ஜூலை 10 ஆம் நாள் விடியற்காலை, முதலாம் மற்றும் 23வது படைப்பிரிவுகளைச் சார்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தொடங்கினர். படையை வழிநடத்திய கர்னல் பான்கோர்ட் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலுக்கு முதல் பலியானார். கோட்டையின் நுழைவாயில்கள் மூடப்பட்டன. அப்பொழுது கிளர்ச்சியாளர்கள் பதே ஹைதரை தங்களின் புதிய ஆட்சியாளராக அறிவித்தனர். வேலூர் கோட்டையில் ஆங்கிலக் கொடி இறக்கப்பட்டு புலி உருவம் பொறித்த திருப்புவின் கொடி ஏற்றப்பட்டது.

**கலகம் அடக்கப்படுதல்:**
கோட்டையின் வெளியே இருந்த மேஜர் கூட்ஸ் இராணிப்பேட்டைக்கு விரைந்து கர்னல் கில்லெஸ்பிக்கு தகவல் கொடுத்தார். கர்னல் கில்லெஸ்பி உடனடியாக வேலூர் கோட்டையை அடைந்தார். அவர் கிளர்ச்சி படைகளின் மீது தாக்குதல் நடத்தி கலகத்தை முழுமையாக அடக்கினார். வேலூரில் அமைதி ஏற்படுத்தப்பட்டது. கலகத்தில் மொத்தம் 113 ஐரோப்பியர்கள் மற்றம் சுமார் 350 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். குறுகிய காலத்திற்குள் கலகம் அடக்கப்பட்டது. எனினும் தமிழக வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் இதுவும் ஒன்றாக திகழ்ந்தது.

**வேலூர் கலகத்தின் விளைவுகள்:**

- புதிய முறைகள் மற்றும் சீருடை ஒழுங்கு முறைகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.
- முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திப்புவின் குடும்பத்தினர் வேலூரிலிருந்து கல்கத்தாவிற்கு அனுப்பப்பட்டனர்.
- வில்லியம் காவெண்டிஷ் பெண்டிங் பணி நீக்கம் செய்யப்பட்டார்.

**கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்:**

- இந்திய படை வீரர்களை வழிநடத்த சரியான தலைமையில்லை.
- கலகம் மிகச் சரியாக வடிவமைக்கப்படவில்லை.
- ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் கொள்கை இந்தியர்களின் ஒற்றுமையில் பிளைவ ஏற்படுத்தியது.

- 1806 ல் நடந்த வேலூர் கலகத்தை, 1857 ல் நடைபெற்ற முதல் இந்திய சுதந்திரப் போரின் முன்னோடி என வி.டி சவார்க்கர் குறிப்பிடுகிறார்.

**பெரும் புரட்சி (1857):**

இந்தியாவில் ஆங்கிலேயர்களை அச்சுறுத்தும் வகையில் நடைபெற்ற ஆரம்பகால கலகங்கள் வெற்றிபெறவில்லை. எனவே அது 1857 புரட்சிக்கு வழிகோலியது. அதன் மூலம் கம்பெனி அதன் நாட்டிற்கு திரும்பிச் செல்லவும், ஆங்கிலேயர்களின் ஆட்சியை மக்களில் பெரும்பாலானோர் ஏற்கவில்லை என ஆங்கிலேயர்களை எண்ணவும் செய்தது. 1857 புரட்சியானது காலனி ஆட்சினுடைய பண்பு மற்றும் கொள்கையின் விளைவாக உருவானதாகும். ஆங்கிலேயரின் விரிவுபடுத்தப்பட்ட கொள்கைகள், பொருளாதார சுரண்டல், மற்றும் நிர்வாக புதுமைகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த விளைவே இந்தியாவின் அனைத்து அரசர்களின் நிலைமையிலும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தின.

**புரட்சிக்கான காரணங்கள்:**

ஆங்கிலேயரின் பொருளாதார ரீதியான சுரண்டல் கொள்கையே, 1857 புரட்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது. இதுசமுதாயத்தின் அனைத்து பிரிவினரையும் காயப்படுத்தியது. அதிகப்படியான வரிவிதிப்பு மற்றும் கடுமையான வரிவசூல் முறைகளால் விவசாயிகள் துன்புற்றனர்.

வாரிசு இழப்புக் கொள்கை, துணைப்படைத் திட்டம் மற்றும் பல கட்டுப்பாடுகள் ஆகியன மக்களிடையே அதிருப்பதியை ஏற்படுத்தியது. மேலும் முறையற்ற வகையில் அயோத்தியை இணைத்தும் கூட ஆங்கிலேயரின் பிரதேச விரிவாக்கக் கொள்கை திருப்தி அடையவில்லை.

கிறித்துவ சமய பரப்பு குழுவினரின் மதமாற்ற நடவடிக்கைகள் மக்களால் அச்சத்துடனும் சந்தேகத்துடனும் பார்க்கப்பட்டது. மேலும் சமய தலைவர்கள் மற்றும் இஸ்லாமிய சமய அறிஞர்கள் (Manlavis) ஆங்கில ஆட்சிக்கெதிராக அதிருப்தியை வெளிப்படுத்தினர்.

சதி ஒழிப்பு, பெண்சிசுக் கொலை ஒழிப்பு, விதவை மறுமணம் மற்றும் பெண் கல்விக்கான ஆதரவு போன்ற ஆங்கிலேயரின் நடவடிக்கைகள்

இந்தியர்கள் கலாச்சாரத்தில் ஐரோப்பியர்கள் தலையிடுவதாக கருதப்பட்டது.

இந்திய சிப்பாய்கள், ஆங்கில அதிகாரிகளால் தாழ்வாகவும் அவமரியாதையாகவும் நடத்தப்பட்டனர். ஆங்கில வீரர்களைக் காட்டிலும் இந்திய வீரர்கள் குறைவான ஊதியம் பெற்றனர். மேலும் இராணு பதவி உயர்வுகள் அனைத்தும் இந்திய வீரர்களுக்கு மறுக்கப்பட்டு ஆங்கில வீரர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டன.

**உடனடிக் காரணம்:**

இராணுவத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட என்பீல்டுரக துப்பாக்கியே உடனடிக்காரணமாக இருந்தது. இந்த வகைத் துப்பாக்கியில் குண்டுகளை நிரப்புவதற்கு முன் அதன் மேலுறையை பற்களால் கடித்து நீக்க வேண்டும். அதன் மேலுறையில் பசுவின் கொழுப்பு மற்றும் பன்றியின் கொழுப்பு தடவப்பட்டிருந்தது. எனவே இதனை இந்திய சிப்பாய்கள் (இந்து, முஸ்லீம்) தங்கள் மத உணர்வை புண்படுத்துவதாக கருதினர். ஏனெனில் இந்துக்கள் பசுமை புதிதமாகக் கருதுபவர்களாகவும் முஸ்லீம்கள் பன்றியை வெறுப்பவர்களாகவும் இருந்தனர். ஆகையால் இந்து முஸ்லீம் வீரர்கள் என்பீல்டு துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்து புரட்சியில் ஈடுபட்டனர். இவ்வாறு கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் புரட்சிக்கு அடிப்படை மற்றும் உடனடிக் காரணமாயிற்று.

**கலகத்தின் தோற்றம்:**
**மங்கள் பாண்டே:**

1857 மார்ச் 29 ஆம் நாள் பாரக்பூரில் (கொல்கத்தா அருகில்) உள்ள வங்காள படைப்பிரிவைச் சேர்ந்த மங்கள் பாண்டே என்ற இளம் சிப்பாய் கொழுப்பு தடவப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்த மறுத்து தனது உயரதிகாரியைச் சுட்டுக் கொன்றார். அதனால் அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குப் பின் தூக்கிலிடப்பட்டார். இச்செய்தி பரவியதால், பல சிப்பாய்கள் புரட்சியில் ஈடுபட்டனர்.

**புரட்சியின் போக்கு:**

1857 மே 10 ஆம் நாள் மீரட்டில் மூன்றாம் குதிரைப் படையைச் சேர்ந்த சிப்பாய்கள் சிறைச்சாலையை உடைத்து, தங்களது சக படைவீரர்களை விடுவித்ததன் மூலம் வெளிப்படையாக புரட்சியில் ஈடுபட்டனர். அவர்கள் உடனே 11 ஆவது மற்றும் 20 ஆவது உள்ளூர் காலாட்படையினருடன் இணைந்தனர். மேலும், சிலர் ஆங்கில அலுவலர்களைக் கொலை செய்ததுடன், டெல்லிக்கும் விரைந்தனர். டெல்லிக்கு வந்த மீரர் சிப்பாயர்கள் மே 11 ஆம் நாள் இரண்டாம் பகதூர்ஷாவை இந்தியாவின் பேரரசராக அறிவித்தனர். அதன் மூலம் டெல்லி பெரும் புரட்சியின் மையமாகவும் பகதூர்ஷா அதன் அடையாளமாகவும் விளங்கினார்.

புரட்சி மிக வேகமாக பரவியது. லக்னோ, கான்பூர், ஜான்சி, பரெய்லி, பீகார் பைசாபாத் மற்றும் வட இந்தியாவின் பல பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டன. புரட்சியாளர்களுள் பலர், நிழக்கிழார்களிடம் தாங்கள் கொடுத்த பத்திரங்களை எரிக்க இதனை ஒரு நல்வாய்ப்பாகக் கருதினர். ஆங்கில அரசு பலருடைய பட்டங்கள், ஓய்வூதியங்களை நீக்கியதால் ஆங்கில அரசை பழிவாங்குவதற்காக புரட்சியில் பலர் கலந்து கொண்டனர். ஆங்கிலேயர்கள் தங்களது.நாட்டிற்கு சென்ற பிறகு இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவ வேண்டுமென எண்ணி முஸ்லீம் தலைவர்கள் மற்றும் முஸ்லீம் சமய அறிஞர்கள் புரட்சியில் கலந்து கொண்டனர்.

மத்திய இந்தியாவில் புரட்சி ஜன்சியின் இராணி இலட்சுமிபாய் அவர்களால் வழிநடத்தப்பட்டது. இந்தியாவின் மாபெரும் தேசபக்கதர்களுள் அவரும் ஒருவர். சர் ஹக்ரோஸ் ஜான்சியை ஆக்கிரமித்தார். ஜான்சியிலிருந்து தப்பிய இராணி லட்சுமிபாய், குவாலியரில் படையை தலைமையேற்று வழிநடத்திய தாந்தியா தோபேவுடன் இணைந்தார். ஆனால் ஆங்கிலப் படை ஜீன் 1858 ல் குவாலியரை கைப்பற்றியது. போரில் ராணி லட்சுமிபாய் கொல்லப்பட்டார். தப்பிய தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். ஆங்கில வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி 1857 புரட்சியில் கலந்து கொண்ட தலைவர்களில் மிகவும் துணிச்சலானவர் இராணி லட்சுமிபாய் ஆவார்.

நாட்டிற்கு சென்ற பிறகு இந்தியாவில் முஸ்லீம் ஆட்சியை நிறுவ வேண்டுமென எண்ணி முஸ்லீம் தலைவர்கள் மற்றும் முஸ்லீம் சமய அறிஞர்கள் புரட்சியில் கலந்து கொண்டனர்.

**கலகம் அடக்கப்படுதல்:**

கவர்னர் ஜெனரல் கானிங் பிரபு புரட்சியை அடக்க உடனடியாக நடவடிக்கை எடுத்தார். அவர் சென்னை, பம்பாய், இலங்கை மற்றும் பார்மாவிலிருந்து படைகளை வரவழைத்தார். மேலும் அவரது சொந்த முயற்சியால் சீனாவிலிருந்த ஆங்கிலப் படைகளை கல்கத்தாவிற்கு வரவழைத்தார். விசுவாசமான சீக்கய படைகளை உடனடியாக டெல்லிக்கு விரைந்து செல்லுமாறு ஆணையிட்டார். இதன்மூலம் ஆங்கிலேயர் தாங்கள் இழந்த பகுதிகளை உடனே பகுதியை உடனே மீட்டனர்.

1857 செப்டம்பர் 20 ல் படைத்தளபதி நிக்கல்சனால் டெல்லி மீண்டும் கைப்பற்றப்பட்டது. எனவே, இரண்டாம் பகதூர்ஷா ரங்கூனுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு அவர் 1862 ல் இறந்தார்.

கான்பூர் மீட்பு இராணுவ நடவடிக்கைகள், லக்னோ மீட்பு நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது. சர் காலின் கேம்பெல் கான்பூரை கைப்பற்றினார். கான்பூரில் புரட்சியை வழிநடத்திச் சென்ற நானாசாகிப் தோற்கடிக்கப்பட்டார். தோற்ற நானாசாகிப் நேப்பாளத்திற்கு தப்பியோடினார். அவரது நெருங்கிய நண்பர் தாந்தியா தோபெ மத்திய இந்தியாவுக்கு தப்பிச் சென்றார். தப்பிய அவர் தூங்கும் பொழுது கைது செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார். இராணி லட்சுமிபாய் போர்களத்தில் கொல்லப்பட்டார். கன்வர்சிங், மற்றும் கான் பகதூர் கான் ஆகிய இருவரும் போரில் இறந்தனர். அயோத்தியின் பேகம் ஹஸ்ரத் மகால் நேப்பாளத்தில் மறைந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இவ்வாறாக புரட்சி முழுவதும் அடக்கப்பட்டது. 1859 ஆம் ஆண்டின் இறுதியில் பிரிட்டிஷ் அதிகாரம் மீண்டும் இந்தியா முழுவதும் நிறுப்பட்டது.

**கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்:**

கலகத்தின் தோல்விக்கு பல நிகழ்வுகள் காரணமாக அமைந்தன.

சரியான ஒருங்கிணைப்பு, ஒழுக்கம், கட்டுப்பாடு, பொதுவான திட்டம், மையப்படுத்தப்பட்ட தலைமை, நவீன ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை புரட்சியாளர்களிடையே இல்லை.

கலகத்தில் ஈடுபட்டவர்கள், ஆங்கில படைத்தளபதிகளுக்கு இணையானவர்களாக இல்லை. மேலும் இராணி லட்சுமிபாய், நானாசாகிப் மற்றும் தாந்தியா தோபே ஆகியோர் தைரியமானவர்கள், ஆனால் சிறந்த தளபதிகளாக இல்லை.

வங்காளம், பம்பாய், சென்னை, மேற்கு பஞ்சாப் மற்றும் இராஜபுதனம் ஆகிய பகுதிகள் புரட்சியில் கலந்து கொள்ளவில்லை.

நவீனக் கல்வி கற்ற இந்தியர்கள் ஆங்கில ஆட்சி மட்டுமே இந்திய சமுதாயத்தை சீர்திருத்தி நவீனப்படுத்த முடியும் என நம்பினர். எனவே அவர்கள் புரட்சியை ஆதரிக்கவில்லை.

சீக்கியர்கள், ஆப்கானியர்கள் மற்றும் கூர்க்கா படைப்பிரிவினர் ஆகியோர்களின் விசுவாசத்தை ஆங்கிலேயர் பெற்றனர். புரட்சியை அடக்குவதில் கூர்க்காப் படையினர் ஆங்கிலேயருக்கு உதவினர்.

ஆங்கிலேயர்கள் சிறந்த ஆயுதங்கள், சிறந்த தளபதிகள் மற்றும் சிறந்த ஒருங்கிணைப்பைக் கொண்டிருந்தனர்.

| கலகம் நடைபெற்ற இடங்கள் | இந்திய தலைவர்கள் | கலகத்தை அடக்கிய ஆங்கிலேய அதிகாரிகள் |
|---|---|---|
| டெல்லி | இரண்டாம் பகதூர்ஷா | ஜான் நிக்கல்சன் |
| லக்னோ | பேகம் ஹஸ்ரத் மகால் | ஹென்றி லாரன்ஸ் |
| கான்பூர் | நானா சாகிப் | சர் காலின் கேம்பெல் |
| ஜான்சி & குவாலியர் | ராணிலட்சுமிபாய், தாந்தியா | ஜெனரல் ஹக்ரோஸ் |

| | | |
|---|---|---|
| | தோபே | |
| பரெய்லி | கான் பகதூர் கான் | சர் காலின் கேம்பெல் |
| பீகார் | கன்வர் சிங் | வில்லியம் டைலர் |

**கலகத்தின் விளைவுகள்:**

- 1857 ஆம் ஆண்டு கலகம் இந்திய வரலாற்றில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. அது நிர்வாக முறை மற்றும் அரசின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட வழிகோலியது.
- 1858 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட விக்டோரியா மகாராணியின் பேரறிக்கையின் மூலம் இந்தியாவின் நிர்வாகம் கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து ஆங்கில (பாராளுமன்றத்திற்கு அரசுக்கு மாற்றப்பட்டது.
- கவர்னர் - ஜெனரல் அதன்பிறகு வைசிராய் என அழைக்கப்பட்டார்.
- இயக்குநர் குழு மற்றும் கட்டுப்பாட்டு, வாரியம் நீக்கப்பட்டு இந்திய விவகாரங்களை மேற்பார்வையிட செயலரின் தலைமையில் 15 உறுப்பினர்களைத் கொண்ட ஒரு சபை (கவுன்சில்) ஏற்படுத்தப்பட்டது,
- இந்திய இராணுவம் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டது. அதிகப்படியான ஆங்கிலேயர்கள், இராணுவத்தில் பணியமர்த்தப்பட்டனர்.
- "பிரித்தல் மற்றும் எதிர் தாக்குதல்" என்ற கொள்கை ஆங்கில இராணுவக் கொள்கையில் ஆதிக்கம் செலுத்தியது.

உண்மையில் 1857 புரட்சி இந்திய மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து இந்தியா ஒரே நாடு என்ற உணர்வை கொண்டு வருவதில் முக்கிய பங்கு வகித்தது. பெரும் புரட்சி நவீன தேசிய இயக்கம் தோன்ற வழிவகுத்தது. 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமாக இருந்தது. வி.டி. சவார்க்கர் "முதல் இந்திய சுதந்திர போர்" என்ற தனது நூலில் 1857 ஆம் ஆண்டு பெரும் புரட்சியை ஒரு திட்டமிடப்பட்ட தேசிய சுதந்திரப் போர் என விவரிக்கிறார்.

# 11th History Vol – 2

## அலகு – 6

## ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தமிழகத்தில் நிகழ்ந்த தொடக்ககால கிளர்ச்சிகள்

**அறிமுகம்**

பிரெஞ்சுப் படைகளையும், அதோடு தோழமை கொண்டிருந்த இந்திய ஆட்சியாளர்களையும் மூன்று கர்நாடகப் போர்களில் தோற்கடித்திருந்த கிழக்கிந்திய கம்பெனி தனது அதிகாரத்தையும், செல்வாக்கையும் விரிவாக்கி ஒருங்கிணைக்கத் தொடங்கியது. எனினும் உள்ளூர் ஆட்சியாளர்களும் நிலக்கிழார்களும் இதனை எதிர்த்தனர். நாடுபிடிக்கும் அவர்களின் நோக்கத்திற்கு முதல் எதிர்வினை திருநெல்வேலிப் பகுதியின் நெற்கட்டும்செவலில் ஆட்சிபுரிந்து வந்த புலித்தேவரிடமிருந்து வெளிப்பட்டது. இதைத் தொடர்ந்து வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை போன்ற தமிழகத்தின் பிற பகுதிகளை ஆட்சி புரிந்து வந்தோரும் எதிர்த்தனர். பாளையக்காரர் போர் என அறியப்படும் இது 1806இல் நிகழ்ந்த வேலூர் புரட்சிக்கு இட்டுச் சென்றது. தமிழ்நாட்டில் பிரிட்டிஷாருக்கு எதிராகத் தோனறிய இத்தொடக்கக்கால எதிர்ப்புப் பற்றி இப்பாடத்தில் காணலாம்.

**ஆங்கிலேயருக்கு எதிரான மண்டல சக்திகளின் எதிர்ப்பு**

**அ. பாளையங்களும் பாளையக்காரர்களும்**

பாளையம் என்ற சொல் ஒரு பகுதியையோ, ஒரு இராணுவ முகாமையோ அல்லது ஒரு சிற்றரசையோ குறிப்பதாகும். பாளையக்காரர்கள் (இவர்களை ஆங்கிலேயர்கள் ‘போலிகார்’(Poligar)என்று குறிப்பிட்டனர்) என்ற தமிழ்ச்சொல் இறையாண்மை கொண்ட ஒரு பேரரசுக்குக் கப்பம்பட்டும் குறுநில அரசைக் குறிக்கிறது. இவ்வமைப்பின் கீழ் தனிநபர் ஒருவர் ஆற்றிய சீரிய இராணுவ சேவைக்காக அவரின் கட்டுப்பாட்டின்கீழ் பாளையம் கொடுக்கப்பட்டது. வாரங்கல்லை சார்ந்த பிரதாபருத்ரனின் ஆட்சிக்காலத்தில் காகதீய அரசில் இப்பாளையக்காரர் முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. மதுரை நாயக்கராக 1529இல் பதவியேற்ற விஸ்வநாத நாயக்கர் அவர்தம் அமைச்சரான அரியநாதரின் உதவியோடு தமிழகத்தில் இம்முறையை அறிமுகப்படுத்தினார். பரம்பரை பரம்பரையாக 72 பாளையக்காரர்கள் இருந்திருக்கக்கூடும்.

பாளையக்காரார்களால் வரிவசூலிப்பதிலும், நிலப்பகுதிகளை நிர்வகிப்பதிலும், வழக்குகளை விசாரிப்பதிலும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலும் தன்னிச்சையாகச் செயல்பட முடிந்தது. அவர்களது காவல் காக்கும் கடமை படிக்காவல் என்றும் அரசுக்காவல் என்றும் அழைக்கப்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் நாயக்க ஆட்சியாளர்கள் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள பாளையக்காரர்கள் உதவிபுரிந்தனர். பாளையக்காரர்களுக்கும், அரசர்களுக்கும் இடையேயான தனிப்பட்ட உறவு மற்றும் புரிதல் மதுரை நாயக்கர்களால் இம்முறை நிறுவப்பட்டதிலிருந்து இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக அதாவது ஆங்கிலேயர் இந்நிலப்பகுதிகளைத் தங்கள் வசம் கொண்டுவரும்வரை நீடித்திருந்தது.

**கிழக்கு மற்றும் மேற்குப் பாளையங்கள்**

நாயக்க மன்னர்களால் உருவாக்கப்பட்ட 72 பாளையங்களும் கிழக்கு மற்றும் மேற்கு என்ற இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்த பாளையங்களே முக்கியத்துவம் பெற்றவையாகக் கருதப்பட்டன. கிழக்கில் அமையப்பெற்ற பாளையங்கள், சாத்தூர், நாகலாபுரம், எட்டையபுரம் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி ஆகியனவும் மேற்கில் அமையப்பெற்ற முக்கியமான பாளையங்கள் ஊத்துமலை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, சேத்தூர் ஆகியனவாகும். பதினேழு மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளின் தமிழக அரசியலில் பாளையக்காரர்களின் செல்வாக்கு விஞ்சி நின்றது. அவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பாளையங்களின் எல்லைக்குள் சுதந்திரமும், இறையாண்மையும் பெற்று செயல்பட்டார்கள்.

**வரிவசூலிப்பு அதிகாரம் கம்பெனி ஆட்சிக்கு வழங்கப்படுதல்**

ஆற்காட்டு நவாப் கர்நாடகப் போர்களில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட செலவினங்களுக்காக கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து கடன் பெற்றிருந்தார். அவர் கடனைத் திரும்ப செலுத்தக்கூடிய நிலையை கடந்தபோது, தெற்கத்தியப் பாளையக்காரர்களிடமிருந்து வரிவசூல் செய்யும் அதிகாரம் கிழக்கிந்திய கம்பெனிக்கு வழங்கப்பட்டது. அறுபது தலைமுறையாக நிலத்தின் மீது கொண்டிருந்த உரிமையை முன்வைத்து பல பாளையக்காரர்கள் கம்பெனி அதிகாரிகளுக்கு வரிசெலுத்த மறுத்தார்கள். கம்பெனியின் அதிகாரத்தை ஏற்க மறுத்தப் பாளையக்காரர்களை கிளர்ச்சிக்காரர்கள் என்று முத்திரையிட்ட கம்பெனியார், நாட்டின் அமைதிக்கும் ஒழுங்கிற்கும் அவர்கள் பங்கம் விளைவிப்பார்கள் என்று குற்றம் சுமத்தினர். இதுவே கிழக்கிந்திய கம்பெனிக்கும், பாளையக்காரர்களுக்கும் மோதல் போக்கை உருவாக்கியது என்பது பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

**பாளையக்காரர்களின் புரட்சி (1755-1801)**

**அ. பூலித்தேவரின் புரட்சி (1755-1767)**

கர்னல் ஹெரான் தலைமையிலான கம்பெனியின் படை ஒன்றை அழைத்துக் கொண்டு மார்ச் 1755இல் மாபூஸ்கான் (ஆற்காட்டு நவாபின் சகோதரர்) திருநெல்வேலிக்குச் சென்றார். மதுரை எளிதில் அவர்களது கையில் வீழ்ந்தது. அதன்பின் தொடர்ந்து கம்பெனிக்குக் கீழ்ப்படிய மறுத்துவந்த பூலித்தேவரை அடக்க கர்னல் ஹெரான் பணிக்கப்பட்டார். மேற்குப் பகுதியில் இருந்த பாளையக்காரர்களிடம் பூலித்தேவர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தார். பீரங்கிகளின் தேவையும் துணைக்கலப்பொருட்கள் மற்றும் படைவீரர்களின் ஊதியம் உள்ளிட்ட காரணங்களினால் ஹெரான் தனது திட்டத்தைக் கைவிட்டு மதுரைக்கு திரும்பினார். கம்பெனி நிர்வாகம் அவரைத் திரும்ப அழைத்ததோடு நிரந்தர பணிநீக்கம் செய்தும் உத்தரவிட்டது.

**பிரிட்டிஷ் எதிர்ப்பாளர்களின் கூட்டமைப்பும், நட்புக் கூட்டணியும்**

நவாப் சந்தாசாகிப்பின் முகவர்களாக செயல்பட்டு வந்த மியானா, முடிமையா, நபீகான் கட்டாக் எனும் மூன்று பத்தாணிய அதிகாரிகள் மதுரை மற்றும் திருநெல்வேலிப் பகுதிகளில் பொறுப்பு வகித்தனர். அவர்கள் ஆற்காட்டு நவாபான முகமது அலிக்கு எதிராக மேற்கு பாளையக்காரர்களுக்கு ஆதரவளித்தனர். அவர்களோடு பூலித்தேவர் நெருக்கமான நட்புறவை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். மேலும் பூலித்தேவர் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போரிட பாளையக்காரர்களின் கூட்டமைப்பு ஒன்றையும் ஏற்படுத்தினர். சிவகிரிப் பாளையக்காரர் நீங்கலாகப் பிற மறவர் பாளையங்கள் யாவும் அவரை ஆதரித்தன. எட்டையபுரமும் பாஞ்சாலங்குறிச்சியும் கூட இக்கூட்டமைப்பில் இணையவில்லை. மேலும் ஆங்கிலேயர்கள் இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மன்னர்களின் ஆதரவைப் பெற்றனர். பூலித்தேவர் மைசூரின் ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களது ஆதரவினைப் பெற முயன்றார். ஏற்கனவே மராத்தியர்களோடு கடுமையான மோதலில் ஈடுப்பட்டிருந்த ஹைதர் அலியால் பூலித்தேவருக்கு உதவி இயலவில்லை.

**களக்காடு போர்**

நவாப் கூடுதல் படைகளை மாபூஸ்கானுக்கு அனுப்பி திருநெல்வேலிக்குச் செல்லும் படையை பலப்படுத்தினார். மேலும் கம்பெனியின் 1000 சிப்பாய்களோடு நவாபால் அனுப்பப்பட்ட 600க்கும் மேற்பட்ட படைவீரர்களையும் மாபூஸ்கான் பெற்றார். மேலும் அவருக்கு கர்நாடகப் பகுதியிலிருந்த குதிரைப் படை மற்றும் காலாட்படையின் ஆதரவும் இருந்தது. மாபூஸ்கான் களக்காடு பகுதியில் தனது படைகளை நிலைநிறுத்தும் முன்பாக திருவிதாங்கூரின் 2000 வீரர்கள் பூலித்தேவரின் படைகளோடு இணைந்தனர். களக்காட்டில் நடைபெற்றப் போரில் மாபூஸ்கானின் படைகள் தோற்கடிக்கப்பட்டன.

**யூசுப்கானும், பூலித்தேவரும்**

பூலித்தேவர் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்ட பாளையக்காரர்கள் எதிர்ப்பு திருநெல்வேலிப் பகுதியில் ஆங்கிலேயர் நேரடியாகத் தலையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. திருவிதாங்கூர் மன்னரின் ஆதரவோடு 1756 முதல் 1763 வரையிலான காலத்தில் பூலித்தேவர் தலைமையிலான திருநெல்வேலி பாளையக்காரர்கள் நவாபின் அதிகாரத்தை எதிர்ப்பதையே முழு நோக்கமாகக் கொண்டிருந்தனர். கம்பெனியாரால் அனுப்பப்பட்ட யூசுப்கான் (கான்சாகிப் என்றும் தனமு மதமாற்றத்திற்கு முன்பு மருதுநாயகம் என்றும் அழைக்கப்பட்டவர்), திருச்சிராப்பள்ளியில் இருந்து தான் எதிர்பார்த்த பெரும்பீரங்கிகள் மற்றும் வெடிபொருட்கள் வந்து சேரும் வரை பூலித்தேவர் மீது தாக்குதல் தொடுக்க அவர் ஆயத்தமாகவில்லை. பிரெஞ்சுப் படைகளோடு ஒருபுறமும், ஹைதர் அலி

மற்றும் மராத்தியோடு மறுபுறமும் ஆங்கிலேயர் போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் பீரங்கிப்படைகள் செப்டம்பர் 1760இல் தான் வந்து சேர்ந்தன. யூசுப்கான் நெற்கட்டும் செவலில் கோட்டையை முற்றுகையிடுவதற்காக நடத்திய இத்தாக்குதல் இரண்டு மாதங்கள் நீடித்தது. 1761 மே 16இல் பூலித்தேவரின் மூன்று முக்கியக் கோட்டைகள் (நெற்கட்டும்செவல், வாசுதேவநல்லூர் மற்றும் பனையூர்) யூசுப்கானின் கட்டுப்பாட்டிற்குள் வந்தன.

இதற்கிடையே பாண்டிச்சேரியைக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களின் முக்கியத்துவத்தை முழுவதுமாக குறைத்திருந்தனர். இதன் விளைவாக பிரெஞ்சுக்காரர்களின் உதவி கிடைக்காது என்றுணர்ந்த பாளையக்காரர்களின் ஒற்றுமை உடையத்துவங்கியது. இதையடுத்து திருவிதாங்கூர், சேத்தூர், ஊத்துமலை மற்றும் சுரண்டை ஆகிய பகுதிகள் எதிரணியினருக்கு தங்கள் ஆதரவை அளிக்கத் தொடங்கின. கம்பெனியின் நிர்வாகத்திற்கு முறையான தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களோடு பேச்சுவார்த்தை நடத்திய யூசுப்கான் மீது நம்பிக்கை துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு 1764இல் தூக்கிலிடப்பட்டார்.

**பூலித்தேவரின் வீழ்ச்சி**

கான்சாகிப் காலமானதைத் தொடர்ந்து நாடிழந்த நிலையில் சுற்றிவந்த பூலித்தேவர் திரும்பி வந்து 1764-இல் நெற்கட்டும்செவலை மீண்டும் கைப்பற்றினார். எனினும் 1767இல் கேப்டன் கேம்ப்பெல் என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். தப்பிச்சென்ற அவர் நாடிழந்த நிலையிலேயே காலமானார்.

**ஒண்டிவீரன்**

ஒண்டிவீரன் பூலித்தேவரின் படைப்பிரிவுகளில் ஒன்றனுக்குத் தலைமையேற்றிருந்தார். பூலித்தேவரோடு இணைந்து போரிட்ட அவர் கம்பெனிப் படைகளுக்கு பெரும் சேதங்களை ஏற்படுத்தினார். செவிவழிச் செய்தியின்படி ஒரு போரில் அவரது கை துண்டிக்கப்பட்டதாகவும், அதனால் பூலித்தேவர் பெரிதும் வருந்தியதாகவும் தெரிகிறது. ஆனால் ஒண்டிவீரன், எதிரியின் கோட்டையில் தான் நுழைந்து பல தலைகளைக் கொய்தமைக்காகத் தமக்கு கிடைத்தப் பரிசு என்று கூறியுள்ளார்.

**ஆ. வேலுநாச்சியார் (1730-1796)**

இராமநாதபுரத்தின் அரசர் செல்லமுத்து சேதுபதிக்கு 1730-இல் அரசகுடும்பத்தின் ஒரே பெண் வாரிசாக வேலுநாச்சியார் பிறந்தார். மன்னருக்கு ஆண் வாரிசு இல்லை. அரச குடும்பத்தால் வளரி, சிலம்பம் போன்ற தற்காப்புக் கலைகளிலும், போர்க் கலைகளைக் கையாள்வதற்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வளர்க்கப்பட்டார். மேலும் அவர் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது போன்ற மொழிகளில் வல்லமை பெற்றிருந்ததோடு குதிரையேற்றத்திலும், வில்வித்தையிலும் திறமையானவராக விளங்கினார்.

தனது 16வது வயதில் வேலுநாச்சியார் சிவகங்கை மன்னரான முத்துவடுகநாதரை மணந்து வெள்ளாச்சி நாச்சியார் என்ற பெண் மகவையும் பெற்றெடுத்தார். 1772இல் ஆற்காட்டு நவாபும் லெப்டினன்ட் கர்னல் பான் ஜோர் தலைமையிலான கம்பெனி படைகளும் இணைந்து காளையார்கோவில் அரண்மனையைத் தாக்கினார். இதனால் மூண்ட போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார். தனது மகளோடு தப்பிச்சென்ற வேலுநாச்சியார் கோபால நாயக்கரின் பாதுகாப்பில் திண்டுக்கல் அருகே உள்ள விருப்பாட்சியில் எட்டு ஆண்டுகள் வாழ்ந்தார்.

மறைந்து வாழந்த காலத்தில் வேலுநாச்சியார் ஒரு படைப்பிரிவை உருவாக்கியதோடு கோபால நாயக்கர் மட்டுமல்லாமல் ஹைதர் அலியோடும் கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டார். வெலுநாச்சியாரின் சார்பில் ஹைதர் அலிக்கு, தளவாய்(இராணுவத்தலைவர்) தாண்டவராயனார் எழுதிய கடிதத்தில் ஆங்கிலேயரைத் தோற்கடிக்கும் பொருட்டு 5000 காலாட்படைகளும், 5000 குதிரைப்படைகளும் அனுப்பும்படி அவரிடம் கோரினார். வேலுநாச்சியார் உருது மொழியில் தனக்கு கிழக்கிந்திய கம்பெனியோடு இருந்த பிணக்குகளை கடிதத்தில் விவரித்திருந்தார். மேலும் தான் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தினார். அவரது மனவுறுதியைப் பார்த்து வியந்த ஹைதர் அலி தனது திண்டுக்கல் கோட்டை படைத்தலைவரான சையதிடம் அவருக்கு வேண்டிய இராணுவ உதவிகளை வழங்குமாறு ஆணையிட்டார்.

**விருப்பாட்சியின் பாளையக்காரரான கோபால நாயக்கர்**

கோபால நாயக்கரைக் தலைவராகக் கொண்ட திண்டுக்கல் கூட்டமைப்பில் (Dindigul League) மணப்பாறையின் லெட்சுமி நாயக்கரும், தேவதானப்பட்டியின் பூஜை நாயக்கரும் இடம் பெற்றிருந்தனர். தனது நட்பை வெளிப்படுத்தும் விதமாக ஒரு நல்லுறவுக் குழுவை அனுப்பிவைத்த திப்பு சுல்தானால் கோபால நாயக்கர் ஈர்க்கப்பட்டார். கோயம்புத்தூரை மையமாகக் கொண்டு பிரிட்டிஷாரை எதிர்த்த அவர், பின்னாட்களில் கட்டபொம்மனின் சகோதரரான ஊமைத்துரையோடு இணைந்தார். அவர் உள்ளூர் விவசாயிகளின் ஆதரவுடன் ஆனைமலையில் கடும் போர் புரிந்தார். ஆயினும் பிரிட்டிஷ் படைகளால் அவர் 1801இல் வெற்றி கொள்ளப்பட்டார்.

வேலுநாச்சியார் பிரிட்டிஷாரின் ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருக்கும் இடத்தை அறிந்துகொள்ள உளவாளிகளை நியமித்தார். கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியின் இராணுவ உதவியோடு அவர் சிவகங்கையை மீண்டும் கைப்பற்றினார். மருது சகோதரர்களின் உதவியினால் அவர் அரசியாக முடிசூட்டிக்கொண்டார். இந்திய நாட்டில் பிரிடடிஷ் காலனியாதிக்க அதிகாரத்தை எதிர்த்த முதல் பெண் ஆட்சியாளர் அல்லது அரசி என்ற பெருமை அவருக்கே உரித்தானதாகும்.

வேலுநாச்சியரின் நம்பிக்கைக்குரிய தோழியாகக் திகழ்ந்த குயிலி, உடையாள் என்ற பெண்களின் படைப்பிரிவைத் தலைமையேற்று வழிநடத்தினார். உடையாள் என்பது குயிலி பற்றி உளவு கூறமறுத்ததால் கொல்லப்பட்ட மேய்த்தல் தொழில்புரிந்த பெண்ணின் பெயராகும். குயிலி தனக்குத்தானே நெருப்பு வைத்துக்கொண்டு (1780) அப்படியே சென்று பிரிட்டிஷாரின் ஆயுதக்கிடங்கிலிருந்த அனைத்துக் தளவாடங்களையும் அழித்தார்.

**இ. வீரபாண்டிய கட்டபொம்மனின் கலகம் (1790-1799)**

தனது தந்தையாரான ஜெகவீர பாண்டிய கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின் பாளையக்காரராக தனது முப்பதாவது வயதில் வீரபாண்டிய கட்டபொம்மன் பொறுப்பேற்றார். கம்பெனி நிர்வாகிகளான ஜேம்ஸ் லண்டன் மற்றும் காலின் ஜாக்சன் என்போர் இவரை அமைதியை விரும்பும் மனம் கொண்டவராகவே கருதினர். எனினும் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் கட்டபொம்மனுக்கும், கிழக்கிந்தியக் கம்பெனிக்கும் மோதல்போக்கை ஏற்படுத்தின. 1781இல் கம்பெனியாருடன் நவாப் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின்படி, மைசூரின் திப்பு சுல்தானுடன் ஆற்காட்டு நவாப் போர்புரிந்து கொண்டிருந்தபோது, கர்நாடகப்பகுதியில் வரி மேலாண்மையும், நிர்வாகமும் கம்பெனியின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் செல்லும்நிலை ஏற்பட்டது. வசூலிக்கப்பட்ட வரியில் ஆறில் ஒரு பங்கு நவாபிற்கும் அவர் குடும்ப பராமரிப்பிற்குமென ஒதுக்கப்பட்டது.

இவ்வாறு பாஞ்சாலங்குறிச்சியிடமிருந்து வரி வசூலிக்கும் உரிமையை கம்பெனி பெற்றிருந்தது. அனைத்துப் பாளையங்களிலிருந்தும் வரிகளை வசூலிக்க கம்பெனி அதன் ஆட்சியாளர்களை நியமித்தது. ஆட்சியாளர்கள் பாளையக்காரர்களை அவமானப்படுத்தியதோடு வரிகளை வசூலிக்க படையினைப் பயன்படுத்தினர். இதுவே கட்டபொம்மனுக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே பெரும் பகை ஏற்பட அடிப்படையானது.

**ஜாக்சனோடு ஏற்பட்ட மோதல்**

கட்டபொம்மனிடமிருந்து வசூலிக்க வேண்டிய நிலவரி நிலுவையானது 1798ஆம் ஆண்டு வாக்கில் 3310 பகோடாக்களாக இருந்தது. இவற்றை வசூலிப்பதற்காக ஜாக்சன் என்ற கர்வமுள்ள ஆட்சியாளர் இராணுவத்தை அனுப்ப முனைந்தபோது மதராஸ் அரசாங்கம் அதற்கு அனுமதியளிக்க மறுத்தது. 1798 ஆகஸ்ட் 18இல் இராமநாதபுரத்தில் வந்து தன்மைச் சந்திக்குமாறு கட்டபொம்மனுக்கு அவர் ஆணை பிறப்பித்தார். ஆனால் கட்டபொம்மன் மேற்கொண்ட முயற்சி பலனளிக்காததோடு குற்றாலம் மற்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களிலும் ஜாக்சன் அவரை சந்திக்க மறுத்தார். இறுதியாக 1798 செப்டம்பர்19 அன்று அனுமதியளித்ததன் பேரில் கட்டபொம்மன் இராமநாதபுரத்தில் ஜாக்சனைச் சந்தித்தார். ஆணவத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்த ஜாக்சனின் முன்பு கட்டபொம்மன் மூன்று மணி நேரம் நிற்க வைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆபத்தை உணர்ந்த கட்டபொம்மன் தனது அமைச்சரான சிவசுப்ரமணியனாருடன் தப்பிச் செல்ல முயன்றார். உடனடியாக ஊமைத்துரை தனது ஆட்களோடு கோட்டைக்குள் நுழைந்து கட்டபொம்மன் தப்ப உதவினார். இராமநாதபுரம் கோட்டை வாசலில் நடந்த மோதலில் லெப்டினென்ட் க்ளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டனர். சிவசுப்ரமணியனார் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

**மதராஸ் ஆட்சிக்குழுவின் முன்பாக ஆஜராதல்**

பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் ஆட்சியர் ஜாக்சன் தன்னை எவ்வாறெல்லாம் அவமானப்படுத்தினார் என்பதை மதராஸ் ஆட்சிக் குழுவிற்குத் தெரியப்படுத்தினார். அக்குழு வில்லியம் ப்ரௌன், வில்லியம் ஓரம், ஜான் காஸாமேஜர் ஆகியோர் அடங்கிய குழுவின் முன்பாக ஆஜராகும்படி கட்டபொம்மனைப் பணித்தது. இதற்கிடையே சிவசுப்ரமணியனாரை சிறையிலிருந்து விடுவித்தும், கலெக்டர் ஜாக்சனைப் பணி இடைநீக்கம் செய்தும் ஆளுநர் எட்வர்ட் கிளைவ் உத்தரவிட்டார். குழுவின் முன்பாக 1798 டிசம்பர் 15 அன்று கட்டபொம்மன் ஆஜராகி இராமநாதபுரத்தில் நிகழ்ந்தவற்றை விளக்கினார். கட்டபொம்மன் குற்றவாளி அல்ல என்று குழு முடிவு செய்தது. ஜாக்சன் நிரந்தரப் பணிநீக்கம் செய்யப்பட்டு அவரது இடத்தில் புதிய ஆட்சியராக எஸ். ஆர்.லூஷிங்டன் என்பவர் நியமிக்கப்பட்டார். கட்டபொம்மனும் நிலுவைத் தொகையில் 1080 பகோடாக்கள் நீங்களாக பிற நிலுவைத் தொகையினைச் செலுத்தினார்.

**கட்டபொம்மனும் பாளையக்காரர்களின் கூட்டமைப்பும்**

இதற்கிடையே, திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், ஆனைமலையின் யதுல் நாயக்கர் போன்ற அருகாமையிலிருந்த பாளையங்களை உள்ளடக்கிய தென்னிந்தியக் கூட்டமைப்பை சிவகங்கையின் மருதுபாண்டியர் ஏற்படுத்தினார். மருதுபாண்டியர் அதன் தலைவராகச் செயல்பட்டார். திருச்சிராப்பள்ளி அறிக்கை தயாரிக்கப்பட்டது. இக்கூட்டமைப்பு கட்டபொம்மனின் ஆர்வத்தைத் தூண்டியது. மருது சகோதரர்களை கட்டபொம்மன் சந்திப்பதை ஆட்சியர் லூஷிங்டன் தடுக்க முயன்றார். ஆனால் மருது சகோதரர்களும், கட்டபொம்மனும் இணைந்து ஆங்கிலேயரை எதிர்ப்பது என்று முடிவெடுத்தார்கள். கட்டபொம்மன் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி சிவகிரி பாளையக்காரரைத் தங்களோடு இணைக்க முயன்றார், அவர் அதற்கு மறுத்தார். அதனால் சிவகிரியை நோக்கி கட்டபொம்மன் முன்னேறினார். ஆனால் சிவகிரி பாளையத்தினர் கம்பெனிக்குத் கப்பம் கட்டிவந்தனர். அதனால் கட்டபொம்மனின் சிவகிரி நோக்கியப் படைநகர்வை தங்களுக்கு விடப்பட்ட சவாலாகவே கம்பெனியார் கம்பெனியார் கருதினர். கம்பெனி தனது படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டது.

**பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை**

மே 1799இல் மதராஸில் இருந்த வெல்லஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் மதுரை ஆகிய பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படைகளை திருநெல்வேலி நோக்கிச் செல்ல உத்தரவிட்டார். படைகளுக்கு மேஜர் பானெர்மென் தலைமையேற்றார். திருவிதாங்கூர் படைகளும் பிரிட்டிஷ் படைகளோடு இணைந்தன. கட்டபொம்மனைச் சரணடையக் கோரிய நிபந்தனையொன்று 1799 செப்டம்பர் 1 அன்று வழங்கப்பட்டது. கட்டபொம்மனின் பிடிகொடுக்காத பதிலால் மேஜர் பானெர்மென் கோட்டையைத் தாக்கினார். பானெர்மென் செப்டம்பர் 5 அன்று முழுப் படைகளையும் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டுவந்து நிறுத்தினார். அவர்கள் கோட்டையின் அனைத்துத் தொடர்புகளையும் துண்டித்தனர். பானெர்மென் இராமலிங்கரை தூதனுப்பி கட்டபொம்மனைச் சரணடையுமாறு கேட்டுக்கொண்டார். கட்டபொம்மன் மறுத்தார். கோட்டையின் இரகசியங்கள் அனைத்தையும் இராமலிங்கர் சேகரித்தார். அவரது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு பானெர்மென் தாக்குதல் உத்திகளை வடிவமைத்தார். கள்ளர்பட்டியில் நடைபெற்ற மோதலில் சிவசுப்ரமணியனார் கைது செய்யப்பட்டார்.

**கட்டபொம்மன் தூக்கிலிடப்படல்**

கட்டபொம்மன் புதுக்கோட்டைக்கு தப்பிச் சென்றார். பிரிட்டிஷார் அவரது தலைக்கு ஒரு வெகுமதியை நிர்ணயித்தார். எட்டையபுரம் மற்றும் புதுக்கோட்டை அரசர்களால் துரோகமிழைக்கப்பட்ட கட்டபொம்மன் இறுதியில் பிடிபட்டார். சிவசுப்ரமணியனார் நாகலாபுரத்தில் செப்டம்பர் 13 அன்று தூக்கிலிடப்பட்டார். பானெர்மென் விசாரணை என்ற பெயரில் ஒரு கேலிக்கூத்தை பாளையக்காரர்களின் முன்பாக அக்டோபர் 16 அன்று அரங்கேற்றினார். விசாரணையின்போது கட்டபொம்மன் தன்மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொண்டார். திருநெல்வேலிக்கு மிக அருகேயுள்ள கயத்தாறின் பழையகோட்டைக்கு முன்பாக இருந்த புளியமரத்தில் சகப் பாளையக்காரர்களின் முன்னிலையில் கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டார். இவ்வாறு போற்றுதலுக்குரியவராகத் திகழ்ந்த பாஞ்சாலங்குறிச்சியின் பாளையக்காரர் கட்டபொம்மனின் வாழ்க்கை முடிவுற்றது. அவர் மீது புனையப்பட்ட நாட்டுப்புறப்பாடல்கள் பலவும் அவரது நினைவை மக்களிடையே உயிர்ப்புடன் தக்கவைத்துக் கொள்ள உதவுகின்றன.

**ஈ. மருது சகோதரர்கள்**

பேரிய மருது என்ற வெள்ள மருது (1748-1801) மற்றும் அவரது தம்பியான சின்ன மருது (1753-1801) ஆகிய இருவரும் சிவகங்கையின் முத்துவடுகநாதரின் திறமையான படைத்தளபதிகளாவர். காளையார்கோவில் போரில் முத்துவடுகநாதர் இறப்பின் வேலுநாச்சியாருக்கு அரசுரிமையை மீட்டுக்கொடுக்க மருது சகோதரர்கள் அரும்பாடுபட்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் கடைசி ஆண்டுகளில் மருது சகோதரர்கள் பிரிட்டிஷாரை எதிர்க்கத் திட்டமிட்டனர். கட்டபொம்மனின் இறப்பிற்குப் பின்னர் அவரது சகோதரர் ஊமைத்துரையோடு இணைந்து பணியாற்றினர். அவர்கள் நவாபுக்குச் சொந்தமான களஞ்சியங்களைக் கொள்ளையிட்டதோடு கம்பெனியின் படைகளுக்குப் பெரும்சேதத்தையும், அழிவையும் ஏற்படுத்தினர்.

**மருது சகோதரர்களின் கலகம் (1800-1801)**

கட்டபொம்மனின் கலகம் 1799இல் ஒடுக்கப்பட்டபோதும், 1800இல் மீண்டும் கலகம் வெடித்தது. பிரிட்டிஷாரின் குறிப்புகளில் இது இரண்டாவது பாளையக்காரர் போர் என்று குறிப்பிடப்படுகிறது. இப்போரானது சிவகங்கையின் மருது பாண்டியர், திண்டுக்கல்லின் கோபால நாயக்கர், மலபாரின் கேரள வர்மா, மைசூரின் கிருஷ்ணப்பா மற்றும் தூண்டாஜி ஆகியோர் அடங்கிய கூட்டமைப்பால் வழிநடத்தப்பட்டது. விருப்பாட்சியில் ஏப்ரல் 18000இல் சந்தித்த அவர்கள் கம்பெனியாருக்கு எதிராகத் கிளர்ந்தெழ முடிவெடுத்தார்கள். கோயம்புத்தூரில் ஜுன் 1800ல் ஏற்பட்ட எழுச்சி அதிவேகமாக இராமநாதபுரத்திற்கும், மதுரைக்கும் பரவியது. நிலைமையைப் புரிந்துகொண்ட கம்பெனியார் மைசூரின் கிருஷ்ணப்பா மீதும், மலபாரின் கேரளவர்மா மீதும் இன்ன பிறர் மீதும் போர் தொடுக்கப்போவதாக அறிவித்தார்கள். கோயம்புத்தூர், சத்தியமங்கலம் மற்றும் தாராபுரம் ஆகிய பகுதிகளின் பாளையக்காரர்கள் பிடிக்கப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள்.

கட்டபொம்மனின் சகோதரர்களான ஊமைத்துரையும், செவத்தையாவும் பிப்ரவரி 1801இல் பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பி கமுதியில் பதுங்கியிருப்பதை அறிந்த சின்னமருது அவர்களைத் தமது தலைமையிடமான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார். பாஞ்சாலங்குறிச்சி கோட்டை மிக குறைந்த காலத்தில் மீண்டும் கட்டி முடிக்கப்பட்டது. காலின் மெக்கலே தலைமையிலான பிரிட்டிஷ் படைகள் ஏப்ரலில் மீண்டும் கோட்டையை முற்றுகையிட்டதால் அவர்கள் மருது சகோதரர்களிடம் சிவகங்கையில் அடைக்கலம் கோரினர். தப்பியோடியவர்களை (ஊமைத்துரையும், செவத்தையாவும்) ஒப்படைக்கும்படி மருது சகோரர்கள் வலியுறுத்தப்பட்டனர். ஆனால் அவர்கள் மறுத்துவிட்டார்கள். இதையடுத்து கர்னல் அக்னீயூவும், கர்னல் இன்னஸூம் சிவகங்கையை நோக்கி படை நடத்திச் சென்றனர். மருது சகோதரர்கள் ஜுன் 1801இல் நாட்டின் விடுதலையை முன்னிறுத்திய ஒரு பிரகடனத்தை வெளியிட்டனர் இதுவே ‘திருச்சிராப்பள்ளி பேரறிக்கை’ என்றழைக்கப்படுகிறது.

**1801ஆம் ஆண்டு பேரறிக்கை (திருச்சிராப்பள்ளி பேரறிக்கை)**

பிரிட்டிஷாருக்கு எதிராக மண்டல, சாதி, சமய, இன வேறுபாடுகளைக் கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறைகூவலே 1801ஆம் ஆண்டின் பேரறிக்கை ஆகும். இப்பேரறிக்கை திருச்சியில் அமையப்பெற்ற நவாபின் கோட்டையின் முன்சுவரிலும், ஸ்ரீரங்கம் கோவிலின் சுற்றுச் சுவரிலும் ஒட்டப்பட்டது. ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்பட விழைந்த தமிழகப் பாளையக்காரர்கள் பலரும் ஒன்று திரண்டனர். சின்ன மருது ஏறத்தாழ 20,000 ஆட்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராகத் திரட்டினார். வங்காளம், சிலோன், மலேயா ஆகிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படைகள் விரைந்து வந்தன. புதுக்கோட்டை, எட்டையபுரம் மற்றும் தஞ்சாவூரின் அரசர்கள் பிரிட்டிஷாருடன் கைகோர்த்தார்கள். ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை என்ற உத்தி விரைவில் பாளையக்காரர்களின் படைகளில் பிரிவினையை ஏற்படுத்தியது.

**சிவகங்கையின் வீழ்ச்சி**

ஆங்கிலேயர்கள் மே 1801இல் தஞ்சாவூரிலும் திருச்சியிலும் இருந்த கலகக்காரர்களைத் தாக்கினார்கள். கலகக்காரர்கள் பிரான்மலையிலும், காளையார் கோவிலிலும் தஞ்சம் பகுந்தனர். அவர்கள் பிரிட்டிஷ் படைகளால் மீண்டும் தோற்கடிக்கப்பட்டனர். இறுதியாக வலுவான இராணுவமும், சிறப்பான தலைமைத்துவமும் கொண்ட ஆங்கிலேய கம்பெனியே விஞ்சி நின்றது. கலகம் தோற்றதால் 1801இல் சிவகங்கை இணைக்கப்பட்டது. இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24 அன்று மருது சகோதரர்கள் தூக்கிலிடப்பட்டனர். ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16இல் பாஞ்சாலங்குறிச்சியில் தலை துண்டிக்கப்பட்டனர். கலகக் காரர்களில் 73பேர் பிடிக்கப்பட்டு மலேயாவின்

பினாங்கிற்கு நாடு கடத்தப்பட்டார்கள். பாளையக்காரர்கள் வீழ்ச்சியடைந்தாலும் அவர்களது வீரமும், தியாகமும் எதிர்காலச் சந்ததிகளை ஈர்ப்பதாக அமைந்தது. இதனால் மருது சகோதரர்களின் கலகம் 'தென்னிந்தியப் புரட்சி' என்று அழைக்கப்படுவதோடு தமிழக வரலாற்றில் தனித்துவம் பெற்றதாகவும் கருதப்படுகிறது.

**கர்நாடக உடன்படிக்கை-1801**

1799 மற்றும் 1800-1801ஆம் ஆண்டு பாளையக்காரர்களின் கலகம் அடக்கப்பட்டதன் விளைவு தமிழகத்திலிருந்த அனைத்து உள்ளூர் குடித்தலைமையினரின் எண்ணங்களையும் நீர்த்துப் போகச் செய்தது. 1801 ஜூலை 31இல் ஏற்பட்ட கர்நாடக உடன்படிக்கையின் விதிகளின்படி, பிரிட்டிஷார் நேரடியாக தமிழகத்தின்மீது தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதோடு பாளையக்காரர் முறையும் முடிவுக்கு வந்ததுடன் அனைத்துக் கோட்டைகளும் இடிக்கப்பட்டு அவர்களது படைகளும் கலைக்கப்பட்டன.

**உ. தீரன் சின்னமலை (1756-1805)**

தீர்த்தகிரி என்ற பெயரோடு பழையக்கோட்டை மன்றாடியார் பட்டம் பெற்ற மதிப்புமிகு குடும்பத்தில் 1756இல் பிறந்த தீரன் சிலம்பு, வில்வித்தை, குதிரையேற்றம் மட்டுமல்லாமல் நவீன போர் முறைகளையும் கற்றுத் தேர்ந்தார். கொங்குப் பகுதியில் குடும்ப மற்றும் நிலப்பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டுவந்தார். அப்பகுதி மைசூர் சுல்தானின் கட்டுப்பாட்டில் இருந்தது, திப்புவின் திவான் முகம்மது அலி என்பவரால் வரி வசூலிக்கப்பட்டது. ஒருமுறை திவான் வசூலிக்கப்பட்ட வரிப்பணத்தோடு மைசூருக்குத் திரும்பிக்கொண்டிருந்த போது, தீர்த்தகிரி அவரை வழிமறித்து பரிப்பணம் முழுவதையும் பறித்துக்கொண்டார். இவர் முகம்மது அலியிடம் சிவமலைக்கும், சென்னிமலைக்கு இடையே இருந்த 'சின்னமலையே' வரிப்பணத்தைப் பிடுங்கிக்கொண்டதாக சுல்தானுக்குப் போய்ச் சொல் என்று அறிவுறுத்தினார். அதன்பிறகே'தீரன் சின்னமலை' என்று அவர் அழைக்கப்படலானார். அவமதிப்புக்குள்ளான திவான் சின்னமலையைத் தாக்க படை அனுப்பினார். இருபடைகளும் நொய்யல் ஆற்றங்கரையில் மோதிக்கொண்டன. அதில் சின்னமலையே வெற்றிபெற்றார்.

பிரெஞ்சுக்காரர்களால் பயிற்சியளிக்கப்பட்ட தீரன் கொங்குமண்டலத்தைச் சார்ந்த ஆயிரக்கணக்கான இளைஞர்களோடு திப்புவுடன் இணைந்து பிரிட்டிஷாருக்கு எதிராகச் சண்டையிட்டார். திப்புவின் இறப்பிற்குப் பிறகு ஒரு கோட்டையை எழுப்பிய தீரன் சின்னமலை அவ்விடத்தைவிட்டு வெளியேறாமல் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். எனவே அவ்விடம் 'ஓடாநிலை' என்றழைக்கப்படுகிறது. அவர் பிடிபடாமலிருப்பதற்காக கொரில்லாப் போர் முறைகளைக் கையாண்டார். இறுதியாக அவரையும் அவர் சகோதரர்களையும் கைது செய்த ஆங்கிலேயர்கள் அவர்களை சங்ககிரியில் சிறைவைத்தனர். ஆங்கிலேய ஆட்சியை ஏற்க வறுபுறுத்தப்பட்டபோது அவர்கள் அதற்கு இணங்க மறுத்தனர். அதனால் 1805 ஜூலை 31 அன்று சங்ககிரி கோட்டையின் உச்சியில் அவர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

**வேலூர் புரட்சி-1806**

தேன்தமிழகத்தின் பாளையக்காரர்கள் அனைவரையும், ஒடுக்குவதற்கு முன்பாகவே கிழக்கிந்திய கம்பெனி 1792இல் திப்புவோடு ஏற்பட்ட போரின் முடிவில் சேலம் மற்றும் திண்டுக்கல் வருவாய் மாவட்டங்களைப் பெற்றுக்கொண்டது. 1799இல் நடந்த ஆங்கிலேய-மைசூர் போரின் முடிவில் கோயம்புத்தூர் இணைக்கப்பட்டது. 1798ஆம் ஆண்டு தஞ்சாவூரின் அரசர் அப்பகுதயின் இறையாண்மை உரிமையை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுத்து அதே ஆண்டு கப்பம்கட்டும் நிலைக்கும் தள்ளப்பட்டார். கட்டபொம்மன் எதிர்ப்பு(1799), மருது சகோதரர்களின் எதிர்ப்பு(1801) ஆகியவற்றை ஒடுக்கியப் பின்பு, பிரிட்டிஷார் ஆற்காட்டு நவாபை விசுவாசமற்றவர் என்று குற்றம்சுமத்தி அவர்மீது கட்டாயப்படுத்தி ஒரு ஒப்பந்தத்தைத் திணித்தனர். 1801இல் ஏற்பட்ட இவ்வொப்பந்தத்தின்படி, ஆற்காட்டு நவாப் வட ஆற்காடு, தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களை அவற்றை நிர்வகிக்கும் அதிகாரத்தோடு ஒப்படைத்துவிட வேண்டும் என்றானது.

**அ. இந்திய வீரர்களின் மனக்குறை**

ஆனாலும் எதிர்ப்பு அடங்கவிடவில்லை. வெளியேற்றப்பட்ட சிற்றரசர்களும், நிலச்சுவான்களும் கம்பெனி அரசுக்கு எதிராக எதிர்காலத்திட்டம் குறித்து நிதானமாக சிந்தித்துக் கொண்டே இருந்தார்கள். இதன் விளைவாக வெளிப்பட்டதே 1806ஆம் ஆண்டு வேலூர் புரட்சியாகும். புரட்சியின் இறுதி நிகழ்வு அந்நிய ஆட்சியை தூக்கி எறிவதை

நோக்கமாகக் கொண்டிருந்தது. பிரிட்டிஷாரின் இராணுவத்தில் சிப்பாயாகப் பணியாற்றியவர்களுக்கு குறைவான ஊதியமே வழங்கப்பட்டது. பதவி உயர்வுக்கான வாயப்புகள் குறைவாகவே இருப்பது ஆகியவற்றை நினைத்து கடுமையான கோபத்துடனே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். தங்களின் சமூக மற்றும் சமய நம்பிக்கைகளுக்கு ஆங்கிலேய அதிகாரிகள் குறைவான மதிப்பளித்ததும், மேலும் அவர்களின் கோபத்தை வலுப்படுத்தியது. விவசாயப் பின்னணிகொண்ட வீரர்களின் வேளாண் சிக்கலும் அவர்களை மேலும் சிரமப்படுத்தியது. சோதனை அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலக்குத்தகை முறையில் ஒரு நிலையற்றதன்மைக் காணப்பட்டதாலும் 1805இல் பஞ்சம் ஏற்பட்டதாலும் பல சிப்பாய்களின் குடும்பங்கள் கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தன. திப்புவின் மகன்களும் அவர்தம் குடும்பத்தினரும் வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட வேளையில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் அந்த வாய்ப்பு கூடிவந்தது. புரட்சி ஏற்படுவதற்கான இயக்க சக்தியாக தலைமைத்தளபதி (Commander-in-chief) சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறை அமைந்தது.

புதிய விதிமுறைகளின்படி, இந்திய வீரர்கள் சீருடையிலிருக்கும்போது சாதி அடையாளங்களையோ, காதனிகளையோ அணியக்கூடாது என்று கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்கள் தாடையை முழுமையாகச் சவரம் செய்யவும் மீசையை ஒரே பாணியில் வைத்துக்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டார்கள். புதிய வகை தலைப்பாகை எரிகிற தீயில் எண்ணெய் சேர்ப்பது போலானது. மிகவும் ஆட்சேபனைக்குரிய செயலாகக் கருதப்பட்டது. தலைப்பாகையில் வைக்கப்படும் விலங்கு தோலினால் ஆன இலட்சினையாகும். புதிய தலைப்பாகையை அணிவதில் தங்களுக்கு உடன்பாடில்லை என்று இந்திய சிப்பாய்கள் போதுமான முன்னெச்சரிக்கை விடுத்தனர். ஆனால் கம்பெனி நிர்வாகம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை.

**ஆ. புரட்சி வெடித்தல்**

1806 ஜுலை 10 அன்று அதிகாலையிலேயே முதல் மற்றும் இருபத்தி மூன்றாம் படைப்பிரிவுகளின் இந்திய சிப்பாய்கள் துப்பாக்கிகளின் முழக்கத்தோடு புரட்சியில் இறங்கினர். கோட்டைக் காவற்படையின் உயர் பொறுப்புவகித்த கர்னல் பேன்கோர்ட் என்பவர்தான் முதல் பலியானார். அடுத்ததாக இருபத்தி மூன்றாம் படைப்பிரிவைச் சேர்ந்த கர்னல் மீக்காரஸ் கொல்லப்பட்டார். கோட்டையைக் கடந்து சென்று கொண்டிருந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிகளின் முழக்கத்தைக் கேட்டார். சூழலை விசாரித்தறிய முற்பட்ட அவரது உடல் தோட்டாக்களால் துளைக்கப்பட்டது. ஏறத்தாழ பனிரெண்டுக்கும் அதிகமான அதிகாரிகள் அடுத்த ஒரு மணிநேரத்திற்குள் கொல்லப்பட்டார்கள். அவர்களில் லெப்டினென்ட் எல்லியும், லெப்டினென்ட் பாப்ஹாமும் பிரிட்டிஷ் மன்னரின் படைப்பிரிவைச் (Battalion) சேர்ந்தவர்களாவர்.

**ஜில்லஸ்பியின் கொடுங்கோன்மை**

கோட்டைக்கு வெளியேயிருந்த மேஜர் கூட்ஸ் ஆற்காட்டின் குதிரைப்படைத் தளபதியாக இருந்த கர்னல் ஜில்லஸ்பிக்கு தகவல் கொடுத்தார். கேப்டன் யங்கின் தலைமையிலான குதிரைப் படைப்பிரிவுடன் காலை 9 மணியளவில் கர்னல் ஜில்லஸ்பி கோட்டையை வந்தடைந்தார். இதற்கிடையே புரட்சியாளர்கள் திப்புவின் மூத்த மகனான ஃபதே ஹைதரை புதிய மன்னராகப் பிரகடனம் செய்து மைசூர் சுல்தானின் புலி கொடியை கோட்டையில் ஏற்றியிருந்தனர். போர்விதிமுறைகள் எதையும் பொருட்படுத்தாத ஜில்லஸ்பி வீரர்களின் புரட்சியை வன்மையாக ஒடுக்கினார். நேரில் கண்ட ஒருவரின் வாக்குமூலப்படி, கோட்டையில் மட்டும் எண்ணூறு வீரர்கள் பிணமாகக் கிடந்ததாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளியிலும், வேலூரிலும் அறுநூறு வீரர்கள் விசாரணையை எதிர்நோக்கி சிறையிலடைக்கப்பட்டார்கள்.

**இ. புரட்சியின் பின்விளைவுகள்**

நீதிமன்ற விசாரணைக்குப்பின் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்ட ஆறு நபர்கள் பீரங்கியில் கட்டியநிலையில் சுடப்பட்டும், ஐந்து நபர்கள் துப்பாக்கியால் சுடப்பட்டும், எட்டு நபர்கள் தூக்கிலிடப்பட்டும் கொல்லப்பட்டார்கள். திப்புவின் மகன்களை கல்கத்தாவுக்கு அனுப்ப உத்தரவிடப்பட்டது.இ கலவரத்தை அடக்குவதில் ஈடுபட்ட அதிகாரிகளுக்குப் பரிசுத்தொகையும் பதவி உயர்வும் வழங்கப்பட்டது. கர்னல் ஜில்லஸ்பிக்கு 7,000 பகோடாக்கள் வெகுமதியாக அளிக்கப்பட்டது. எனினும், தலைமைத் தளபதி ஜான் கிரடாக்கும், உதவித் தளபதி (Adjutant General) அக்னியூவும், ஆளுநர் வில்லியம் பெண்டிங்கும் புரட்சி நடக்கக் காரணமானவர்கள் என்று கருதப்பட்டு அவர்களைப் பணிநீக்கம்

என்று கருதப்பட்டு அவர்களைப் பணிநீக்கம் செய்ததோடு, அவர்கள் இங்கிலாந்துக்கு திருப்பியழைத்துக் கொள்ளப்பட்டார்கள். புதிய இராணுவ விதிமுறைகள் திரும்பப் பெறப்பட்டது.

### ஈ. புரட்சியைப் பற்றிய மதிப்பீடு

வெளியிலிருந்து உடனடியாக எந்தவொரு உதவியும் கிடைக்காத காரணத்தினாலேயே வேலூர் புரட்சி தோல்வியுற்றது. சமீபகால ஆய்வுகளின் வழியாக நாம் அறிந்துகொள்வது யாதெனில் புரட்சிக்கான ஏற்பாடுகளை 23ஆம் படைப்பிரிவின் 2வது பட்டாளத்தைச் சேர்ந்த சுபேதார்களான ஷேக் ஆடமும், ஷேக் ஹமீதும், ஜமேதாரான ஷேக் ஹுசைனும், 1ஆம் படைப்பிரிவின் 1ஆம் பட்டாளத்தைச் சேர்ந்த இரு சுபேதார்களும், ஜமேதார் ஷேக் காஸிமும் சிறப்பாகச் செய்திருந்ததாகத் தெரிகிறது. 1857ஆம் ஆண்டு பெரும் கலகத்திற்கான அனைத்து முன் அறிகுறிகளையும், எச்சரிக்கைகளையும் வேலூர் புரட்சி கொண்டிருந்தது. ஒரே வித்தியாசம் என்னவென்றால், கலகத்தைத் தொடர்ந்து எந்த உள்நாட்டுக் கிளர்ச்சியும் ஏற்படவில்லை. 1806ஆம் ஆண்டு புரட்சியானது வேலூர் கோட்டையுடன் முடிந்துவிடவில்லை. பெல்லாரி, வாலாஜாபாத், ஹைதிராபாத், பெங்களூரு, நந்திதுர்க்கம், சங்கரிதுர்க்கம் ஆகிய இடங்களிலும் அது எதிரொளித்தது.

## 10th term 2
### 9. தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

**அறிமுகம்:**

காலனியாட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் தகிழ்ந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிலேயே பாளையக்காரர்கள், தமிழ்நாட்டில் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிறுவயமுயன்ற ஆங்கிலேயர்களின் முயற்சிகளை எதிர்த்தனர். பாளையக்காரர்களின் தோல்விக்குப் பின்னரும் கூட 1806 இல் வேலூர் கோட்டையில் இந்திய வீரர்களும் அதிகாரிகளும் ஓர் எழுச்சியைத் திட்டமிட்டு நடத்தினர். அப்புரட்சி தென்னிந்தியாவின் பல இராணுவமுகாம்களிலும் எதிரொலித்தது. மேற்கத்திய கல்வி அறிமுகம் மற்றும் இறுதியில் தோன்றிய படித்த இந்திய நடுத்தர வர்கத்தின் தோற்றம் படித்த ஆகியவை ஆங்கிலேயருக்கு எதிரான போராட்த்தை அரசமைப்புப் பாதையில் எடுத்து சென்றது. தமிழ்நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்டம் தனித்தன்மை வாய்ந்ததாகும். ஏனெனில் தொடக்கத்திலிருந்தே அது ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டமாக மட்டுமல்லாமல், தீங்கினை விளைவிக்கும் சாதிமுறை ஏற்படுத்தியிருந்த சமூகத் தடைகளிலிருந்து விடுதலை பெறுவதற்குமான போராட்டமாகவும் அமைந்தது. இப்பாடத்தில் தமிழ்நாட்டில் வெவ்வேறு கருத்தியல்களைப் பின்பற்றிய தேசியவாதிகள் வகித்த பாத்திரத்தை நாம் அறிந்து கொள்வோம்.

**தமிழ்நாட்டில் தொடக்கால தேசிய அதிர்வுகள்:**

பத்தொன்பதம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சென்னையில் உருவான, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த, கல்விகற்ற நபர்களைக் கொண்ட குழுக்கள் பொதுவிஷயங்களில் அக்கறை செலுத்தா் தொடங்கின. இந்தியவின் ஏனைய பகுதிகளில் நடந்ததைப் போலவே இவர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க சென்னைவாசிகள் சங்கம், செ்னனை மகாஜன சங்கம் எனும் அரசியல் சார்ந்த அமைப்புகளை ஏற்படுத்தினர்.

**(அ)சென்னைவாசிகள் சங்கம்:**

சென்னைவாசிகள் சங்கம் (Madras native Association – (MNA)), தென்னிந்தியாவில், தொடங்கப்பெற்ற காலத்தால் முற்பட்ட அமைப்பான இவ்வமைப்பு தனிபட்ட குழுக்களின் விருப்பங்களைக் காட்டிலும் பொதுமக்களின் தேவைகளை அனைவருக்கும் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவானது. இவ்வமைப்பு 1852இல் கஜுலு லட்சுமிநரசு, சீனிவாகனார் மற்றும் அவர்களின் சேர்ந்தோர்களாலும் நிறுவப் பெற்றது. இவ்வமைப்பில் வணிகர்களே அதிக எண்ணிக்கையில் அங்கம் வகித்தனர். தனது உறுப்பினர்களின் நலன்களை முன்னெடுப்பது, வரிகளைக் குறைக்க கோரிக்கை வைப்பது போன்ற நோக்கங்களை இவ்வமைப்பு உள்ளடக்கி இருந்தது. மேலும் கிறித்தவ சமயப்பரப்பாளர்களின் செயல்பாடுகளுக்கு அரசு ஆதரவளித்ததை எதிர்த்தனர். மக்களின் நிலை அவர்களின் தேவைகள் ஆகியவற்றின் மீது அரசின் கவனத்தை திருப்பும் பணியை இவ்வமைப்பு மேற்கொண்டது. வருவாய்த்துறை அதிகாரிகளால் விவாசாயிகள் சித்திரவதைப்படுத்தப்டுவதற்கு எதிராக இவ்வமைப்பு (MNA) நடத்திய போராட்டம் முக்கியமான பங்களிப்பாகும். இவ்வமைப்பு மேற்கொண்ட முயற்சிகளால் சித்திரவதை ஆரணயம் (Torture Commission) நிறுவப்பட்டது. அதன் விளைவாகச் சித்தரவதை முறைகள் மூலம் கட்டாய வரிவசூல் முறையை நியாப்படுத்திய சித்திவதைச் சட்டம் (Torture Act) ஒழிக்கப்பட்டது. இருந்தபோதிலும் இவ்வமைப்பு 1862க்குப் பின்னர் செயலிழந்து இல்லாமாலானது.

**(ஆ) தேசியவாதப் பத்திரிகைகளின் தொடக்கங்கள்: தி இந்து மற்றும் சுதேசமித்திரன்:**

T.முத்துசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக 1877இல் நியமிக்கப்பட்டது சென்னை மாகாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஒரு இந்தியர் நீதிபதியாக பணியமர்த்தப்பட்டதை சென்னையைச் சேர்ந்த அனைத்து பத்துரிகைகளும் விமர்சனம் செய்தன. எதிர்ப்பு தெரிவித்த அனைத்துப் பத்திரிகைகளும் ஐரோப்பியர்களால் நடத்தப்படுவதை கல்விகற்ற இளைஞர்கள் உணர்ந்தனர். இது குறித்து இந்தியரின் எண்ணங்களை வெளிப்படுத்த ஒரு செய்திப் பத்திரிக்கை தேவை என்பது

உணரப்பட்டது. G. சுப்பிரமணியம், ஆ. வீராகவாச்சாரி மற்றும் இவர்களின் 1878இல் அவவிதழ் நாளிதழாக மாறியது. தி இந்து, சுதேசமித்திரன் ஆகிய பத்திரிகைகள் தொடங்கப்பட்டது. இந்தியன் பேட்ரியாட் (Indian Patriot) சவுத் இந்தியன் மெயில் (South Indian Mail), மெட்ராஸ் ஸ்டாண்டர்ட் (Madras Standard), தேசபிமானி, விஜயா, சூர்யோதயம், இந்தியா போன்ற உள்நாட்டு பத்திரிகைகள் தொடங்கப்படுவதற்கு ஊக்கமளித்தது.

**(இ)சென்னை மகாஜன சபை:**

தென்னிந்தியவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்கால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும். முதலாம் தலைமுறையைச் சேர்ந்த தேசியவாதிகளுக்கு இவ்வமைப்பு பியற்சிக் களமானது. 1884 மே 16இல் M. வீராகவாச்சாரி,P. அனந்தாச்சார்லு இதன் செயர்பாடுகளில் பங்காற்றினார். அமைப்பின் உறுப்பினர்கள் குறிபிட்ட இடைவெளிகளில் ஒன்று கூடி தனிபட்ட விதத்திலுத் அறைக்கூட்டங்கள் நடத்தியும் பொதுபிரச்சனைகள் குறித்து விவாதித்து தங்கள் கருத்துகளை அரசுக்குத் தெரியப்படுத்தினர். மாகாணத்தில் பல பகுதிகளில் வாழும் மக்களிடையே பல பகுதிகளில் வாழும் மக்களிடைய பல்வேறு பொதுப்பிரச்சனைகள் குறித்த ஒருமித்த தெரியப்படுத்துவதே சென்னை மகாஜன சபையின் நோக்கமாக இருந்தது. குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியவிலும் ஒரே சமயத்தில் நடத்தபட்ட வேண்டும். லண்டனிலுள்ள இந்திய கவுன்சிலை மூடுவது, வரிகளைக் குறைப்பது, இராணுவ குடியில் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்கைளாகும். இவ்வமைப்பின் பல கோரிக்கைகள் பின்னர் காங்கிரசின் கோரிக்ககைகளாயின.

**தமிழ்நாட்டின் முக்கிய தொடக்கால மிதவாத தேசியவாதிகள்:**

தொடக்கால தேசியவாதிகள் அரசமைப்பு வழிமுறைகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். அறைக்கூட்டங்கள் நடத்துவதும் பிராச்சனைகள் குறித்து ஆங்கிலத்தில் கலந்துரையாடுவதும் அவர்களின் செயர்பாடுகளாக இருந்தன. தங்கள் கண்ணோட்டங்களைப் பெருந்தன்மை வாய்ந்த மொழிநடையில் வேண்டுகேள்களாகவும் இருந்தன. தங்கள் கண்ணோட்டங்களைப் பொருந்தன்மை வாய்ந்த மொழிநடையில் வேண்கோள்களாகவும், மனுச்செய்தல். இறைஞ்சுதல், குறிப்பாணைகள் மூலமாக அரசுக்கு அவர்கள் சமர்ப்பித்து அரசு அமைத்த பல விசாரணைக் குழுக்களில் காணமுடிகின்றது. வங்கப் பிரிவினையின் போது திலகரும் ஏனைய தலைவர்களும் பெருவாரியான மக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்களை நடத்தியதாலும் மக்களை ஈடுபடச்செய்வதற்காக வட்டாரமெழியைப் பயன்படுத்தியதாலும் தொடக்கால தேசியவாதிகள் மிதவாதிகளென அழைக்கப்படலாயினர். சென்னையைச் சேர்ந்த புகழபெற்ற தழிழ்நாட்டு மிதவாதத் தலைவர்கள் V.S. சீனிவாச சாஸ்திரி, P.S. சிவகாமி,V. கிருஷ்ணசாமி, வுசு வெங்கட்ராமனார்,G.A நடேசன்,T.M மாதவராவ் மற்றும் S. சுப்பிரமணியனார் ஆகியோராவர். ஆங்கிலேயர்கள் தங்களை தாராளமானவர்கள் என உரிமை கொண்டாடியதில் உள்ள தவறுகளை அமல்ப்படுத்தியதே மிதவாதிகள் செய்த முக்கியப் பங்களிகப்பாகும். ஆங்கிலேயர் எவ்வாறு இந்தியாவைச் சுரண்டினாரக்ள் என்பதை அமலபடுத்தினர். இங்கிலாந்தில் ஜனநாயக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆங்கிலேயர் காரனிகளில் பிராதிநிதித்துவமற்ற அரசை எவ்வாறு திணித்து நாடகமாடுகின்றனர் என்பதையும் வெட்டவெளிச்சம் ஆக்கினர்.

**(ஈ) மிதவாதக்க கட்டம்:**

சென்னை மகாஜன சபை போன்ற மாகாண அமைப்புகள் அகிலஇந்திய அளவிலான அமைப்புகள் நிறுவப்படுவதற்கு வழிபோலியது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் உருவாக்கப்படுவதற்கு முன்பாக பல கூட்டங்களில் கலந்து கொண்டனர். அவ்வாறான ஒரு கூட்டம் 1884 டிசம்பரில் பிரம்மஞான சபையில் கூடியது. தாதாபாய் நௌரோஜி,K.T. தெலாங்,சுரேந்திரநாத் பானர்ஜி மற்றும் சில முக்கியத் தலைவர்களுடன், சென்னையிலிருந்து G. சுப்பிரமணியம்,P.ரங்கையா,P. அனநதாச்சார்லு போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய தேசிய காங்கிரசின் முதற்கூட்டம் 1885இல் பம்பாயில் நடைபெற்றது. மொத்தம் கலந்து கொண்ட 72 பிரதிநிகளில் 22 பிரதிநிகள் சென்னையைச் சேர்ந்தோராவர். G. சுப்பிரமணியம் தனது எழுத்துக்களின் மூலமாக தேசியத்தை முன்னெடுத்தவர் ஆவார். இந்திய

பொருளாதாரரீதியாக ஆங்கிலேயரகளால் சுரண்டப்படுவதைப் புரிந்துகொள்ள அவர் செய்த பங்களிப்புகள் அவர் நௌரோஜி மற்றும் கோகலே ஆகியோருக்கு இணையானவராவர்.

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு 1866இல் கல்கத்தாவித் தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் நடைபெற்றது. காங்கிரசின் மூன்றாவது மாநாடு பத்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் 1887இல் சென்னையில் இன்று ஆயிரம் விளக்கு என்று அழைக்கப்படுகிற மக்கிஸ் தோட்டதில் (Makkies Garden) நடைபெற்றது. கலந்து கொண்ட 607 அகில இந்தியப் பிரதிநிதிகள் 362 பிரதிநிதிகள் சென்னை மாகாணத்தைப் சேர்ந்தவர்கள் ஆவர்.

தமிழ்நாடு அன்றைய சென்னை மாகாணத்தில் ஒரு பகுதியாக இருந்து. சென்னை மாகாணம் என்பது இன்றைய ஆந்திரப் பிரதேசத்தின் பெரும் பகுதிகளையும் (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயரலசீமா) கர்நாடகாவையும் (பெங்களூரு, பெல்லாரழ, தெற்கு கனரா) கேரளாவையும் (மலபார்) மற்றம் ஒடிசாவின் (கஞ்கம்) சிலபகுதியையும் உள்ளடக்கியாக இருந்தது.

**சுதேசி இயக்கம்:**

வங்கப் பிரிவினை (1905) சுதேசி இயக்கத்திக்கு இட்டுச் சென்று விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றியமைத்தது. இந்தியவின் பல பகுதிகளில் குறிகப்பாப வங்காளம், பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் புகழ்பெற்ற தலைவர்கள் தோன்றினர். கல்கத்தா காங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின்படி சுதேசி நிறுவனங்களை ஊக்குவித்தல், அந்நியப் பண்டங்களைக் புங்கணித்தல், தேசியக் கல்வியை முன்னெடுத்தல் ஆகியவற்றை அவர்கள் நடைமுறைகப்படுத்தனர். சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்ப்டுத்தியது. அந்நியப் பண்டங்களைப் புறக்கணத்தல் தொடர்பாக காங்கிரஸ் தீவிரமான இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**(அ) தமிழ்நாட்டின் எதிர்வினை:**

T. C. சிதம்பரனார்,V. சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களைத் திரட்டுவதற்கு முதன்முதலாக தமிழ் பயன்படுத்தப்பட்டது. மக்களின் நாட்டுப்பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் சுப்பிரமணிய பாரதியின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும். சுதேசி கருத்துகளைப் பரப்புரை செய்ய பல இதழ்கள் தோன்றின. சுதேசமித்திரன், இந்திய ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும். தீவிர தேசியவாதத் தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களை கவர்ந்தன. சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

**சுதேசி நீராவி கப்பல் நிறுவனம்:**

சுதேசியின் செயல்பாடுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கைகளில் ஒன்று யாதெனில் தூத்துகுடியில் T.C.சிதம்பரனாரால் தொடங்கப்பட்ட சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் ஆகும். இவர் காவியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாறங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஓட்டினார். இருந்தபோதிலும் ஐரோப்பியக் கம்பெனியின் முறையற்ற கழுத்தறுப்பு போட்டியினாலும் அரசாங்கத்தின் ஒரு தலைப்பட்சமான போக்கினாலும் வ.உ.சி. யின் முயற்கிகள் தோல்வியில் முடிந்தன.

**திருநெல்வேலி எழுச்சி:**

திருநெல்வேலியியலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி., சுப்பிராமணிய சிவாவின் தோளோடுதோளட நின்றார். இவர் 1908இல் ஐரேப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்ததிற்க்குத் தலைமையேற்றார். இந்நிகழ்வு நடைபெற்ற அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யபபட்டார். பிபின் விடுதலை செய்யப்பட்டதைக் கொண்டுவதற்காகப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்ததற்காக வ.உ.வியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் இருவருத் அரசதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். தொடக்கத்தில் வ.உ.சிக்கு கொடுமையான வகையில் இரண்டு ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டன. மக்கள் செல்வாக்கு பெற்ற இவ்விறு தலைவர்களும் கைது செய்யப்பட்டது செய்தி பரவியதில்

திருநெல்வேலியில் கலகம் வெடித்தது. காவல்நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர். சிறையில் வ.உ.சி கடுமையாக நடத்தப்பட்டதோடு செக்கிழுக்க வைக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட வேண்டியவர்களில் G.சுப்பிமணியர், சுரேந்திரநாத் ஆர்யா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். சிறைத்தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதி பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்கு இடம்பெயர்ந்தனர். பாரதியின் முன்னுதாரணத்தை அரவிந்தகோஷ் V.V. சுப்பிரமணியனார் போன்ற தேசியவாதிகளும் பின்பற்றினர் சுதேசி இயக்கத் தலைவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான அடக்கமுறை தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தை ஓர் முடிவுக்குக் கொண்டு வந்தது.

**(ஆ) தமிழ்நாட்டில் புரட்டசிகர தேசியவாதிகளின் செயல்பாடுகள்:**

ஏனைய இடங்களில் நடந்ததைப் போலவே சுதேசி இயக்கம் இளைஞர்களுக்கு எழுச்சியூட்டியது. தலைவர்கள் இல்லாத சூழலில் அவர்கள் புரட்சிகர தேசியவாதிகளுக்குப் பாண்டிச்சேரி பாதுகாப்பான புகலிடமாயிற்று. தமிழ்நாட்டை சேர்ந்த இப்புரட்சிகர தேசியவாதிகள் பலருக்குப் புரட்சிகர தேசியவாதிகள் பலருக்குப் புரட்சிகர நடவடிக்கைகள் குறித்த அறிமுகமும் பயிற்சியும் லண்டனிலிருந்த இந்தியா ஹவுஸ் (India House) என்ற இடத்திலும் பாரிசிலும் வழங்கப்பெற்றது. அவர்களில் முக்கியமானவர்கள் ஆீவு ஆச்சாரியா,V.V. சுப்ரமணியனார் மற்றும் T.S.S. ராஜன் ஆகியோராவர். அவர்கள் புரட்சிகர நூல்களை பாண்டிச்சேரியின் வழியாக சென்னையில் விநியோகம் செய்தனர். புரட்சிவாதச் செய்தித்தாள்களான இந்திய, வீஜயா, சூர்யோதயம் ஆகியன பாண்டிச்சேரியிரிருந்து வெளிவந்தன. சில புரட்சிவாத செய்தித்தாள்களும் பாரதியின் பாடல்களும் அரசுக்கு எதிரானதெனத் தடைசெய்யப்பட்டன. 1901இல் அரவிந்த கோஷ்,V.V. சுப்ரமணியனார் ஆகியோரின் வருகைக்குப் பின்னர் பாண்டிச்சேரியில் புரட்சிகர நடவடிக்கைகள் தீவிராமடைந்தன. இத்தகைய நடவடிக்கைகள் முதல் உலகப்போர் வெடிக்கின்றவரை தொடர்ந்தன.

**ஆஷ் கொலை:**

1904இல் நீலகண்ட பிராம்மச்சாரியும் வேறு சிலரும் பாரத மாதா சங்கம் எனும் ரகசிய அமைப்பை உருவாக்கினர். ஆங்கில அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் மக்களிடைய நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதன் இவ்வமைப்பால் உள்ளுணர்வு தூண்டப்பட்டார். அவர் 1911 ஜுன் 17 இல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E. ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திரப்பில் சுட்டுக் கொன்றார். அதன் பின்னர் தன்னைத்தானே சுட்டு கொண்டார். மக்களிடமிருந்து பிரிந்துநின்ற இந்த இளம் புரட்சியாளர்கள் தேசபக்தி உடையவர்களாக இருந்தபோதிலும், மக்களை ஊக்கப்படுத்தவும் அணிதிரட்டவும் தவறிவிட்டனர்.

**அன்னிபெசன்ட் அம்மையாரும் தன்னாட்சி இயக்கமும்:**

தீவிர தேசியவாதிகளும் புரட்சிகர தேசியவாதிகளும் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்ட நிலையில் மிதவாதி தேசியவாதிகள் சில அரசமைப்பு சீர்திருத்தங்கள் செய்யப்படலாம் என நம்பினர். இருந்தபோதிலும் மிண்டோ – மார்லி சீர்திருத்தங்கள் பொறுப்பாட்சியை வழங்கவில்லை என்பதால் அவர்கள் மனச்சோர்வடைந்தனர். இதன் பின்னரும் கூட மேலும் சில சீர்திருத்தங்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் காங்கிரஸ் ஆங்கிலேயரின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு நல்கியது.

இவ்வாறு தேசிய இயக்கம் தளர்வுற்று இருந்த நிலையில் பிரம்மஞான சபையின் தலைவரும், அயர்லாந்துப் பெண்மணியுமான அன்னிபெசன்ட் அயர்லாந்தின் தன்னாட்சி அமைப்புகளை அடியொற்றி தன்னாட்சி இயக்கத்தை முன்மொழிந்தார். 1916 இல் தன்னாட்சி இயக்கத்தை (Home Rule League) தொடங்கிய அவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றார். இச்செயல் திட்டத்தில் G.S. அருண்டேல்,B.P. வாடியா மற்றும் C.P. ராமசாமி ஆகியோர் அவருக்குத் துணை நின்றனர். இவர்கள் கோரிய தன்னாட்சி ஆங்கில அரசிடம் ஒரளவிற்கான விசுவாசத்தையே கொண்டிருந்ததாக அமைந்தது. தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காக அன்னிபெசன்ட் நியூ இந்தியா (New India), காமன் வீல் (Commonweal)

எனும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார். "அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது" என கூறினார். 1910 ஆம் ஆண்டு பத்திரிகைச் சட்டத்தின்படி அன்னிபெசன்ட் பிணைத் தொகையாக பெருமளவு பணத்தைச் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டார். அன்னி பெசன்ட் "விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது" (How India wrought for Freedom') இந்தியா : ஒரு தேசம் (Indina : A Nation) எனும் இரண்டு புத்தகங்களையும் சுயாட்சி குறித்த துண்டுப்பிரசுரத்தையும் எழுதினார்.

பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்து தன்னாட்சி இயக்க வகுப்புகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அம்மாணவர்கள் சாரணர் இயக்கக் குழுக்களாகவும் (Scouts) தொண்டர் குழுக்களாகவும் மாற்றப்பட்டனர். அன்னிபெசன்ட்டும் அவருடன் பணியாற்றியோரும் பொதுமேடைகளில் பேசுவதும் எந்த ஒரு அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதும் தடை செய்யப்பட்டிருந்தது. 1917 இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு அன்னிபெசன்ட் தலைவராகத் தேர்வுசெய்யப்பட்டார். தன்னாட்சி இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்த இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்த B.P. வாடியா போன்றோர் தொழிற்சங்கங்களை உருவாக்கி தொழிலாளர் வர்க்கத்தை அணி திரட்டுவதில் முக்கியப் பங்காற்றினர். இத்தலைவர்கள் தொழிலாளர்கள் வேலை பார்க்கும் இடங்களிலுள்ள நிலைகளை மேம்படுத்தியதோடல்லாமல், தொழிலாளர்களை விடுதலைப் போராட்டத்தின் பகுதியாக மாற்றுவதிலும் வெற்றி பெற்றனர். இருந்தபோதிலும் காந்தியடிகள் தேசியத் தலைவராக எழுச்சி பெற்ற நிலையில் அன்னிபெசன்டும் தன்னாட்சி இயக்கங்களும் ஒளிமங்கின.

**பிராமணர் அல்லாதோர் இயக்கமும் காங்கிரசிற்கு சவாலும்:**
இதே சமயத்தில் சென்னை மாகாணத்தில் கல்வி வேகமாக வளர்ந்தது. கல்வியறிவு பெற்ற பிராமணர் அல்லாதோரின் எண்ணிக்கை அதிகமானது. மேலே விவாதிக்கப்பட்ட தீவிர அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதவர்களை அரசியலில் ஈடுபடவைத்தது. பிராமணர்களின் மேலாதிக்கத்தில் இருந்த அரசுப் பணிகளிலும், தேர்வு செய்யப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதித்துவத்திலும், அரசு வாய்ப்புகளில் நிலவும் சமநிலையற்ற தன்மையும் சாதியப் பாகுபாடும் இருப்பது குறித்து அவர்கள் காங்கிரசிலும் பிராமணர்களே மிகப்பெரும் எண்ணிக்கையில் இருந்தனர்.

**தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்:**
பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தங்களை ஒரு அரசியல் அமைப்பாக அணிதிரட்டிக் கொண்டனர். 1912 இல் சென்னை திராவிடர் கழகம் (Madras Dravidian Association) உருவாக்கப் பெற்றது. அதன் செயலராக C. நடேசனார் செயலூக்கமிக்க வகையில் பங்காற்றினார். 1916 ஜுன் மாதத்தில் அவர் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக "திராவிடர் சங்க தங்கும் விடுதி"யை நிறுவினார். மேலும் இக்காலப் பகுதியைச் சேர்ந்த இரு முக்கிய பிராமணர் அல்லாதோரின் தலைவர்களான T.M. நாயர்,P. தியாகராயர் ஆகிய இருவரிடையே நிலவிய கருத்து வேற்றுமையை சரிசெய்து இணக்கத்தை எற்படுத்தினார். இவ்விருவருமே தொடக்கத்தில் காங்கிரசில் அங்கம் வகித்தவர்களே காங்கிரஸ் அமைப்பினுள் பிராமணரல்லாதவர்கள் எவ்வாறு ஓரங்கட்டப்படுகிறார்கள் என்பதைப் பார்த்துத் தெளிவுபெற்றவர்களாவர். 1916 நவம்பர் 20 இல் P. தியாகராயர்,T.M. நாயர்,C. நடேசனார் ஆகியோர் தலைமையில் சுமார் முப்பது பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொது அரங்கில் கூடினர். பிராமணரல்லாதோர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (South Indian Liberal Federation – SILF) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. அவர்கள் ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ் (Justice– நீதி) தமிழில் திராவிடன், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா எனும் மூன்று செய்தித்தாள்களையும் தொடங்கினர். விரைவில் இவ்வமைப்பு நடத்திய ஆங்கில நாளிதழின் பெயரான ஜஸ்டிஸ் என்பதே அவ்வமைப்பின் பெயராகி ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி) என அழைக்கப்படலாயிற்று. அமைப்புக்கான கிளைகளை உருவாக்கும் முகமாக மாகாணம் முழுவதிலும் ஜஸ்டிஸ் கட்சி பல மாநாடுகளை நடத்தியது.

**இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கை:**

நீதிக்கட்சி தனது நோக்கங்களை கோடிட்டுக் காட்டி பிராமணரல்லாதோரின் அறிக்கையை (Non-Brahmin Manifests) வெளியிட்டது. அவை: அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோர்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் பிரதிநிதித்துவ அமைப்புகளில் இட ஒதுக்கீடு என்பனவாகும். இவ்வமைப்பு தன்னாட்சி இயக்கத்தைப் பிராமணர்களின் இக்கம் என எதிர்த்தது. தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கக் கூடுமென அஞ்சியது. இது காங்கிரசையும் பிராமணர்களின் கட்சியென விமர்சித்தது. பாராளுமன்ற அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து 1917 இல் மாண்டேகுவின் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அரசியல் விவாதங்கள் தீவிரமடைந்த நீதிக்கட்சி வகுப்புவாத பிரதிநதித்துவத்தைக் கோரியது (சமூகத்திலுள்ள பல்வேறு பிரிவினர்களுக்கும் பிரதிநிதித்துவம்). சென்னை அரசாங்கம் நீதிக் கட்சியை ஆதரித்தது. ஆங்கிலேயரின் ஆட்சி பிராமணர் அல்லாதோரின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியுமென நீதிக்கட்சி நம்பியது. 1919 ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணரல்லாதோர்களுக்குத் தேர்தலில் இடஒதுக்கீடு வழங்கியது. இந்நடவடிக்கையைக் காங்கிரஸ் கட்சி விமர்சனம் செய்தது ஆனால் நீதிக்கட்சியால் இது வரவேற்கப்பட்டது.

**நீதிக்கட்சி அமைச்சரவை:**

1920 இல் நடத்தப்பட்ட தேர்தல்களைக் காங்கிரஸ் புறக்கணித்தது. சட்டமன்றத்தில் மொத்தமிருந்த 98 இடங்களில் 63 இல் நீதிக்கட்சி வெற்றிபெற்றது. நீதிக்கட்சியின் A. சுப்பராயலு முதலாவது முதலமைச்சரானார். 1923இல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் நீதிக் கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் அமைச்சரவையை அமைத்தார். பிராமணரல்லாதோரின் நலனுக்காக நீதிக் கட்சி பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. அவை வருமாறு: உள்ளாட்சித்துறைகளிலும் கல்வி நிலையங்களிலும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு செய்யப்பட்டது. பணியாளர் தேர்வுக்குழு நிறுவப்பெற்றது. இது பின்னர் பொதுப் பணியாளர் தேர்வாணையமானது. இந்து சமய அறநிலையத்துறை சட்டமும் சென்னை அரசு தொழில் உதவிச் சட்டமும் இயற்றப்பட்டன. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகப் புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து வழங்கப்பட்டன. வசதியற்ற மக்கள் பிரிவினரிடையே கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக கல்வி கட்டணச் சலுகை, கல்வி உதவித்தொகை வழங்குதல், மதிய உணவுத் திட்டம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள்**

**ரௌலட் சட்டம்:**

முதல் உலகப்போரில் முக்கியப் பங்களிப்பை செய்ததனால் (குறிப்பாக ஆங்கிலப் பேரரசுக்காக இந்திய வீரர்கள் தொலைதூரப் பகுதிகளில் போரிட்டனர்) இந்தியர்கள் ஆங்கில அரசிடமிருந்து மேலும் பல சீர்திருத்தங்களை எதிர்நோக்கினர். ஆனால் ஆங்கில அரசு 1919 இல் கொடூரமான குழப்பவாதி புரட்சிக் குற்றச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தைப் பரிந்துரை செய்த குழுவினுடைய தலைவரின் பெயர் சர் சிட்னி ரௌலட் ஆவார். எனவே இச்சட்டம் பரவலாக ரௌலட்சட்டம் என அறியப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் முறையான நீதித்துறை சார்ந்த விசாரணைகள் இல்லாமலேயே யாரை வேண்டுமானாலும் பயங்கரவாதி எனக் குற்றம்சாட்டி அரசு சிறையில் அடைக்கலாம். இதைக் கண்டு இந்தியர்கள் திகிலடைந்தனர். மக்களின் கோபத்திற்குக் குரல்கொடுத்த காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் தான் பயன்படுத்திய போராட்ட வடிவமான சத்தியாகிரகத்தை மேற்கொண்டார்.

**ரௌலட் சத்தியாகிரகம்:**

1919மார்ச் 18 இல் மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார். 1919 ஏப்ரல் 6இல் “கருப்புச் சட்டத்தை“ எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்து தொடங்கிய ஊர்வலங்கள் மெரினா கடற்கரையில் ஒன்றிணைந்து பெரும் மக்கள் கூட்டமானது. அந்நாள் முழுவதும் உண்ணாவிரதமும் பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டன. சென்னை சத்தியாகிரக சபை என்ற அமைப்பும் நிறுவப்பட்டது. ராஜாஜி, கஸ்தூரிரங்கர்,S. சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். தொழிலாளர்களுக்கென தனியாக நடத்தப்பட்ட கூட்டமொன்றில் V. கல்யாணசுந்தரம் (திரு.வி.க) B.P. வாடியா, வ.உ.சி. ஆகியோர் உரையாற்றினர்.தொழிலாளர்களும்,

மாணவர்களும், பெண்களும் பெருவாரியான எண்ணிகையில் பங்கேற்றதே இவ்வியக்கத்தின் முக்கிய அம்சமாகும்.

**ஜார்ஜ் ஜோசப்:**
வழக்கறிஞரும் நன்கு சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவருமான ஜார்ஜ் ஜோசப் மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியதிலும், அதன் நோக்கத்தை மக்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதிலும் முக்கியப் பங்குவகித்தார். செங்கண்ணூரில் (இன்றைய கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டம்) பிறந்திருந்தாலும் மதுரையில் வசிப்பதையே விரும்பி மக்களின் வழக்கறிஞராகப் பணி செய்தார். தனது நீண்ட பொது வாழ்வின் போது, அவர் கேரளாவில் வைக்கம் சத்தியாகிரகத்தை வழிநடத்தினார். ஏனெனில் இது இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சினையாக அவர் கருதினார். தமிழ்நாட்டில் குற்றப் பரம்பரைச் சமூகங்களின் பாதுகாவலராக விளங்கினார். பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவையின் காரணமாக மதுரை மக்கள் இவரை "ரோசாப்பு துரை" என அன்புடன் அழைத்தனர். மதுரை தொழிலாளர் சங்கம் (Madurai Labour Union) (1918) எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவினார். இச்சங்கத்தின் தொடக்ககாலப் போராட்டங்கள் நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வையும் வேலைநேரக் குறைப்பையும் பெற்றுத்தந்தன.

**கிலாபத் இயக்கம்:**
ஜாலியன் வாலா பாக் படுகொலையைத் தொடர்ந்து அதற்குக் காரணமான ஜெனரல் டயர் அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுக்கப்பட்டதோடல்லாமல் அவருக்குப் பரிசுகளும் வெகுமதியும் வழங்கப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின்னர் துருக்கியின் கலீபா அவமரியாதை செய்யப்பட்டதுடன் அவரது அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. கலீபா பதவியை மீட்பதற்காக கிலாபத் இயக்கம் தொடங்கப் பெற்றது. பெரும்பாலும் தேசிய இயக்கத்திலிருந்து ஒதுங்கி இருந்த முஸ்லீம்கள் தற்போது பெரும் எண்ணிக்கையில் பங்கேற்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் 1920 ஏப்ரல் 17 இல் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இதைப்போன்ற ஒரு மாநாடு ஈரோட்டிலும் நடத்தப்படடது. வாணியம்பாடி, கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

**ஒத்துழையாமை இயக்கம்:**
ஒத்துழையாமை இயக்கத்தின் போது தமிழ்நாடு செயல்துடிப்புடன் விளங்கியது. ஊ. ராஜாஜியும் ஈ.வெ. ராமசாமியும் (ஈ.வெ.ரா பின்னர் பெரியார் என அழைக்கப்பட்டார்) தலைமையேற்று நடத்தினர். முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை நிறுவிய யாகுப் ஹசன் என்பாருடன் ராஜாஜி நெருக்கமாகச் செயல்பட்டார். இதன் காரணமாக தமிழநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் போது இந்துக்களும் இஸ்லாமியரும் இணைந்து நெருக்கமாகச் செயல்பட்டனர். பொதுக்கூட்டங்களின் போது ஒழுங்கைப் பராமரிக்கவும் துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்யவும், கொடிகளை ஏந்திச் செல்லவும் காங்கிரஸ் தொண்டர்கள் அணி உருவாக்கப்பட்டது. அவர்களும் கள்ளுக்கடை மறியலில் முக்கியப் பங்காற்றினர்.

**வரிகொடா இயக்கமும் கள்ளுக்கடை மறியல் இயக்கமும்:**
ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக, பல இடங்களில் விவசாயிகள் வரிகொடுக்க மறுத்தனர். தஞ்சாவூரில் வரிகொடா இயக்கம் ஒன்று நடைபெற்றது. சட்டமன்றங்கள், பள்ளிகள் மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவை புறக்கணிக்கப்பட்டன. அந்நியப்பொருட்கள் புறக்கணிக்கப்பட்டன. பல பகுதிகளில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் அதிக எண்ணிக்கையில் நடைபெற்றன அவற்றில் பல தேசியத் தலைவர்களால் வழிநடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தது கள்ளுக்கடைகளுக்கு எதிரான போராட்டங்களே. கள்ளுக்கடைகள் மறியல் செய்யப்பட்டன. மாகாணத்தின் அனைத்து பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. குற்றப்பரம்பரைச் சமூக சட்டத்திற்கு எதிராகவும் கிளர்ச்சிகள் நடைபெற்றன. 1921 நவம்பரில் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. ராஜாஜி,சுப்பிரமணிய சாஸ்திரி,ஈ.வெ.ரா. ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 1922 ஜனவரி 13இல் வேல்ஸ் இளவரசரின் வருகை புறக்கணிக்கப்பட்டது. காவல்துறையின் அடக்குமுறையில் இருவர் கொல்லப்பட்டனர் பலர் காயமுற்றனர். 1922இல் சௌரி சௌரா

நிகழ்வில் 22 காவலர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**ஈ.வெ.ரா. வின் ஆக்கபூர்வச் செயல்பாடுகள்**

இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டு அரசியலில் ஈ.வெ.ரா. முக்கியப் பங்குவகித்தார். கதரின் பயன்பாட்டை மேம்படுத்தி அதன் விற்பனையை அதிகரிக்கத் தீவிரமாகச் செயல்பட்டார். கள்ளுண்பதற்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தனக்குச் சொந்தமான தோப்பிலிருந்த தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தினார். திருவாங்கூர் அரசின் ஆட்சியிலிருந்த வைக்கம் எனும் ஊரில் நடைபெற்ற கோவில் நுழைவுக்கான சத்தியாகிரகத்திலும் முக்கியப்பங்கு வகித்தார். கோவிலைச் சுற்றியுள்ள வீதிகள் ஒடுக்கப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மக்கள் நடமாடக்கூட முடியாத அல்லது உயர் சாதி மக்களிடமிருந்து குறிப்பிட்ட தூரம் விலகியே நின்றாக வேண்டிய காலகட்டமது. கேரளாவின் முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் ஈ.வெ.ரா. அங்கு சென்று அவ்வியக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டினார். அவர் கைது செய்யப்பட்டு ஒரு மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்ட பின்னரும் வைக்கத்தை விட்டு வெளியேற மறுத்தார். எழுச்சியூட்டும் விதத்தில் உரைகள் நிகழ்த்தியதற்காக இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டு ஆறுமாதகால கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. விடுதலையாகி ஈரோடு திரும்பியபோது கதர் விற்பனையை முன்னேற்றுவது குறித்து பேசியதற்காகக் கைது செய்யப்பட்டார். 1925 ஜுன் மாதத்தில் வைக்கத்தில் கோவிலைச் சுற்றியிருந்த வீதிகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. சாதிப் பாகுபாட்டுக்கு எதிராகவும் கோவில் நுழைவுப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் அவர் செய்த பங்களிப்பிற்காக வைக்கம் வீரர் (Vaikom Hero) என பாராட்டப்பட்டார்.

**சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனை:**

ஆயினும் இக்காலகட்டத்தில் ஈ.வெ.ரா. காங்கிரசின் மீது மிகவும் அதிருப்தி கொண்டிருந்தார். அது பிராமணர்களின் நலன்களை மட்டுமே மேம்படுத்துவதாக உணர்ந்தார். சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்வாக காங்கிரசுக்குள்ளே ஏற்பட்ட கருத்து வேறுபாடும் ஈ.வெ.ரா.வை காங்கிரசை விட்டு வெளியேற வைத்தன.

தேசியக் கல்வியை முன்னெடுக்கும் பொருட்டு ஒரு குருகுலமானது V.V. சுப்பிரமணியனாரால் சேரன்மாதேவியில் நிறுவப்பெற்றது. இது காங்கிரசிடமிருந்து நிதியினைப் பெற்றது. இருந்தபோதிலும் இப்பள்ளியில் சாதியின் அடிப்படையில் மாணவர்கள் பாகுபடுத்தப்பட்டனர். பிராமண மாணவர்களுக்கும் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாற்றப்பட்டது. உணவிலும் வேறுபாடுகள் இருந்தன. இது.ஈ.வெ.ரா.வின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போது அவர் மற்றொரு தலைவரான P. வரதராஜுலுவுடன் இணைந்து இப்பழக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி கடுமையாக விமர்சித்தார்.

1925 நவம்பர் 21 இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் அவர் சட்டசபையில் பிராமணரல்லாதோருக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தார். இதன் பொருட்டு 1920 முதல் அவர் மேற்கொண்ட முயற்சிகளில் தோல்வியுற்றார். இவர் முன்மொழிந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதால் வேறு சில பிராமணரல்லாத தலைவர்களுடன் மாநாட்டை விட்டு வெளியயேறினார். வெளிவந்தவர்கள் தனியே சந்தித்தனர். விரைவில் காங்கிரசிலிருந்து விலகிய ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

**சுயராஜ்ஜிய கட்சியினர் - நீதிக்கட்சியினர் இடையேயான போட்டி:**

ஒத்துழையாமை இயக்கம் விலக்கி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ் மாற்றத்தை விரும்பாதோர்” ”மாற்றத்தை விரும்புவோர்” எனப் பிரிந்தது. மாற்றத்தை விரும்பாதோர் சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர விரும்பினர். மாற்றத்தை விரும்பியோர் தேர்தலில் போட்டியிட்டுச் சட்டமன்றத்தினுள் செல்ல விரும்பினர். ராஜாஜியுடன் காந்தியத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் வேறு சிலர் இணைந்து சட்டமன்றத்திற்குச் செல்வதை எதர்த்தனர். கஸ்தூரிரங்கம், ஆ.யு. அன்சாரி ஆகியோருடன் சேர்ந்து கொண்ட ராஜாஜி சட்டமன்றத்தைப் புறக்கணிப்பது எனும் கருத்தை முன்வைத்தார். இக்கருத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு காங்கிரசுக்குள்ளேயே சித்தரஞ்சன் தாஸ், மோதிலால்நேரு ஆகியோரால் சுயராஜ்ஜியக் கட்சி உருவாக்கப்படுவதற்கு இட்டுச் சென்றது. தமிழ்நாட்டில் S. சீனிவாசனார் S. சத்தியமூர்த்தி ஆகியோர் சுயராஜ்ஜியக் கட்சியினருக்குத் தலைமை ஏற்றனர்.

**சுப்பராயன் அமைச்சரவை:**
1926 இல் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் சுயராஜ்ஜியக் கட்சியினர் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றனர். இருந்தபோதிலும் காங்கிரசின் கொள்கைக்கு இணங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்கமறுத்தது. மாறாக அவர்கள் சயேட்சை வேட்பாளரான P. சுப்பராயனுக்கு

**நீல் சிலை அகற்றும் போராட்டம் (1927):**
ஜேம்ஸ் நீல், மதராஸ் துப்பாக்கி ஏந்திய காலாட்படையைச் சேர்ந்தவர். 1857 பேரெழுச்சியின் போது நடைபெற்ற கான்பூர் படுகொலை என்றழைக்கப்படும் சம்பவத்தில் பல ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் நீல் கொடூரமாக நடந்து கொண்டார். பின்னர் நீல் இந்திய வீரர் ஒருவரால் கொல்லப்பட்டார். சென்னை மௌண்ட்ரோட்டில் ஆங்கிலேயர் அவருக்கு ஒரு சிலை வைத்தனர். இதை, இந்தியர்களின் உணர்வுகளுக்கு இழைக்கப்படும் அவமரியாதை எனக் கருதிய தேசியவாதிகள் சென்னையில் தொடர் போராட்டங்களை மேற்கொண்டனர். சென்னை மாகாணத்தின் பலபகுதிகளிலிருந்து வந்திருந்த போராட்டக்காரர்களுக்கு திருநெல்வேலியைச் சேர்ந்த S.N. சோமையாஜுலு தலைமையேற்றார். பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அச்சமயம் சென்னைக்கு வந்த காந்தியடிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். 1937 இல் ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருந்தபோது இச்சிலை அகற்றப்பட்டு சென்னை அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அமைச்சரவை அமைக்க உதவினர். 1930 இல் நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்ஜியக் கட்சியனர் போட்டியிடாததால் நீதிக்கட்சி எளிதாக வெற்றி பெற்றது. அக்கட்சி தொடர்ந்து 1937 வரை ஆட்சி செய்தது.

**சைமன் குழுவைப் புறக்கணித்தல்:**
1919 ஆம் ஆண்டுச் சட்டத்தின் செயல்பாடுகளைப் பரிசீலனை செய்து சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்ய 1927 இல் இந்திய சட்டப்பூர்வ ஆணையம் ஒன்று சர் ஜான் சைமனின் தலைமையில் அமைக்கப் பெற்றது. ஆனால் வெள்ளையர்களை மட்டுமே கொண்டிருந்த இக்குழுவில் ஒரு இந்தியர் கூட இடம்பெறாதது இந்தியர்களுக்கு மிகப்பெரும் மனச்சோர்வை ஏற்படுத்தியது, ஆகையால் காங்கிரஸ் சைமன் குழுவைப் புறக்கணித்து சென்னையில் S. சத்தியமூர்த்தி தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு பிரச்சாரக் குழுவொன்று உருவாக்கப்பட்டது. மாணவர்கள், கடைகள் வைத்திருப்போர், வழக்கறிஞர்கள், ரயில் பயணிகள் ஆகியோரிடையே விரிவான அளவில் புறக்கணிப்புப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 1929 பிப்ரவரி 18 இல் சைமன் குழு சென்னைக்கு வந்தபோது பொதுக்கூட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள், கடையடைப்பு போன்றவற்றால் வாழ்த்தப்பெற்றது. குழுவுக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டப்பட்டது. எதிர்ப்புகளை ஒடுக்க காவல்துறை படைப் பிரயோகம் செய்தது.

**சட்ட மறுப்பு இயக்கம்:**
**புரண சுயராஜ்ஜியத்தை நோக்கி:**

1920 களில் தமிழ்நாட்டில் காந்தியடிகள் தலைமையிலான காங்கிரஸ் விரிந்துபட்ட அடித்தளத்தைக் கொண்ட அமைப்பாக மாறிக் கொண்டிருந்தது. 1927 இல் இந்திய தேசிய காங்கிரசின் சென்னை மாநாடு முழுமையான சுதந்திரமே தனது இலக்கு என அறிவித்தது. சைமன் குழுவினை எதிர்த்து, அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை வடிவமைப்பதற்காக காங்கிரஸ் மோதலால் நேருவின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. 1929 இல் லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுயராஜ்ஜியம் (முழு சுதந்திரம்) என்பதை இலக்கு எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் 1930 ஜனவரி 26 இல் ராவி நதியின் கரையில் சதந்திரத்தை அறிவிக்கும் விதமாக ஜவகர்லால் நேரு தேசியக் கொடியை ஏற்றினார்.

**வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம்:**
காந்தியடிகள் முன்வைத்த கோரிக்கைகளை வைஸ்ராய் ஏற்றுக் கொள்ளாததைத் தொடர்ந்து அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். 1930 மார்ச் 12இல் தண்டியை நோக்கி உப்பு சத்தியாகிரக யாத்திரையைத் துவக்கினார். சட்டமறுப்பு இயக்கமானது மாணவர்கள், கடைகள் வைத்திருப்போர், தொழிலாளர், பெண்கள் ஆகியோரின் பங்கேற்புடன் மக்கள் பெருவாரியான

எண்ணிக்கையில் கலந்து கொண்ட போராட்டமாகும். கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், கடையடைப்பு ஆகியனவும் சுதேசி நாடகங்களை மேடையேற்றுவது சுதேசிப் பாடல்கள் பாடுவது ஆகியனவும் அன்றாட நிகழ்வுகள் ஆயின. சென்னை நகரில் கடைகளுக்கு முன்பாக மறியல்கள் நடத்தப்பட்டதுடன் அந்நியப் பண்டங்கள் புறக்கணிக்கப்பட்டன. ராஜாஜி உப்பு சத்தியாகிரகம் ஒன்றினை ஏற்பாடுசெய்து தலைமையேற்று வேதாரண்யம் நோக்கி அணி வகுத்துச் சென்றார். தாங்களாக முன்வந்த ஆயிரம் தொண்டர்களில் நூறு தொண்டர்கள் மட்டுமே அணிவகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1930 ஏப்ரல் 13இல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28 இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தைச் சென்றடைந்தது. இவ்வணிவகுப்புக்கென்றே ”கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்” எனும் சிறப்புப்பாடலை நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் புனைந்திருந்தார். காவல்துறையின் கொடூரமான நடவடிக்கைகளைப் பொருட்படுத்தாமல் அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளுக்கு பயணித்த பாதையெங்கும் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. வேதாரண்யம் சென்றடைந்த பின்னர் ராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். உப்புச் சட்டத்தை மீறியதற்காக ராஜாஜி கைது செய்யப்பட்டார். T.S.S.ராஜன், திருமதி. ருக்மணி லட்சுமிபதி, சர்தார் வேதரத்தினம்,C. சாமிநாதர் மற்றும் K. சந்தானம் ஆகியோர் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற ஏனைய முக்கியத் தலைவர்களாவர்.

**தமிழக மாவட்டங்களில் பரவலான போராட்டங்கள்:**

வ. பிரகாசம், மு. நாகேஸ்வர ராவ் ஆகியோர் தலைமையில் சத்தியாகிரகிகள் சென்னைக்கு அருகேயுள்ள உதயவனம் என்ற இடத்தில் ஒரு முகாமை அமைத்திருந்தனர். ஆனால் அவர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்வு சென்னையில் கடையடைப்பிற்கு வழிகோலியது. 1930 ஏப்ரல் 27 இல் திருவல்லிக்கேணியில் காவல்துறையினருடன் மோதல் ஏற்பட்டது. மூன்று மணி நேரம் நடைபெற்ற இம்மோதலில் மூன்று நபர்கள் உயிரிழந்தனர். ராமேஸ்வரத்தில் உப்பு சத்தியாகிரகம் மேற்கொள்ள முயன்ற தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். உவரி,அஞ்செங்கோ, வேப்பலோடை, தூத்துக்குடி மற்றும் தருவைக்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. மாகாணம் முழுவதிலும் நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். பெண்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். உப்புச்சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதியாவார். இயக்கத்தை நசுக்க காவல்துறை கொடுமையான படையைப் பயன்படுத்தியது. 1932 ஜனவரி 26இல், பரவலாக ஆரியா என அழைக்கப்பட்ட பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக்கொடியை ஏற்றினார். சத்தியமூர்த்தி அந்நியத் துணிகளை விற்பனை செய்யும் கடைகளை மறியல் செய்தார். ஊர்வலங்களைத் திட்டமிட்டார். துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தார். N.M.R.சுப்பராமன் மற்றும் கு. காமராஜ் ஆகியோரும் முக்கியப் பங்கு வகித்தனர்.

**திருப்பூர் குமரனின் வீரமரணம்:**

1932 ஜனவரி 11 இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல்துறையினரால் இரக்கமின்ற அடித்து உதைக்கப்பட்டனர். பரவலாக திருப்பூர் குமரன் என்றழைக்கப்படும் மு.மு.ஞ.சு. குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார். ஆகையால் இவர் கொடிகாத்த குமரன் என புகழப்படுகிறார். எனவே,ஒத்துழையாமை இயக்கம் சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களின் பங்களிப்புடன் நடைபெற்ற தமிழ்நாட்டின் மிகப்பெரிய மக்கள் இயக்கங்களில் ஒன்றாகும்.

**முதல் காங்கிரஸ் அமைச்சரவை:**

1935 இந்திய அரசாங்கச் சட்டம் மாநில சுயாட்சிக்கு வழி வகுத்தது. சட்டமன்றத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் குழு மாகாண அதிகாரங்களை நிர்வகித்தது. இருந்தபோதிலும் தேர்நதெடுக்கப்பட்ட அரசின் ஆலோசனைகளைப் புறக்கணிக்கும் அதிகாரத்தை ஆளுநர் பெற்றிருந்தார். 1937 ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. தேர்தல்களில் காங்கிரஸ் பெற்ற வெற்றியானது, மக்களிடையே அது பெற்றிருந்த செல்வாக்கைச் சுட்டிக்காட்டியது.

ராஜாஜி முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தார். மது விலக்கைப் பரிசோதனை முயற்சியாக சேலத்தில் அறிமுகம் செய்தார். இதன் மூலம் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு

செய்ய விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார். சமூகத் தளத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கோவில்களைத் திறந்து வைத்தார். T. பிரகாசம் மேற்கொண்ட முயற்சியினால் ஜமீன்தார்களின் பகுதிகளைச் சேர்ந்த குத்தகைதாரர்களின் நிலை குறித்து விசாரணை செய்ய விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இருந்தபோதிலும் கிராமப்புற கடன் பிரச்சனைகளை தீர்பதற்காக கடன் சமரச வாரியங்கள் அமைக்கப்பட்டதைத் தவிர வேறு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. தேர்தெடுக்கப்பட்ட இந்திய அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்தது.

மதுரை ஹரிஜன சேவக் சங்கத்தின் தலைவர் வைத்தியநாதர், செயலர் L.N. கோபால்சாமி ஆகியோரால் 1939 ஜுலை 9 இல் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் ஹரிஜன மக்களுடன் நுழையத் திட்டமிடப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக உள்ள குடிமை, சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்காக 1939 இல் கோவில் நுழைவு அங்கீகார, இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது.

**இந்தி எதிர்ப்புப் போராட்டம்:**

பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப்பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது. இது ராஜாஜியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய நடவடிக்கையாகும். தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்க, ஆரிய வட இந்தியர்களால் சுமத்தப்பட்ட ஏற்பாடாக இது கருதப்பட்டதால் மக்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியது. இதற்கு எதிராக ஈ.வெ.ரா. மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார். அவர் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றினை சேலத்தில் நடத்தினார். உறுதியான செயல்பாட்டிற்கான திட்டத்தை இம்மாநாடு வடிவமைத்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஒடுக்கப்பட்டோர் கூட்டமைப்பும், முஸ்லிம் லீக்கும் ஆதரவளித்தன. தாளமுத்து மற்றும் நடராஜன் எனும் இரண்டு ஆர்வமிக்க போராட்டக்காரர்கள் சிறையில் மரணமடைந்தனர். திருச்சியிலிருந்து சென்னைக்கு ஊர்வலமொன்று திட்டமிடப்பட்டது. பெரியார் உட்பட 1200 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து நிர்வாகத்தைக் கைக்கொண்ட சென்னை மாகாண ஆளுநர் இந்தி கட்டாயப் பாடம் என்பதை நீக்கினார்.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம்:**

கிரிப்ஸ் குழுவின் தோல்வியும், போர்க்கால பாற்றாக்குறைகளும், விலையேற்றமும் மக்களிடையே பெரும் மனநிறைவின்மையை ஏற்படுத்தியது. 1942 ஆகஸ்டு 8 இல் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காந்தியடிகள் ”செய் அல்லது செத்துமடி” எனும் முழுக்கத்தை வழங்கினார். ஒட்டு மொத்த காங்கிரஸ் தலைவர்களும் ஒரே நாள் இரவில் கைது செய்யப்பட்டனர். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் காவலர்கள் உள்ளூர் தலைவர்களின் பெயர்ப் பட்டியலை வைத்துக் கொண்டு அவர்கள் ரயிலை விட்டு இறங்கியதும் கைது செய்ததை பாம்பாயிலிருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த கு. காமராஜர் கவனித்தார். காவல் துறையினரின் கண்களில் படாமல் அரக்கோணத்திலேயே இறங்கிவிட்டார். பின்னர் அவர் தலைமறைவாகி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியை மேற்கொண்டார். துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்த போது ராஜாஜியும் சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டனர். தமிழ் நாட்டில் இவ்வியக்கம் பரந்துபட்ட அளவில் நடைபெற்றது. மேலும் அஞ்சல் அலுவலகங்களை தீக்கிரையாக்குவது, தந்திக் கம்பங்களின் கம்பிகளை வெட்டி விடுவது, ரயில் போக்குவரத்திற்கு ஊறு விளைவிப்பது போன்ற வன்முறை நிகழ்வுகளும் அரங்கேறின.

**தீராத மக்கள் இயக்கம்:**

இவ்வியக்கத்தில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பங்கேற்றனர். பங்கிங்காம் மற்றும் கர்நாட்டிக் மில், சென்னை துறைமுகம், சென்னை மாநகராட்சி மற்றும் மின்சார டிராம் போக்குவரத்து போன்ற இடங்களில் பெருமளவிலான தொழிலாளர் போராட்டங்கள் நடைபெற்றன. வேலூர் மற்றும் பணப்பாக்கம் ஆகிய ஊர்களில் தந்தி, தொலைபேசிக் கம்பிகள் வெட்டப்பட்டதுடன் பொதுக்கட்டங்களுக்கு தீ வைக்கப்பட்டன. பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் இப்போராட்டத்தில் தவிரப் பங்கேற்றனர். சூலூர் விமானநிலையம் தாக்குதலுக்குள்ளானது கோயம்புத்தூரில் ரயில்கள் தடம்புரளச் செய்யப்பட்டன. மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் இராணுவத்துடன் மோதினர்.

ராஜபாளையம், காரைக்குடி மற்றும் தேவகோட்டை ஆகிய இடங்களில் காவல்துறையினரின் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் இந்திய தேசிய ராணுவத்தில் (INA) சேர்ந்தனர். வெள்ளையனே வெளியேறு இயக்கம் இரக்கமற்ற முறையில் வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டது.

ராயல் இந்தியக் கப்பற்படைப் புரட்சியும், இங்கிலாந்தில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற தொழிலாளர் கட்சி அரசு தொடங்கிய பேச்சு வார்த்தைகளும் இந்திய விடுதலைக்கு வழிகோலின சோகம் யாதெனில் நாடு இந்தியா, பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிக்கப்பட்டதுதான். அது குறித்து எட்டாம் பாடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

APPOLO STUDY CENTRE CHENNAI

# அலகு 18
# ஆங்கிலேய ஆட்சிக்குத் தொடக்ககால எதிர்ப்புகள்

## அறிமுகம்

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி பலருடைய ஆட்சிப்பகுதிகளை வெற்றி கொண்டதும் தங்களது எல்லையை விரிவுப்படுத்திக்கொண்டே போனதும் தொடர்ச்சியான பல கிளர்ச்சிகளுக்கு வழிவகுத்தன. அவர்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்ட மன்னர்கள் அல்லது அவர்களின் வாரிசுகள், தங்கள் ஆட்சிப்பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஜமீன்தார்கள், பாளையக்காரர்கள் ஆகியோரால் இத்தகைய கிளர்ச்சிகள் ஏற்பட்டன. வரலாற்றாசிரியர்கள் இதைத் தொடக்கநிலை எதிர்ப்பு என்று குறிப்பிடுகிறார்கள். உடைமைகள் பறிக்கப்பட்ட விவசாயிகள், பழங்குடிகள் ஆகியோரின் எழுச்சியும் இத்தகைய கிளர்ச்சிகளையொட்டித் தோன்றின. சமூகத்தின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த மக்களும் அவதிப்பட்டார்கள். எனவே, மனக்கொதிப்பில் இருந்த இந்திய ஆட்சியாளர்கள் கலகத்தில் இறங்கியபோது, அவர்களுக்கு விவசாயிகள், கைவினைஞர்கள் ஆகியோரின் ஆதரவும் இயல்பாகவே கிடைத்தது.

## மைசூர் சுல்தான்களின் எதிர்ப்பு

### ஹைதர் அலியின் எழுச்சி

மைசூர், விஜயநகரப் பேரரசின் கீழ் நிலமானிய முறையில் இயங்கிய ஒரு சிறு அரசாக இருந்தது. 1565இல் விஜயநகரப் பேரரசு வீழ்ந்ததற்குப் பிறகு உடையார் வம்சத்தினர் சுதந்திரமான ஆட்சியாளர் ஆயினர். ராஜா உடையார் 1578இல் அரியணை ஏறினார். 1610இல் தலைநகரம் மைசூரிலிருந்து ஸ்ரீரங்கப்பட்டணத்திற்கு மாற்றப்பட்டது. அப்போதிருந்து உடையார் வம்சத்தினரின் ஆட்சி தொடர்ந்தது. 1710இல் தளவாய் அல்லது முதன்மை அமைச்சராக நியமிக்கப்பட்ட ஹைதர் அலி அதிகாரத்தைக் கைப்பற்றும்வரை உடையார்களின் ஆட்சி நீடித்தது.

ஹைதர் அலியின் தந்தை ஃபதே முகம்மது கோலார் பகுதியின் கோட்டைக் காவற்படைத் தளபதியாக (பௌஜ்தார்) இருந்தார். அவரது இறப்புக்குப் பின் ஹைதர் அலி தன் தலைமைப்பண்புகள் மூலம் படையின் உயர்பதவிகளை விரைவாக அடைந்தார். 1755க்குள் அவர் 100 குதிரைப்படை வீரர்களையும் 2000 காலாட்படை வீரர்களையும் நிர்வகிக்கும் அளவுக்கு அதிகாரம் படைத்த பொறுப்பைப் பெற்றிருந்தார். மைசூரில் இராணுவத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியை ஒடுக்கினார். மராத்தியர் ஆக்கிரமித்த மைசூர் அரசின் சில பகுதிகளை ஹைதர் மீட்டெடுத்தார். இதற்காக அவர் 'ஃபதே ஹைதர் பகதூர்' (வீரமும் வெற்றியும் கொண்ட சிங்கம்) என்ற பட்டம் பெற்றார். 1760இல் ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராக புதுச்சேரியில் இருந்த பிரெஞ்சுக்காரர்களுடன் கூட்டு சேர்ந்தார். ஆனால் அவர் தனது சொந்த மண்ணில் மராத்தியரால் உருவாக்கப்பட்ட சதித்திட்டத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் ஹைதர் அதை வெற்றிகரமாக முறியடித்தார். அதற்குப் பிறகு அவரே நடைமுறையில் மைசூரின் உண்மையான ஆட்சியாளர் ஆனார். 1770இல் மைசூர் அரசர் நஞ்சராஜா நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார். அதில் ஹைதருக்குத் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் கிளம்பியது. இந்த நிகழ்வுக்குப் பிறகு உடையார் வம்ச அரசர்கள் பெயரளவிலான ஆட்சியாளர்களாக ஆயினர். ஹைதரே உண்மையான அரச அதிகாரத்துக்கு உரியவர் ஆனார்.

### ஹைதர் அலியும் ஆங்கிலேயரும்

கிழக்கிந்தியக் கம்பெனி திவானி உரிமையைப் பெற்ற (வங்காளம், பீகார், ஒரிசா ஆகியவற்றில் முகலாய அரசுக்குப் பதிலாக வரி வசூலிக்கும் உரிமை) பிறகு, தனது நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளைக் கூடுதல் கவனத்துடன் பாதுகாக்க வேண்டியிருந்தது. கம்பெனி போதுமான வலிமையுடன் இல்லாததால், இந்திய அரசுகளின் உள்விவகாரங்களில தலையிடுவதைத் தவிர்த்து வந்தது. ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகாரத்துக்கு உட்பட்ட இடங்களைத் தக்கவைத்துக் கொள்ள இடைப்பட்ட நாடுகளை (buffer states) வாரன் ஹேஸ்டிங்ஸ் சுற்றுவேலிக் கொள்கை மூலம் தொடர்ந்து அனுமதித்தார். எனினும் கம்பெனி கர்நாடக அரசியல் விவகாரங்களினால் ஈர்க்கப்பட்டது. நவாப் பதவிக்காகத் தொடர்ச்சியாக

நடைபெற்ற மோதல்களே இதற்குக் காரணம். ஆங்கிலேய வணிகர்கள் இதை இந்திய அரசியலில் நேரடியாகத் தலையிடுவதற்கான ஒரு பெரிய வாய்ப்பாகக் கருதினார்கள். ஆனால் அவர்களின் முயற்சிக்கு ஹைதர் அலி, ஹைதராபாத் நிஜாம் ஆகிய வலிமைமிக்க சக்திகளிடமிருந்து அச்சுறுத்தல்கள் இருந்தன.

**முதலாம் மைசூர் போர் (1767-69)**

மூன்றாம் கர்நாடகப் போரில் வங்காளத்திலிருந்து படைகளை வழிநடத்திய கர்னல் ∴போர்டே 1759இல் மசூலிப்பட்டிணத்தைக் கைப்பற்றினார். இது ஜாலாபத் ஜங் உடனான உடன்படிக்கைக்கு வழிவகுத்தது. அவர் ‘வட சர்க்கார்கள்’ என அறியப்படும் கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணா, குண்டூர் ஆகிய மாவட்டங்களை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது. வட சர்க்கார்கள் ஆங்கிலேயர் வசம் ஆனதை முகலாயப் பேரரசர் 1765இல் அலகாபாத் உடன்படிக்கை மூலம் அங்கீகரித்தார். ஆனால் 1766இல் ஆங்கிலேயர் இப்பகுதியைக் கையகப்படுத்தியபோது பிரச்சனை தோன்றியது. இந்தப் பகுதிகளை ஆங்கிலேயர் கையகப்படுத்த நிஜாம் அலி எதிர்ப்பு தெரிவிக்காமல் இருக்க வேண்டும் என்றும் அதற்குப் பதிலாக அவருக்கு எதிரிகளிடமிருந்து ஆபத்து வரும்போது ஆங்கிலேயர் உதவிக்கு வருவார்கள் என்றும் ஓர் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த வாக்குறுதி மூலம் ஹைதர் அலிக்கு எதிராக நிஜாம் அலிக்கு உதவத் தாங்கள் தயாராக இருப்பதை உணர்த்தினார்கள். ஆங்கிலேயர் பின்னாட்களில் பின்பற்றிய துணைப்படைத் திட்டத்துக்கு இந்நடைமுறை காரணியாக அமைந்தது. நிஜாம் அலி ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்துகொண்டாலும், 1767இல் அவருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே ஓர் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டது. எனவே ஆங்கிலேயர் ஹைதருக்கு எதிரான போரை அறிவித்தார்கள். இது முதலாம் ஆங்கிலேய மைசூர் போர் அல்லது முதலாம் மைசூர் போர் என அறியப்படுகிறது.

பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலேயரின் ஒரு படை மேற்குக்கடற்கரையின் மங்களூரையும் அதைச் சுற்றியிருந்த பிற பகுதிகளையும் கைப்பற்றியது. ஆனால் ஹைதர் இவற்றை மீட்டெடுத்தார். பெங்களூரைக் கைப்பற்ற நினைத்த ஆங்கிலேயரின் முயற்சி வெற்றி பெறவில்லை. 1768இல் ஹைதர் பாராமஹால் (சேலம் மாவட்டம்) மீது திடீர் தாக்குதல் தொடுத்து, கேப்டன் நிக்சனைத் தோற்கடித்துக் கரூரையும் ஈரோட்டையும் கைப்பற்றினார். இதற்கிடையே ஹைதரின் தளபதி ∴பசலுல்லா கான் மதுரையிலும் திருநெல்வேலியிலும் படையை எந்த எதிர்ப்புமின்றி வழிநடத்திச் சென்றார். ஹைதர் தஞ்சாவூருக்கும் அங்கிருந்து கடலூருக்கும் முன்னேறிச் சென்றார். ஆங்கிலேயர் மீதான தாக்குதலை நிறுத்த ஹைதர் விரும்பாவிட்டாலும், மராத்தியர் படையெடுத்து வரக்கூடும் என்ற அச்சுறுத்தல் அவரை ஆங்கிலேயருடன் அமைதி உடன்படிக்கை செய்துகொள்ளும் நிலைக்குத் தள்ளியது. அவருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட சென்னை உடன்படிக்கையில் இருந்த நிபந்தனைகள் வருமாறு: இரு தரப்பும் கைப்பற்றிய பகுதிகளை அவரவரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். கரூர் மட்டும் ஹைதரின் வசம் இருக்கும். தங்களைத் தற்காத்துக்கொள்ள நடைபெறும் போர்களில் இரு தரப்பும் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும். இது மராத்தியருக்கு எதிராக ஆங்கிலேயர் உதவுவதற்கு கடமைப்பட்டவர்கள் என்பதையே குறித்தது. ஆனால் ஹைதருக்கும் மராத்தியருக்கும் எதிரான சண்டையின்போது தேவையான நேரத்தில் ஆங்கிலேயரின் உதவி கிடைக்காததால் ஹைதர் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினார்.

**இரண்டாம் மைசூர் போரும் (1780) ஹைதரும்**

அமெரிக்கச் சுதந்திரப் போருக்குப் பிறகு பிரான்ஸ் அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை (1778) செய்துகொண்டது. எனவே பிரிட்டன் பிரான்ஸுக்கு எதிரான போரை அறிவித்தது. இதைப் போலவே ஸ்பெயினும் அமெரிக்காவுடன் நட்பு உடன்படிக்கை மேற்கொண்டு, இங்கிலாந்துக்கு எதிராகப் போரில் (1779) இறங்கியபோது இங்கிலாந்து தனிமைப்பட்டது. இந்தியாவிலும் பிரெஞ்சுப்படையின் ஆதரவுடன் நிஜாம் அலியும் மராத்தியரும் கைகோத்துச் செயல்பட்ட போக்கு ஆங்கிலேயருக்கு நெருக்கடியை அதிகப்படுத்தியது. ஹைதர் அலி இந்தச் சூழலைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள கர்நாடகத்திற்குப் படையெடுத்தார்.

ஹெக்டர் மன்றோ தலைமையிலான படையுடன் சேர்ந்து செயல்பட வேண்டிய கர்னல் பெய்லி ஹைதரின் திடீர்த்தாக்குதலில் கடுமையாகக் காயமுற்றார். இது மன்றோவை

சென்னை நோக்கிச் செல்ல வைத்தது. ஹைதர் ஆற்காட்டைக் கைப்பற்றினார் (1780). இந்நிலையில் சென்னை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க வந்தவாசிப் போரில் வெற்றிபெற்ற அயர்கூட் மதராஸைக் கடல்வழியே முற்றுகையிட வங்காளத்திலிருந்து அனுப்பப்பட்டார். ஹைதருக்கு எதிராக வெற்றியை ஈட்டிய கூட் புதுச்சேரியை நோக்கி நகர்ந்தார். இதற்கிடையே ஹைதர் தஞ்சாவூர் அரசைத் தன் பிடிக்குள் கொண்டுவந்தார். கூட் பரங்கிப்பேட்டையை (Porto Novo) அடைந்து, ஹைதருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் வெற்றி பெற்றார். ஹைதர் அங்கு நடைபெற்ற மோதலில் ஆங்கிலேயரிடம் பிடிபடுவதிலிருந்து நூலிழையில் தப்பினார். ஹைதரின் மகன் திப்பு சுல்தான் கர்னல் ப்ரெய்த்வெயிட்டை கும்பகோணம் அருகே தோற்கடித்துச் சிறைப்பிடித்தார். மைசூர் சுல்தானின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக ஜெனரல் மேத்யூஸ் மங்களூரை நோக்கி ஒரு படையெடுப்பை மேற்கொண்டார். இந்த நடவடிக்கை ஆங்கிலேயர் எதிர்பார்த்தபடி திப்பு சுல்தானைக் கர்நாடகத்தை விட்டு மேற்குக்கடற்கரையை நோக்கி நகர வைத்தது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஹைதரின் மரணம் (1782), அமெரிக்கச் சுதந்திரப் போரின் முடிவில் கையெழுத்தான பாரிஸ் உடன்படிக்கை (1783), நீண்ட நாட்களுக்கு நீடித்த மங்களூர் முற்றுகை ஆகிய நிகழ்வுகள் திப்பு சுல்தானுக்கு எதிரான ஆங்கிலேயரின் நடவடிக்கைகளுக்கு வலுச் சேர்ப்பதாக இருந்தன. கர்னல் லேங் கரூரையும் திண்டுக்கல்லையும் கைப்பற்றினார். கர்னல் ஃபுல்லர்ட்டன் பாலக்காட்டையும் கோயம்புத்தூரையும் கைப்பற்றினார். அடுத்ததாக ஸ்ரீரங்கப்பட்டணத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன் அவர் முன்னேறி வந்தபோது திப்பு சுல்தான் சமாதானத்துக்கு விருப்பம் தெரிவித்து, முற்றுகையைத் தவிர்த்தார். 1784 மார்ச் மாதத்தில் மங்களூர் உடன்படிக்கை கையெழுத்தானது. அன்னபடி, இரு தரப்பினரும் அதுவரை வென்ற பகுதிகளைத் திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்றும் போரில் கைதானவர்களை விடுவிக்க வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது.

**மூன்றாம் மைசூர் போர் 1790-92**

இடைப்பட்ட காலத்தில் கார்ன்வாலிஸ் கவர்னர் ஜெனரல் ஆகப் பொறுப்பேற்றார். அவர் திப்பு சுல்தானைப் பழிவாங்கும் விதத்தில் நடந்துகொண்டார். தெற்கில் இரு மிகப்பெரும் சக்திகளாக விளங்கிய ஹைதராபாத் நிஜாமும் மராத்தியரின் கூட்டமைப்பும் ஆங்கிலேயரின் கூட்டாளிகளாக இதில் செயல்பட்டார்கள். திப்புவுடனான போருக்குத் தேவைப்பட்ட நிதியாதாரங்களையும் கூடவே தன் படைகளையும் ஹைதராபாத் நிஜாம் ஆங்கிலேயருக்கு வழங்கினார். 1782இல் முதல் ஆங்கிலேய மராத்தியப் போருக்குப் பின் ஆங்கிலேயருடன் சால்பை உடன்படிக்கை செய்துகொண்ட மராத்தியர் ஆங்கிலேயரை ஆதரித்தார்கள். நிஜாம், மராத்தியர் ஆகிய இரு தரப்பிலிருந்தும் கிடைத்த ஆதரவால் ஆங்கிலேயரின் கை ஓங்கியது.

திப்பு கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் 1787இல் பாரிஸுக்கும் தூதுக்குழுவை அனுப்பினார். ஆங்கிலேயருக்கு எதிராகத் தன்னை வலுப்படுத்திக்கொள்வதற்காகத் திப்பு இந்த இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டார். பிரெஞ்சு அரசர் பதினாறாம் லூயி தூதுக்குழுவை நட்புறவுடன் நடத்தினாலும், திப்பு எதிர்பார்த்த ஆதரவு குறித்து வெற்று வாக்குறுதியையே அளித்தார்.

பிரிட்டனுடன் நட்பு பாராட்டிய திருவிதாங்கூர் மீதான திப்புவின் தாக்குதலும் கொடுங்களூரைக் கைப்பற்றியதும் கம்பெனி அரசுடனான போருக்கான அறிவிப்பாகவே எடுத்துக்கொள்ளப்பட்டன. இவ்வாறு மூன்றாம் ஆங்கிலேய-மைசூர் போர் தொடங்கியது.

கர்னல் ஹார்ட்லி திப்புவின் தளபதி ஹுசைன் அலியைக் கள்ளிக்கோட்டையில் தோற்கடித்தார். இதற்குப் பதிலடியாகத் திப்பு திருவண்ணாமலையைக் கைப்பற்றினார். புதுச்சேரி பிரெஞ்சு ஆளுநரின் ஆதரவைப் பெறுவதற்குத் திப்பு எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை. கவர்னர் ஜெனரலான காரன்வாலிஸ் தானே வேலூரிலிருந்து படையெடுத்து வந்து, பெங்களூரை அடைந்தார். வழியில் அவர் திப்புவை எதிர்கொள்ள நேர்ந்தது. ஸ்ரீரங்கப்பட்டணம் அருகே திப்பு தோற்கடிக்கப்பட்டார். படையெடுப்பின்போது தேவைப்படும் பொருட்களின் பற்றாக்குறையால் காரன்வாலில் பின்வாங்க வேண்டியிருந்தது. இந்தத் தருணத்தில் மராத்தியர் ஆங்கிலேயருக்குத் தேவையான பொருட்களை வழங்கினார்கள். கூடுதல் வலிமை பெற்ற ஆங்கிலேயப்படை ஸ்ரீரங்கப்பட்டணத்தை முற்றுகையிட்டது. அதன் கடுமையான தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் திப்பு அமைதி உடன்படிக்கைக்கு கார்ன்வாலிஸ் விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார்.

ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின்படி, திப்பு அவருடைய ஆட்சிப்பகுதிகளில் பாதி இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும்; போர் இழப்பீடாக மூன்று கோடி ரூபாய் அளிக்க வேண்டும்; அவருடைய மகன்களில் இருவரைப் பிணைக்கைதிகளாக அனுப்பி வைக்க வேண்டும். திப்புவிடமிருந்து பெறப்பட்ட பகுதிகளும் இழப்பீட்டுத்தொகையும் சமமாகப் பகிர்ந்துகொள்ளப்பட்டன. ஆங்கிலேயர் மலபார், திண்டுக்கல், பாராமஹால் ஆகிய பகுதிகளைப் பெற்றார்கள். திப்பு குடகுப் பகுதியை இழந்தார். அதன் அரசர் ஆங்கிலேயருக்குக் கீழ்ப்படிய வேண்டிய சிற்றரசர் ஆனார். திப்புவின் அதிகாரம் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டது. சென்னையில் பிணைக்கைதிகளாகயிருந்த திப்புவின் மகன்கள் அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்ட பிறகு ஸ்ரீரங்கப்பட்டணத்துக்கு 1794 ஆம் ஆண்டு மே 29 அன்று திருப்பியனுப்பி வைக்கப்பட்டார்கள். இந்த உடன்படிக்கை மூலம் ஏற்பட்ட அவமானத்தையும் பொருளாதார இழப்பையும் திப்புவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

மைசூர் அரசர் ஒன்பதாம் சாமராஜ் 1796இல் இறந்தார். அடுத்த அரசரை நியமிக்கும் முறையான வழக்கத்தைத் திப்பு பின்பற்றவில்லை. அவர் இந்தத் தீர்மானத்துக்கு வந்த அதே நேரத்தில், பிரெஞ்சு காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த மொரீஷியஸின் கவர்னர் மாலிரிக் ஓர் அறிவிப்பை வெளியிட்டார். பிரான்ஸிடமிருந்து உதவி கிடைத்த பிறகு திப்பு ஆங்கிலேயர் மீதான போர் குறித்து அறிவிப்பார் என்பதே மாலரிக்கின் அறிவிப்பாகும். திப்பு 1798 ஜூலையில் பிரான்சு ஆட்சியை நிர்வகித்த இயக்குநரகத்துடனும் அதற்குப் பிறகு அங்கு ஆட்சியைப் பிடித்த நெப்போலியனுடனும் மேற்கொண்ட கடிதத் தொடர்புகள், அவர் வெல்லெஸ்லியுடனான கடிதத்தொடர்பில் காட்டிய நழுவல் ஆகியவை ஆங்கிலேயரை மீண்டும் திப்புவுக்கு எதிரான போரை அறிவிக்கச் செய்தன.

**நான்காம் மைசூர் போர் 1799**

திப்பு தனது படையையும் நிதியாதாரங்களையும் வலுப்படுத்துவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார். 1796இல் பாரிஸுக்கு மீண்டும் தூதர்களை அனுப்பினார். 1797இல் அவரை மொரிஷியஸிலிருந்து வந்த ஒரு பிரெஞ்சு தூதர் சந்தித்து, பிரான்சின் ஆதரவை உறுதிப்படுத்தினார். பிரான்சில் இருப்பதைப் போல ஸ்ரீரங்கப்பட்டணத்திலும் ஜேக்கோபியர் கழகம் தொடங்கப்பட்டது. இது பிரெஞ்சுப்புரட்சியின் போது நிறுவப்பட்டு, பின்னர் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த புரட்சிகர அமைப்பாகும். மைசூர் சுல்தானுக்கும் பிரெஞ்சு அரசுக்குமான நல்லுறவைத் தெரிவிக்கும் விதத்தில் பிரெஞ்சு குடியரசின் கொடி ஏற்றப்பட்டது.

பிரான்சுடன் திப்பு ஏற்படுத்திக்கொண்ட கூட்டணியால் கோபமுற்ற புதிய கவர்னர் ஜெனரலான வெல்லெஸ்லி துணைப்படைத்திட்டத்தின் கீழ் மைசூரில் ஆங்கிலேயப் படை ஒன்றை நிரந்தரமாக வைத்திருக்க வேண்டும் என வலியுறுத்தினார். திப்பு இதை ஏற்கவில்லை. ஆங்கிலேயர் நான்காம் ஆங்கிலேய-மைசூர் போரை 1799இல் அறிவித்தனர். ஜெனரல் டேவிட் பெய்ர்டு ஸ்ரீரங்கப்பட்டணத்தின் மீது திடீர் தாக்குதல் தொடுத்துக் கைப்பற்றினார். அமைதி உடன்படிக்கைக்கான திப்புவின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது. இறுதி மொதலில் காயமுற்ற திப்பு ஓர் ஐரோப்பியப் படைவீரனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

திப்புவை அகற்றியதும் உடையார் வம்சத்தினரை மீண்டும் ஆட்சியில் அமர்த்தியதும் தென்னிந்தியாவில் கம்பெனி ஆட்சியின் உண்மையான தொடக்கமாக அமைந்தன. திப்புவின் மகன்கள் முதலில் வேலூரில் சிறைவைக்கப்பட்டார்கள். 1806இல் வேலூர் கிளர்ச்சிக்குப் பிறகு கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார்கள். இவ்வாறு ஆங்கிலேயருக்கு எதிரான மைசூர் சுல்தான்களின் வீரம் செறிந்த மோதல்கள் முடிவுக்கு வந்தன.

**தென்னகப் பாளையக்காரர்களின் ஆரம்பகால எதிர்ப்பு**

**பாளையங்களின் தோற்றம்**

விஜயநகரப்பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு, அரசப்பிரதிநிதியாக மதுரைக்கு வந்த நாகம நாயக்கரும் அவருடைய மகன் விஸ்வநாத நாயக்கரும் மதுரை, திருநெல்வேலி ஆகியவற்றின் சுதந்திரமான ஆட்சியாளர்களாகத் தங்களை உறுதிப்படுத்திக் கொண்டனர். தளவாய் அரியநாயக முதலியாரின் திறமையான வழிகாட்டுதலின் கீழ் முன்னாள் பாண்டியப் பேரரசின் அனைத்து சிற்றரசுகளும் வகைப்படுத்தப்பட்டு, 72 பாளையங்களாக மாற்றப்பட்டன. விஸ்வநாத

நாயக்கர் மதுரையைச் சுற்றி வலிமை மிகுந்த ஒரு கோட்டையை எழுப்பினார். அதில் 72 அரண்கள் இருந்தன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தலைமையின் கீழ் இருந்தன.

பாளையக்காரர் முறை 1530களில் தோன்றியது. வாராங்கலை ஆண்டு வந்த காகதிய அரசில் இந்த முறை பின்பற்றப்பட்டு வந்ததாக கருதப்படுகிறது. அரசருக்குத் தேவையானபோது போரில் வீரர்களுடன் பங்கேற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒரு பாசறையையும் பெரும் நிலப்பரப்பையும் வைத்திருப்பவரையே பாளையக்காரர் என்ற சொல் குறிக்கிறது. இந்த முறை தோன்றுவதற்கு முன்னால், சேர்வைக்காரர்களும் தலையாரிகளும் காவல் பணிகளுக்காக வரி வசூலித்து வந்தனர். பாளைய முறை அறிமுகமான பிறகு, பாளையக்காரர்கள் சேர்வைக்காரர்கள், தலையாரிகளைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார்கள்.

பாளையக்காரர் அரசருக்கு ஆண்டுதோறும் குறிப்பிட்ட தொகையைக் கப்பமாகச் செலுத்துவதற்கும் தேவையானபோது படைவீரர்களை அனுப்புவதற்கும் பாளையத்தில் சட்டம் ஒழுங்கை பாதுகாப்பதற்கும் கடமைப்பட்டவர். இந்தக் கடமைகளையும் பிற பணிகளையும் செய்வதற்குத் தேவையான நிதியாதாரத்தைப் பெற சில கிராமங்கள் அவருக்கு வழங்கப்பட்டிருந்தன. அக்கிராமங்களில் அவர் வரிவிதித்து நிதி திரட்டினார். இத்துடன் கூடுதலாகப் பல பட்டங்களும் சிறப்புரிமைகளும் பாளையக்காரர்களுக்கு வழங்கப்பட்டன. பாளையத்துக்கு உட்பட்ட பகுதியில் குடிமையியல் பிரச்னைகளிலும் குற்றவியல் பிரச்னைகளிலும் விசாரணை நடத்தி நீதி வழங்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு.

பாளையங்கள் பூகோளரீதியாகப் பரவியிருந்ததன் அடிப்படையில் மேற்குப் பாளையங்கள், கிழக்குப் பாளையங்கள் எனப் பிரிக்கலாம். மறவர் குறுநில மன்னர்களிடமிருந்த பாளையங்கள் பெரும்பாலும் திருநெல்வேலியின் மேற்குப்பகுதியில் அமைந்திருந்தன. கிழக்குப் பகுதியில் உள்ள கரிசல் நிலப்பரப்புகளில் தெலுங்கு பேசுவோர் குடியேறியிருந்தார்கள். அவை நாயக்கர் பாளையக்காரர்களின் கட்டுப்பாட்டில் இருந்தன.

**பாளையக்காரர்களின் கிளர்ச்சி**

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிராமங்களை அடகு வைத்து ஏராளமாகக் கடன் வாங்கியிருந்த ஆற்காடு நவாப் அங்கெல்லாம் நிலவரி வசூலி செய்யும் உரிமையை கம்பெனிக்கு அளித்தார். கான் சாகிப் என்று அழைக்கப்பட்ட யூசுப்கான் கிழக்கிந்திய கம்பெனி படையில் இந்திய வீரர்களுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவருக்குப் படைத் தலைமையுடன் வரி வசூலிக்கும் பொறுப்பும் வழங்கப்பட்டது. ஆற்காடு நவாபின் வேண்டுகோளின்படி, 1755இல் அவருக்கு உதவி செய்ய 500 ஐரோப்பியரும் 200 சிப்பாய்களும் அடங்கிய படை மதுரை, திருநெல்வேலி பகுதிகளுக்குள் நுழைய உத்தரவிடப்பட்டது. பாளையக்காரர்களின் அதிகாரத்தில் கம்பெனி நிர்வாகத்தின் குறுக்கீடு கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தியது.

மாபுஸ்கான் (ஆற்காடு நவாபின் மூத்த அண்ணன்) இந்தப் பகுதிகளில் நவாபின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். மாபுஸ்கான் கர்னல் ஹெரானுடன் திருநெல்வேலிக்குப் படையெடுத்துச் சென்றார். அவர்கள் மதுரையை எளிதாகக் கைப்பற்றினர். பாஞ்சாலக்குறிச்சி பாளையத்தை ஆட்சி செய்த கட்டபொம்மனின் அதிகாரத்தைக் குறைப்பதற்காகச் சிறப்புக்குழு அனுப்பி வைக்கப்பட்டு, பிறகு அது திரும்ப வரவழைக்கப்பட்டது. ஹெரான் ஊர் திரும்பும் வழியில் நெற்கட்டும் சேவல் கோட்டை மீது திடீர் தாக்குதல் தொடுக்க உத்தரவு வந்தது. அந்தப் பாளையத்தை ஆட்சி செய்த புலித்தேவர் மேற்குப் பாளையக்காரர்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருந்தார். பீரங்கி உள்ளிட்டவற்றின் பற்றாக்குறை, படைவிரர்களுக்கு ஊதியம் கொடுக்க வேண்டிய தேவை ஆகிய காரணங்களால் ஹெரானின் தாக்குதல் கைவிடப்பட்டது. அவரது படை மதுரைக்குத் திரும்பியது.

நவாப் சந்தா சாகிப்பின் பிரதிநிதிகளான மியானா, முடிமய்யா, நபிகான் கட்டக் ஆகிய பதான் இனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மதுரையையும் திருநெல்வேலியையும் கண்காணித்து வந்தனர். அவர்கள் ஆற்காடு நவாப் முகமது அலிக்கு எதிராகத் தமிழ்ப் பாளையக்காரர்களை ஆதரித்தனர். அவர்களுடன் புலித்தேவருக்கு நெருக்கமான உறவு இருந்தது. ஊற்றுமலை, சுரண்டை, தலைவன்கோட்டை, நடுவக்குறிச்சி, சிங்கம்பட்டி, ஊர்க்காடு, சேத்தூர்,

கொல்லம்கொண்டான், வடகரை ஆகிய பாளையங்களின் ஆட்கியாளர்களும் புலித்தேவரின் கூட்டமைப்பில் சேர்ந்தனர். திருவிதாங்கூருக்குக் களக்காடு திரும்பத் தரப்படும் என்ற வாக்குறுதி மூலமாகப் புலித்தேவர் திருவிதாங்கூரின் ஆட்கியாளரையும் தன் கூட்டமைப்பில் சேர்த்திருந்தார்.

இன்னொரு பக்கம் ஆற்காடு நவாப் மாபுஸ்கானுக்குக் கூடுதல் படைப்பிரிவை அனுப்பினார். நவாபின் வலுப்படுத்தப்பட்ட படை திருநெல்வேலியை நோக்கிப் பயணித்தது. கம்பெனியைச் சேர்ந்த 1000 வீரர்களுடன், நவாப் மூலம் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்ட 600 வீரர்களும் இப்போது மாபுஸ்தானிடம் இருந்தார்கள். கூடவே, கர்நாடகத்திலிருந்து குதிரைப்படையினரும், காலாட்படை வீரர்களும் வந்ததால் மாபுஸ்கானின் படைபலம் அதிகரித்தது. அவர் தன் படையினரைக் களக்காட்டுக்கு அருகே நிறுத்திவைப்பதற்கு முன்பே திருவிதாங்கூரிலிருந்து வந்த 2000 வீரர்கள் புலித்தேவர் படையுடன் சேர்ந்து கொண்டார்கள். களக்காட்டில் நடைபெற்ற போரில் மாபுஸ்கானின் படை தோற்றது.

புலித்தேவரும் பிற பாளையக்காரர்களும் கூட்டாக, சிறப்பான திட்டமிடலுடன் காட்டிய எதிர்ப்பு ஆங்கிலேயரைத் திருநெல்வேலி விவகாரங்களில் நேரடியாகத் தலையிட வைத்தது. 1756இலிருந்து 1763 வரைக்கும், திருவிதாங்கூரிலிருந்து கிடைத்த சீரான ஆதரவுடன், புலித்தேவர் தலைமையிலான பாளையக்காரர்கள் ஆற்காடு நவாபுக்கு எதிரான கிளர்ச்சியில் நீடித்து நின்றார்கள். கம்பெனியால் அனுப்பப்பட்ட யூசுப் கான் திருச்சிராப்பள்ளியிலிருந்து பீரங்கிகளும் வெடிமருந்துகளும் வந்துசேரும் வரை புலித்தேவரைத் தாக்கத் துணியவில்லை. பிரெஞ்சுக்காரர், ஹைதர் அலி, மராத்தியர் ஆகியோருடன் ஆங்கிலேயர் போர்களில் ஈடுபட்டுவந்ததால், 1760 செப்டம்பரில் தான் பீரங்கிகள் வந்து சேர்ந்தன. யூசுப் கான் நெற்கட்டும் செவல் கோட்டையை இடிக்கும் நோக்கத்துடன் தாக்குமலை நடத்தினார். இது ஏறத்தாழ இரு மாதங்கள் நீடித்தது. 1761 மே 16இல் நெற்கட்டும் செவல், வாசுதேவநல்லூர், பனையூர் ஆகிய இடங்களில் இருந்த முக்கியமான கோட்டைகள் யூசுப் கான் வசமாயின. புதுச்சேரியை ஆங்கிலேயர் கைப்பற்றியதால் பிரெஞ்சுக்காரர்களின் தலையீடு இல்லாமல் ஆனது. பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து உதவிகள் வரமுடியாத காரணத்தால், பாளையக்காரர்களின் ஒற்றுமை குலையத் தொடங்கியது. திருவிதாங்கூர், சேற்றூர், ஊற்றுமலை, சுரண்டை ஆகிய பாளையங்களைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலேய அணிக்கு மாறினர். கம்பெனி நிர்வாகத்துக்குத் தெரிவிக்காமல் பாளையக்காரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்த யூசுப் கான் துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, 1764இல் தூக்கிலிடப்பட்டார்.

கோட்டைகளை யூசுப் கான் கைப்பற்றிய பிறகு, எங்கோ தஞ்சம் புகுந்த புலித்தேவர் தனது பாளையத்துக்குத் திரும்பி, மீண்டும் ஆங்கிலேயருக்கு எதிராகப் பாளையக்காரர்களைத் திரட்டத் தொடங்கினார். இம்முறை ஆங்கிலேயர் அனுப்பிய கேப்டன் கேம்பெல் நெற்கட்டும் செவல் கோட்டையை முற்றுகையிட்டு 1767இல்

யூசுப் கானின் இயற்பெயர் மருதநாயகம் பிள்ளை. அவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். புதுச்சேரியில் இருந்தபோது, இசுலாம் சமயத்தைத் தழுவினார். 1752இல் கிளைவ் தலைமையிலான கம்பெனிப் படையில் சேர்ந்த யூசுப் கான் 1752-54இல் நடைபெற்ற திருச்சிராப்பள்ளி முற்றுகையில் பங்கேற்றார். ஆற்காடு நவாபுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், கம்பெனி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு 1756 முதல் 1761 வரை ஆளுநராகப் பொறுப்பு வகித்தார். யூசுப்கான் ஹைதர் அலியைத் தோற்கடித்து, சோழவந்தானைக் கைப்பறறினார். லாலியின் மதராஸ் முற்றுகை (1758-59) யின்போது யூசுப்கானின் பங்களிப்பு சிறப்பானதாக இருந்தது. அவர் நிர்வாகப்பொறுப்பில் இருந்தபோது மதுரையில் நெசவுத்தொழிலை ஊக்குவித்தார். மதுரை கோயில்களில் வழிபாடு நடத்துவதற்குக் குறிப்பிட்ட தொகையை வழங்கினார். மதகுருக்கள் வசமிருந்த கோயில் நிலங்களை மீட்டெடுத்தார். ஆங்கிலேயர் அவரை ஆற்காடு நவாபுக்கு பணிசெய்ய ஆணையிட்டதால், அவர் கிளர்ச்சியில் இறங்கினார்.

கைப்பற்றினார். புலித்தேவனின் இறுதிநாட்கள் குறித்த செய்திகள் கிடைக்கப்பெறவில்லை.

**வேலு நாச்சியார்**

இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களாக இன்று அறியப்படும் பகுதியைச் சேதுபதி மன்னர்கள் ஆட்சி செலுத்தினர். வேலு நாச்சியார் இராமநாதபுரம் அரசரான செல்லமுத்து சேதுபதியின் மகள் ஆவார். அவர் சிவகங்கை அரசரான முத்துவடுகர் பெரிய உடையாரை மணந்தார். அவர்களுக்கு வெள்ளச்சி நாச்சியார் என்ற மகள் இருந்தார். வேலு நாச்சியாரின் கணவர் நவாபின் படைகளால் கொல்லப்பட்டதும், அவர் தன் மகளுடன் தப்பித்து, திண்டுக்கல் அருகே விருப்பாச்சியில் ஹைதர் அலியின் பாதுகாப்பில் எட்டு ஆண்டு காலம் இருந்தார். இக்காலகட்டத்தில் வேலுநாச்சியார் ஒரு படையைக் கட்டமைத்தார். ஆங்கிலேயரைத் தாக்கும் நோக்கத்துடன் கோபால நாயக்கர், ஹைதர் அலி ஆகியோருடன் கூட்டணி அமைத்தார். 1780இல் இவ்விருவரின் துணையோடு ஆங்கிலேயருடன் போரிட்டு வென்றார்.

வேலு நாச்சியார் ஒரு பெண்கள் படையை உருவாக்கியிருந்தார். அவர் ஆங்கிலேயரின் வெடிமருந்துக்கிடங்குகளைக் கண்டுபிடிப்பதற்குத் தன் உளவாளிகளைப் பயன்படுத்தினார். நாச்சியாரின் படையில் இருந்த குயிலி தன் மீது நெருப்பு வைத்துக்கொண்டு, ஆங்கிலேயரின் வெடிமருந்து கிடங்கில் நுழைந்து அதை அழித்தார். நாச்சியாரின் படையிலிருந்த இன்னொரு உளவாளி அவரால் தத்தெடுக்கப்பட்ட உடையாள் ஆவார். இவர் ஆங்கிலேயரின் ஓர் ஆயுதக்கிடங்கை வெடிக்கச் செய்வதற்காகத் தன்னையே அழித்துக்கொண்டார்.

ஆற்காடு நவாப் வேலு நாச்சியாருடைய படை முன்னேறி வருவதைத் தடுக்கப் பல தடைகளை ஏற்படுத்தினார். எனினும் நாச்சியார் அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு சிவகங்கைக்குள் நுழைந்தார். ஆற்காடு நவாப் தோற்கடிக்கப்பட்டு, சிறைவைக்கப்பட்டார். சிவகங்கையை மீண்டும் கைப்பற்றிய நாச்சியார் மருது சகோதரர்களின் துணையுடன் இராணியாக முடிசூடினார்.

சின்ன மருது நாச்சியாரின் ஆலோசகராகவும் பெரிய மருது படைத் தளபதியாகவும் நியமிக்கப்பட்டனர். 1783இல் ஆங்கிலேயர் சிவகங்கைக்கு மீண்டும் படையெடுத்து வந்தனர். இம்முறை மருது பாண்டியர் சில இராஜதந்திர நடவடிக்கைகளால் சிவகங்கையின் பாதுகாப்பை உறுதி செய்தனர். பிற்காலத்தில் ஆங்கிலேயரின் சமரச உடன்பாட்டின்படி வேங்கண் பெரிய உடைய தேவர் சிவகங்கை அரசர் ஆனார். 1790இல் இவருக்கு மணம் முடித்து வைக்கப்பட்ட வெள்ளச்சி நாச்சியார் சந்தேகத்துக்கிடமான முறையில் இறந்தார். வேலு நாச்சியார் நோயுற்று 1796இல் இறந்தார்.

**வீரபாண்டிய கட்டபொம்மன்**

வேலு நாச்சியார் இராமநாதபுரத்திலும் சிவகங்கையிலும் ஆங்கிலேயருக்கு சவாலாக இருந்தபோது, வீரபாண்டிய கட்டபொம்மனின் எதிர்ப்பு வயர்ந்து கொண்டிருந்தது. கட்டபொம்மன் ஓட்டப்பிடாரத்துக்கு அருகில் உள்ள பாஞ்சாலங்குறிச்சியை ஆட்சி செய்த நாயக்கர் பாளையக்காரர் ஆவார். இவர் 1761இல் பிறந்தார். கட்டபொம்மன் நாயக்கர் என்பது அவரது குடும்பப் பட்டமாகும். கட்டபொம்மனின் தாத்தா ஜெகவீர கட்டபொம்மன் கர்னல் ஹெரான் காலத்தில் குறுநிலமன்னராக இருந்தார். வீரபாண்டிய கட்டபொம்மன் தனது 30ஆம் வயதில் பாஞ்சாலங்குறிச்சி பாளையத்துக்குப் பொறுப்பேற்றார். கம்பெனிக்கும் தென்சீமை பாளையத்தாருக்கும் தொடர்ந்து மோதல் இருந்ததால், கம்பெனிக்கு அவர்கள் கப்பம் செலுத்துவது ஒரு பிரச்னையாகவே நீடித்தது. 1798 மே 31 வரை பாஞ்சாலங்குறிச்சி பாளையம் கம்பெனிக்குக் கட்டாது வைத்திருந்த கப்பத்தொகை 3310 பகோடாக்கள் (வராகன்). 1798 செப்டம்பர் மாதத்துக்கான கப்பமும் செலுத்தப்படாததால், கலெக்டர் ஜாக்சன் அவருக்கே உரிய ஆணவத்துடன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்குக் கடிதம் அனுப்பினார்.

விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது. ஐரோப்பிய வணிகர்கள் இந்தியாவுக்கு வந்த காலகட்டத்தில் இப்பணம் செல்வாக்கு பெற்று விளங்கியது. திப்பு சுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா மூன்றரை ரூபாய்க்குச் சமமாகக் கொள்ளப்பட்டது. ‘பகோடா மரத்தை உலுக்குதல்’ என்ற சொலவடை

இங்கிலாந்து மக்களிடையே நிலவியது. ஒருவரை அதிர்ஷ்டசாலி ஆக்கும் வாய்ப்புகள் இந்தியாவில் குவிந்து கிடக்கின்றன என்ற ஐரோப்பியர்களின் அக்கால மனநிலையை இதன் மூலம் நாம் உணரலாம். தமிழில் இதனை வராகன் என்பர்.

நாட்டில் கடுமையான வறட்சி ஏற்பட்டதால், வரி வசூலிப்பது மிகக்கடினமான வேலை ஆனது. கலெக்டர் ஜாக்சன் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தண்டிக்கும் நோக்குடன் ஒரு படையை அனுப்ப விரும்பினாலும், சென்னை நிர்வாகம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. திருநெல்வேலியிருந்த படை வீரர்களை மைசூரில் திப்பு சுல்தானுக்கு எதிராகப் போரிடுவதற்காகக் கம்பெனி ஏற்கனவே அனுப்பியிருந்தது. இந்த நிலையில் மிகவும் தொலைவிலிருந்த தெற்குப்பகுதியில் போர் செய்வது ஆபத்து எனக் கம்பெனி கருதியது. அது பிரச்சனையில் தொடர்புடைய பாளையக்காரரை இராமநாதபுரத்துக்கு வரவழைத்து, கலந்தாலோசனை செய்யும்படி கலெக்டருக்கு உத்தரவிட்டது. அதன்படி, 1798 ஆகஸ்ட் 18 அன்று ஜாக்சன் இரு வாரங்களுக்குள் தன்னை இராமநாதபுரத்துக்கு வந்து சந்திக்கும்படி வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு உத்தரவு பிறப்பித்துவிட்டு, திருநெல்வேலி சுற்றுப்பயணத்தைத் துவக்கினார். பாளையக்காரர்களிடமிருந்து கப்பம் வசூலிப்பதற்காகச் சொக்கம்பட்டி, சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய இடங்களில் அவர் தங்கியிருந்தபோது வீரபாண்டியக் கட்டபொம்மன் அவரைச் சந்திக்க முயன்றார். ஆனால் இராமநாதபுரத்தில்தான் கலெக்டரைச் சந்திக்க முடியும் என அவருக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த அவமதிப்பையும் மீறி, கட்டபொம்மன் 23 நாட்களில் 400 மைல் தூரம் பயணித்த கலெக்டரைச் சளைக்காமல் பின்தொடர்ந்து, செப்டம்பர் 19 ஆம் நாள் இராமநாதபுரத்தை அடைந்தார். கலெக்டரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு அன்றே தரப்பட்டது. கட்டபொம்மன் சரியாக நடந்து கொண்டதாகவும் இதன் மூலம் அவர் தன்னை அழிவிலிருந்து காத்துக்கொண்டதாகவும் ஜாக்சன் திருப்தியுடன் கூறினார். கட்டபொம்மன் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தொகையில் பெரும்பகுதியைச் செலுத்திவிட்டதையும் 1080 வராகன் மட்டுமே பாக்கி இருப்பதையும் கணக்குகளைச் சரிபார்த்து அவர் அறிந்து கொண்டார். இந்தச் சந்திப்பின்போது ஆணவக்குணம் கொண்ட ஜாக்சன் முன்னால் கட்டபொம்மனும் அவருடைய அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளையும் நின்றபடி உரையாட வேண்டியிருந்தது. சந்திப்பின் இறுதியில் ஜாக்சன் இருவரையும் இராமநாதபுரம் கோட்டையில் தங்கும்படி கூறினார். அங்கு திடீரென வந்த வீரர்கள் கட்டபொம்மனைக் கைது செய்யவே வந்திருந்தார்கள் என்பது வெளிப்படையாகவே தெரிந்தது. கட்டபொம்மனும் அமைச்சரும் தப்ப முயன்றனர். கோட்டைவாசலில் நடந்த மோதலில் லெப்டினெண்ட் க்ளார்க் உள்ளிட்ட சிலர் கொல்லப்பட்டார்கள். சிவசுப்பிரமணிய பிள்ளை கைது செய்யப்பட்டார். கட்டபொம்மன் மட்டுமே தப்ப முடிந்தது.

பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பிய கட்டபொம்மன் தன்னிடம் ஜாக்சன் நடந்துகொண்ட முறையே இராமநாதபுரத்தில் நடந்த மோதலுக்குக் காரணம் என்று சென்னை கவுன்சிலுக்குக் கடிதம் அனுப்பினார். இதற்கிடையே ஆளுநர் எட்வர்டு கிளைவ் கம்பெனி நிர்வாகத்திடம் கட்டபொம்மன் சரணடையும்படி அறிவிப்பு வெளியிட்டார். இவ்வாறு கட்டபொம்மன் சரணடைந்தால் நேர்மையான விசாரணை நடைபெறும் என்றும் இதற்கு உடன்படாவிட்டால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். அதன்படி, கட்டபொம்மன் கம்பெனி விசாரணைக்குழுவிடம் நேரில் சென்று விளக்கம் அளித்தார். கலகக் குற்றச்சாட்டுகளிலிருந்து கட்டபொம்மனை விடுவித்த குழு, கலெக்டர் நடந்துகொண்ட விதத்துக்காக அவரைக் கண்டித்தது. லூஷிங்டன் புதிய கலெக்டராக நியமிக்கப்பட்டார். இறுதியில் ஜாக்சன் பணிநீக்கம் செய்யப்பட்டார்.

எனினும் கட்டபொம்மன் தனது பிரச்சனை இன்னும் தீரவில்லை என்ற கொதிப்புடன்தான் இருந்தார். இந்தச் சூழலில் மருது பாண்டியர்கள் திண்டுக்கல் கோபால நாயக்கருடனும் ஆனைமலை யாதுல் நாயக்கருடனும் இணைந்து ஆங்கிலேயருக்கு எதிரான கூட்டமைப்பை உருவாக்கும் முயற்சியில் இருந்தார்கள். இதே விருப்பத்துடன் இருந்த கட்டபொம்மனும் மருது பாண்டியரும் நெருக்கமானார்கள்.

கட்டபொம்மன் சிவகிரி பாளையக்காரருடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். பாஞ்சாலங்குறிச்சி திறந்த சமவெளிப்பகுதியில் எளிதாகத் தாக்குதலுக்குள்ளாகும் விதத்தில் அமைந்திருந்தது. சிவகிரிக்கோட்டை மேற்கத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் வலுவான அரண்களுடன் மிகப் பாதுகாப்பாக தாக்குதல், எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளுதல் ஆகிய இரு நடவடிக்கைகளுக்கும் பொருத்தமானதாக இருந்தது.

கட்டபொம்மனின் நிலையைப் பலப்படுத்துவதற்காகச் சிவகிரி பாளையக்காரரின் மகன் வீரபாண்டியன் தன் வீரர்களுடனும் கூட்டணியில் இருந்த பிற தலைவர்களுடனும் தளவாய் குமாரசாமி நாயக்கரின் தலைமையில் மேற்கு நோக்கி அணிவகுத்துச் சென்றார். சிவகிரிபாளையம் கம்பெனிக்குக் கட்டுப்பட்டதாக இருந்ததால், வீரபாண்டியனின் இந்நடவடிக்கையை சென்னைக் கம்பெனி அரசு தனக்கு விடுக்கப்பட்ட சவாலாகக் கருதி தாக்குதலுக்கு உத்தரவிட்டது.

1799 மே மாதத்தில் வெல்லெஸ்லி பிரபு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை ஆகிய இடங்களில் இருந்த படைகளை திருநெல்வேலிக்க அனுப்ப உத்தரவு பிறப்பித்தார். திருவனந்தபுரம் அரசரின் படையும் ஆங்கிலேயருடன் இணைந்தது. மேஜர் பானர்மேன் அதிக ஆற்றல் கொண்ட போர்த்தளவாடங்களுடன் படைகளை வழிநடத்தினார்.

1799 ஜுன் 1 அன்று கட்டபொம்மன் 500 ஆட்களுடன் சிவகங்கைக்குச் சென்றார். பழையனாறு என்ற இடத்தில் மருதுவுடன் தீவிர ஆலோசனை நடத்தினார். இதையடுத்து, சிவகங்கையிலிருந்து ஆயுதம் தரித்து வந்த 500 பேருடன் கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சிக்குத் திரும்பினார்.

நாகலாபுரம், மன்னர்கோட்டை, பாவாலி, கோலார்பட்டி, செந்நல்குடி ஆகிய பாளையங்களின் தலைவர்கள் மருது சகோதரர்களின் முயற்சியால் ஏற்கனவே ஒன்று சேர்ந்திருந்தார்கள். அவர்கள் கம்பெனியின் ஆட்சிப்பகுதிகளிலிருந்த சில குறிப்பிட்ட கிராமங்களில் வரி வசூலிக்கும் உரிமையை உறுதிப்படுத்தியிருந்தார்கள். கட்டபொம்மன் தன் செல்வாக்கையும் நிதியாதாரங்களையும் முன்னிறுத்தி, இந்த அணியில் சேர்ந்து அதன் தலைவர் ஆனார். இக்கூட்டமைப்பை ஏற்படுத்த சாப்டூர், ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர் ஆகியவற்றின் பாளையக்காரர்களையும் அதில் சேரும்படி வலியுறுத்தினார்.

1799 செப்டம்பர், 1 அன்று மேஜர் பானர்மேன் தன்னைக் கட்டபொம்மன் பாளையங்கோட்டையில் சந்திக்கும்படி இறுதி எச்சரிக்கை விடுத்தார். கட்டபொம்மன் சந்திப்பைத் தவிர்த்ததால், பானர்மேன் போர் தொடுக்க முடிவெடுத்தார். செப்டம்பர் 5 ஆம் நாள் கம்பெனி படை பாஞ்சாலங்குறிச்சியைச் சென்றடைந்தது.

கட்டபொம்மனின் கோட்டை 500 அடி நீளத்திலும் 300 அடி அகலத்திலும் முழுவதும் மண்ணில் கட்டப்பட்டிருந்தது. ஆங்கிலேயப்படை கோட்டையின் தகவல் தொடர்புக்கான வழிகளைத் துண்டித்தது. கட்டபொம்மனின் வீரர்கள் கம்பீரத்துடனும் வீரத்துடனும் போரிட்டார்கள். அவர்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் முறியடிக்கப்பட்டன. கம்பெனிப் படைக்குக் கூடுதல் எண்ணிக்கையில் வீரர்கள் தேவைப்பட்டனர். செப்டம்பர், 16 அன்று ஆங்கிலேயருக்குக் கூடுதல் வலு சேர்ப்பதற்கான உதவிகள் பாளையங்கோட்டையிலிருந்து வந்து சேர்ந்தன. அவர்களின் தொடர்ச்சியான தாக்குதலால் சுவர்கள் உடைந்து கோட்டை பலவீனம் அடைந்ததால், கோட்டைக்கான காவற்படை வெளியேறி காடல்குடியை அடைந்தது. கோலார்பட்டியில் நடந்த மோதலில் கட்டபொம்மனின் அமைச்சர் சிவசுப்பிரமணிய பிள்ளை பிடித்துவைக்கப்பட்டார். நாலாபுறமும் எதிர்ப்பைக் காட்டிய தலைவர்களுக்குரிய பிற பாதுகாப்பு அரண்கள் அனைத்தும் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்கு வந்தன. ஆங்கிலேயப்படையைக் கண்டதும், மேற்குப் பாளையத்தாரும் சரணடைந்தனர்.

புதுக்கோட்டை மன்னர் விஜய ரகுநாத தொண்டைமான் களப்பூர் காட்டிலிருந்த கட்டபொம்மனைப் பிடித்து, ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். கட்டபொம்மனின் ஆதரவாளர்கள் மருது சகோதரர்கள், கோபால நாயக்கர் ஆகியோருடன் இணைவதற்குச் சிவகங்கைக்கும் திண்டுக்கல் மலைக்குன்றுகளுக்கும் விரைந்தனர்.

1799 அக்டோபர் 16 அன்று பானர்மேன் கட்டபொம்மனைக் கயத்தாறு என்னுமிடத்தில் பாளையக்காரர்கள் கூடியிருந்த அவையில் விசாரணை செய்தார். அது கேலிக்கூத்தான விசாரணையாகவே இருந்தது. கட்டபொம்மன் மரணத்தைப் பற்றிக் கவலைப்படாமல், தன் மீது சுமத்தப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஒத்துக்கொண்டார். அவர் சிவகிரிக்கு எதிராக ஆயுதந்தரித்த வீரர்களை அனுப்பியதையும் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் ஆங்கிலேயப்படைகளுக்கு எதிராகப் போரிட்டதையும் ஒத்துக்கொண்டார. அக்டோபர் 17ஆம் நாளில் கட்டபொம்மன் கயத்தாறு பழைய கோட்டைக்கு அருகில் தூக்கிலிடப்பட்டார். கட்டபொம்மனுடைய வீரச்செயலகளைக் கருப்பொருளாகக் கொண்ட நாட்டுப்புறப்பாடல்கள் மக்களிடையே அவரது நினைவை இன்றுவரை உயிர்ப்புடன் வைத்துள்ளன.

## மருது சகோதரர்களும் 1801 தென்னிந்தியக் கிளர்ச்சியும்

ஆற்காடு நவாப் 1772ஆம் ஆண்டு உடன்படிக்கை மூலம் ஸ்தலக்காவல், தேசக்காவல் ஆகியவற்றுக்கான உரிமைகளை கம்பெனிக்குக் கொடுத்திருந்தார். இது பாளையக்காரர்கள், பாளையக்காரர்கள் அல்லாதோர் ஆகிய இரு தரப்பினரின் ஆட்சிப்பகுதிகளிலுமிருந்த காவல் தலைவர்களைப் பாதித்தது. அதிருப்தியடைந்த காவல்காரர்களும் அவர்களின் தலைவர்களும் நவாபுக்கும் கம்பெனிக்கும் எதிராகப் பாளையக்காரர்களுடன் சேர்ந்தார்கள். சிவகங்கை பெரிய உடைய தேவர், நவாப் படைக்கு எதிரான சண்டையில் உயிரிழந்ததால் நிர்வாகப் பொறுப்பை எடுத்துக்கொண்ட சின்ன மருதுவும் பெரிய மருதுவும் நவாப் படையை வெளியேற்றினார்கள். பெரிய உடைய தேவர், வேலு நாச்சியாரை ஆகியோரின் மகளான வெள்ளச்சி நாச்சியாரை சிவகங்கையின் இராணியாக அறிவித்தனர். அவர்கள் அமைச்சர் பொறுப்புகளை ஏற்றனர். அன்றைய சிவகங்கைக் காட்டின் நடுவில் இருந்த காளையார்கோவில், கிளர்ச்சியாளர்கள் கூடுமிடமாகவும் அவர்களது அடையாளமாகவும் இருந்தது. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்டதும், அவருடைய சகோதரர் ஊமைத்துரை கமுதியைச் சென்றடைந்தார். அங்கிருந்து அவரைச் சின்ன மருது சிவகங்கையின் தலைநகரான சிறுவயலுக்கு அழைத்துச் சென்றார்.

நவாப் முகமது அலி முத்துராமலிங்கத் தேவரைச் சிறையிலிருந்து விடுவித்து, அவரை இராமநாதபுரத்தின் சேதுபதியாக முடிசூட்டினார். ஆனால் கிளர்ச்சியாளர்கள் முத்துக்கருப்பத் தேவரைத் தங்கள் ஆட்சியாளராக அறிவித்தனர். மேலும் அரசின் தெற்குப் பதியையும் வடக்குப் பகுதியையும் ஆக்கிரமித்தனர். கிளர்ச்சியாளர்களின் வீரர்கள் மதுரைக்குள்ளும் நுழைந்தனர். ஜூலையில் ஊமைத்துரை தன் ஆதரவாளர்களுடன் மதுரையில் உள்ள பழையநாடு என்னும் பகுதியைக் கைப்பற்றினார். 1801இல் சின்ன மருதுவின் மகன் செவத்த தம்பியின் தலைமையில் சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய இரு பகுதிகளைச் சேர்ந்த படைகளும் இணைந்து, கடற்கரை வழியாகத் தஞ்சாவூர் நோக்கி அணிவகுத்துச் சென்றன. தஞ்சாவூரில் இருந்த பாதிக்கப்பட்ட விவசாயிகளும் செவத்த தம்பியின் படையில் சேர்ந்தனர். தஞ்சாவூர் ஸ்தானிகர் ஆக இருந்த கேப்டன் வில்லியம் ப்ளாக்பர்ன் படைகளைத் திரட்டி, மாங்குடி அருகே செவத்த தம்பியை வென்றார். தஞ்சாவூர் ராஜா சரபோஜி ஆங்கிலேயருக்குத் துணையாக நின்றார். இருப்பினும் வீரர்கள் ஆங்கிலேயர் படை பின் தொடர்தலிலிருந்து தப்பித்து, கடந்து சென்ற பகுதிகளை எல்லாம் அழித்து நாசமாக்கி சென்றனர்.

## தென்னிந்தியக் கிளர்ச்சி (1801)

திப்புவையும் கட்டபொம்மனையும் ஆங்கிலேயர் வென்ற பின்னர், அவர்களின் படைகள் பல்வேறு முனைகளிலிருந்து திரும்பி இராமநாதபுரத்திலும் சிவகங்கையிலும் கிளர்ச்சியாளர்களை எதிர்கொள்ள முடிந்தது. சிவகங்கையின் முன்னாள் ஆட்சியாளரின் வழித்தோன்றல் படமாத்தூர் ஒய்யாத்தேவரின் ஆதரவையும் கிழக்கிந்தியக் கம்பெனி பெற முடிந்தது. அவர் சிவகங்கையின் ஆட்சியாளராகக் கம்பெனியால் அங்கீகரிக்கப்பட்டார். இந்தப் பிரித்தாளும் தந்திரம் அரசரின் ஆதரவாளர்களிடையே பிளவை ஏற்படுத்தி, இறுதியில் கிளர்ச்சியாளர்களை மனந்தளர வைத்தது.

1801 மே மாதத்தில் அக்னியு தலைமையிலான ஒரு படைப்பிரிவு தன் நடவடிக்கைகளைத் துவக்கியது. இப்படை மானாமதுரை, பார்த்திபனூர் வழியாகப் பயணித்து, கிளர்க்கியாளர்கள் வசமிருந்த பரமக்குடி அரண்களை ஆக்கிரமித்தது. மோதலின்போது இரு தரப்பிலும் பெரும் சேதம் ஏற்பட்டது. ஆனால் கிளர்ச்சியாளர்களின் அடங்காத எதிர்ப்பும் மருது சகோதரர்களின் வீரம் செறிந்த சண்டைகளும் ஆங்கிலேயரின் நடவடிக்கையை மிகவும் கடினமாக்கியது. முடிவில், ஆங்கிலேயரின் படை வலிமையும் தளபதிகளின் திறமையுமே வெற்றி பெற்றன. ஆங்கிலேயர் ஊமைத்துரையைக் கைது செய்ததைத் தொடர்ந்து, மருது பாண்டியரைச் சிங்கம்புணரி குன்றுகளிலும் செவத்தையாவை வத்தலகுண்டு பகுதியிலும் வெள்ளை மருதின் மகன் துரைசாமியை மதுரைக்கு அருகிலும் கைது செய்தனர். சின்ன மருதுவும் அவருடைய சகோதரர் வெள்ளை மருதுவும் 1801 அக்டோபர் 24இல் திருப்பத்தூரில் தூக்கிலிடப்பட்டனர். ஊமைத்துரையும் செவத்தையாவும் அவர்களின் ஆதரவாளர்கள் பலரும் பாஞ்சாலங்குறிச்சிக்குக் கொண்டு செல்லப்பட்டு 1801 நவம்பர் 16ஆம் நாள் தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். 73 கிளர்ச்சியாளர்கள் 1802 ஏப்ரல் மாதத்தில் மலேயாவில் பினாங்குக்கு நாடு கடத்தப்பட்டார்கள்.

## தீரன் சின்னமலை

சேலம், கோயம்புத்தூர், கரூர், திண்டுக்கல் ஆகியவை அடங்கிய கொங்குநாடு, மதுரை நாயக்கர் அரசின் ஒரு பகுதியாக இருந்தது. அதை மைசூர் உடையார்கள் கைப்பற்றித் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். உடையார்களின் வீழ்ச்சிக்குப் பிறகு மைசூருடன் இந்த ஆட்கிப்பகுதிகள் மைசூர் சுல்தான்களால் கட்டுப்படுத்தப்பட்டன. மூன்றாம், நான்காம் மைசூர் போர்களின் விளைவாகக் கொங்குப் பகுதி முழுதும் ஆங்கிலேயர் வசமாயின.

தீரன் சின்னமலை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போரிட்ட கொங்குநாட்டுப் பாளையக்காரர் ஆவார். இவர் பிரெஞ்சுக்காரர்களாலும் திப்புவாலும் பயிற்சியளிக்கப்பட்ட பாளையக்காரர்களில் ஒருவர். சின்னமலை கோயம்புத்தூரில் இருந்த ஆங்கிலேயரின் கோட்டை மீது தாக்குதல் நடத்தும் முயற்சியில் (1800) இருந்தபோது, மருது பாண்டியரின் உதவியைப் பெற முயன்றார். கம்பெனியுடன் போரிடுவதற்காக விருபாட்சி கோபால நாயக்கர், பரமத்திவேலூர் அப்பச்சிக் கவுண்டர், சேலம் ஆத்தூர் ஜோனி ஜான் கஹன், பெருந்துறை குமராள் வெள்ளை, ஈரோடு வாரணவாசி ஆகியோருடன் கூட்டணி சேர்ந்தார்.

தனது படையை வலுவூட்டுவதற்குத் தேவையான உதவிகளை மருது சகோதரர்களிடமிருந்து பெறுவதைக் கம்பெனி தடுத்துவிட்டதால் சின்னமலையின் திட்டங்கள் பலிக்கவில்லை. அவரும் தன் திட்டத்தை மாற்றிக்கொண்டு, திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னதாகவே கோட்டையைத் தாக்கினார். கம்பெனிப் படை 49 பேரைத் தூக்கிலிடுவதற்கு இது வழிவகுத்தது. சின்னமலை ஆங்கிலேயரிடம் சிக்காமல் தப்பினார். 1800இலிருந்து அவர் தூக்கலிடப்பட்ட 1805 ஜூலை 31 வரை கம்பெனிக்கு எதிராகப் போராடிக்கொண்டே இருந்தார்.

சின்னமலையின் போர்களில் முக்கியமானவை மூன்று: காவிரிக்கரையில் நடைபெற்ற 1801 போர், 1802 ஆம் ஆண்டு ஓடநிலையில் நடந்த போர்; 1804 இல் நடந்த அரச்சலூர் போர் ஆகும். அவரது இறுதிப் போர் 1805இல் நடைபெற்றதாகும். இப்போரில் சின்னமலை அவருடைய சமையல்காரரால் துரோகம் இழைக்கப்பட்டார். தீரன் சின்னமலை சிவகிரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

**வேலூர் புரட்சி**

அரியணையை இழந்த அரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் சந்ததியினர் ஆங்கிலேய ஆட்சி சுமத்திய அடிமைத்தளையைத் தகர்க்கத் தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டனர். அவற்றின் மொத்த விளைவுதான் 1806ஆம் ஆண்டில் ஏற்பட்ட வேலூர் புரட்சி ஆகும். மருது சகோதரர்களின் கிளர்ச்சி ஒடுக்கப்பட்ட பின்னர், அவர்கள் வேலூரை மையமாகக் கொண்டு செயல்பட்டனர். எண்ணிக்கையில் 3000க்குக் குறையாத திப்பு சுல்தானின் விசுவாசிகள் வேலூரிலும் அதன் சுற்றவட்டாரப் பகுதிகளிலும் குடியேறியிருந்ததால், ஆங்கிலேய எதிர்ப்புக் கூட்டமைப்பின் அமைப்பாளர்கள் அங்கு தங்கள் இரகசிய நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டனர். ஆங்கிலேயரால் பதவியோ, சொத்தோ பறிக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் வறுமையின் கோரப்பிடியில் சிக்கியிருந்தனர். இதுபோல் பாதிக்கப்பட்ட பலரை வேலூர் கோட்டையின் படைமுகாம் உள்ளடக்கியிருந்தது. இவ்வாறு வேலூர் கோட்டை தென்னிந்தியாவின் புரட்சியாளர்கள் சந்தித்துக்கொள்ளுமிடமாக ஆனது. சிப்பாய்களும் வேலூருக்கு இடம்பெயர்ந்தவர்களும் கோட்டையில் அடிக்கடி கூடித் தீவிரமாகக் கலந்தாலோசித்தனர். அவற்றில் திப்பு மகன்களின் பிரதிநிதிகளும் பங்கேற்று வந்தனர்.

**உடனடிக் காரணம்**

இடைப்பட்ட காலத்தில் ஆங்கிலேயர் தங்கள் படையில் உள்ள சிப்பாய்ப்பிரிவில் சில புதுமைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். சிப்பாய்கள் சாதி அல்லது மதத்தின் அடையாளமாகத் தங்களது நெற்றியில் அணிந்த அனைத்து விதமான குறியீடுகளும் தடை செய்யப்பட்டன. சிப்பாய்கள் தங்கள் மீசையை ஒரே மாதிரியான முறைக்குப் பொருந்தும்படி வெட்டுவதற்கு அறிவுறுத்தப்பட்டனர். துணை ஜெனரல் அக்னியு சிப்பாய்களுக்கான ஒரு பதிய தலைப்பாகையை வடிவமைத்து, தனது நேரடிக் கண்காணிப்பில் அதனை அறிமுகம் செய்தார்.

இந்தியர்களின் பார்வையில், இந்தத் தலைப்பாகையில் இடம்பெற்றிருந்த அருவருக்கத்தக்க அம்சம், அதன் மீதிருந்த ரிப்பன் மற்றும் குஞ்சம் ஆகும். இது மிருகத் தோலில் செய்யப்பட்டிருந்தது. பன்றித்தோல் முஸ்லீம்களுக்கு வெறுப்பூட்டும் பொருள் ஆகும். இந்துக்கள் பசுத்தோலில் செய்யப்பட்ட எந்தப் பொருளையும் விலக்க வேண்டியதாகக் கருதினர். இந்த மாற்றங்களுக்கான எதிர்ப்பை இந்தியர்களிடையே இன்னும் அதிகரிக்கச் செய்யும் வகையில், சிப்பாய்கள் அணியும் சீருடையின் முன்பக்கம் சிலுவை பொறிக்கப்பட்டிருந்தது.

மீசை, சாதி அடையாளங்கள், கடுக்கன் ஆகியவை தொடர்பான உத்தரவு இந்து, முஸ்லீம் ஆகிய இரு சமயங்களைச் சேர்ந்த சிப்பாய்களின் சமய வழக்கங்களை மீறுவதாக இருந்தாலும், இத்தகைய அடையாளங்களை வெளிப்படுத்துதல் இந்த உத்தரவுக்கு முன்பு முறையான உத்தரவால் தடை செய்யப்படாமலிருந்தாலும், அணிவகுப்பில் இவ்வாறு தோன்றும்படி எந்த ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட படையிலும் வழக்கத்தில் இருந்ததில்லை என்று இம்மாற்றங்களுக்கு நியாயம் கற்பிக்கப்பட்டது.

முதல் எதிர்ப்பு 1806 மே மாதத்தில் நிகழ்ந்தது. வேலூரிலிருந்த 4ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு வீரர்கள் புதிய தலைப்பாகையை அணிய மறுத்தனர். இந்தப் பிரச்னை படைமுகாமின் தளபதியான கவர்னர் ஃபேன்கோர்ட்டுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் கிளர்ச்சியாளர்களை உடனிருந்து கண்காணிக்கும்படி 19ஆம் குதிரைப்படைப்பிரிவுக்கு உத்தரவிட்டார். இவர்கள் மீதான விசாரணைக்கம் உத்தரவிடப்பட்டது. 4ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவுக்குப் பதிலாக வாலாஜாபாத்திலிருந்த 23ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு பொறுப்பை ஏற்றது. தலைமையின் உத்தரவை எதிர்த்தமைக்காகப் படையின் கீழ்நிலைப் பொறுப்பிலிருந்த 21 வீரர்கள் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார்கள். அவர்களில் 10 முஸ்லீம்களும் 11 இந்துக்களும் இருந்தார்கள். நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றும்பொருட்டு இரு வீரர் (ஒரு முஸ்லீம், ஒரு இந்து) களுக்குத் தலா 900 கசையடிகள் கொடுக்கப்பட்டு, அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.

இந்திய வீரர்களிடமிருந்து கிளம்பிய எதிர்ப்புகளை மீறி, அவர்களின் மனக்குறைகளைப் பொருட்படுத்தாமல் அரசு தான் முன்வைத்த மாற்றங்களைச் செயல்படுத்த முடிவெடுத்தது. ‘புதிய தலைப்பாகையை அணிவதற்க விருப்பமில்லாத உணர்வு வீரர்களிடையே மிக பலவீனமாக இருப்பதாக‘வே கவர்னர் வில்லியம் பெண்டிங்க் நம்பினார்.

வேலூர் கோட்டையில் 1806 ஜூலை 9ஆம் நாள் இரவின்போது பணியிலிருந்த இராணுவ அதிகாரிகள் வழக்கத்துக்கு மாறாக எதையும் கவனிக்கவில்லை என முதலில் கூறப்பட்டது. எனினும், அன்றைக்குப் பொறுப்பிலிருந்த ஆங்கிலேய அதிகாரி பார்வையிடும் தனது வேலையை அன்று செய்யவில்லை என்றும் தனக்குப் பதிலாக ஜமேதார் ஷேக் காசிம் என்ற இந்திய அதிகாரியை அனுப்பினார் என்றும் பின்னர் தெரிய வந்தது. வேலூர் புரட்சிக்குப் பிறகு, அவர் முதன்மைக் குற்றவாளிகளில் ஒருவராக அடையாளம் காணப்பட்டார். ஜூலை 10 அதிகாலையில் பயிற்சியில் கலந்துகொள்ள வேண்டிய படைப்பிரிவின் தலைவர்கள் ஜூலை 9 ஆம் நாள் இரவே கோட்டையில் தூங்குவதற்கு அதைச் சாக்காகப் பயன்படுத்தினர். இந்தத் துணை இராணுவ அதிகாரி கோட்டைக்குள் பாதுகாவலர்களாகத் தன்னால் இயன்றவரை தன்னுடைய ஆதரவாளர்களையே நியமித்தார்.

வேலூர் புரட்சியில் முக்கியப் பங்கு வகித்ததாகக் கருதப்படுபவர் ஜமாலுதீன் ஆவார். இவர் திப்புக் குடும்பத்தின் 12 இளவரசர்களில் ஒருவர். அவர் ஷேக் காசிம் போன்ற இந்திய அதிகாரிகளிடமும் வீரர்களிடமும் இரகசியப் பேச்சுவார்த்தைகளின்போது, அவர்கள் வேலூர் கோட்டையை எட்டு நாட்களுக்குத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்படியும் அதற்குள் 10 ஆயிரம் ஆதரவாளர்கள் உதவிக்கு வந்து விடுவார்கள் என்றும் கூறி வந்தார். உரிமை பறிக்கப்பட்ட பாளையக்காரர்களின் உதவியைக் கேட்டு அவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளதையும் அவர் தெரிவித்தார். திப்பு சுல்தானிடம் பணிபுரிந்த ஏராளமான அதிகாரிகள் திப்புவின் முன்னாள் அமைச்சரான பூர்னியாவடன் தொடர்பில் இருப்பதாகவும் அவர்கள் தக்க நேரத்தில் கைகொடுப்பார்கள் என்றும் ஜமாலுதீன் கூறினார்.

## வேலூர் கிளர்ச்சி

வேலூர்க் கோட்டையில் ஜூலை 10ஆம் நாள் காலை 2 மணிக்கு முதன்மை பாதுகாப்புத்தளத்திலிருந்த காவலாளியிடமிருந்து கார்ப்பரல் பியர்சிக்கு ஒரு செய்தி தெரிவிக்கப்பட்டது. படைவீரர் குடியிருப்புக்க அருகில் துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது என்பதே அச்செய்தி. பியர்சி பதில் நடவடிக்கையில் இறங்கும் முன்னரே, சிப்பாய்கள் ஆங்கிலேயப் பாதுகாவலர்கள் மீதும், படைவீரர் குடியிருப்பு, அதிகாரிகள் குடியிருப்பு ஆகியவற்றின் மீதும் ஏறக்குறைய ஒரே நேரத்தில் தாக்குதல் தொடுத்தனர். பியர்சியும் கடுமையான காயங்களுக்கு உள்ளானார். ஐரோப்பியக் குடியிருப்புகளில் கோடை வெக்கையைச் சமாளிக்கக் கதவுகள் இரவிலும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. கிளர்ச்சியாளர்கள் படுக்கைகளில் பாதுகாப்பின்றி உறங்கிக்கொண்டிருந்த ஐரோப்பியரைச் சன்னல் வழியாக எளிதில் சுட முடிந்தது. ஐரோப்பியக் குடியிருப்புக்குத் தீ வைக்கப்பட்டது. ஐரோப்பிய அதிகாரிகளின் குடியிருப்புகளைக் கண்காணித்து, வெளியே வரும் எவரையும் சுடுவதற்குத் தனிப்படைப்பிரிவு நியமிக்கப்பட்டது, வெடிமருந்துகளும் துப்பாக்கி ரவைகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்த கிடங்கை முதலாம் ரெஜிமெண்ட்டின் ஒரு பிரிவு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. அதே ரெஜிமெண்ட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஒரு குழு குடியிருப்புகளில் உள்ள ஐரோப்பியரைக் கொல்வதற்குத் தொடர்ந்து கண்காணிப்பில் இருந்தது. ஏராளமான ஐரோப்பிய ஒழுங்குமுறை நடத்துனர்களுடன், 13 அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இராணுவக்குடியிருப்பில் 82 கீழ்நிலை இராணுவ வீரர்கள் இறந்தார்கள். 91 பேர் காயமடைந்தனர்.

உள்ளூர் வீரர்கள் அடங்கிய 16 ஆம் காலாட்படையைச் சேர்ந்த மேஜர் ஆர்ம்ஸ்ட்ராங் துப்பாக்கிச் சத்தம் கேட்டபோது கோட்டைக்கு வெளியே பல்லக்கில் சென்று கொண்டிருந்தார். அவர் பல்லக்கிலிருந்து இறங்கி, கோட்டையின் சரிவான பகுதிக்குச் சென்று விசாரித்தார். அதற்குப் பதில் போல் பாதுகாப்பு அரணிலிருந்து சரமாரியாகப் பொழிந்த குண்டுமழை உடனடியாக அவரது உயிரைப் பறித்தது. கோட்டைக்கு வெளியே பணியிலிருந்த மேஜர் கோட்ஸ் கிளர்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு கோட்டைக்குள் நுழைய முயன்றார். அவரால் உள்ளே செல்ல முடியாததால், ஆற்காட்டில் குதிரைப்படை முகாமுக்குப் பொறுப்பு வகித்த கில்லஸ்பிக்குக் கடிதம் எழுதி, அதைக் கேப்டன் ஸ்டீவன்சன் என்பவரிடம் கொடுத்தனுப்பினார். அந்தக் கடிதம் வேலூரிலிருந்து 25 கி.மீ தொலைவில் இருந்த ஆற்காட்டுக்குக் காலை 6 மணி அளவில் சென்றடைந்தது. கர்னல் கில்லஸ்பி உடனே வேலூருக்குப் புறப்பட்டார். தன்னுடன் கேப்டன் யங் தலைமையில் 19ஆம் குதிரைப்படையைச் சேர்ந்த ஒரு பிரிவையும் லெப்டினெண்ட் உட் ஹவுஸ் தலைமையில் அதற்குத் துணைநிற்கும் 7ஆம் குதிரைப்படையிலிருந்து ஒரு வலுவான பிரிவையும் அழைத்துச் சென்றார். அவர் குதிரைப்படையில் மீதமுள்ள வீரர்களுடன் தன்னைப் பின்தொடர்ந்து வரும்படி கர்னல் கென்னடியிடம் அறிவுறுத்திவிட்டு, ஆற்காடு படைமுகாமைப் பாதுகாக்கவும் தன்னுடன் தகவல்தொடர்பில் இருக்கவும் ஒரு தனிப்பிரிவை விட்டுச்சென்றார்.

வேலூர் கோட்டைக்குக் காலை 9 மணிக்கு வந்தடைந்த கில்லஸ்பி தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடந்துகொண்டிருந்ததால், பீரங்கிகள் தங்கள் பாதுகாப்புக்கு வந்துசேரும்வரை காத்திருக்க முடிவு செய்தார். விரைவிலேயே ஆற்காட்டிலிருந்து பின்தொடர்ந்து வந்த கென்னடி தலைமையிலான குதிரைப்படை 10 மணி அளவில் வந்துசேர்ந்தது. லெப்டினெண்ட் ப்ளாகிஸ்டன் தலைமையில் 19ஆம் குதிரைப்படையின் பீரங்கியால் கேப்டன் ஸ்கெல்ட்டன் தலைமையிலான குதிரைப்படையின் ஒரு பிரிவு கோட்டைக்குள் நுழைந்தது.

கில்லஸ்பியின் வீரர்கள் கடுமையான துப்பாக்கிச்சூட்டை எதிர்கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற தாக்குதலில் கர்னல் கில்லஸ்பியும் காயங்களுக்க உள்ளானார். கிளர்ச்சியில் ஈடுபட்ட சிப்பாய்கள் பின்வாங்கினார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் கோட்டையின் சுவர்கள் மீது ஏறித் தப்பித்தனர் அல்லது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு கருணைக்காகக் கெஞ்சினர். குதிரைப் படைப்பிரிவுகள் அனைத்தும் அணிவகுப்பு மைதானத்தில் ஒன்று கூடின. கோட்டையின் திட்டிவாசல் மூலம் கிடைத்த குறுகலான பாதை வழியே தப்பியோடிய சிப்பாய்களைப் பின்தொடர்ந்து சென்ற பிடிக்க முடிவெடுக்கப்பட்டது,

தப்பியோடிய சிப்பாய்களை வழிமறித்துப் பிடிக்கச் சில உள்ளூர் குதிரைக்காரர்களுடன் ஒரு குதிரைப்படைப்பிரிவு கிளம்பியது. கோட்டையின் அனைத்துக் கட்டிடங்களிலும் தேடுதல் வேட்டை நடந்தது. அங்கு ஒளிந்திருந்த கிளர்ச்சியாளர்கள் இரக்கமின்றிக் கொல்லப்பட்டார்கள். கில்லஸ்பியின் ஆட்கள் கிளர்ச்சிக்குத் திட்டம் தீட்டிய திப்புவின்

மகன்களைப் பழிவாங்க விரும்பினார்கள். ஆனால் லெப்டினெண்ட் கர்னல் மர்ரியாட் இதை எதிர்த்தார்.

கில்லஸ்பியின் வன்கொடுமைகளை நேரில் பார்த்த ஜே. பிளாக்கிஸ்டன், 800க்கும் மேற்பட்ட உடல்கள் கோட்டையிலிருந்து வெளியே எடுத்துச் செல்லப்பட்டதாக கூறுகிறார். டபிள்யூ. ஜே. வில்சனின் மதிப்பீட்டின்படி கிளர்ச்சியில் பங்கேற்றதற்காக 378 பேர் சிறை வைக்கப்பட்டனர். 516 பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டாலும் சிறைத் தண்டனை விதிக்கப்படவில்லை. விசாரணைக்குழுவிடம் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின்படி, இராணுவ நீதிமன்றம் சில தனிப்பட்ட நபர்களுக்கு மரண தண்டனை விதித்தது. சிலரை நாடு கடத்தியது. இத்தண்டனைகள் வேலூர் பொறுப்பதிகாரியால் 1806 செப்டம்பர் 23 அன்று நிறைவேற்றப்பட்டது.

**முதலாம் ரெஜிமண்ட்டின் முதல் படைப்பிரிவு**

| | |
|---|---|
| பீரங்கி முனையில் கட்டிச் சுடப்பட்டவர்கள் | - 1 ஹவில்தார், 1 நாயக் |
| சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் | - 1 நாயக், 4 சிப்பாய்கள் |
| தூக்கிலிடப்பட்டவர்கள் | - 1 ஜமேதார், 4 சிப்பாய்கள் |
| நாடு கடத்தப்பட்டவர்கள் | - 3 ஹவில்தார்கள், 2 நாயக்குகள், 1 சிப்பாய் |

**23ஆம் ரெஜிமெண்ட்டின் 2ஆம் படைப்பிரிவு**

| | |
|---|---|
| பீரங்கி வாயில் கட்டிச் சுடப்பட்டவர்கள் | - 2 சுபேதார்கள், 2 லஸ்கார்கள் |
| தூக்கிலிடப்பட்டவர்கள் | - 2 ஹவில்தார்கள், 1 நாயக் |

கர்னல் கில்லஸ்பி வேலூர் கோட்டையை 15 நிமிடங்களுக்குள் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்ததாகக் கூறப்படுகிறது. கர்னல் ஹர்கோர்ட் (வாலஜாபாத் படைக்குப் பொறுப்பு வகித்தவர்) ஜூலை 11இல் வேலூர் படையின் தற்காலிகப் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். ஜூலை 13இல் ஹர்கோர்ட் படைமுகாமின் பொறுப்பாளராகப் பதவியேற்று, இராணுவச் சட்ட ஆட்சியை அமல்படுத்தினார். கர்னல் கில்லஸ்பியின் விரைவான, சிறந்த திட்டமிடலுடன் கூடிய நடவடிக்கையே, கோட்டையைச் சில நாட்களுக்குள் கைப்பற்றி, அடுத்ததாக மைசூரிலிருந்து வரவிருந்த 50 அயிரம் வீரர்களின் ஆதரவைப் பெறுவதற்குத் திட்டமிட்ட கிளர்ச்சியாளர்களின் கூட்டணிக்கு முற்றுப்புள்ளி வைத்ததாகக் கருதப்படுகிறது.

படைவீரர்கள் எதிர்ப்பு தெரிவித்த அருவருப்பான மாற்றங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன. விசாரணைக் குழுவின் கூற்றுப்படி, மைசூர் இளவரசர்கள் கிளர்ச்சிக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பது நிறுவப்படாததால், அவர்களைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவைக்கும்படி உத்தரவிடப்பட்டது. உயர்மட்டத் தீர்ப்பாயங்கள் கவர்னர், தலைமைப் படைத்தளபதி, துணை உதவி ஜெனரல் ஆகியோரை இந்தக் குளறுபடிக்குப் பொறுப்பாக்கி அவர்களைத் திரும்ப அழைத்துக்கொள்ள உத்தரவிட்டன.

வேலூர் நிகழ்வின் தாக்கம் ஹைதராபாத், வாலஜாபாத், பெங்களூர், நந்திதுர்கம், பாளையங்கோட்டை, பெல்லாரி, சங்கரிதுர்கம் ஆகிய இடங்களிலும் பரவியது. 1857 ஆம் ஆண்டு நடைபெற்ற பெரும் கிளர்ச்சிக்கான அனைத்து முன்னறிகுறிகளும் வேலூர் கிளரச்சியில் இருந்தன. பெருங்கிளர்ச்சியில் இடம்பெற்ற கொழுப்பு தடவபட்ட தோட்டாக்கள் என்ற சொல்லுக்கு மாற்றாக வேலூர் நிகழ்வில் இடம்பெற்ற பாட்ஸ் என்பதையும் பகதூர் ஷா, நானா சாகிப் ஆகியோருக்கு மாற்றாக மைசூர் இளவரசர்களையும் நம்மால் பொருத்திப் பார்க்க முடியும்.

**விவசாயிகள், பழங்குடிகள் ஆகியோரின் கிளர்ச்சிகள்**

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கம்பெனி அரசாங்கத்தின் நில உரிமையும் வருவாய் ஈட்டும் முறையும் இந்தியக் கிராமியச் சமூகத்தை மிகக் கடுமையாகப் பாதித்தன. விவசாயிகளை அதற்கு முன்னில்லாத அளவுக்கு வருத்தியது. வருவாய் ஈட்டும் வேளாண்முறையின் தொடக்க காலத்தில் விவசாயிகள்

அவர்களுக்கு அதிகளவிலான வருவாய் இலக்கை நிர்ணயித்து, அநியாயமாக அதை வசூலித்த ஒப்பந்ததாரர்களாலும் கம்பெனி அதிகாரிகளாலும் நசுக்கப்பட்டனர். இதற்குத் தீர்வு காணும்படி விவசாயிகள் தொடக்கத்தில் கம்பெனி அரசாங்கத்துக்குப் புகார் அனுப்பினார்கள். ஆனால் அவர்களின் கோரிக்கை செவிசாய்க்கப்படாமல் போனபோது, அவர்கள் அணி திரண்டு, நேரடி நடவடிக்கையில் இறங்கினர். விவசாயிகள் உள்ளூர் கச்சேரி (வருவாய் வசூலிக்கும் அலுவலகம்) களைத் தாக்கினார்கள்; தானியச் சேகரிப்புக்கிடங்குகளைக் கொள்ளையடித்தார்கள்; வரியைச் செலுத்த மறுத்தார்கள்.

1840களிலும் 1850களிலும் செயல்பட்ட விவசாயிகள் இயக்கம் மலபார் கிளர்ச்சியாக வெளிப்பட்டது. இப்பகுதியில் குடியேறி, மலபார் பெண்களைத் திருமணம் செய்து கொண்ட அரபு வணிகர்களின் சந்ததியினர் (மாப்பிள்ளைகள்) ஆவர். படிப்படியாக மாப்பிள்ளைமார்கள் விவசாயத்தைச் சார்ந்தவர்களாகி, நிலத்தை வாடகைக்கு எடுத்து விவசாயம் செய்வோராகவும் நிலமற்ற உழைப்பாளர்களாகவும் சில்லறை வணிகர்களாகவும் மீனவர்களாகவும் மாறினர். 1792இல் ஆங்கிலேயர் மலபாரைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தபோது, அவர்கள் நில உடைமை விவகாரங்களைச் சீரமைக்க முடிவெடுத்தார்கள். நிலத்துக்கான தனிநபர் உரிமையாளர் முறையை உருவாக்குவது அவர்க்ள கொண்டுவந்த மாற்றமாகும். முன்பிருந்த மரபுமுறை, நிலத்திலிருந்து கிடைக்கும் மொத்த விளைச்சலை ஜன்மி (ஜன்மம் என்ற உரிமை பெற்றவர்), கனம்தார் (கனம் என்ற உரிமை பெற்றவர்), விவசாயி ஆகியோர் சரிசமமாகப் பகிர்வதற்கு வாய்ப்பளித்தது. ஆங்கிலேயர் கொண்டுவந்த புதிய முறை ஜன்மிகளை நிலத்தின் முழு உரிமையாளர்களாக்கி, குத்தகை விவசாயிகளை வெளியேற்றும் அதிகாரத்தையும் கொடுத்தது. இந்த நடைமுறை அதற்கு முன்பு இல்லாததாகும். இது விவசாயிகளை மிகவும் பாதித்தது. இவற்றுடன், மிகையாக மதிப்பிடுதல், சட்டத்துக்குப் புறம்பான வரிகளைச் சுமத்துவது, நீதிமன்றமும் காவல்துறையும் நில உரிமையாளருக்கு மட்டுமே ஆதரவாக நடந்துகொள்வது ஆகியவை விவசாயிகளை வறுமையின் உச்சத்தில் வாழும் நிலைக்குத் தள்ளியது.

தாங்கள் நசுக்கப்படுவதைச் சகித்துக்கொள்ள முடியாத விவசாயிகள் எதிர்வினை புரிந்த நிகழ்வுகள் மலபாரில் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுதும் நடந்தன. அவற்றில் 1849 ஆகஸ்ட் மாதத்தில் மஞ்சேரியிலும், 1851 ஆகஸ்ட் மாதத்தில் குளத்தூரிலும் (இந்த இரு இடங்களும் தெற்கு மலபாரில் உள்ளவை) 1852 ஜனவரி மாதத்தில் வடக்கில் உள்ள மட்டனூரிலும் நிகழ்ந்த கிளர்ச்சிகள் மிகவும் தீவிரமானவையாகும். ஆங்கிலேய ஆயுதப்படைகள் கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்டன. இங்கெல்லாம் அமைதியை ஏற்படுத்த ஆங்கிலேயர் கையாண்ட அடக்குமுறை நடவடிக்கைகள் இருபது ஆண்டுகளுக்கு மேல் நீடித்தன. ஆனால் மாப்பிள்ளைகள் 1870இல் மீண்டும் எழுச்சி பெற்றனர். மீண்டும் கிளர்ச்சிகள் நடந்தன.

1857க்கு முந்தைய இந்தியாவில் நடைபெற்றவற்றில் சில கிளர்ச்சிகள் பழங்குடியினரால் நடத்தப்பட்டன. உள்ளூர் வளங்கள் மீதான அவர்களின் தன்னாட்சியும் கட்டுப்பாடும் ஆங்கிலேய ஆட்சியாலும் பழங்குடி அல்லாதவரின் வருகையாலும் பாதிக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். இப்பழங்குடிகள் இந்தியாவின் பெரும்பகுதிக்குப் பரவி, 19ஆம் நூற்றாண்டில் நூற்றுக்கணக்கான தீவிர மோதல்களையும் கிளர்ச்சிகளையும் ஏற்படுத்தினார்கள்.

**கோல்களின் கிளர்ச்சி (1831-32)**

கோல் (Kol) என்ற பழங்குடி இனத்தினர் பீகாரிலும் ஒரிசாவிலும் சோட்டா நாக்பூர், சிங்பும் ஆகிய பகுதிகளில் வாழ்ந்தனர். சோட்டா நாக்பூர் ராஜா பல கிராமங்களைப் பழங்குடி அல்லாதோருக்குக் குத்தகைக்கு விட்டதே கோல்களின் கிளர்ச்சிக்கு உடனடிக்காரணமாகும். சோன்பூர், தமர் ஆகிய பகுதிகளில் வசித்த கோல்கள் திக்காடர்களுக்கு (வரி வசூலிப்போர்) எதிரான கிளர்ச்சியை நடத்துவதற்கு முதல் முயற்சியை எடுத்தனர். வெளியாருடைய சொத்தகளைத் தாக்குவதை இவர்களின் கிளர்ச்சி உள்ளடக்கியிருந்தது. கோல்கள் உயிர்ச்சேதம் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. கொள்ளையடிப்பதும் சொத்துகளுக்குத் தீவைப்பதும் அவர்களது கிளர்ச்சியில் முக்கிய வழிமுறைகளாக இருந்தன. 1831 டிசம்பர் 20ஆம் நாளில் சோட்டா நாக்பூரில் உள்ள சோனிப்பூர் பர்கானா எழுநூறு கிளர்ச்சியாளர்கள் அடங்கிய குழுவால் தாக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டது. 1832 ஜனவரி 26க்குள் கோல்கள் சோட்டா நாக்பூர் முழுவதையும் தங்கள் ஆளுகைக்குள் கொண்டு வந்துவிட்டார்கள். இவர்களின் கிளர்ச்சி ஆங்கிலேயருக்கு எதிரான ஒரு போருடன் முடிவுக்கு வந்தது. மிகத் தீவிரமாக ஒரு குறுகிய பரப்புக்குள் நடந்த

சண்டையில் கோல் கிளர்ச்சியின் தலைவரான புத்த பகத் கொல்லப்பட்டார். துண்டிக்கப்பட்ட அவரது தலையை ஆட்சியாளர்களிடம் ஒப்படைப்பதற்காக அதிகாரிகள், இராணுவ வீரர்கள் ஆகியோரிடையே ஓராயிரம் ரூபாய் விநியோகிக்கப்பட்டது. கிளர்ச்சிக்குத் தூண்டுகோலாக இருந்த பிந்த்ராய் மன்கி 1832 மார்ச் 19ஆம் நாள் சரணடைந்ததும், கோல்களின் போராட்டம் ஒரு துயரமான முடிவுக்கு வந்தது.

**சந்தால் கிளர்ச்சி (1855-56)**

பழங்குடிகளான சந்தால்கள் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய மாநிலங்களில் உள்ள பல்வேறு காட்டுப்பகுதிகளில் அங்கங்கே பரவியிருந்தபடி வாழ்ந்தார்கள். மஞ்சி என்றும் அவர்கள் அறியப்பட்டார்கள். தங்களின் தாய்மண்ணிலிருந்து துரத்தப்பட்ட சந்தால்கள் ராஜ்மகல் குன்றுகளைச் சுற்றியுள்ள பகுதியைத் திருத்தி, அதை டாமின்-இ-கோ (சந்தால்களின் நிலம்) என்று அழைத்தார்கள். பழங்குடி நிலங்கள் சந்தால் அல்லாத ஜமீன்தார்களுக்கும் வட்டிக்கடைக்காரர்களுக்கும் குத்தகைக்கு விடப்பட்டதால், சந்தால்கள் படிப்படியாகக் கையறுநிலையில் வாழ வேண்டிய நெருக்கடிக்குத் தள்ளப்பட்டார்கள். இத்துடன், உள்ளூர் காவல்துறையினராலும் அப்பகுதிகளில் தொடர்வண்டிப்பாதை அமைப்பதில் ஈடுபட்ட ஐரோப்பிய அதிகாரிகளாலும் அடக்குமுறைக்குள்ளானார்கள். டிக்குகளின் (வெளியிலிருந்து வந்தோர்) இத்தகைய ஊடுருவல் சந்தால் சமூகத்தை நிலை தடுமாறச் செய்தது. இது அவர்கள் இழந்த பகுதியை மீட்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வைத்தது.

1855 ஜூலையில் சந்தால்கள் ஜமீன்தார்களுக்கும் அரசாங்கத்துக்கும் விடுத்த இறுதி எச்சரிக்கை செவிமடுக்காமல் போனவுடன், ஆயிரக்கணக்கிலான சந்தால்கள் வில்லும் அம்பும் ஏந்திக்கொண்டு வெளிப்படையான கிளர்ச்சியைத் துவக்கினார்கள். தமது கிளர்ச்சி தம்மை ஒடுக்குபவர்களான ஜமீன்தார்கள், வட்டிக்கடைக்காரர்கள், அரசாங்கம் ஆகிய மூன்று தரப்பினரின் புனிதமற்ற கூட்டுக்கு எதிரானது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். மகேஷ்பூர் போரில் மஞ்சிகளில் பெரும்பாலானவர்கள் சிவப்பு நிற உடையை அணிந்திருந்தார்கள். பின்னாட்களில் இது அதிகாரத்துக்கு உரிமைகோரும் அடையாளத்துக்கான ஆடை ஆனது. கிளர்ச்சியின் முதல் வாரத்தில் பத்து பேர் அடங்கிய ஒரு குழு மோங்கபர்ரா என்னும் கிராமத்தைத் தாக்கித் தீக்கிரையாக்கியது. கிளர்ச்சியாளர்களில் பெண்களும் இருந்தார்கள்.

தொடக்கத்தில் சித்தோ சந்தால்களின் தலைவராக இருந்தார். அவர் கைது செய்யப்பட்ட பின்னர் கானு கிளர்ச்சியை நடத்தினார். கிளர்ச்சியின் பிற்பகுதியில் விவசாயிகளும் சேர்ந்துகொண்டார்கள். ஆயிரக்கணக்கான விவசாயிகள் சார்லஸ் மசேக் அவுரித் தொழிற்சாலையைத் தாக்கிக் கொள்ளையடித்தார்கள். இதன் விளைவாக, கிளர்ச்சியை ஒடுக்க ஆங்கிலேயர் தரப்பிலிருந்து மிருகத்தனமான நடவடிக்கைகள் தொடங்கின. இராணுவம் குவிக்கப்பட்டு, சந்தால் கிராமங்கள் பழிக்குப் பழியாக ஒன்றன் பின் ஒன்றாகத் தீக்கிரையாக்கப்பட்டன. ஒரு கணக்கீட்டின்படி, கிளர்ச்சி இறுதியாக ஒடுக்கப்படும் முன்பு, 30 ஆயிரம் முதல் 50 ஆயிரம் பேர் வரையான கிளர்ச்சியாளர்களில் 15 ஆயிரத்திலிருந்து 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டார்கள் எனத் தெரிகிறது.

**முண்டா கிளர்ச்சி**

பிர்சா முண்டா வழிநடத்திய முண்டாக்களின் கிளர்ச்சி (உல்குலன்) 1899-1900 காலகட்டத்தில் நடைபெற்றது. முண்டாக்கள் பீகார் பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்த பழங்குடிகள் ஆவர். ஆங்கிலேயரின் ஆட்சியில் அவர்களின் பொதுநில உரிமை முறை அழிக்கப்பட்டது. முண்டாக்களுக்குச் சொந்தமான நிலங்களை ஜாகீர்தார்களும் திக்காடர்களும் (பெரும் விவசாயி) வட்டிக்கடைக்காரர்களும் பறித்துக்கொண்டனர். பிர்சா முண்டா குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகளின் குடும்பத்தில் 1874இல் பிறந்தார். ஆங்கிலேயரை விரட்டிவிட்டு, முண்டாக்களின் ஆட்சியை நிறுவ வந்த புனிதத்தூதர் என அவர் தன்னை அழைத்துக்கொண்டார். பழங்குடிகளின் நிலங்களைப் பழங்குடி அல்லாதோர் ஆக்கிரமிப்பதை இவரது தலைமையில் முண்டாக்கள் எதிர்த்தார்கள். முண்டா இனத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஜமீன்தார்களுக்கு வாடகை செலுத்த வேண்டாம் என பிர்சா முண்டா வலியுறுத்தினார்.

பிர்சா முண்டா சோட்டா நாக்பூர் பகுதியில் கிளர்ச்சியைத் துவக்கினார். சாயில் ரகப் என்னுமிடத்தில் முண்டா சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் கண்மூடித்தனமாகக் கொல்லப்பட்டார்கள். சாயில் ரகப் படுகொலை பிர்சா ஆதரவாளர்களைத் தடுத்து நிறுத்தவில்லை. ஆங்கிலேய அதிகாரிகள் பிர்சாவைக் கைது செய்ய உத்தரவு

பிறப்பித்ததுடன், அவரைப் பிடித்துத் தருபவர்களுக்குப் பரிசளிப்பதாகவும் அறிவித்தார்கள். இத்தனைக்குப் பிறகும் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு தொடர்வதைக் காண முடிகிறது. ராஞ்சி சிறையில் அடைக்கப்பட்ட பிர்சா 1900ஆம் ஆண்டு ஜுன் 9ஆம் நாளில் தியாகி ஆனார். அவருடைய பெயர் தொடர்ந்து அப்பகுதியின் மலைவாழ் மக்களை ஈர்ப்பதாக உள்ளது.

**1857 பெருங்கிளர்ச்சி**

**அறிமுகம்**

1857ஆம் ஆண்டு பெருங்கிளர்ச்சி ஆங்கிலேய, இந்திய வரலாற்று அறிஞர்களிடையே பெரும் விவாதத்திற்குரிய பொருளாக உள்ளது. ஆங்கில ஏகாதிபத்திய வரலாற்றாசிரியர்கள் இவ்வெழுச்சியை இராணுவக் கலகம் என்றும் இராணுவ வீரர்களின் கோபத்தின் வெளிப்பாடு என்றும் கூறி சாதாரணமாகப் புறந்தள்ளுகின்றனர். இந்திய வரலாற்றறிஞர்கள் ராணுவப் புரட்சியைப் பெருங்கிளர்ச்சியாக மாற்றியதில் மக்கள் வகித்த பாத்திரம் பற்றி ஆய்வு மேற்கொண்டு இரண்டு கேள்விகளை எழுப்பியுள்ளார். அக்கேள்விகளுக்கு ஏகாதிபத்திய வரலாற்றறிஞர்களிடம் பதிலில்லை. இது ஒரு இராணுவக் கலகம் மட்டுமே என்றால், முகாம்களில் இருந்த சிப்பாய்கள் புரட்சி செய்வதற்கு முன்பாகவே, மக்கள் கிளர்ச்சி செய்ததை எப்படி விளக்குவது? எழுச்சிக்கு உடந்தையாக இருந்தார்கள் என்று சொல்லி மக்களை அபராதம் விதித்து தூக்கிலிட்டுத் தண்டிக்க வேண்டிய அவசியமென்ன? வங்காளப் படையின் ஆங்கிலத் தளபதியான கர்னல் மல்லீசன் "The Making of the Bengal Army" வங்காளப்படையின் உருவாக்கம் எனும் சிறு ஏட்டில் "ஒரு இராணுவ வீரர்களின் கலகம்….. விரைவாக தனது குணாதியத்தை மாற்றிக் கொண்டு தேசீய எழுச்சியாக மாறியது" என்று குறிப்பிடுகிறார்.

வரலாற்றறிஞர் கீன் (Keen) இக்கிளர்ச்சிக்குக் காரணமாகச் செயல்பட்ட பல விஷயங்களை முன்வைக்கிறார். டல்ஹௌசியின் இணைப்புக் கொள்கைகளாலும் சீர்திருத்த வேகத்தாலும் பாதிப்புக்குள்ளான இளவரசர்கள், இராணுவ வீரர்கள் மற்றும் பொதுமக்களின் குமுறல்கள் என ஏற்கனவே குவித்து வைக்கப்பட்டிருந்த எரிபொருளை கொழுப்பு தடவப்பட்ட தோட்டாக்கள் தீப்பொறியை ஏற்படுத்திப் பற்றி எரியச் செய்தன. எட்வர்டு ஜான் தாம்சன் இந்நிகழ்வை "பெருமளவில் உண்மையான விடுதலைப் போராட்டம்" என விளக்கியுள்ளார். 1909இல் வெளியான சாவர்கரின் The War of Indian Independence (இந்திய விடுதலைப் போர்) எனும் தனது நூலில் ஆங்கிலேயரால் இதுவரை வெறும் இராணுவப் புரட்சியே என்று வர்ணிக்கப்பட்ட இந்நிகழ்வு உண்மையில் அமெரிக்க சுதந்திரப் போரைப் போன்ற ஒரு விடுதலைப் போரே என வாதிடுகின்றனர். ஆங்கிலம் படித்த மத்தியதர மக்கள் இவ்வெழுச்சியில் எந்த ஒரு பங்கையும் வகிக்காவிட்டாலும் தேசிய வரலாற்றிஞர்கள் இவ்வெழுச்சியை இந்தியாவின் முதல் விடுதலைப் போர் என்றே கூறுகின்றனர்.

**பெருங்கிளர்ச்சிக்கான காரணங்கள்**

**நாடுகளை ஆக்கிரமித்தல்**

டல்ஹௌசி வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் மூலமாக அவத்தையும் ஜான்சியையும் இணைத்ததும், கடைசி பேஷ்வாவின் சுவீகார மகனான நானா சாகிபை அவமானகரமாக நடத்தியதும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தின. முறையான உரிமம் இல்லாமல், குத்தகை இல்லாத நிலங்களை வைத்திருப்போர் பற்றி விசாரிக்க பம்பாய் அரசு அமைத்த இனாம் கமிஷனின் (1852) அறிக்கையின்படி 21,000க்கும் மேற்பட்ட தோட்டங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இணைக்கப்பட்ட பகுதிகளில் குறிப்பாக அவத்தில் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகள் தாலுக்தாரின் நலன்களுக்குப் பாதகமாக அமைந்ததால் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகத் திரும்பினர். மேலும் அவத்தில் அரச குடும்பத்தின் ஆதரவை நம்பியிருந்த ஆயிரக் கணக்கான மக்களும், விலையுயர்ந்த ஆடைகள், அலங்கரிக்கப்பட்ட காலணிகள், அதிக விலையுள்ள நகைகள் ஆகியவற்றைத் தயாரிப்போரும் வாழ்விழந்தனர். இவ்வாறு டல்ஹௌசி தன்னுடைய விரிவாக்கக் கொள்கையின் மூலமாக பெருவாரியான மக்களுக்குத் துன்பத்தை விளைவித்தார்.

**அநியாயமான நிலவருவாய் முறை**

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட நிலவருவாய் ஏற்பாடுகளில் இருந்ததைக் காட்டிலும் தற்போது நிலவரி மிக அதிகமாக இருந்தது. ஆங்கிலேயருக்கு முன்னர் இருந்த இந்திய அரசுகள் விளைந்த நிலங்களுக்கு மட்டுமே வரி வசூலித்தனர். ஆங்கிலேயர் நிலவருவாயை வரியாகக் கருதாமல் வாடகையாகக் கருதினர். இதன்படி நிலத்தில் விவசாயம் செய்தாலும் செய்யாவிட்டாலும் அதே அளவு வரி வசூலிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் விவசாயப் பண்டங்களின் விலைகள் கடுமையாக வீழ்ச்சியுற்றன. காலனியரசு கடனைக் குறைக்கவோ நிவாரணம் வழங்கவோ முன்வராத சூழலில் சிறு விவசாயிகளும் குத்தகைதாரர்களும் சொல்லொணாத் துயரங்குளுக்கு உள்ளாயினர்.

**முஸ்லீம் உயர்குடியினரும் கற்றறிந்தோரும் அந்நியமாதல்**

முஸ்லீம்கள் பெரும்பாலும் அரசுப் பணிகளையே சார்ந்திருந்தனர். கம்பெனியின் ஆட்சிக்கு முன்னர் முந்தைய அரசகளில் மதிப்புமிகுந்த பணிகளில் அவர்கள் பணியமர்த்தப்பட்டிருந்தனர். குதிரைப்படைத் தளபதிகளாகச் சிலர் உயர்ந்த ஊதியம் பெற்று வந்தனர். ஆனால் கம்பெனியின் ஆட்சியில் அவர்கள் துயரத்திற்கு ஆளாயினர். ஆங்கில மொழியும் மேலைக்கல்வியும் முஸ்லீம் அறிவுஜீவிகளை முக்கியமற்றவர்களாக ஆக்கியது. நீதிமன்றங்களில் பொதுப்பணித் தேர்வுகளில் பாரசீக மொழியின் பயன்பாடு ஒழிக்கப்பட்டது அரசுப் பணியில் முஸ்லீம்கள் சேர்வதற்கான வாய்ப்புகளைக் குறைத்தது.

**மத உணர்வுகள்**

1856ஆம் ஆண்டு சட்டமானது வங்காளப் படையில் உயர் ஜாதியினரும் சேர்ந்துகொள்ள வழிவகை செய்தது. சாதிப்பற்றை, கைவிட்டு அவர்கள் படைகளில் சேரவேண்டும் அல்லது இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி முன்னேறும் வாய்ப்பைக் கைவிட வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது. மேலும் சதிஒழிப்புச் சட்டம், விதவை மறுமணத்தை சட்டபூர்வமாக்கியது, பெண் குழந்தைகள் கொல்லப்படுவதற்கு எதிரான சட்டம் ஆகியவை சமய நம்பிக்கைகளில் ஆங்கில அரசு தலையிடுவதாகக் கருதப்பட்டது. 1850இல் இயற்றப்பட்ட லெக்ஸ் லோசி (Lex Loci Act) சட்டம் கிறித்தவர்களாக மதம் மாறியவர்களுக்கும் மூதாதையரின் சொத்துக்களில் உரிய பங்கினைப் பெறும் உரிமையை அளித்தது. இது வைதீக இந்துக்களிடையே வெறுப்பை ஏற்படுத்தியது.

மேலும் துப்பாக்கித் தோட்டாக்களில் பசுவின் கொழுப்பும் பன்றியின் கொழுப்பும் தடவப்பட்டுள்ளது. என்ற செய்தி பரவியபோது இந்து முஸ்லீம் படைவீரர்களின் மத உணர்வுகள் புண்பட்டன. இத்தோட்டாக்களை புதிதாக அறிமுகமான என்பீல்டு துப்பாக்கிகளுக்குள் செலுத்துவதற்கு முன்பாக அதைப் படை வீரர்கள் கடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. இது கிறித்துவ மதத்திற்கு மாற்றம் செய்யும் முயற்சியாக கருதப்பட்டது.

ஆகவே அனைத்து விதத்திலும் 1857 ஆம் ஆண்டு, பெருங்கிளர்ச்சி கனிந்த ஆண்டாகும். கொழுப்பு தடவிய தோட்டா பிரச்சனை கிளர்ச்சி எனும் வெடிமருந்தில் வைக்கப்பட்ட தீப்பொறியாகும். பதவி பறிக்கப்பட்ட அதிருப்தி கொண்ட ராஜாக்கள், ராணிகள், ஜமீன்தார்கள், குத்தகைதாரர்கள் கைவினைஞர்கள், தொழிலாளர்கள், முஸ்லீம் அறிவு ஜீவிகள், இந்து பண்டிதர்கள், குருமார்கள் ஆகிய அனைவரும் இவ்வெழுச்சியைத் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பாகக் கருதினர்.

**பெருங்கிளர்ச்சியின் போக்கு**

இப்பெருங் கிளர்ச்சி கல்கத்தாவுக்கு அருகேயுள்ள பரக்பூரில் இராணுவக் கலகமாகவே தொடங்கியது. மங்கள் பாண்டே தனது இராணுவ மேலதிகாரியை சுட்டுக் கொன்றார். தொடர்ந்து அங்கு இராணுவக் கலகம் வெடித்தது. அடுத்த மாதம் மீரட் நகரில் தோட்டாக்களைப் பெற வேண்டிய 90 வீரர்களில் ஐவர் மட்டுமே உத்தரவுக்கு அடிபணிந்தனர். மே மாதம் 10 ஆம் நாளில் மூன்று ரெஜிமெண்டுகளைச் சேர்ந்த சிப்பாய்கள் கிளர்ச்சியில் இறங்கி தங்கள் உயர் அதிகாரிகளைக் கொன்று, சிறையில் அடைக்கப்பட்டிருந்த வீரர்களை விடுதலை செய்தனர். மறுநாள் தில்லியை அடைந்த அவர்கள் ஐரோப்பியர் பலரைக் கொன்று

நகரைக் கைப்பற்றினர் கிளர்ச்சியாளர்கள் இரண்டாம் பகதூர்ஷாவை பேரரசராகப் பிரகடனம் செய்தனர்.

ஜூன் மாதத்தில் கிளர்ச்சி ரோகில்கண்ட் பகுதிக்குப் பரவியது. ஒட்டுமொத்த கிராமப்புறமும் கிளர்ச்சியில் ஈடுபட்டது. கான் பகதூர் கான் தன்னைப் பெரரசருடைய வைஸ்ராயாக அறிவித்துக் கொண்டார். புந்தேல்கண்ட் பகுதியும் ஆற்றிடைப்பகுதி முழுவதும் ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்தியது. ஜான்சியில் ஐரோப்பியர் கொல்லப்பட்டு 22 வயதான லட்சுமிபாய் அரியணை ஏற்றப்பட்டார். கான்பூரில் நானா சாகிப் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். பெண்களும் குழந்தைகளும் உட்பட சுமார் 125 ஆங்கிலேயர்களும் ஆங்கில அதிகாரிகளும் கொல்லப்பட்டு அவர்களது உடல்கள் ஒரு கிணற்றுக்குள் வீசப்பட்டன. கான்பூர் படுகொலை என்றறியப்பட்ட இந்நிகழ்வு ஆங்கிலேயரைக் கோபம் கொள்ளச் செய்தது. நிலைமைகளை எதிர்கொள்ள அனுப்பப்பட்ட தளபதி ஹென்றி ஹேவ்லக் படுகொலைக்கு மறுநாளே நானா சாகிப்பைத் தோற்கடித்தார். ஆங்கில இராணுவ அதிகாரி நீல் கொடூரமான பழிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டார். படுகொலைக்குக் காரணமானவர்கள் எனக் கருதப்பட்டோர் அனைவரும் கொல்லப்பட்டனர். நவம்பர் மாத இறுதியில் தாந்தியா தோபே கான்பூரைக் கைப்பற்றினார். ஆனால் அது விரைவில் காம்ப்பெல் என்பவரால் மீட்கப்பட்டது.

ஹென்றி லாரன்சால் பாதுகாக்கப்பட்ட லக்னோ ஆளுநர் மாளிகை கிளர்ச்சியாளர்களின் வசமானது. நானா சாகிப்பை ஹேவ்லக் தோற்கடித்த பின்னர் லக்னோவைக் கைப்பற்ற விரைந்தார். ஆனால் அவர் திரும்ப நேர்ந்தது. ஜூலை மாத இறுதியில் ஜான் லாரன்ஸால் தில்லிக்கு அனுப்பப்பட்ட ஜான் நிக்கல்சன் அதைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றார். முகலாயப் பேரரசர் இரண்டாம் பகதூர்ஷா சிறைக் கைதியானார். அவருடைய இரண்டு மகன்களும் பேரனும் சரணடைந்த பின் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அவத்தில் மட்டும் தாலுக்தார்களும் விவசாயிகளுடன் பங்கு கொண்டதால் கிளர்ச்சி நீடித்தது. தாலுக்தார்களில் பலர் அவத் நவாபின் விசுவாசிகளாவர். ஆகவே அவர்கள் லக்னோவில் பேகம் ஹஸ்ரத் மஹாலோடு (நவாப் வஜித் அலியின் மனைவி) சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்தனர். பெரும்பாலான வீரர்கள் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். ஆதலால் விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது இவர்களும் பாதிப்புக்குள்ளாயினர். நீண்ட காலத்திற்கு வங்காளப்படைகளுக்கு அவத் நாற்றங்காலாக இருந்தது. அவத்தை சேர்ந்த வீரர்கள் குறைந்த ஊதியம் குறித்தும் விடுமுறை பெறுவதிலுள்ள இடர்ப்பாடுகள் பற்றியும் புகார் செய்தனர். அவர்கள் அனைவரும் பேகம் ஹஸ்ரத் மஹாலின் பின் அணி திரண்டனர். ராஜா ஜெய்லால் சிங்கின் தலைமையில் அவர்கள் ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு லக்னோவைக் கைப்பற்றினர். ஹஸ்ரத் மஹால் தன் மகன் பிர்ஜிஸ் கத்ராவை அவத்தின் அரசராக அறிவித்தார். கான்பூரில் பழிதீர்த்துக் கொண்ட நீல் லக்னோவில் தெருச் சண்டையில் சுட்டுக் கொல்லப்பட்டார். 1858 மார்ச் மாதத்தில்தான் லக்னோவை ஆங்கிலேயரால் கைப்பற்ற முடிந்தது.

| |
|---|
| சென்னை மௌன்ட் ரோட்டில் வைக்கப்பட்டிருந்த நீல் சிலை இந்திய தேசியவாதிகளைக் கோபம் கொள்ளச் செய்தது. அதை அப்புறப்படுத்த காங்கிரஸ் சத்தியாக்கிரகம் செய்தது. ராஜாஜியின் காங்கிரஸ் அமைச்சரவை (1937-39) இச்சிலையை அகற்றி சென்னை அருங்காட்சியகத்தில் வைத்தது. |

ஹக் ரோஸ் ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் ஜான்சியை முற்றுகையிட்டு தாந்தியா தோபேயைத் தோற்கடித்தார். இருந்தபோதிலும் லட்சுமிபாய் துணிச்சலுடன் போரிட்டு குவாலியரைக் கைப்பற்றினார். ஆங்கிலேயருக்கு ஆதரவான குவாலியர் அரசர் சிந்தியா தப்பியோடினார். ரோஸ் தன்னுடைய படைகளோடு லட்சுமிபாயுடன் நேரடியாக மோதினார். வியப்பூட்டும் வகையில் லட்சுமிபாய் போரில் பங்கேற்று வீரமரணமடைந்தார். கிளர்ச்சியாளர்களில் லட்சுமிபாய் மிகச் சிறந்த தைரியம் மிக்க தலைவரென லட்சுமிபாயைப் பற்றி ரோஸ் குறிப்பிட்டுள்ளார்.

குவாலியர் விரைவில் மீட்கப்பட்டது. 1858இல் கானிங் இராணுவப் புரட்சி ஒடுக்கப்பட்டு அமைதி மீட்கப்பட்டதாக அறிவித்தார் தாந்தியா தோபே கைது செய்யப்பட்டு 1858 ஏப்ரல் மாதம் கொல்லப்பட்டார்.

இரண்டாம் பகதூர்ஷா செப்டம்பர் 1857இல் கைது செய்யப்பட்டு குற்றவாளி என அறிவிக்கப்பட்டு ரங்கூனுக்கு (மியான்மர்) நாடு கடத்தப்பட்டார். அங்கேயே அவர் நவம்பர் 1862 இல் தனது 87வது வயதில் மரணமடைந்தார். அவருடைய இறப்போடு முகலாய அரசவம்சம் முடிவுக்கு வந்தது.

**பெருங்கிளர்ச்சியின் விளைவுகள்**

அலகாபாத்தில் 1858 நவம்பர் 1இல் அரசு தர்பார் கூட்டப்பட்டது. விக்டோரியா ராணி வெளியிட்ட பிரகடனம் தர்பார் மண்டபத்தில் கானிங்பிரபுவால் வாசிக்கப்பட்டது. அவரே இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலும் முதல் வைஸ்ராயுமாவார்.

- இதன் பின்னர் இந்தியா ஆங்கிலேய முடியரசின் பெயரால் அரசுச் செயலர் மூலம ஆளப்படும். பதினைந்து உறுப்பினர்களைக் கொண்ட இந்தியா கவுன்சில் எனும் அமைப்பு அரசு செயலருக்கு உதவி செய்யும். இதன் விளைவாகக் கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர் குழுவும், கட்டுப்பாட்டுக் குழுவும் ஒழிக்கப்பட்டன. ஆங்கிலேய முடியரசும் நாடாளுமன்றமும் அரசியல் அமைப்பின் அடிப்படையில் இந்தியாவை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொள்வர். கிழக்கிந்தியக் கம்பெனியின் படை கலைக்கப்பட்டு இங்கிலாந்து அரசின் படைகளோடு இணைக்கப்படும்.
- ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய அரசர்களோடு மேற்கொண்ட உடன்படிக்கைகளை இப்பிரகடனம் ஏற்றுக் கொண்டது. அவர்களின் உரிமைகளையும் கண்ணியத்தையும் கௌரவத்தையும் மதிப்பதாகவும் உறுதியளித்தது. மேலும் இந்தியாவில் உள்ள ஆங்கிலேயருக்குச் சொந்தமான பகுதிகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கம் இல்லை எனவும் அறிவித்தது.
- 1853 ஆம் ஆண்டு சட்டமன்றம் ஐரோப்பியர்களை மட்டுமே உறுப்பினர்களாக கொண்டிருந்ததால் அவர்கள் இந்தியரின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள அக்கறை இல்லாமல் இருந்ததே இச்சிக்கலுக்கு காரணம் என்று கூறிய அறிக்கை 1861இல் அமைக்கப்படும் சட்ட மன்றத்தில் இந்தியப் பிரதிநிதிகள் நியமிக்கப்படுவர் எனக் கூறியது.
- வாரிசு உரிமை இழப்புக் கொள்கையும் கைவிடப்படும். ஆங்கிலேயரை நேரடியாகக் கொன்ற கிளர்ச்சியாளர்களைத் தவிர மீதமுள்ள கிளர்ச்சியாளர் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும்.
- கல்வி, பொதுப்பணித் திட்டங்கள் (சாலைகள் இருப்புப்பாதை, தந்தி, நீர்ப்பாசனம்) ஆகியவை முடுக்கிவிடப்படும்.
- கடந்த காலம் மீண்டும் வரும் எனும் நம்பிக்கை மங்கியது. இந்தியச் சமூகத்தின் மரபுசார்ந்த கட்டமைப்பு உடையத் துவங்கியது. மேற்கத்தியமயமான ஆங்கிலக் கல்வி பயின்ற நடுத்தர வர்க்கம் தேசிய சிந்தனைகளோடு உருவானது.

10ம் வகுப்பு

# 9. தமிழ்நாட்டில் விடுதலைப் போராட்டம்

**அறிமுகம்:**

காலனியாட்சியை எதிர்ப்பதில் தமிழ்நாடு முன்னோடியாகத் தகிழ்ந்தது. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிலேயே பாளையக்காரர்கள், தமிழ்நாட்டில் தங்கள் அரசியல் ஆதிக்கத்தை நிறுவயமுயன்ற ஆங்கிலேயர்களின் முயற்சிகளை எதிர்த்தனர். பாளையக்காரர்களின் தோல்விக்குப் பின்னரும் கூட 1806 இல் வேலூர் கோட்டையில் இந்திய வீரர்களும் அதிகாரிகளும் ஓர் எழுச்சியைத் திட்டமிட்டு நடத்தினர். அப்புரட்சி தென்னிந்தியாவின் பல இராணுவமுகாம்களிலும் எதிரொலித்தது. மேற்கத்திய கல்வி அறிமுகம் மற்றும் இறுதியில் தோன்றிய படித்த இந்திய நடுத்தர வர்கத்தின் தோற்றம் படித்த ஆகியவை ஆங்கிலேயருக்கு எதிரான போராட்த்ததை அரசமைப்புப் பாதையில் எடுத்து சென்றது. தமிழ்நாட்டில் நடைபெற்ற விடுதலைப் போராட்டம் தனித்தன்மை வாய்ந்ததாகும். ஏனெனில் தொடக்கத்திலிருந்தே அது ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டமாக மட்டுமல்லாமல், தீங்கினை விளைவிக்கும் சாதிமுறை ஏற்படுத்தியிருந்த சமூகத் தடைகளிலிருந்து விடுதலை பெறுவதற்குமான போராட்டமாகவும் அமைந்தது. இப்பாடத்தில் தமிழ்நாட்டில் வெவ்வேறு கருத்தியல்களைப் பின்பற்றிய தேசியவாதிகள் வகித்த பாத்திரத்தை நாம் அறிந்து கொள்வோம்.

**தமிழ்நாட்டில் தொடக்கால தேசிய அதிர்வுகள்:**

பத்தொன்பதம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சென்னையில் உருவான, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த, கல்விகற்ற நபர்களைக் கொண்ட குழுக்கள் பொதுவிஷயங்களில் அக்கறை செலுத்தா் தொடங்கின. இந்தியவின் ஏனைய பகுதிகளில் நடந்ததைப் போலவே இவர்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க சென்னைவாசிகள் சங்கம், செ்னனை மகாஜன சங்கம் எனும் அரசியல் சார்ந்த அமைப்புகளை ஏற்படுத்தினர்.

**(அ)சென்னைவாசிகள் சங்கம்:**

சென்னைவாசிகள் சங்கம் (Madras native Association – (MNA)), தென்னிந்தியாவில், தொடங்கப்பெற்ற காலத்தால் முற்பட்ட அமைப்பான இவ்வமைப்பு தனிபட்ட குழுக்களின் விருப்பங்களைக் காட்டிலும் பொதுமக்களின் தேவைகளை அனைவருக்கும் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவானது. இவ்வமைப்பு 1852இல் கஜுலு லட்சுமிநரசு, சீனிவாகனார் மற்றும் அவர்களின் சேர்ந்தோர்களாலும் நிறுவப் பெற்றது. இவ்வமைப்பில் வணிகர்களே அதிக எண்ணிக்கையில் அங்கம் வகித்தனர். தனது உறுப்பினர்களின் நலன்களை முன்னெடுப்பது, வரிகளைக் குறைக்க கோரிக்கை வைப்பது போன்ற நோக்கங்களை இவ்வமைப்பு உள்ளடக்கி இருந்தது. மேலும் கிறித்தவ சமயப்பரப்பாளர்களின் செயல்பாடுகளுக்கு அரசு ஆதரவளித்ததை எதிர்த்தனர். மக்களின் நிலை அவர்களின் தேவைகள் ஆகியவற்றின் மீது அரசின் கவனத்தை திருப்பும் பணியை இவ்வமைப்பு மேற்கொண்டது. வருவாய்த்துறை அதிகாரிகளால் விவாசாயிகள் சித்திரவதைப்படுத்தப்டுவதற்கு எதிராக இவ்வமைப்பு (MNA) நடத்திய போராட்டம் முக்கியமான பங்களிப்பாகும். இவ்வமைப்பு மேற்கொண்ட முயற்சிகளால் சித்திரவதை ஆரணயம் (Torture Commission) நிறுவப்பட்டது. அதன் விளைவாகச் சித்தரவதை முறைகள் மூலம் கட்டாய வரிவசூல் முறையை நியாப்படுத்திய சித்திவதைச் சட்டம் (Torture Act) ஒழிக்கப்பட்டது. இருந்தபோதிலும் இவ்வமைப்பு 1862க்குப் பின்னர் செயலிழந்து இல்லாமாலானது.

**(ஆ) தேசியவாதப் பத்திரிகைகளின் தொடக்கங்கள்: தி இந்து மற்றும் சுதேசமித்திரன்:**

T.முத்துசாமி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதியாக 1877இல் நியமிக்கப்பட்டது சென்னை மாகாணத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஒரு இந்தியர் நீதிபதியாக பணியமர்த்தப்பட்டதை சென்னையைச் சேர்ந்த அனைத்து பத்துரிகைகளும் விமர்சனம் செய்தன. எதிர்ப்பு தெரிவித்த அனைத்துப் பத்திரிகைகளும்

ஐரோப்பியர்களால் நடத்தப்படுவதை கல்விகற்ற இளைஞர்கள் உணர்ந்தனர். இது குறித்து இந்தியரின் எண்ணங்களை வெளிப்படுத்த ஒரு செய்திப் பத்திரிக்கை தேவை என்பது உணரபப்பட்டது. G. சுப்பிரமணியம், ஆ. வீராகவாச்சாரி மற்றும் இவர்களின் 1878இல் அவவிதழ் நாளிதழாக மாறியது. தி இந்து, சுதேசமித்திரன் ஆகிய பத்திரிகைகள் தொடங்கப்பட்டது. இந்தியன் பேட்ரியாட் (Indian Patriot) சவுத் இந்தியன் மெயில் (South Indian Mail), மெட்ராஸ் ஸ்டாண்டர்ட் (Madras Standard), தேசபிமானி, விஜயா, சூர்யோதயம், இந்தியா போன்ற உள்நாட்டு பத்திரிகைகள் தொடங்கப்படுவதற்கு ஊக்கமளித்தது.

**(இ) சென்னை மகாஜன சபை:**

தென்னிந்தியவில் தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்கால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும். முதலாம் தலைமுறையைச் சேர்ந்த தேசியவாதிகளுக்கு இவ்வமைப்பு பியற்சிக் களமானது. 1884 மே 16இல் M. வீரராகவாச்சாரி,P. அனந்தாச்சார்லு இதன் செயர்பாடுகளில் பங்காற்றினார். அமைப்பின் உறுப்பினர்கள் குறிபிட்ட இடைவெளிகளில் ஒன்று கூடி தனிபட்ட விதத்திலுத் அறைக்கூட்டங்கள் நடத்தியும் பொதுபிரச்சனைகள் குறித்து விவாதித்து தங்கள் கருத்துகளை அரசுக்குத் தெரியப்படுத்தினர். மாகாணத்தில் பல பகுதிகளில் வாழும் மக்களிடையே பல பகுதிகளில் வாழும் மக்களிடைய பல்வேறு பொதுப்பிரச்சனைகள் குறித்த ஒருமித்த தெரியப்படுத்துவதே சென்னை மகாஜன சபையின் நோக்கமாக இருந்தது. குடிமைப் பணிகளுக்கான தேர்வுகள் இங்கிலாந்திலும் இந்தியவிலும் ஒரே சமயத்தில் நடத்தபட்ட வேண்டும். லண்டனிலுள்ள இந்திய கவுன்சிலை மூடுவது, வரிகளைக் குறைப்பது, இராணுவ குடியில் நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது ஆகியன இவ்வமைப்பின் கோரிக்ககைளாகும். இவ்வமைப்பின் பல கோரிக்கைகள் பின்னர் காங்கிரசின் கோரிக்ககைகளாயின.

**தமிழ்நாட்டின் முக்கிய தொடக்கால மிதவாத தேசியவாதிகள்:**

தொடக்கால தேசியவாதிகள் அரசமைப்பு வழிமுறைகளின் மீது நம்பிக்கை கொண்டிருந்தனர். அறைக்கூட்டங்கள் நடத்துவதும் பிராச்சனைகள் குறித்து ஆங்கிலத்தில் கலந்துரையாடுவதும் அவர்களின் செயர்பாடுகளாக இருந்தன. தங்கள் கண்ணோட்டங்களைப் பெருந்தன்மை வாய்ந்த மொழிநடையில் வேண்டுகேள்களாகவும் இருந்தன. தங்கள் கண்ணோட்டங்களைப் பொருந்தன்மை வாய்ந்த மொழிநடையில் வேண்கோள்களாகவும், மனுச்செய்தல். இறைஞ்சுதல், குறிப்பாணைகள் மூலமாக அரசுக்கு அவர்கள் சமர்ப்பித்து அரசு அமைத்த பல விசாரணைக் குழுக்களில் காணமுடிகின்றது. வங்கப் பிரிவினையின் போது திலகரும் ஏனைய தலைவர்களும் பெருவாரியான மக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்களை நடத்தியதாலும் மக்களை ஈடுபடச்செய்வதற்காக வட்டாரமெழியைப் பயன்படுத்தியதாலும் தொடக்கால தேசியவாதிகள் மிதவாதிகளென அழைக்கப்படலாயினர். சென்னையைச் சேர்ந்த புகழபெற்ற தழிழ்நாட்டு மிதவாதத் தலைவர்கள் V.S. சீனிவாச சாஸ்திரி, P.S. சிவகாமி,V. கிருஷ்ணசாமி, வுசு வெங்கட்ராமனார்,G.Aநடேசன்,T.M மாதவராவ் மற்றும் S. சுப்பிரமணியனார் ஆகியோராவர். ஆங்கிலேயர்கள் தங்களை தாராளமானவர்கள் என உரிமை கொண்டாடியதில் உள்ள தவறுகளை அமல்படுத்தியதே மிதவாதிகள் செய்த முக்கியப் பங்களிகப்பாகும். ஆங்கிலேயர் எவ்வாறு இந்தியாவைச் சுரண்டினாரக்ள் என்பதை அமல்படுத்தினர். இங்கிலாந்தில் ஜனநாயக் கொள்கைகளைப் பின்பற்றும் ஆங்கிலேயர் காரனிகளில் பிராதிநிதித்துவமற்ற அரசை எவ்வாறு திணித்து நாடகமாடுகின்றனர் என்பதையும் வெட்டவெளிச்சம் ஆக்கினர்.

**(ஈ) மிதவாதக்க கட்டம்:**

சென்னை மகாஜன சபை போன்ற மாகாண அமைப்புகள் அகிலஇந்திய அளவிலான அமைப்பபுகள் நிறுவப்படுவதற்கு வழிபோலியது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ் உருவாக்கப்படுவதற்கு முன்பாக பல கூட்டங்களில் கலந்து கொண்டனர். அவ்வாறான ஒரு கூட்டம் 1884 டிசம்பரில் பிரம்மஞான சபையில் கூடியது. தாதாபாய் நௌரோஜி,K.T. தெலாங், சுரேந்திரநாத் பானர்ஜி மற்றும் சில முக்கியத் தலைவர்களுடன், சென்னையிலிருந்து G. சுப்பிரமணியம்,P. ரங்கையா,P. அனநந்தாச்சார்லு போன்றோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய தேசிய காங்கிரசின் முதற்கூட்டம் 1885இல் பம்பாயில் நடைபெற்றது. மொத்தம் கலந்து கொண்ட 72 பிரதிநிகளில் 22 பிரதிநிகள் சென்னையைச் சேர்ந்தோராவர். G.

சுப்பிரமணியம் தனது எழுத்துக்களின் மூலமாக தேசியத்தை முன்னெடுத்தவர் ஆவார். இந்திய பொருளாதாரரீதியாக ஆங்கிலேயரகளால் சுரண்டப்படுவதைப் புரிந்துகொள்ள அவர் செய்த பங்களிப்புகள் அவர் நௌரோஜி மற்றும் கோகலே ஆகியோருக்கு இணையானவராவர்.

இந்திய தேசிய காங்கிரசின் இரண்டாவது மாநாடு 1866இல் கல்கத்தாவித் தாதாபாய் நௌரோஜியின் தலைமையில் நடைபெற்றது. காங்கிரசின் மூன்றாவது மாநாடு பத்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் 1887இல் சென்னையில் இன்று ஆயிரம் விளக்கு என்று அழைக்கப்படுகிற மக்கிஸ் தோட்டதில் (Makkies Garden) நடைபெற்றது. கலந்து கொண்ட 607 அகில இந்தியப் பிரதிநிதிகள் 362 பிரதிநிதிகள் சென்னை மாகாணத்தைப் சேர்ந்தவர்கள் ஆவர்.

தமிழ்நாடு அன்றைய சென்னை மாகாணத்தில் ஒரு பகுதியாக இருந்து. சென்னை மாகாணம் என்பது இன்றைய ஆந்திரப் பிரதேசத்தின் பெரும் பகுதிகளையும் (கடற்கரை மாவட்டங்கள் மற்றும் ராயரலசீமா) கர்நாடகாவையும் (பெங்களூரு, பெல்லாரழ, தெற்கு கனரா) கேரளாவையும் (மலபார்) மற்றம் ஒடிசாவின் (கஞ்கம்) சிலபகுதியையும் உள்ளடக்கியாக இருந்தது.

**சுதேசி இயக்கம்:**

வங்கப் பிரிவினை (1905) சுதேசி இயக்கத்திக்கு இட்டுச் சென்று விடுதலைப் போராட்டத்தின் போக்கை மாற்றியமைத்தது. இந்தியவின் பல பகுதிகளில் குறிகப்பாப வங்காளம், பஞ்சாப் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய பகுதிகளில் புகழ்பெற்ற தலைவர்கள் தோன்றினர். கல்கத்தா காங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட திட்டத்தின்படி சுதேசி நிறுவனங்களை ஊக்குவித்தல், அந்நியப் பண்டங்களைக் புகங்கணித்தல், தேசியக் கல்வியை முன்னெடுத்தல் ஆகியவற்றை அவர்கள் நடைமுறைகப்படுத்தனர். சுதேசி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்ப்டுத்தியது. அந்நியப் பண்டங்களைப் புறக்கணத்தல் தொடர்பாக காங்கிரஸ் தீவிரமான இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

**(அ) தமிழ்நாட்டின் எதிர்வினை:**

T. C. சிதம்பரனார்,V. சர்க்கரையார், சுப்பிரமணிய பாரதி, சுரேந்திரநாத் ஆரியா ஆகியோர் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிறந்த தலைவர்களாவர். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கலந்து கொண்ட பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. மக்களைத் திரட்டுவதற்கு முதன்முதலாக தமிழ் பயன்படுத்தப்பட்டது. மக்களின் நாட்டுப்பற்று உணர்வுகளைத் தட்டி எழுப்பியதில் சுப்பிரமணிய பாரதியின் தேசபக்திப் பாடல்கள் மிக முக்கியமானவையாகும். சுதேசி கருத்துகளைப் பரப்புரை செய்ய பல இதழ்கள் தோன்றின. சுதேசமித்திரன், இந்திய ஆகிய இரண்டும் முக்கிய இதழ்களாகும். தீவிர தேசியவாதத் தலைவரான பிபின் சந்திரபால் சென்னையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது ஆற்றிய சொற்பொழிவுகள் இளைஞர்களை கவர்ந்தன. சுதேசி இயக்கத்தில் மாணவர்களும் இளைஞர்களும் பெருமளவில் பங்கேற்றனர்.

**சுதேசி நீராவி கப்பல் நிறுவனம்:**

சுதேசியின் செயல்பாடுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட துணிகரமான நடவடிக்கைகளில் ஒன்று யாதெனில் தூத்துகுடியில் T.C. சிதம்பரனாரால் தொடங்கப்பட்ட சுதேசி நீராவி கப்பல் நிறுவனம் ஆகும். இவர் காவியா மற்றும் லாவோ எனும் இரு கப்பல்களை விலைக்கு வாறங்கி அவற்றை தூத்துக்குடிக்கும் கொழும்புக்குமிடையே ஓட்டினார். இருந்தபோதிலும் ஐரோப்பியக் கம்பெனியின் முறையற்ற கழுத்தறுப்பு போட்டியினாலும் அரசாங்கத்தின் ஒரு தலைப்பட்சமான போக்கினாலும் வ.உ.சி. யின் முயற்கிகள் தோல்வியில் முடிந்தன.

**திருநெல்வேலி எழுச்சி:**

திருநெல்வேலியியலும் தூத்துக்குடியிலும் நூற்பாலைத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் வ.உ.சி., சுப்பிராமணிய சிவாவின் தோளோடுதோளட நின்றார். இவர் 1908 இல் ஐரேப்பியருக்குச் சொந்தமான கோரல் நூற்பாலையில் நடைபெற்ற வேலை நிறுத்ததிற்க்குத் தலைமையேற்றார். இந்நிகழ்வு நடைபெற்ற அதே சமயத்தில் பிபின் சந்திரபால் விடுதலை செய்யபபட்டார். பிபின் விடுதலை செய்யப்பட்டதைக் கொண்டுவதற்காகப் பொதுக்கூட்டம்

ஏற்பாடு செய்ததற்காக வ.உ.வியும் சிவாவும் கைது செய்யப்பட்டனர். தலைவர்கள் இருவருத் அரசதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டனர். தொடக்கத்தில் வ.உ.சிக்கு கொடுமையான வகையில் இரண்டு ஆயுள் தண்டனைகள் வழங்கப்பட்டன. மக்கள் செல்வாக்கு பெற்ற இவ்விரு தலைவர்களும் கைது செய்யப்பட்டது செய்தி பரவியதில் திருநெல்வேலியில் கலகம் வெடித்தது. காவல்நிலைய, நீதிமன்ற, நகராட்சி அலுவலகக் கட்டங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. காவலர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நான்கு நபர்கள் கொல்லப்பட்டனர். சிறையில் வ.உ.சி கடுமையாக நடத்தப்பட்டதோடு செக்கிழுக்க வைக்கப்பட்டார். கைது செய்யப்பட்ட வேண்டியவர்களில் G.சுப்பிமணியர், சுரேந்திரநாத் ஆர்யா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். சிறைத்தண்டனையைத் தவிர்ப்பதற்காக சுப்பிரமணிய பாரதி பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்திலிருந்த பாண்டிச்சேரிக்கு இடம்பெயர்ந்தனர். பாரதியின் முன்னுதாரணத்தை அரவிந்தகோஷ் V.V. சுப்பிரமணியனார் போன்ற தேசியவாதிகளும் பின்பற்றினர் சுதேசி இயக்கத் தலைவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான அடக்குமுறை தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தை ஓர் முடிவுக்குக் கொண்டு வந்தது.

**(ஆ) தமிழ்நாட்டில் புரடட்சிகர தேசியவாதிகளின் செயல்பாடுகள்:**

ஏனைய இடங்களில் நடந்ததைப் போலவே சுதேசி இயக்கம் இளைஞர்களுக்கு எழுச்சியூட்டியது. தலைவர்கள் இல்லாத சூழலில் அவர்கள் புரட்சிகர தேசியவாதிகளுக்குப் பாண்டிச்சேரி பாதுகாப்பான புகலிடமாயிற்று. தமிழ்நாட்டை சேர்ந்த இப்புரட்சிகர தேசியவாதிகள் பலருக்குப் புரட்சிகர தேசியவாதிகள் பலருக்குப் புரட்சிகர நடவடிக்கைகள் குறித்த அறிமுகமும் பயிற்சியும் லண்டனிலிருந்த இந்தியா ஹவுஸ் (India House) என்ற இடத்திலும் பாரிசிலும் வழங்கப்பெற்றது. அவர்களில் முக்கியமானவர்கள் ஆீவு ஆச்சாரியா,V.V. சுப்ரமணியனார் மற்றும் T.S.S. ராஜன் ஆகியோராவர். அவர்கள் புரட்சிகர நூல்களை பாண்டிச்சேரியின் வழியாக சென்னையில் விநியோகம் செய்தனர். புரட்சிவாதச் செய்தித்தாள்களான இந்திய, வீஜயா, சூர்யோதயம் ஆகியன பாண்டிச்சேரியிரிருந்து வெளிவந்தன. சில புரட்சிவாத செய்தித்தாள்களும் பாரதியின் பாடல்களும் அரசுக்கு எதிரானதெனத் தடைசெய்யப்பட்டன. 1901இல் அரவிந்த கோஷ்,V.V. சுப்ரமணியனார் ஆகியோரின் வருகைக்குப் பின்னர் பாண்டிச்சேரியில் புரட்சிகர நடவடிக்கைகள் தீவிராமடைந்தன. இத்தகைய நடவடிக்கைகள் முதல் உலகப்போர் வெடிக்கின்றவரை தொடர்ந்தன.

**ஆஷ் கொலை:**

1904இல் நீலகண்ட பிராம்மச்சாரியும் வேறு சிலரும் பாரத மாதா சங்கம் எனும் ரகசிய அமைப்பை உருவாக்கினர். ஆங்கில அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் மக்களிடைய நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதன் இவ்வமைப்பால் உள்ளுணர்வு தூண்டப்பட்டார். அவர் 1911 ஜுன் 17 இல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E. ஆஷ் என்பவரை மணியாச்சி ரயில் சந்திரப்பில் சுட்டுக் கொன்றார். அதன் பின்னர் தன்னைத்தானே சுட்டு கொண்டார். மக்களிடமிருந்து பிரிந்துநின்ற இந்த இளம் புரட்சியாளர்கள் தேசபக்தி உடையவர்களாக இருந்தபோதிலும், மக்களை ஊக்கப்படுத்தவும் அணிதிரட்டவும் தவறிவிட்டனர்.

**அன்னிபெசன்ட் அம்மையாரும் தன்னாட்சி இயக்கமும்:**

தீவிர தேசியவாதிகளும் புரட்சிகர தேசியவாதிகளும் இரும்புக் கரம் கொண்டு அடக்கப்பட்ட நிலையில் மிதவாதி தேசியவாதிகள் சில அரசமைப்பு சீர்திருத்தங்கள் செய்யப்படலாம் என நம்பினர். இருந்தபோதிலும் மிண்டோ – மார்லி சீர்திருத்தங்கள் பொறுப்பாட்சியை வழங்கவில்லை என்பதால் அவர்கள் மனச்சோர்வடைந்தனர். இதன் பின்னரும் கூட மேலும் சில சீர்திருத்தங்களைப் பெறலாம் என்ற நம்பிக்கையில் காங்கிரஸ் ஆங்கிலேயரின் போர் முயற்சிகளுக்கு ஆதரவு நல்கியது.

இவ்வாறு தேசிய இயக்கம் தளர்வுற்று இருந்த நிலையில் பிரம்மஞான சபையின் தலைவரும், அயர்லாந்துப் பெண்மணியுமான அன்னிபெசன்ட் அயர்லாந்தின் தன்னாட்சி அமைப்புகளை அடியொற்றி தன்னாட்சி இயக்கத்தை முன்மொழிந்தார். 1916 இல் தன்னாட்சி

இயக்கத்தை (Home Rule League) தொடங்கிய அவர் அகில இந்திய அளவில் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கையை முன்னெடுத்துச் சென்றார். இச்செயல் திட்டத்தில் G.S. அருண்டேல்,B.P. வாடியா மற்றும் C.P. ராமசாமி ஆகியோர் அவருக்குத் துணை நின்றனர். இவர்கள் கோரிய தன்னாட்சி ஆங்கில அரசிடம் ஓரளவிற்கான விசுவாசத்தையே கொண்டிருந்ததாக அமைந்தது. தன்னுடைய திட்டத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்காக அன்னிபெசன்ட் நியூ இந்தியா (New India), காமன் வீல் (Commonweal) எனும் இரண்டு செய்தித்தாள்களைத் தொடங்கினார். “அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக இருப்பதைவிட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது” என கூறினார். 1910 ஆம் ஆண்டு பத்திரிகைச் சட்டத்தின்படி அன்னிபெசன்ட் பிணைத் தொகையாக பெருமளவு பணத்தைச் செலுத்தும்படி அறிவுறுத்தப்பட்டார். அன்னி பெசன்ட் “விடுதலை பெற இந்தியா எப்படித் துயருற்றது“ (How India wrought for Freedom') இந்தியா : ஒரு தேசம் (Indina : A Nation) எனும் இரண்டு புத்தகங்களையும் சுயாட்சி குறித்த துண்டுப்பிரசுரத்தையும் எழுதினார்.

பெரும் எண்ணிக்கையில் மாணவர்கள் இவ்வியக்கத்தில் சேர்ந்து தன்னாட்சி இயக்க வகுப்புகளில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அம்மாணவர்கள் சாரணர் இயக்கக் குழுக்களாகவும் (Scouts) தொண்டர் குழுக்களாகவும் மாற்றப்பட்டனர். அன்னிபெசன்ட்டும் அவருடன் பணியாற்றியோரும் பொதுமேடைகளில் பேசுவதும் எந்த ஒரு அரசியல் நடவடிக்கையில் ஈடுபடுவதும் தடை செய்யப்பட்டிருந்தது. 1917 இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு அன்னிபெசன்ட் தலைவராகத் தேர்வுசெய்யப்பட்டார். தன்னாட்சி இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்த இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்த B.P. வாடியா போன்றோர் தொழிற்சங்கங்களை உருவாக்கி தொழிலாளர் வர்க்கத்தை அணி திரட்டுவதில் முக்கியப் பங்காற்றினர். இத்தலைவர்கள் தொழிலாளர்கள் வேலை பார்க்கும் இடங்களிலுள்ள நிலைகளை மேம்படுத்தியதோடல்லாமல், தொழிலாளர்களை விடுதலைப் போராட்டத்தின் பகுதியாக மாற்றுவதிலும் வெற்றி பெற்றனர். இருந்தபோதிலும் காந்தியடிகள் தேசியத் தலைவராக எழுச்சி பெற்ற நிலையில் அன்னிபெசன்டும் தன்னாட்சி இயக்கங்களும் ஒளிமங்கின.

**பிராமணர் அல்லாதோர் இயக்கமும் காங்கிரசிற்கு சவாலும்:**

இதே சமயத்தில் சென்னை மாகாணத்தில் கல்வி வேகமாக வளர்ந்தது. கல்வியறிவு பெற்ற பிராமணர் அல்லாதோரின் எண்ணிக்கை அதிகமானது. மேலே விவாதிக்கப்பட்ட தீவிர அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகள் படித்த பிராமணரல்லாதவர்களை அரசியலில் ஈடுபடவைத்தது. பிராமணர்களின் மேலாதிக்கத்தில் இருந்த அரசுப் பணிகளிலும், தேர்வு செய்யப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதித்துவத்திலும், அரசு வாய்ப்புகளில் நிலவும் சமநிலையற்ற தன்மையும் சாதியப் பாகுபாடும் இருப்பது குறித்து அவர்கள் காங்கிரசிலும் பிராமணர்களே மிகப்பெரும் எண்ணிக்கையில் இருந்தனர்.

**தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்:**

பிராமணரல்லாதோர் தங்கள் நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தங்களை ஒரு அரசியல் அமைப்பாக அணிதிரட்டிக் கொண்டனர். 1912 இல் சென்னை திராவிடர் கழகம் (Madras Dravidian Association) உருவாக்கப் பெற்றது. அதன் செயலராக C. நடேசனார் செயலூக்கமிக்க வகையில் பங்காற்றினார். 1916 ஜுன் மாதத்தில் அவர் பிராமணர் அல்லாத மாணவர்களுக்காக “திராவிடர் சங்க தங்கும் விடுதி“யை நிறுவினார். மேலும் இக்காலப் பகுதியைச் சேர்ந்த இரு முக்கிய பிராமணர் அல்லாதோரின் தலைவர்களான T.M. நாயர்,P. தியாகராயர் ஆகிய இருவரிடையே நிலவிய கருத்து வேற்றுமையை சரிசெய்து இணக்கத்தை எற்படுத்தினார். இவ்விருவருமே தொடக்கத்தில் காங்கிரசில் அங்கம் வகித்தவர்களே காங்கிரஸ் அமைப்பினுள் பிராமணரல்லாதவர்கள் எவ்வாறு ஓரங்கட்டப்படுகிறார்கள் என்பதைப் பார்த்துத் தெளிவுபெற்றவர்களாவர். 1916 நவம்பர் 20 இல் P. தியாகராயர்,T.M. நாயர்,C. நடேசனார் ஆகியோர் தலைமையில் சுமார் முப்பது பிராமணரல்லாதவர்கள் சென்னை விக்டோரியா பொது அரங்கில் கூடினர். பிராமணரல்லாதோர்களின் நலன்களை மேம்படுத்துவதற்காகத் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் (South Indian Liberal Federation – SILF) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. அவர்கள் ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ்

(Justice– நீதி) தமிழில் திராவிடன், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா எனும் மூன்று செய்தித்தாள்களையும் தொடங்கினர். விரைவில் இவ்வமைப்பு நடத்திய ஆங்கில நாளிதழின் பெயரான ஜஸ்டிஸ் என்பதே அவ்வமைப்பின் பெயராகி ஜஸ்டிஸ் கட்சி (நீதிக்கட்சி) என அழைக்கப்படலாயிற்று. அமைப்புக்கான கிளைகளை உருவாக்கும் முகமாக மாகாணம் முழுவதிலும் ஜஸ்டிஸ் கட்சி பல மாநாடுகளை நடத்தியது.

**இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கை:**

நீதிக்கட்சி தனது நோக்கங்களை கோடிட்டுக் காட்டி பிராமணரல்லாதோரின் அறிக்கையை (Non-Brahmin Manifests) வெளியிட்டது. அவை: அரசுப் பணியிடங்களில் பிராமணரல்லாதோர்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் பிரதிநிதித்துவ அமைப்புகளில் இட ஒதுக்கீடு என்பனவாகும். இவ்வமைப்பு தன்னாட்சி இயக்கத்தைப் பிராமணர்களின் இக்கம் என எதிர்த்தது. தன்னாட்சி இயக்கம் பிராமணர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கக் கூடுமென அஞ்சியது. இது காங்கிரசையும் பிராமணர்களின் கட்சியென விமர்சித்தது. பாராளுமன்ற அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து 1917 இல் மாண்டேகுவின் அறிவிப்பைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அரசியல் விவாதங்கள் தீவிரமடைந்த நீதிக்கட்சி வகுப்புவாத பிரதிநதித்துவத்தைக் கோரியது (சமூகத்திலுள்ள பல்வேறு பிரிவினர்களுக்கும் பிரதிநிதித்துவம்). சென்னை அரசாங்கம் நீதிக் கட்சியை ஆதரித்தது. ஆங்கிலேயரின் ஆட்சி பிராமணர் அல்லாதோரின் முன்னேற்றத்திற்குத் துணைபுரியுமென நீதிக்கட்சி நம்பியது. 1919 ஆம் ஆண்டுச் சட்டம் பிராமணரல்லாதோர்களுக்குத் தேர்தலில் இடஒதுக்கீடு வழங்கியது. இந்நடவடிக்கையைக் காங்கிரஸ் கட்சி விமர்சனம் செய்தது ஆனால் நீதிக்கட்சியால் இது வரவேற்கப்பட்டது.

**நீதிக்கட்சி அமைச்சரவை:**

1920 இல் நடத்தப்பட்ட தேர்தல்களைக் காங்கிரஸ் புறக்கணித்தது. சட்டமன்றத்தில் மொத்தமிருந்த 98 இடங்களில் 63 இல் நீதிக்கட்சி வெற்றிபெற்றது. நீதிக்கட்சியின் A. சுப்பராயலு முதலாவது முதலமைச்சரானார். 1923இல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின்னர் நீதிக் கட்சியைச் சேர்ந்த பனகல் அரசர் அமைச்சரவையை அமைத்தார். பிராமணரல்லாதோரின் நலனுக்காக நீதிக் கட்சி பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியது. அவை வருமாறு: உள்ளாட்சித்துறைகளிலும் கல்வி நிலையங்களிலும் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு செய்யப்பட்டது. பணியாளர் தேர்வுக்குழு நிறுவப்பெற்றது. இது பின்னர் பொதுப் பணியாளர் தேர்வாணையமானது. இந்து சமய அறநிலையத்துறை சட்டமும் சென்னை அரசு தொழில் உதவிச் சட்டமும் இயற்றப்பட்டன. தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக் கொள்வதற்காகப் புறம்போக்கு நிலங்களை பட்டா செய்து வழங்கப்பட்டன. வசதியற்ற மக்கள் பிரிவினரிடையே கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காக கல்வி கட்டணச் சலுகை, கல்வி உதவித்தொகை வழங்குதல், மதிய உணவுத் திட்டம் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**அரசின் அடக்குமுறை நடவடிக்கைகள்**
**ரௌலட் சட்டம்:**

முதல் உலகப்போரில் முக்கியப் பங்களிப்பை செய்ததனால் (குறிப்பாக ஆங்கிலப் பேரரசுக்காக இந்திய வீரர்கள் தொலைதூரப் பகுதிகளில் போரிட்டனர்) இந்தியர்கள் ஆங்கில அரசிடமிருந்து மேலும் பல சீர்திருத்தங்களை எதிர்நோக்கினர். ஆனால் ஆங்கில அரசு 1919 இல் கொடூரமான குழப்பவாதி புரட்சிக் குற்றச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டத்தைப் பரிந்துரை செய்த குழுவினுடைய தலைவரின் பெயர் சர் சிட்னி ரௌலட் ஆவார். எனவே இச்சட்டம் பரவலாக ரௌலட்சட்டம் என அறியப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் முறையான நீதித்துறை சார்ந்த விசாரணைகள் இல்லாமலேயே யாரை வேண்டுமானாலும் பயங்கரவாதி எனக் குற்றம்சாட்டி அரசு சிறையில் அடைக்கலாம். இதைக் கண்டு இந்தியர்கள் திகிலடைந்தனர். மக்களின் கோபத்திற்குக் குரல்கொடுத்த காந்தியடிகள், தென்னாப்பிரிக்காவில் தான் பயன்படுத்திய போராட்ட வடிவமான சத்தியாகிரகத்தை மேற்கொண்டார்.

### ரௌலட் சத்தியாகிரகம்:

1919 மார்ச் 18 இல் மெரினா கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார். 1919 ஏப்ரல் 6இல் "கருப்புச் சட்டத்தை" எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்து தொடங்கிய ஊர்வலங்கள் மெரினா கடற்கரையில் ஒன்றிணைந்து பெரும் மக்கள் கூட்டமானது. அந்நாள் முழுவதும் உண்ணாவிரதமும் பிரார்த்தனைகளும் மேற்கொள்ளப்பட்டன. சென்னை சத்தியாகிரக சபை என்ற அமைப்பும் நிறுவப்பட்டது. ராஜாஜி, கஸ்தூரிரங்கர்,S. சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். தொழிலாளர்களுக்கென தனியாக நடத்தப்பட்ட கூட்டமொன்றில் V. கல்யாணசுந்தரம் (திரு.வி.க) B.P. வாடியா, வ.உ.சி. ஆகியோர் உரையாற்றினர். தொழிலாளர்களும், மாணவர்களும், பெண்களும் பெருவாரியான எண்ணிகையில் பங்கேற்றதே இவ்வியக்கத்தின் முக்கிய அம்சமாகும்.

**ஜார்ஜ் ஜோசப்:**
வழக்கறிஞரும் நன்கு சொற்பொழிவாற்றும் திறன் படைத்தவருமான ஜார்ஜ் ஜோசப் மதுரையில் தன்னாட்சி இயக்கத்தை ஏற்படுத்தியதிலும், அதன் நோக்கத்தை மக்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதிலும் முக்கியப் பங்குவகித்தார். செங்கண்ணூரில் (இன்றைய கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டம்) பிறந்திருந்தாலும் மதுரையில் வசிப்பதையே விரும்பி மக்களின் வழக்கறிஞராகப் பணி செய்தார். தனது நீண்ட பொது வாழ்வின் போது, அவர் கேரளாவில் வைக்கம் சத்தியாகிரகத்தை வழிநடத்தினார். ஏனெனில் இது இந்தியாவின் அனைத்து குடிமக்களுக்கும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்சினையாக அவர் கருதினார். தமிழ்நாட்டில் குற்றப் பரம்பரைச் சமூகங்களின் பாதுகாவலராக விளங்கினார். பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இவர் ஆற்றிய சேவையின் காரணமாக மதுரை மக்கள் இவரை "ரோசாப்பு துரை" என அன்புடன் அழைத்தனர். மதுரை தொழிலாளர் சங்கம் (Madurai Labour Union) (1918) எனும் அமைப்பை ஏற்படுத்துவதற்கு ஹார்வி மில் தொழிலாளர்களுக்கு உதவினார். இச்சங்கத்தின் தொடக்ககாலப் போராட்டங்கள் நூற்பாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வையும் வேலைநேரக் குறைப்பையும் பெற்றுத்தந்தன.

### கிலாபத் இயக்கம்:

ஜாலியன் வாலா பாக் படுகொலையைத் தொடர்ந்து அதற்குக் காரணமான ஜெனரல் டயர் அனைத்துக் குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுக்கப்பட்டதோடல்லாமல் அவருக்குப் பரிசுகளும் வெகுமதியும் வழங்கப்பட்டன. முதல் உலகப் போருக்குப் பின்னர் துருக்கியின் கலீபா அவமரியாதை செய்யப்பட்டதுடன் அவரது அனைத்து அதிகாரங்களும் பறிக்கப்பட்டன. கலீபா பதவியை மீட்பதற்காக கிலாபத் இயக்கம் தொடங்கப் பெற்றது. பெரும்பாலும் தேசிய இயக்கத்திலிருந்து ஒதுங்கி இருந்த முஸ்லீம்கள் தற்போது பெரும் எண்ணிக்கையில் பங்கேற்கத் தொடங்கினர். தமிழ்நாட்டில் 1920 ஏப்ரல் 17 இல் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இதைப்போன்ற ஒரு மாநாடு ஈரோட்டிலும் நடத்தப்படடது. வாணியம்பாடி, கிலாபத் எழுச்சி நடவடிக்கைகளின் முக்கிய மையமாகத் திகழ்ந்தது.

### ஒத்துழையாமை இயக்கம்:

ஒத்துழையாமை இயக்கத்தின் போது தமிழ்நாடு செயல்துடிப்புடன் விளங்கியது. ஊ. ராஜாஜியும் ஈ.வெ. ராமசாமியும் (ஈ.வெ.ரா பின்னர் பெரியார் என அழைக்கப்பட்டார்) தலைமையேற்று நடத்தினர். முஸ்லிம் லீக்கின் சென்னைக் கிளையை நிறுவிய யாகுப் ஹசன் என்பாருடன் ராஜாஜி நெருக்கமாகச் செயல்பட்டார். இதன் காரணமாக தமிழநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் போது இந்துக்களும் இஸ்லாமியரும் இணைந்து நெருக்கமாகச் செயல்பட்டனர். பொதுக்கூட்டங்களின் போது ஒழுங்கைப் பராமரிக்கவும் துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்யவும், கொடிகளை ஏந்திச் செல்லவும் காங்கிரஸ் தொண்டர்கள் அணி உருவாக்கப்பட்டது. அவர்களும் கள்ளுக்கடை மறியலில் முக்கியப் பங்காற்றினர்.

### வரிகொடா இயக்கமும் கள்ளுக்கடை மறியல் இயக்கமும்:

ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாக, பல இடங்களில் விவசாயிகள் வரிகொடுக்க மறுத்தனர். தஞ்சாவூரில் வரிகொடா இயக்கம் ஒன்று நடைபெற்றது. சட்டமன்றங்கள், பள்ளிகள் மற்றும் நீதிமன்றங்கள் ஆகியவை புறக்கணிக்கப்பட்டன. அந்நியப்பொருட்கள் புறக்கணிக்கப்பட்டன. பல பகுதிகளில் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் அதிக எண்ணிக்கையில் நடைபெற்றன அவற்றில் பல தேசியத் தலைவர்களால் வழிநடத்தப்பட்டது. தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கிய அம்சமாகத் திகழ்ந்தது கள்ளுக்கடைகளுக்கு எதிரான போராட்டங்களே. கள்ளுக்கடைகள் மறியல் செய்யப்பட்டன. மாகாணத்தின் அனைத்து பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்புகளும் ஏற்பாடு செய்யப்பட்டன. குற்றப்பரம்பரைச் சமூக சட்டத்திற்கு எதிராகவும் கிளர்ச்சிகள் நடைபெற்றன. 1921 நவம்பரில் சட்ட மறுப்பு இயக்கத்தைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. ராஜாஜி, சுப்பிரமணிய சாஸ்திரி,ஈ.வெ.ரா. ஆகியோர் கைது செய்யப்பட்டனர். 1922 ஜனவரி 13இல் வேல்ஸ் இளவரசரின் வருகை புறக்கணிக்கப்பட்டது. காவல்துறையின் அடக்குமுறையில் இருவர் கொல்லப்பட்டனர் பலர் காயமுற்றனர். 1922இல் சௌரி சௌரா நிகழ்வில் 22 காவலர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

**ஈ.வெ.ரா.வின் ஆக்கபூர்வச் செயல்பாடுகள்**

இக்காலகட்டத்தில் தமிழ்நாட்டு அரசியலில் ஈ.வெ.ரா. முக்கியப் பங்குவகித்தார். கதரின் பயன்பாட்டை மேம்படுத்தி அதன் விற்பனையை அதிகரிக்கத் தீவிரமாகச் செயல்பட்டார். கள்ளுண்பதற்கு தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் தனக்குச் சொந்தமான தோப்பிலிருந்த தென்னை மரங்கள் அனைத்தையும் வெட்டி வீழ்த்தினார். திருவாங்கூர் அரசின் ஆட்சியிலிருந்த வைக்கம் எனும் ஊரில் நடைபெற்ற கோவில் நுழைவுக்கான சத்தியாகிரகத்திலும் முக்கியப்பங்கு வகித்தார். கோவிலைச் சுற்றியுள்ள வீதிகள் ஒடுக்கப்பட்ட வகுப்புகளைச் சார்ந்த மக்கள் நடமாடக்கூட முடியாத அல்லது உயர் சாதி மக்களிடமிருந்து குறிப்பிட்ட தூரம் விலகியே நின்றாக வேண்டிய காலகட்டமது. கேரளாவின் முக்கியத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் ஈ.வெ.ரா. அங்கு சென்று அவ்வியக்கத்திற்குப் புத்துயிர் ஊட்டினார். அவர் கைது செய்யப்பட்டு ஒரு மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. விடுதலை செய்யப்பட்ட பின்னரும் வைக்கத்தை விட்டு வெளியேற மறுத்தார். எழுச்சியூட்டும் விதத்தில் உரைகள் நிகழ்த்தியதற்காக இரண்டாவது முறையாகக் கைது செய்யப்பட்டு ஆறுமாதகால கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. விடுதலையாகி ஈரோடு திரும்பியபோது கதர் விற்பனையை முன்னேற்றுவது குறித்து பேசியதற்காகக் கைது செய்யப்பட்டார். 1925 ஜுன் மாதத்தில் வைக்கத்தில் கோவிலைச் சுற்றியிருந்த வீதிகளில் விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது. சாதிப் பாகுபாட்டுக்கு எதிராகவும் கோவில் நுழைவுப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் அவர் செய்த பங்களிப்பிற்காக வைக்கம் வீரர் (Vaikom Hero) என பாராட்டப்பட்டார்.

**சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனை:**

ஆயினும் இக்காலகட்டத்தில் ஈ.வெ.ரா. காங்கிரசின் மீது மிகவும் அதிருப்தி கொண்டிருந்தார். அது பிராமணர்களின் நலன்களை மட்டுமே மேம்படுத்துவதாக உணர்ந்தார். சேரன்மாதேவி குருகுலப் பிரச்சனையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்வாக காங்கிரசுக்குள்ளே ஏற்பட்ட கருத்து வேறுபாடும் ஈ.வெ.ரா.வை காங்கிரசை விட்டு வெளியேற வைத்தன.

தேசியக் கல்வியை முன்னெடுக்கும் பொருட்டு ஒரு குருகுலமானது V.V. சுப்பிரமணியனாரால் சேரன்மாதேவியில் நிறுவப்பெற்றது. இது காங்கிரசிடமிருந்து நிதியினைப் பெற்றது. இருந்தபோதிலும் இப்பள்ளியில் சாதியின் அடிப்படையில் மாணவர்கள் பாகுபடுத்தப்பட்டனர். பிராமண மாணவர்களுக்கும் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கும் தனித்தனியே உணவு பரிமாற்றப்பட்டது. உணவிலும் வேறுபாடுகள் இருந்தன. இது. ஈ.வெ.ரா.வின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போது அவர் மற்றொரு தலைவரான P. வரதராஜுலுவுடன் இணைந்து இப்பழக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கி கடுமையாக விமர்சித்தார்.

1925 நவம்பர் 21 இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கமிட்டி மாநாட்டில் அவர் சட்டசபையில் பிராமணரல்லாதோருக்கு பிரதிநிதித்துவம் வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்தார். இதன் பொருட்டு 1920 முதல் அவர் மேற்கொண்ட

முயற்சிகளில் தோல்வியுற்றார். இவர் முன்மொழிந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டதால் வேறு சில பிராமணரல்லாத தலைவர்களுடன் மாநாட்டை விட்டு வெளியயேறினார். வெளிவந்தவர்கள் தனியே சந்தித்தனர். விரைவில் காங்கிரசிலிருந்து விலகிய ஈ.வெ.ரா. சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

**சுயராஜ்ஜிய கட்சியினர் - நீதிக்கட்சியினர் இடையேயான போட்டி:**

ஒத்துழையாமை இயக்கம் விலக்கி கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து காங்கிரஸ் மாற்றத்தை விரும்பாதோர்" "மாற்றத்தை விரும்புவோர்" எனப் பிரிந்தது. மாற்றத்தை விரும்பாதோர் சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர விரும்பினர். மாற்றத்தை விரும்பியோர் தேர்தலில் போட்டியிட்டுச் சட்டமன்றத்தினுள் செல்ல விரும்பினர். ராஜாஜியுடன் காந்தியத்தைத் தீவிரமாகப் பின்பற்றும் வேறு சிலர் இணைந்து சட்டமன்றத்திற்குச் செல்வதை எதர்த்தனர். கஸ்தூரிரங்கம், ஆ.யு. அன்சாரி ஆகியோருடன் சேர்ந்து கொண்ட ராஜாஜி சட்டமன்றத்தைப் புறக்கணிப்பது எனும் கருத்தை முன்வைத்தார். இக்கருத்துக்கு ஏற்பட்ட எதிர்ப்பு காங்கிரசுக்குள்ளேயே சித்தரஞ்சன் தாஸ், மோதிலால்நேரு ஆகியோரால் சுயராஜ்ஜியக் கட்சி உருவாக்கப்படுவதற்கு இட்டுச் சென்றது. தமிழ்நாட்டில் S. சீனிவாசனார் S. சத்தியமூர்த்தி ஆகியோர் சுயராஜ்ஜியக் கட்சியினருக்குத் தலைமை ஏற்றனர்.

**சுப்பராயன் அமைச்சரவை:**

1926 இல் நடைபெற்ற தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் சுயராஜ்ஜியக் கட்சியினர் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்றனர். இருந்தபோதிலும் காங்கிரசின் கொள்கைக்கு இணங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்கமறுத்தது. மாறாக அவர்கள் சயேட்சை வேட்பாளரான P. சுப்பராயனுக்கு

**நீல் சிலை அகற்றும் போராட்டம் (1927):**
ஜேம்ஸ் நீல், மதராஸ் துப்பாக்கி ஏந்திய காலாட்படையைச் சேர்ந்தவர். 1857 பேரெழுச்சியின் போது நடைபெற்ற கான்பூர் படுகொலை என்றழைக்கப்படும் சம்பவத்தில் பல ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் நீல் கொடூரமாக நடந்து கொண்டார். பின்னர் நீல் இந்திய வீரர் ஒருவரால் கொல்லப்பட்டார். சென்னை மௌண்ட்ரோட்டில் ஆங்கிலேயர் அவருக்கு ஒரு சிலை வைத்தனர். இதை, இந்தியர்களின் உணர்வுகளுக்கு இழைக்கப்படும் அவமரியாதை எனக் கருதிய தேசியவாதிகள் சென்னையில் தொடர் போராட்டங்களை மேற்கொண்டனர். சென்னை மாகாணத்தின் பலபகுதிகளிலிருந்து வந்திருந்த போராட்டக்காரர்களுக்கு திருநெல்வேலியைச் சேர்ந்த S.N. சோமையாஜுலு தலைமையேற்றார். பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அச்சமயம் சென்னைக்கு வந்த காந்தியடிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். 1937 இல் ராஜாஜியின் தலைமையில் காங்கிரஸ் ஆட்சி அமைத்திருந்தபோது இச்சிலை அகற்றப்பட்டு சென்னை அருங்காட்சியகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அமைச்சரவை அமைக்க உதவினர். 1930 இல் நடைபெற்ற தேர்தலில் சுயராஜ்ஜியக் கட்சியனர் போட்டியிடாததால் நீதிக்கட்சி எளிதாக வெற்றி பெற்றது. அக்கட்சி தொடர்ந்து 1937 வரை ஆட்சி செய்தது.

**சைமன் குழுவைப் புறக்கணித்தல்:**

1919 ஆம் ஆண்டுச் சட்டத்தின் செயல்பாடுகளைப் பரிசீலனை செய்து சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்ய 1927 இல் இந்திய சட்டப்பூர்வ ஆணையம் ஒன்று சர் ஜான் சைமனின் தலைமையில் அமைக்கப் பெற்றது. ஆனால் வெள்ளையர்களை மட்டுமே கொண்டிருந்த இக்குழுவில் ஒரு இந்தியர் கூட இடம்பெறாதது இந்தியர்களுக்கு மிகப்பெரும் மனச்சோர்வை ஏற்படுத்தியது, ஆகையால் காங்கிரஸ் சைமன் குழுவைப் புறக்கணித்து சென்னையில் S. சத்தியமூர்த்தி தலைமையில் சைமன் குழு எதிர்ப்பு பிரச்சாரக் குழுவொன்று உருவாக்கப்பட்டது. மாணவர்கள், கடைகள் வைத்திருப்போர், வழக்கறிஞர்கள், ரயில் பயணிகள் ஆகியோரிடையே விரிவான அளவில் புறக்கணிப்புப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 1929 பிப்ரவரி 18 இல் சைமன் குழு சென்னைக்கு வந்தபோது பொதுக்கூட்டங்கள், எதிர்ப்பு ஊர்வலங்கள், கடையடைப்பு போன்றவற்றால் வாழ்த்தப்பெற்றது.

குழுவுக்கு எதிராகக் கறுப்புக்கொடி காட்டப்பட்டது. எதிர்ப்புகளை ஒடுக்க காவல்துறை படைப் பிரயோகம் செய்தது.

**சட்ட மறுப்பு இயக்கம்:**
**புரண சுயராஜ்ஜியத்தை நோக்கி:**

1920 களில் தமிழ்நாட்டில் காந்தியடிகள் தலைமையிலான காங்கிரஸ் விரிந்துபட்ட அடித்தளத்தைக் கொண்ட அமைப்பாக மாறிக் கொண்டிருந்தது. 1927 இல் இந்திய தேசிய காங்கிரசின் சென்னை மாநாடு முழுமையான சுதந்திரமே தனது இலக்கு என அறிவித்தது. சைமன் குழுவினை எதிர்த்து, அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களை வடிவமைப்பதற்காக காங்கிரஸ் மோதலால் நேருவின் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. 1929 இல் லாகூரில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் பூரண சுயராஜ்ஜியம் (முழு சுதந்திரம்) என்பதை இலக்கு எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் 1930 ஜனவரி 26 இல் ராவி நதியின் கரையில் சதந்திரத்தை அறிவிக்கும் விதமாக ஜவகர்லால் நேரு தேசியக் கொடியை ஏற்றினார்.

**வேதாரண்யம் உப்பு சத்தியாகிரகம்:**

காந்தியடிகள் முன்வைத்த கோரிக்கைகளை வைஸ்ராய் ஏற்றுக் கொள்ளாததைத் தொடர்ந்து அவர் சட்டமறுப்பு இயக்கத்தைத் தொடங்கினார். 1930 மார்ச் 12இல் தண்டியை நோக்கி உப்பு சத்தியாகிரக யாத்திரையைத் துவக்கினார். சட்டமறுப்பு இயக்கமானது மாணவர்கள், கடைகள் வைத்திருப்போர், தொழிலாளர், பெண்கள் ஆகியோரின் பங்கேற்புடன் மக்கள் பெருவாரியான எண்ணிக்கையில் கலந்து கொண்ட போராட்டமாகும். கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், கடையடைப்பு ஆகியனவும் சுதேசி நாடகங்களை மேடையேற்றுவது சுதேசிப் பாடல்கள் பாடுவது ஆகியனவும் அன்றாட நிகழ்வுகள் ஆயின. சென்னை நகரில் கடைகளுக்கு முன்பாக மறியல்கள் நடத்தப்பட்டதுடன் அந்நியப் பண்டங்கள் புறக்கணிக்கப்பட்டன. ராஜாஜி உப்பு சத்தியாகிரகம் ஒன்றினை ஏற்பாடுசெய்து தலைமையேற்று வேதாரண்யம் நோக்கி அணி வகுத்துச் சென்றார். தாங்களாக முன்வந்த ஆயிரம் தொண்டர்களில் நூறு தொண்டர்கள் மட்டுமே அணிவகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1930 ஏப்ரல் 13இல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி ஏப்ரல் 28 இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தைச் சென்றடைந்தது. இவ்வணிவகுப்புக்கென்றே ”கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்” எனும் சிறப்புப்பாடலை நாமக்கல் கவிஞர் ராமலிங்கனார் புனைந்திருந்தார். காவல்துறையின் கொடூரமான நடவடிக்கைகளைப் பொருட்பாடுத்தாமல் அணிவகுத்துச் சென்ற சத்தியாகிரகிகளுக்கு பயணித்த பாதையெங்கும் எழுச்சிமிகு வரவேற்பு அளிக்கப்பட்டது. வேதாரண்யம் சென்றடைந்த பின்னர் ராஜாஜியின் தலைமையில் 12 தொண்டர்கள் உப்புச் சட்டத்தை மீறி உப்பை அள்ளினர். உப்புச் சட்டத்தை மீறியதற்காக ராஜாஜி கைது செய்யப்பட்டார். T.S.S.ராஜன், திருமதி. ருக்மணி லட்சுமிபதி, சர்தார் வேதரத்தினம்,C. சாமிநாதர் மற்றும் K. சந்தானம் ஆகியோர் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்ற ஏனைய முக்கியத் தலைவர்களாவர்.

**தமிழக மாவட்டங்களில் பரவலான போராட்டங்கள்:**

வு. பிரகாசம், மு. நாகேஸ்வர ராவ் ஆகியோர் தலைமையில் சத்தியாகிரகிகள் சென்னைக்கு அருகேயுள்ள உதயவனம் என்ற இடத்தில் ஒரு முகாமை அமைத்திருந்தனர். ஆனால் அவர்கள் காவல் துறையால் கைது செய்யப்பட்டனர். இந்நிகழ்வு சென்னையில் கடையடைப்பிற்கு வழிகோலியது. 1930 ஏப்ரல் 27 இல் திருவல்லிக்கேணியில் காவல்துறையினருடன் மோதல் ஏற்பட்டது. மூன்று மணி நேரம் நடைபெற்ற இம்மோதலில் மூன்று நபர்கள் உயிரிழந்தனர். ராமேஸ்வரத்தில் உப்பு சத்தியாகிரகம் மேற்கொள்ள முயன்ற தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். உவரி, அஞ்செங்கோ, வேப்பலோடை, தூத்துக்குடி மற்றும் தருவைக்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட இதுபோன்ற முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டன. மாகாணம் முழுவதிலும் நூற்பாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். பெண்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். உப்புச்சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ருக்மணி லட்சுமிபதியாவார். இயக்கத்தை நசுக்க காவல்துறை கொடுமையான படையைப் பயன்படுத்தியது. 1932 ஜனவரி 26இல்,

பரவலாக ஆரியா என அழைக்கப்பட்ட பாஷ்யம் புனித ஜார்ஜ் கோட்டையின் உச்சியில் தேசியக்கொடியை ஏற்றினார். சத்தியமூர்த்தி அந்நியத் துணிகளை விற்பனை செய்யும் கடைகளை மறியல் செய்தார். ஊர்வலங்களைத் திட்டமிட்டார். துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தார். N.M.R. சுப்பராமன் மற்றும் கு. காமராஜ் ஆகியோரும் முக்கியப் பங்கு வகித்தனர்.

**திருப்பூர் குமரனின் வீரமரணம்:**

1932 ஜனவரி 11 இல் திருப்பூரில் கொடிகளை ஏந்திய வண்ணம் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் பாடிச் சென்ற ஊர்வலத்தினர் காவல்துறையினரால் இரக்கமின்ற அடித்து உதைக்கப்பட்டனர். பரவலாக திருப்பூர் குமரன் என்றழைக்கப்படும் மு.மு.ளு.சு. குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார். ஆகையால் இவர் கொடிகாத்த குமரன் என புகழப்படுகிறார். எனவே, ஒத்துழையாமை இயக்கம் சமுதாயத்தின் அனைத்து தரப்பு மக்களின் பங்களிப்புடன் நடைபெற்ற தமிழ்நாட்டின் மிகப்பெரிய மக்கள் இயக்கங்களில் ஒன்றாகும்.

**முதல் காங்கிரஸ் அமைச்சரவை:**

1935 இந்திய அரசாங்கச் சட்டம் மாநில சுயாட்சிக்கு வழி வகுத்தது. சட்டமன்றத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் குழு மாகாண அதிகாரங்களை நிர்வகித்தது. இருந்தபோதிலும் தேர்நதெடுக்கப்பட்ட அரசின் ஆலோசனைகளைப் புறக்கணிக்கும் அதிகாரத்தை ஆளுநர் பெற்றிருந்தார். 1937 ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. தேர்தல்களில் காங்கிரஸ் பெற்ற வெற்றியானது, மக்களிடையே அது பெற்றிருந்த செல்வாக்கைச் சுட்டிக்காட்டியது.

ராஜாஜி முதல் காங்கிரஸ் அமைச்சரவையை அமைத்தார். மது விலக்கைப் பரிசோதனை முயற்சியாக சேலத்தில் அறிமுகம் செய்தார். இதன் மூலம் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடு செய்ய விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார். சமூகத் தளத்தில் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கோவில்களைத் திறந்து வைத்தார். T. பிரகாசம் மேற்கொண்ட முயற்சியினால் ஜமீன்தார்களின் பகுதிகளைச் சேர்ந்த குத்தகைதாரர்களின் நிலை குறித்து விசாரணை செய்ய விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இருந்தபோதிலும் கிராமப்புற கடன் பிரச்சனைகளை தீர்பதற்காக கடன் சமரச வாரியங்கள் அமைக்கப்பட்டதைத் தவிர வேறு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. தேர்தெடுக்கப்பட்ட இந்திய அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் ஆங்கில அரசு இந்தியாவை இரண்டாம் உலகப்போரில் ஈடுபடுத்தியதால் காங்கிரஸ் அமைச்சரவை ராஜினாமா செய்தது.

மதுரை ஹரிஜன சேவக் சங்கத்தின் தலைவர் வைத்தியநாதர், செயலர் L.N. கோபால்சாமி ஆகியோரால் 1939 ஜூலை 9 இல் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் ஹரிஜன மக்களுடன் நுழையத் திட்டமிடப்பட்டது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக உள்ள குடிமை, சமூகக் குறைபாடுகளை அகற்றுவதற்காக 1939 இல் கோவில் நுழைவு அங்கீகார, இழப்பீட்டுச் சட்டம் இயற்றப்பட்டது.

**இந்தி எதிர்ப்புப் போராட்டம்:**

பள்ளிகளில் இந்தி மொழி கட்டாயப்பாடமாக அறிமுகம் செய்யப்பட்டது. இது ராஜாஜியால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய நடவடிக்கையாகும். தமிழ் மொழிக்கும் பண்பாட்டிற்கும் தீங்கு விளைவிக்க, ஆரிய வட இந்தியர்களால் சுமத்தப்பட்ட ஏற்பாடாக இது கருதப்பட்டதால் மக்களிடையே பெரும் மனக்கசப்பை ஏற்படுத்தியது. இதற்கு எதிராக ஈ.வெ.ரா. மிகப்பெரிய பரப்புரையை மேற்கொண்டார். அவர் இந்தி எதிர்ப்பு மாநாடு ஒன்றினை சேலத்தில் நடத்தினார். உறுதியான செயல்பாட்டிற்கான திட்டத்தை இம்மாநாடு வடிவமைத்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கு ஒடுக்கப்பட்டோர் கூட்டமைப்பும், முஸ்லிம் லீக்கும் ஆதரவளித்தன. தாளமுத்து மற்றும் நடராஜன் எனும் இரண்டு ஆர்வமிக்க போராட்டக்காரர்கள் சிறையில் மரணமடைந்தனர். திருச்சியிலிருந்து சென்னைக்கு ஊர்வலமொன்று திட்டமிடப்பட்டது. பெரியார் உட்பட 1200 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் அரசு பதவி விலகியதைத் தொடர்ந்து நிர்வாகத்தைக் கைக்கொண்ட சென்னை மாகாண ஆளுநர் இந்தி கட்டாயப் பாடம் என்பதை நீக்கினார்.

**வெள்ளையனே வெளியேறு இயக்கம்:**

கிரிப்ஸ் குழுவின் தோல்வியும், போர்க்கால பாற்றாக்குறைகளும், விலையேற்றமும் மக்களிடையே பெரும் மனநிறைவின்மையை ஏற்படுத்தியது. 1942 ஆகஸ்டு 8 இல் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு காந்தியடிகள் ”செய் அல்லது செத்துமடி” எனும் முழுக்கத்தை வழங்கினார். ஒட்டு மொத்த காங்கிரஸ் தலைவர்களும் ஒரே நாள் இரவில் கைது செய்யப்பட்டனர். ஒவ்வொரு ரயில் நிலையத்திலும் காவலர்கள் உள்ளூர் தலைவர்களின் பெயர்ப் பட்டியலை வைத்துக் கொண்டு அவர்கள் ரயிலை விட்டு இறங்கியதும் கைது செய்ததை பாம்பாயிலிருந்து ஊர் திரும்பிக் கொண்டிருந்த கு. காமராஜர் கவனித்தார். காவல் துறையினரின் கண்களில் படாமல் அரக்கோணத்திலேயே இறங்கிவிட்டார். பின்னர் அவர் தலைமறைவாகி வெள்ளையனே வெளியேறு இயக்கத்திற்காக மக்களைத் திரட்டும் பணியை மேற்கொண்டார். துண்டுப்பிரசுரங்களை விநியோகம் செய்து கொண்டிருந்த போது ராஜாஜியும் சத்தியமூர்த்தியும் கைது செய்யப்பட்டனர். தமிழ் நாட்டில் இவ்வியக்கம் பரந்துபட்ட அளவில் நடைபெற்றது. மேலும் அஞ்சல் அலுவலகங்களை தீக்கிரையாக்குவது, தந்திக் கம்பங்களின் கம்பிகளை வெட்டி விடுவது, ரயில் போக்குவரத்திற்கு ஊறு விளைவிப்பது போன்ற வன்முறை நிகழ்வுகளும் அரங்கேறின.

**தீராத மக்கள் இயக்கம்:**

இவ்வியக்கத்தில் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பங்கேற்றனர். பங்கிங்காம் மற்றும் கர்நாட்டிக் மில், சென்னை துறைமுகம், சென்னை மாநகராட்சி மற்றும் மின்சார டிராம் போக்குவரத்து போன்ற இடங்களில் பெருமளவிலான தொழிலாளர் போராட்டங்கள் நடைபெற்றன. வேலூர் மற்றும் பணப்பாக்கம் ஆகிய ஊர்களில் தந்தி, தொலைபேசிக் கம்பிகள் வெட்டப்பட்டதுடன் பொதுக்கட்டங்களுக்கு தீ வைக்கப்பட்டன. பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் இப்போராட்டத்தில் தவிரப் பங்கேற்றனர். சூலூர் விமானநிலையம் தாக்குதலுக்குள்ளானது கோயம்புத்தூரில் ரயில்கள் தடம்புரளச் செய்யப்பட்டன. மதுரையில் காங்கிரஸ் தொண்டர்கள் இராணுவத்துடன் மோதினர். ராஜபாளையம், காரைக்குடி மற்றும் தேவகோட்டை ஆகிய இடங்களில் காவல்துறையினரின் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் இந்திய தேசிய ராணுவத்தில் (INA) சேர்ந்தனர். வெள்ளையனே வெளியேறு இயக்கம் இரக்கமற்ற முறையில் வன்முறை மூலம் ஒடுக்கப்பட்டது.

ராயல் இந்தியக் கப்பற்படைப் புரட்சியும், இங்கிலாந்தில் புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்ற தொழிலாளர் கட்சி அரசு தொடங்கிய பேச்சு வார்த்தைகளும் இந்திய விடுதலைக்கு வழிகோலின சோகம் யாதெனில் நாடு இந்தியா, பாகிஸ்தான் என இரண்டாகப் பிரிக்கப்பட்டதுதான். அது குறித்து எட்டாம் பாடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## Unit - 10
## தமிழ்நாட்டில் சமூக மாற்றங்கள்

**அறிமுகம்:**

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பியர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் மீது தங்கள் அரசியல் அதிகாரத்தை நிறுவினார். பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவை இணைப்பதில் அக்கறை செலுத்திய அவர்கள் இந்தியச் சமூகத்தை மறு ஒழுங்கமைவு செய்தனர். புதிய வருவாய் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆங்கிலேயரின் பயன்பாட்டுக் கோட்பாடுகள், கிறித்தவ சமய நெறிகள் ஆகியவற்றின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்த அவர்கள், இந்திய மக்களின் மீது தங்களது பண்பாட்டு மேலாதிக்கத்தைத் திணிக்கவும் முயன்றனர். இந்தியாவின் உள்நாட்டு மரபுகள், நாகரிகம் பழமையானவைகளாகக் கருதப்பட்டன. இந்தியச் சமூகமானது பழமையானதென்றும் அதில் மனிதர்கள் சாதி, பாலினம், மொழி, நம்பிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தப்படுவதாகவும் சித்தரிக்கப்பட்டது.

இந்நிலை இந்தியர்களிடையே எதிர்விளைவினை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கல்வியறிவு பெற்ற இந்தியர்கள் இந்த அவமானத்தை உணர்ந்தனர். இதற்குப் பதிலளிக்கும் வகையில் தங்கள் சமூகப் பண்பாட்டு அடையாளங்களைக் கடந்த காலத்தினுள் தேடினர். இருந்தபோதிலும் காலனிய விவாதங்களில் சில நியாயங்கள் இருப்பதை உணர்ந்த அவர்கள் சீர்திருத்திக் கொள்ளவும் தயாராயினர். இச்செயல்பாட்டின் முன்னோடிகளுள் ராஜாராம் மோகன்ராயும் ஒருவராவார். ரூாய் மற்றும் அவரைப் போன்ற பலரும் சமூகச் சீர்திருத்தவாதிகள் என அறியப்பட்டனர். ஐரோப்பிய பண்பாட்டு மேலாதிக்கத்திற்கு எதிராக அவர்கள் ஒரு சமூகப் பண்பாட்டுச் செயற்களத்தை உருவாக்கிக் கொண்டிருந்தனர். இதன் விளைவே நவீன இந்தியாவின் சமய, சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு வழிகோலியது. இக்குறிப்பிட்ட வரலாற்று வளர்ச்சி நிகழ்வு "இந்திய மறுமலர்ச்சி" என அடையாளப்படுத்தப்பட்டது.

மறுமலர்ச்சியானது ஒரு கருத்தியல் பண்பாட்டு நிகழ்வாகும். அது நவீனம், பகுத்தறிவு, சமூகத்தின் முற்போக்கான இயக்கம் ஆகியவற்றுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. திறனாய்வுச் சிந்தனை அதன் வேர்களில் உள்ளது. மானுடப் பகுத்தறிவுடைமையையும் சமத்துவத்தையும் மையமாகக் கொண்ட ஒரு தத்துவ மரபாக இருப்பது அதன் சிறப்பியல்பாகும். மனிதநேயமும், மனிதர்களுக்கு அவர்களின் கண்ணியத்தை மறுக்கிற அடிப்படைவாத மத நடவடிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்குவதும், மறுமலர்ச்சியின் அகத்தூண்டுதல்களாகும். மனிதநேயம் எனும் இச்சித்தாந்தம், சமூக வாழ்வு மற்றும் அறிவு ஆகிய துறைகளோடு மொழி, இலக்கியம், தத்துவம், இசை, ஓவியம், கட்டடக்கலை இன்னபிற போன்ற அனைத்துத் துறைகளிலும் படைப்பாற்றலைத் தூண்டி எழுப்பியது.

**தமிழ் மறுமலர்ச்சி:**

காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனிதநேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக்கண்டத்தின் சமூகப் - பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது. நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது. தமிழ் மொழி மற்றும்ட கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தன. அச்சு இயந்திரத்தின் அறிமுகமும், திராவிட மொழிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட மொழியியல் ஆய்வுகளும் மற்றும் பலவும் தமிழ் மறுமலர்ச்சி செயல்பாடுகளுக்கு அடியுரமாய் விளங்கின. அச்சு இயந்திரத்தின் வருகைக்குப் பின்னர் வந்த தொடக்க ஆண்டுகளில் சமயம் சார்ந்த நூல்களை வெளியிடும் முயற்சிகளே பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன. நாளடைவில் படிப்படியாக நிலைமைகள் மாறின. சமயச்சார்பற்ற எனச் சொல்லத்தகுந்த நூல்களும் வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

**அச்சு தொழில்நுட்பத்தின் வருகை:**

ஐரோப்பிய மொழிகள், தவிர்த்து அச்சில் ஏறிய மொழிகளில் முதல் மொழி தமிழ் மொழியாகும். மிக முன்னதாக 1578 இல் தம்பிரான் வணக்கம் எனும் தமிழ் புத்தகம் கோவாவில் வெளியிடப்பட்டது. 1709-இல் முழுமையான அச்சகம் சீகன்பால்கு என்பவரால் தரங்கம்பாடியில் நிறுவப்பட்டது. தொடக்ககால தமிழ் இலக்கிய நூல்களில் ஒன்றான திருக்குறள் 1812-ல் வெளியிடப்பட்டது. இதன் விளைவாக இக்காலப் பகுதியில் மிகவும் பழமையான செவ்வியல் தமிழ் இலக்கியங்களை வெளியிடுவதில் தமிழ் அறிஞர்களிடையே புத்தெழுச்சி ஏற்பட்டது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களான சி.வை.தாமோதரனார் (1832-1901) உ.வே.சாமிநாதர் (1855-1942) போன்றவர்கள் தமிழ்ச்செவ்வியல் இலக்கியங்களை மீண்டும் கண்டறிவதற்காகத் தங்கள் வாழ்நாள் முழுவதையும் செலவழித்தனர். சி.வை.தாமோதரனார் பனையோலைகளில் கையால் எழுதப் பெற்றிருந்த பல தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் பதிப்பித்த நூல்களில் தொல்காப்பியம், வீரசோழியம், இறையனார் அகப்பொருள், இலக்கண விளக்கம், கலித்தொகை மற்றும் சூளாமணி ஆகியவை அடங்கும். தமிழறிஞர் மீனாட்சி சுந்தரனாரின் மாணவரான உ.வே. சாமிநாதர் செவ்வியல் தமிழ் இலக்கிய நூல்களான சீவகசிந்தாமணி (1887), பத்துப்பாட்டு (1889), சிலப்பதிகாரம் (1892), புறநானூறு (1894), புறப்பொருள் வெண்பா மாலை (1895), மணிமேகலை (1898), ஐங்குறுநூறு (1903), பதிற்றுப்பத்து (1904) ஆகியவற்றை வெளியிடும் முயற்சிகளை மேற்கொண்டார். இது தமிழ் மக்களுக்கு தங்களது பாரம்பரியம் குறித்து வியப்பைத் தந்தது. ஆகவே பண்டைய செவ்வியல் இலக்கியங்கள் மீண்டும் கண்டறியப்பட்டதையும் அவை வெளியிடப்பட்டதையும் தமிழ் மறுமலர்ச்சியின் அடித்தளமாகக் கருதலாம்.

இவ்வாறு பழம்பெரும் நூல்கள் வெளியிடப்பட்டது தமிழ் மக்களிடையே தங்கள் வரலாறுமரபு, மொழி, இலக்கியம் மற்றும் சமயம் ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியது. நவீனத் தமிழர்கள் தங்களது சமூகப் பண்பாட்டு அடையாளங்களை, பண்டைய தமிழ் செவ்வியல் இலக்கியங்கள் வாயிலாக கண்டறிந்தனர். அவை மொத்தத்தில் சங்க இலக்கியங்கள் என்றழைக்கப்படுகின்றன. மொழியியலாளர்களும், வரலாற்று அறிஞர்களும் தமிழ் அறிஞர்களும் தமிழ்ப் பண்பாட்டின் தனித்தன்மையை அங்கீகரித்துள்ளனர். அவை தமிழ் நிலப்பகுதிக்குள் ஆரியர்கள் வருவதற்கு முன்பாகவே ஒரு தனியான, சுதந்திரமான இருப்பைப் பெற்றிருந்தது.

1816-இல் புனித ஜார்ஜ் கோட்டையில் கல்லூரியினை நிறுவிய F.W. எல்லிஸ் (1777-1819), தென்னிந்திய மொழிகள் தனிப்பட்ட மொழிக்குடும்பத்தை சார்ந்தவை, அவை இந்தோ-ஆரியக்குடும்ப மொழிகளோடு தொடர்பில்லாதவை எனும் கோட்பாட்டை உருவாக்கினார். ராபர்ட் கால்டுவெல் (1814-1891) திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின் ஒப்பீட்டு இலக்கணம் எனத் தலைப்பிடப்பட்ட நூலில் இக்கோட்பாட்டை 1856இல் விரிவுபடுத்தினார். திராவிட மொழிகளுக்கிடையில் நெருக்கமான ஒப்புமை இருப்பதையும் அடிப்படையான ஒப்புமை சமஸ்கிருதத்துடன் இல்லை என்பதையும் நிறுவினார். மேலும் தமிழின் தொன்மையையும் நிலைநாட்டினார்.

இக்காலகட்டத்தைச் சேர்ந்த அறிவார்ந்த தமிழர்கள் தமிழ் / திராவிட /சமஸ்கிருதம் /ஆரியம் / பிராமணியம் ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை அடையாளம் கண்டுகொண்டனர். அவர்கள் தமிழ்மொழியே திராவிடர்களின் மொழியென்றும் தமிழர்கள் பிராமணர்கள் அல்ல என்றும்ட அவர்களின் சமூக வாழ்வில் சாதிகளில்லை, பாலின வேறுபாடில்லை, சமத்துவம் நிலவியது எனவும் வாதிட்டனர். தமிழ்நாட்டில் திராவிட உணர்வு தோன்றி வளர்வதற்கு தமிழ் மறுமலர்ச்சி பங்களிப்பைச் செய்தது. இச்சிந்தனைகள் பி.சுந்தரனாரால் (1855-1897) எழுதப்பெற்ற மனோன்மணியம் எனும் நாடக நூலில் இடம் பெற்றுள்ள தமிழ்மொழி வாழ்த்துப் பாடலில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மறுமலர்ச்சி பிராமணியத்தின் பண்பாட்டு மேலாதிக்கத்தைக் கேள்விக்குள்ளாக்கியது. இப்போக்குகள் கலைகளிலும் இலக்கியங்களிலும் சமயத்திலும் பிரதிபலித்தது. வள்ளலார் எனப் பிரபலமாக அறியப்பட்ட ராமலிங்க அடிகள் (1823-1874) நடைமுறையிலிருந்த இந்து சமய பழமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார். ஆபிரகாம் பண்டிதர் (1859-1919) தமிழ் இசைக்குச் சிறப்புச் செய்ததோடு தமிழ் இசை வரலாறு குறித்து நூல்களையும் வெளியிட்டார். சி.வை.தாமோதரனார், உ.வே.சாமிநாதர், திரு.வி.கல்யாண

சுந்தரம் (1883-1953), பரிதிமாற் கலைஞர் (1870-1903), மறைமலையடிகள் (1876-1950), சுப்பிரமணிய பாரதி (1882-1921), ச.வையாபுரி (1891-1956), கவிஞர் பாரதிதாசன் (1891-1964) ஆகியோர் தங்களுக்கே உரித்தான வழிகளில், தங்களின் எழுத்துக்கள் மூலம் தமிழ் இலக்கியத்தின் புத்தெழுச்சிக்குப் பங்களிப்பு செய்தனர். இதே சமயத்தில், பௌத்தத்திற்குப் புத்துயிரளித்த ஒரு தொடக்ககால முன்னோடியான M. சிங்காரவேலர் (1860-1946) காலனிய சக்தியை எதிர்கொள்வதற்காக பொதுவுடமைவாதத்தையும் சமத்துவத்தையும் வளர்த்தார். பண்டிதர் அயோத்திதாசரும் (1845-1914) பெரியார் ஈ.வெ.ராமசாமியும் (1879-1973) சமூகரீதியாக உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் உரிமைகளுக்காகப் பகுத்தறிவுச் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடித்தனர். இத்துடன் இருபதாம் நூற்றாண்டின் தமிழ்மொழி இயக்கங்களான தனித்தமிழ் இயக்கம் மற்றும் தமிழ் இசை இயக்கம் போன்றவைகள் சமஸ்கிருதத்தின் செல்வாக்கிற்கு ஆட்படாத தூய தமிழை உருவாக்குவதில் தாக்கத்தை ஏற்படுத்தின.

### பரிதிமாற் கலைஞர்: (வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி)

வி.கோ.சூரிய நாராயண சாஸ்திரி (1870-1903) மதுரை அருகே பிறந்தார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பணியாற்றினார். தமிழின் மீது சமஸ்கிருதம் கொண்டிருந்த செல்வாக்கை அடையாளம் கண்ட தொடக்க காலத் தமிழ் அறிஞர்களில் ஒருவர். ஆதனால் தனக்கே பரிதிமாற் கலைஞர் என தூய தமிழ்ப் பெயரைச் சூடிக் கொண்டவர். தமிழ் மொழி ஒரு செம்மொழி என்றும், எனவே சென்னைப் பல்கலைக்கழகம் தமிழை ஒரு வட்டாரமொழியென அழைக்கக் கூடாதென முதன்முதலாக வாதாடியவர் அவரே. மேற்கத்திய இலக்கிய மாதிரிகள் மீது இவர் கொண்டிருந்த தாக்கத்தின் விளைவாக 14 வரிச்செய்யுள் வடிவத்தை தமிழுக்கு அறிமுகம் செய்தார். மேலும் இவர் நாவல்களையும் நாடகங்களையும் அதிக எண்ணிக்கையிலான அறிவியல் கட்டுரைகளையும் எழுதினார். ஆனால் வருந்தத்தக்க முறையில் 33 ஆண்டுகளே நிறைவு பெற்றிருந்த அவர் இளம் வயதில் இயற்கை எய்தினார்.

### மறைமலை அடிகள்:

மறைமலை அடிகள் (1876-1950) தமிழ் மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என்றும் தனித்தமிழ் இயக்கத்தை (தூய தமிழ் இயக்கம்) உருவாக்கியவர் எனவும் கருதப்படுகின்றார். சுங்க இலக்கிய நூல்களான பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு ஆகியவற்றிற்கு விளக்கவுரை எழுதியுள்ளார். ஆவர் இளைஞராக இருந்த போது சித்தாந்த தீபிகா எனும் பத்திரிகையில் பணிபுரிந்தார். பின்னர் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். பிராமணர் அல்லாதோர் இயக்கத்தின் மீது பற்றுக் கொண்டார். அவருடைய ஆசிரியர்களான பி.சுந்தரனார், சோமசுந்தர நாயகர் ஆகிய இருவரும் அவருடைய வாழ்க்கையில் முக்கியச் செல்வாக்கு செலுத்தியோராவர்.

### தனித்தமிழ் இயக்கம்:

தூய தமிழ் வார்த்தைகளைப் பயன்படுத்துவதையும் சமஸ்கிருதத்தின் செல்வாக்கு தமிழ் மொழியிலிருந்து அகற்றப்படுவதையும் மறைமலை அடிகள் ஊக்குவித்தார். இவ்வியக்கம் தமிழ்ப் பண்பாட்டின் மீது குறிப்பாக தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. தமிழ் மொழியின் மீது செல்வாக்குச் செலுத்தும் வேற்று மொழி வார்த்தைகளை அடையாளங்கண்டு அவற்றை அகற்றுகின்ற செயல்பாடு பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தொடங்கப்பட்டிருந்தாலும் தனித் தமிழ் இயக்கம் தொடங்கியது 1916 எனப் பொதுவாக் கூறப்படுகிறது. முறைமலை அடிகளாரின் மகள் நீலாம்பிகை இவ்வியக்கம் உருவாக்கப்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார். வேதாச்சலம் என்ற தனது பெயரை அவர் தூய தமிழில் மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டார். அவருடைய ஞானசாகரம் எனும் பத்திரிக்கை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அவருடைய சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் பொது நிலைக் கழகம் என்று பெயரிடப்பட்டது. இவ்வியக்கம் தமிழ் சமுதாயத்திலிருந்த இந்தி, சமஸ்கிருதம் மற்றும் பிராமண மேலாதிக்கத்தை விமர்சித்தது. தமிழ் சொற்களுக்குள் புகுந்துவிட்ட சமஸ்கிருதச் சொற்களுக்கு இணையான பொருள்தரக்கூடிய தமிழ்சொற்களடங்கிய அகராதி ஒன்றை நீலாம்பிகை தொகுத்தார். இவ்வியக்கம் பிற்காலத்தில் தமிழ் சமூகத்திலிருந்த பிராமணிய மற்றும் சமஸ்கிருத மரபுகளை எதிர்கொண்ட சமூக இயக்கங்களுக்கு வழிவகுத்தது.

## திராவிட இயக்கத்தின் எழுச்சி:

இந்தியாவில் பிராமணயர்கள் தங்களது பிறப்பின் அடிப்படையில் சிறந்த சமூக அந்தஸ்தை அனுபவித்தனர் மேலும் மிகப்பெரும் சமூக முன்னுரிமைகளையும் பெற்றிருந்தனர். சென்னை மாகாணத்தில் சமூகத்தின் அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக அரசியல், கல்வி மற்றும் அரசாங்க வேலைவாய்ப்புகளிலும் அவர்களே ஆதிக்கம் செலுத்தினார். 1911 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி சென்னை மாகாண மக்கள்தொகையில் பிராமணர்களின் எண்ணிக்கை 3 விழுக்காட்டிற்கு சற்றே அதிகமாயும் பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 90 விழுக்காடெனவும் காட்டியது. மேலும் 1901 முதல் 1911 வரையிலான பத்தாண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு முடித்த பிராமணர் எண்ணிக்கை 4074 ஆகவும் அதே பிராமணரல்லாதோரின் எண்ணிக்கை 1035 ஆகவும் இருந்தது. அன்று எவ்வாறு மக்கள்தொகை வகைப்படுத்தப்பட்டிருந்ததோ அதனடிப்படையில் ஏனைய குழுக்களைச் சார்ந்த 306 இந்தியக் கிறித்தவர்களையும் 69 முகமதியர்களையும் 225 ஐரோப்பிய மற்றும் யூரேசியர்களையும் உள்ளடக்கியிருந்தது.

இத்தகைய சூழலில் திராவிட இயக்கம் பிராமண மேலாதிக்கத்திற்கு எதிராகப் பிராமணர் அல்லாதவர்களைப் பாதுகாக்கும் இயக்கமாக உதயமானது. 1909இல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. 1912இல் டாக்டர் சி.நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார் இது பின்னாளில் மதராஸ் திராவிடர் சங்கம் என்று மாறியபின் திராவிடர்களின் மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்தது. பிராமணர் அல்லாத பட்டதாரிகளுக்கு உதவுவது அவர்களைக் கற்கவைப்பது அகியவற்றோடு அவர்களது குறைபாடுகள் குறித்து விவாதிக்க முறையான கூட்டங்களையும் நடத்தியது. இதே சமயத்தில் நடேசனார் தங்கும் விடுதி வசதியில்லாததால் பிராமணரல்லாத மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டதால் அதைச் சரிசெய்யும் வகையில் திருவல்லிக்கேணியில் (சென்னை) ஜூலை 1916 இல் திராவிட இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவினார். மேலும் பிராமணர் அல்லாத மாணவர்களின் நலன் கருதி இவ்வில்லம் ஒரு இலக்கிய அமைப்பையும் கொண்டிருந்தது.

## தென்னிந்திய நல உரிமைச்சங்கம் (நீதிக்கட்சி)

முதல் உலகப்போர் நடந்து கொண்டிருந்த நிலையில் ஆங்கில அரசாங்கம் போருக்குப் பின்னர் இந்தியாவில் பிரதிநிதித்துவ அமைப்புகளை அறிமுகம் செய்வது குறித்து பரிசீலனை செய்து கொண்டிருந்தது. அப்படிப்பட்ட அரசயில் சீர்திருத்தங்கள் பிராமணர்களின் அரசியல் அதிகாரத்தை மேலும் வலுவடையச் செய்யும் என அஞ்சிய கல்வி கற்ற பிராமணர் அல்லாதவர்கள் தங்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டிக் கொள்ள முடிவு செய்தனர். 1916 நவம்பர் 20 இல் டாக்டர் நடேசனார், சர்.பிட்டி தியாகராயர், டி.எம்.நாயர் மற்றும் அலமேலுமங்கை தாயாரம்மாள் உட்பட 30 முக்கிய பிராமணர் அல்லா தலைவர்கள் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (South Indian Liberal Federation) உருவாக்க ஒருங்கிணைந்தனர். இதே சமயம் 1916 டிசம்பரில், விக்டோரியா பொது அரசங்கில் நடைபெற்ற கூட்டமொன்றில் பிராமணரல்லாதோர் அறிக்கை வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை பிராமணரல்லாத சமூகங்களின் கருத்துகளைத் தெளிவுபடக்கூறியது. மேலும் சென்னை மாகாணத்தின் பிராமணரல்லாதோர்களின் பொதுவான நிலையை அளவீடு செய்தது.

இவ்வமைப்பு தொடங்கி வெளியிட்ட மூன்று செய்தித்தாள்களாவன: கட்சியின் கொள்கைகளைப் பரப்புரை செய்வதற்காகத் தமிழில் திராவிடன், ஆங்கிலத்தில் ஜஸ்டிஸ், தெலுங்கில் ஆந்திர பிரகாசிகா ஆகிய பத்திரிக்கைகளை வெளியிட்டது.
மாகாண அரசுகளில் இரட்டையாட்சி முறையை அறிமுகம் செய்த பின்னர் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1920இல் முதல் தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சி தேர்தலில் பெற்றிபெற்று இந்தியாவின் முதல் அமைச்சரவையை சென்னையில் அமைத்தது. A. சுப்பராயலு சென்னை மாகாணத்தின் முதலமைச்சரானார். மேலும் நீதிக்கட்சி 1920-1923 மற்றும் 1923-1926 ஆகிய ஆண்டுகளில் அரமைத்தது. காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தைப் புறக்கணித்த சூழலில் நீதிக்கட்சி 1937 இல் தேர்தல் நடைபெறும் வரை ஆட்சி தொடர்ந்து நீடித்தது. 1937 தேர்தல்களில், முதல்முதலாகப் பங்கேற்ற இந்திய தேசிய காங்கிரஸ் நீதிக்கட்சியை படுதோல்வி அடையச் செய்தது.

பிராமணர் அல்லாதோர் அறிக்கையில் ''சென்னை மாகாணத்திலுள்ள 4 கோடியே 1 ½ லட்சம் மக்களில் 4 கோடிகளுக்கு குறைவில்லாதவர்கள் பிராமணர் அல்லாதவர்களே, சென்னை மாகாணத்தின் அரசியல் சூழல் அவர்களை தங்களுக்கு உரிமையுள்ள பங்கினை எடுத்துக் கொள்ள இடமளிக்கவில்லை'' என சுட்டிக் காட்டியது. மேலும் ''ஆங்கில அரசின் உண்மையான நீதி மேலும் வாய்ப்புகளுக்கான சமத்துவம்'' எனும் ஆங்கிலேயக் கொள்கைகளின்படி நடைபெறும் அரசே இந்தியர்களின் நலன்களுக்கு உகந்தது என வாதிட்டு ''நாங்கள் ஆங்கிலேய அரசை ஆழமாக நேசிக்கிறோம் விசுவாதத்துடன் பற்றுக் கொண்டுள்ளோம்'' என்று அறிவித்தது.

**திட்டங்களும் செயல்பாடுகளும்:**

நீதிக்கட்சியே நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மூலாதாரமாய் விளங்கிற்று. நீதிக்கட்சி அரசாங்கம் மக்கள்தொகையில் பெரும்பாலானவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை விரிவுபடுத்தி அரசியல் தளத்தில் அவர்களுக்கென அடத்தை உருவாக்கியது. தமிழ்நாட்டினுடைய சமூகநீதி மரபுத்தொடர்ச்சியானது தனது இருப்புக்கு, நீதிக்கட்சி உருவாகி வளர்ந்து ஆட்சியிலிருந்த ஆண்டுகளுக்குக் கடமைப்பட்டுள்ளது.

சாதி மறுப்புத் திருமணங்களைக் கட்டுப்படுத்திய சட்டச் சிக்கல்களை நீதிக் கட்சியினர் அகற்றியதோடு பொதுக் கிணறுகளையும் நீர் நிலைகளையும் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்கள் பயன்படுத்துவதை தடுத்த தடைகளைத் தகர்த்தனர். ஒடுக்கப்பட்ட பிரிவு குழந்தைகள் பொதுப்பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென நீதிக்கட்சியின் அரசு ஆணை பிறப்பித்தது. இச்சமூகக் குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்கென 1923இல் தங்கும் விடுதிகள் உருவாக்கப்பட்டன. நீதிக்கட்சியின் கீழிருந்த அம்மையார் சட்டமன்றம்தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921-இல் அங்கீகரித்தது. இத்தீர்மானம் பெண்களுக்கென இடத்தை ஏற்படுததியதால் 1926-இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.

பல்வேறு சமூகங்களுக்கான இட ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நீதிக்கட்சி வகுப்புவாரி பிரதிநிதித்துவம் தொடர்பான சட்டங்களை இயற்றும் பணிகளை மேற்கொண்டது. சமூக நீதியை நிலைநாட்டுவதின் ஒரு பகுதியாக பல்வேறு சாதிகளையும் சமூகங்களையும் சார்ந்தவர்களுக்கு அரசுப் பணிகளில் சேர்வதற்கு சமமான வாய்ப்புகளை உறுதி செய்யும் பொருட்டு இரண்டு வகுப்புவாரி அரசாணைகள் (1921 செப்டம்பர் 16 மற்றும் 1922 ஆகஸ்ட் 15) இயற்றப்பட்டன. நிர்வாக அதிகாரங்களை அனைத்து சமூகத்தினரும் பங்கிட்டுக் கொள்வதை ஊக்குவிக்கும் வண்ணம், அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய 1924-இல் பணியாளர் தேர்வு வாரியத்தை நீதிக்கட்சி அமைத்தது. இம்முறையைப் பின்பற்றி பிரிட்டிஷ் இந்திய அரசு 1929 இல் பொதுப் பணியாளர் தேர்வாணையத்தை உருவாக்கியது.

இவைகள் தவிர சமய நிறுவனங்களை சீர்திருத்துவதிலும் நீதிக்கட்சி கவனம் செலுத்தியது. தமிழ்நாடு பெரும் எண்ணிக்கையிலான கோவில்களைக் கொண்டுள்ளது. அவை பெரும் செல்வவளத்தைப் பெற்றிருந்தன. பொதுவாக இச்சொத்துக்கள் அனைத்தும் சமூகத்தின் உயர்சாதியினரின் முற்றுரிமையில் சுரண்டப்பட்டன. மேலும் இது பொதுச்சொத்துக்கள் தவறாக நிர்வகிக்கப்படுவதற்கு வழி கோலியது. நீதிக்கட்சி 1926-இல் இந்து சமய அறநிலையச் சட்டத்தை இயற்றியது. அதன்படி எந்தவொரு தனிநபரும், சாதிவேறுபாடின்றி கோவில்களின் நிர்வாகக் குழுக்களில் உறுப்பினராகவும் கோவிலின் சொத்துக்களை நிர்வகிக்கவும் வழிவகை செய்யப்பட்டது.

**சுயமரியாதை இயக்கம்:**

சுயமரியாதை இயக்கம் (Self Respect Movement) அன்று நிலவிய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகளில் இருந்த சீர்கேடுகளை விமர்சனம் செய்ததோடு தமிழ்நாட்டில் பிராமணர் அல்லாதவர்களின் மேம்பாட்டிற்கான ஒரு திட்டத்தையும் அறிமுகம் செய்தது. சமூகத்தின் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் மீது அக்கறை கொண்ட இவ்வியக்கம் பிராமணர்களையம் அவர்களின் பண்பாட்டு மேலாதிக்கத்தையும் விமர்சனம் செய்தது. சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது. பகுத்தறிவும் சுயமரியாதையும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை எனப் பிரகடனம் செய்த இவ்வியக்கம் சுயாட்சியைக்

காட்டிலும் இவை முக்கியமானவை எனும் கருத்தை உயர்த்திப் பிடித்தது. பெண்களின் தாழ்வான நிலைக்கு எழுத்தறிவின்மையே காரணம் என அறிவித்த அவ்வியக்கம் அனைவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வியை வழங்கும் பணிகளை மேற்கொண்டது. பெண்களை அதிகாரம் உள்ளவர்களாக மாற்றுவதற்கு இயக்கம் நடத்திய சுயமரியாதை இயக்கத்தினர் சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகளைக் கேள்விகளுக்கு உட்படுத்தினர்.

இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவை வலியுறுத்துதல் போன்ற கோரிக்கைகளை கோரியது. மேலும் இவ்வியக்கம் சீர்திருத்தத் திருமணம் அல்லது சுயமரியாதைத் திருமணங்களை ஆதரித்தது. சுயமரியாதை இயக்கச் சொற்பொழிவுகளின் மையப் பொருளாக இருந்தது 'இனம்' ஆகும். திராவிட மக்களுடைய நீண்டகால வரலாற்றின் போக்கில் திராவிட மக்கள் ஆரிய பிராமணர்களால் திட்டமிட்டு ஒடுக்கப்பட்டதாக அச்சொற்பொழிவுகளில் விவாதிக்கப்பட்டன.

சுயமரியாதை இயக்கம் பிராமணர் அல்லாத இந்துக்களின் நலன்களுக்காக மட்டுமல்லாமல் இஸ்லாமியர்களின் நலனுக்காகவும் போராடியது. இஸ்லாமின் மேன்மை மிகுந்த கோட்பாடுகளான சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை சுயமரியாதை இயக்கம் பாராட்டியது. இந்து சமூகத்தின் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இஸ்லாத்தில் இணைவதன் மூலம் சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் அடைகிறார்கள் என்று கருதியது. முஸ்லீம் உயர்குடியினர் தமிழ்நாட்டு முஸ்லீம்களை திராவிடர்களாகவே கருதினர். இருந்தபோதிலும் முஸ்லீம் பெண்கள் பர்தா அணிவது போன்ற சில பழக்கங்களை பெரியார் விமர்சனம் செய்யத் தயங்கவில்லை. இஸ்லாம் சமூகத்தில் சீர்திருத்த முன்முயற்சிகள் மேற்கொண்ட துருக்கியைச் சேர்ந்த முஸ்தபா கமால் பாட்சா, ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த அமானுல்லா ஆகியோரை திராவிட முஸ்லீம்கள் பின்பற்ற வேண்டுமென பெரியார் கூறினார்.

**பெரியார் ஈ.வெ.ரா:**

பெரியார் ஈ.வெ. ராமசாமி (1879-1973) சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்தவர் ஆவார். இவர் ஈரோட்டை சேர்ந்த செல்வந்தரும் வணிகருமான வெங்கடப்பர் சின்னத்தாயம்மாள் ஆகியோரின் மகனாவார். ஓரளவு முறையான கல்வியைக் கற்றிருந்தாலும் தன் தந்தையால் ஆதரிக்கப்பட்ட அறிஞர்களுடன் விமர்சன விவாதங்களில் ஈடுபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இளைஞராக இருந்தபோது ஒருமுறை வீட்டைவிட்டு வெளியேறிய அவர் பல மாதங்கள் வாரணாசியிலும் ஏனைய சமயம் சார்ந்த மையங்களிலும் தங்கியிருந்தார். வைதீக இந்து சமயத்தின் மீது அவர் கொண்டிருந்த நம்பிக்கைகளைத் தகர்த்தன. வீடு திரும்பிய அவர் சில காலம் குடும்பத் தொழிலான வணிகத்தை கவனித்து வந்தார். அவருடைய சுயநலமற்ற பொதுச் சேவைகளும், தொலைநோக்குப் பார்வையும் அவரை புகழ்பெற்ற ஆளுமை ஆக்கன. ஈரோட்டின் நகரசபைத் தலைவர் பதவி (1918-1919) உட்பட பல பதவிகளையும் அவர் வகித்தார்.

1917 க்குப் பின்னர் பிராமணரல்லா நீதிக் கட்சியின் எழுச்சிக்குப் பின்னர் சி.ராஜாஜியின் முன் முயற்சியினால் பெரியார் மற்றும் பி.வரதராஜுலு போன்ற பிராமணரல்லாத தலைவர்களும் காங்கிரஸ் கட்சியில் சேர்க்கப்பட்டனர். ஒத்துழையாமை இயக்கத்திற்கு (1920-1922) ஆதரவாகத் தான் வகித்துவந்த அனைத்து அரசுப் பொறுப்புகளையும் அவர் ராஜினாமா செய்தார். லாபம் தரும் தனது வணிகத்தைக் கைவிட்டு செயலார்வமிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஆனார். காதிக்கு துணைநின்ற அவர் தமிழகத்தின் வீதிகளிலே கதர் விற்பனை செய்தார். மது விலக்கு இயக்கத்திற்கு ஆதரவாகத் தனது தோப்பிலிருந்து 500 தென்னை மரங்களை வெட்டினார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் செயலராகவும் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக பெரியார் பதவி வகித்தபோது ஒடுக்கப்பட்ட மக்களின் கோவில் நுழைவு உரிமை குறித்த தீர்மானம் ஒன்றை முன்மொழிந்தார். சாதி தர்மம் என்ற பெயரில் ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கோவிலுக்குள்ளும் அதைச்சுற்றியுள்ள வீதிகளிலும் நுழைவது மறுக்கப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட நடைமுறையினை வைக்கம் (திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஒரு சுதேசி அரசு, தற்போதைய கேரள மாநிலத்திலுள்ள ஒரு நகரம்) மக்கள் எதிர்த்தனர். எதிர்ப்பின் தொடக்கக் கட்டங்களில் மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் பெரும்பங்கு வகித்தார். உள்ளூர் தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர் பெரியார் இந்த இயக்கத்திற்கு

தலைமையேற்றதால் சிறையிலடைக்கப்பட்டார். மக்கள் அவரை வைக்கம் வீரர் எனப் பாராட்டினார். இதே சமயத்தில் சேரன்மாதேவி குருகுலப் பள்ளியில், உணவு உண்ணும் அறையில் சாதி அடிப்படையிலான பாகுபாடு நிலவுவதைக் கேள்வியுற்று மனவருத்தமடைந்தார். இக்குருகுலம் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் நிதியுதவியில் வ.வே.சுப்பிரமணியம் எனும் காங்கிரஸ் தலைவரால் நடத்தப் பெற்றது. இதனைப் பெரியார் கண்டித்து எதிர்தத பின்னரும், குருகுலத்தில் நடைபெறும் சாதிப்பாகுபாட்டை காங்கிரஸ் தொடர்ந்து ஆதரித்ததால் மனமுடைந்தார்.

சட்டசபை போன்ற பிரதிநிதித்துவ அமைப்புகளில் பிராமணர் அல்லாதவர்களுக்கு இட ஒதுக்கீடு அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதில் பெரியார் முனைப்புடன் இருந்தார். இது தொடர்பான ஒரு தீர்மானத்தை 1925 இல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற காங்கிரஸ் குழுவின் வருடாந்திர மாநாட்டில் நிறைவேற்ற முயற்சி செய்து தோல்வியடைந்தார். இது போன்ற பிரச்சனைகளால் 1925 இல் காங்கிரசை விட்டு வெளியேறினார். அந்த ஏமாற்றத்தைத் தொடர்ந்து, பெரியார் 1925இல் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார்.

பகுத்தறிவுக் கருத்துகளை மக்களிடையே பரப்புவதில் மக்கள் தொடர்புச் சாதனங்களின் முக்கியத்துவத்தைப் பெரியார் புரிந்து கொண்டார். குடியரசு (1925), ரிவோல்ட் (1928), புரட்சி (1933), பகுத்தறிவு (1934), விடுதலை (1935) போன்ற பல செய்தித்தாள்களையும் இதழ்களையும் பெரியார் தொடங்கினார். சுயமரியாதை இயக்கத்தின் அதிகாரபூர்வ செய்தித்தாள் குடி அரசு ஆகும். பிராமணரல்லாதோர், பெண்கள், சமயத்தில் சிறுபான்மையினர் ஆகியோரின் எண்ணங்களை அது வெளிக்கொணர்ந்தது, ஒவ்வொரு இதழிலும் சமூகம் பிச்சனைகள் தொடர்பான தனது கருத்துகளைப் பெரியார் வழக்கமான கட்டுரையாக எழுதினார். அவ்வப்போது சித்திரபுத்திரன் எனும் புனைப் பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

காலவோட்டத்தின் ஊடாகப் பெரியார் பல நாடுகளுக்குச் சென்றார். அந்நாடுகளைச் சேர்ந்த அறிவார்ந்த மக்களோடு உரையாடினார். சிங்கப்பூர், மலேசியா (1929-30, 1954) எகிப்து, சோவியத் ரஷ்ய குடியரசு (தற்போதைய ரஷ்யா), கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்ஸ் மற்றும் போர்த்துகல் (1931-1932) மற்றும் பர்மா (1954 இல் நடைபெற்ற புத்தரின் 2500 வது பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளச் சென்றார்) ஆகிய நாடுகளுக்குச் சென்று வந்தார். சோவியத் ரஷ்யாவிலும் ஐரோப்பாவிலும் அவர் பெற்ற பயண அனுபவங்கள் அவரை சமதர்மக் கருத்துக்களின்பால் நாட்டம்கொள்ள வைத்தன. பௌத்த சமய முன்னோடியும், தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதியுமான சிங்காரவேலருடன் நெருக்கமான உறவு கொண்டிருந்தார். B.R.அம்பேத்கர் எழுதிய சாதி ஒழிப்பு (Annihilation of caste) எனும் நூலை, அந்நூல் வெளிவந்தவுடன் 1936இல் தமிழில் பதிப்பித்தார். B.R.அம்பேத்கர் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்.

1937இல் ராஜாஜியின் தலைமையிலான அரசின் செயல்பாட்டினை எதிர்க்கும் விதமாக, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்ததற்கு எதிராகப் பெரியார் மக்கள் செல்வாக்கு பெற்ற இயக்கத்தை நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டமானது (1937-1939) தமிழ்நாட்டு அரசியலில் மிக பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தப் போராட்டத்துக்காக பெரியார் சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறையில் இருந்தபோதே நீதிக்கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் பின்னர் நீதிக்கட்சி சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்தது. அதற்கு 1944இல் திராவிடர் கழகம் (திக) எனப் புதுப்பெயர் சூட்டப்பெற்றது.

சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி (1952-54) பள்ளிக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திய தொழில் கல்வி பயிற்சித் திட்டமானது, மாணவர்களுக்கு அவர்களின் தந்தையர்கள் செய்து வந்த தொழில்களில் பயிற்சியளிப்பதாக அமைந்தது. இதை குலக்கலிவத் திட்டம் (சாதியை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை) என விமர்சித்த பெரியார் இத்திட்டத்தை முழுமையாக எதிர்த்தார். இதற்கு எதிராக பெரியார் மேற்கொண்ட போராட்டங்கள் ராஜாஜியின் பதவி விலகலுக்கு இட்டுச் சென்றது. கு.காமராஜ் சென்னை மாநிலத்தின் முதலமைச்சரானார். பெரியார் தன்னுடைய தொன்னூற்று நான்காவது வயதில் (1973) இயற்கை எய்தினார். அவரது உடல் சென்னையில் பெரியார் திடலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

**பெரியாரின் இந்தி எதிர்ப்பு நிலைப்பாடு:**

தென்னிந்தியாவிலுள்ள சாதிமுறையானது வடஇந்தியப் பிராமணர்களின் வருகையோடு தொடர்புடையது என பெரியார் வலியுறுத்தினார். பண்டையத் தமிழ்ச் சமூகம் திணைகளை (நிலப்பகுதிகள்) அடிப்படையாகக் கொண்ட வேறுவகைப்பட்ட அடுக்கமைவைக் கொண்டிருந்ததாக அவர் கூறினார். அம்முறை சுற்றுச்சூழல், வாழ்வாதாரத்திற்கான வழிகள், மக்கள் மேற்கொண்ட தொழில் ஆகியவற்றால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என்றும் கூறினர். வட இந்திய எதிர்ப்பானது பெரியாரை இந்தி எதிர்ப்பு நிலைபாட்டை மேற்கொள்ள வைத்தது.

**சமயம் குறித்து பெரியார்:**

முன்னேற்றமும் நீதியும் வழங்கப்பட வேண்டுமாயின் சமயம் ஒழிக்கப்பட வேண்டியதன் தேவையைப் பெரியாரின் அனுபவங்கள் அவருக்குக் கற்றுக் கொடுத்தன. ஏற்கனவே நிறுவப்பட்டிருந்த நடைமுறைகளான, நம்பிக்கை பண்பாடு, மரவு போன்றவற்றை கட்டுடைப்பதற்குப் பெரியார் நாத்திகவாதத்தை (கடவுள் மறுப்பு) முன் வைத்தார். சமயததின் இடத்தில் பகுத்தறிவு வைக்கப்பட வேண்டுமென்றார். ''சமயம் என்றால் நீங்கள் மூட நம்பிக்கைகளை எற்றுக் கொள்கிறீர்கள் என்று பொருள்'' என உறுதிபடக் கூறினார். பெரியார் தன் வாழ்நாள் முழுவதையும் தான் நிறுவிய சிந்தனையாளர் அல்லது பகுத்தறிவாளர்கள் அமைப்புகள் மூலமாக மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் பரப்புரை செய்வதில் செலவழித்தார். கோவில்களில் நிலவிய பரம்பரை அர்ச்சகர்கள் முறையை அவர் எதிர்த்தார். சாதி அடிப்படையில் இல்லாமல், முறையான சமய அறிவைப் பெற்றுள்ள தகுதியுடைய தனி நபர்களும் அர்ச்சகர் ஆகலாம் என அவர் வாதிட்டார். பிராமண அர்ச்சகர்களையும் வேதச் சடங்குகளையும் புறக்கணிக்கும்படி அவர் மக்களை ஊக்குவித்தார். சடங்குகளற்ற சாதிமறுப்பு, சுயமரியாதை திருமணங்களைப் பரிந்துரைத்தார்.

**பெரியார், ஒரு பெண்ணியவாதி:**

பெரியார் ஆணாதிக்க சமூகத்தை விமர்சித்தார். குழந்தைத் திருமணத்தையும் தேவதாசி முறையையும் கண்டனம் செய்தார். 1929 முமதல் சுயமரியாதை மாநாடுகளில், பெண்களின் மோசமான நிலை குறித்து குரல் கொடுக்கத் தொடங்கியதிலிருந்து, பெண்களுக்கு விவாகரத்து பெறுவதற்கம் சொத்தில் பங்கு பெறுவதற்கும் உரிமை உண்டு என ஆணித்தரமாக வலியுறுத்தினார். ''திருமணம் செய்து கொடுப்பது'' எனும் வார்த்தைகளை மறுத்த அவர் அவை பெண்களைப் பொருட்களாக நடத்துகின்றன என்றார். அவைகளுக்கு மாற்றாக திருக்குறளில் இருந்து எடுக்கப்பட்ட வாழ்க்கைத் துணை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டினார். பெண்ணியம் குறித்து பெரியார் எழுதிய மிக முக்கியமான நூல் பெண் ஏன் அடிமையாளாள்? என்பதாகும்.

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கப்படுவது அவர்களுக்குச் சமூகத்தில் நன்மதிப்பையும், பாதுகாப்பையும் வழங்கும் என பெரியார் நம்பினார். சொத்துக்கள், பாதுகாவலர்களாக இருத்தல், மற்றும் தத்தெடுத்தல் ஆகியவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்றார். குடும்பக் கட்டுப்பாடு, கருத்தடை ஆகியவற்றை வலுவாக ஆதரித்த அவர் தாய்மை என்பது பெண்ணுக்கு பெருஞ்சுமையாக உள்ளது என்றார்.

1989 இல் தமிழக அரசு, மாற்றங்களை விரும்பிய சீர்த்திருத்தவாதிகளின் கனவை நனவாக்கும் வகையில் 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து வாரிசுரிமைச் சீர்திருத்தச் சட்டத்தை அறிமுகம் செய்தது. அச்சட்டம் முன்னோர்களின் சொத்துக்களை உடைமையாகப் பெறுவதில் பெண்களுக்குச் சமஉரிமை உண்டென்பதை உறுதிப்படுத்தியது. முன்மாதிரியாக அமைந்த இந்தச்சட்டம் தேசயி அளவிலும் இது போன்ற சட்டங்கள் இயற்றப்படுவதற்கு அடிப்படையாக அமைந்தது.

**இரட்டைமலை சீனிவாசன்:**

இரட்டைமலை சீனிவாசன் (1859-1945) தாத்தா எனப் பரவலாக அறியப்பட்ட இவர் 1859 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் பிறந்தார். சாதிப்படிநிலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதி, சமத்துவம், சமூக உரிமைகள் ஆகியவற்றுக்காகப் போராடினார். அவருடைய தன்னலமற்ற சேவைக்காக ராவ்சாகிப் (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936)

ஆகிய பட்டங்களால் அவர் சிறப்புப் செய்யப்பட்டார். அவரது சுயசரிதையான ஜீவிய சரித சுருக்கம் 1939இல் வெளியிடப்பட்டது. இந்நூல் முதன்முதலாக எழுதப்பெற்ற சுயசரிதை நூல்களில் ஒன்றாகும்.

தீண்டாமையின் கொடுமைகளை அனுபவித்த இரட்டைமலை சீனிவாசன் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். 1893 இல் ஆதிதிராவிட மகாஜன சபை எனும் அமைப்பை உருவாக்கினார். ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பு மற்றும் சென்னை மாகாண ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் கூட்டமைப்பு ஆகிய அமைப்புகளின் தலைவராகப் பணியாற்றினார். ஒடுக்கப்பட்ட மக்களோடு தொடர்புடைய கேள்விகள், பிரச்சனைகள் குறித்து இந்திய தேசியக் காங்கிரஸ் மற்றும் நீதிக்கட்சி தலைவர்களுடன் தொடர்ந்து விவாதித்தார். தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகளைச் சந்தித்த இரட்டைமலை சீனிவாசன் அவருடன் நெருக்கமானார். 1923இல் சென்னை மாகாண சட்டசபை உறுப்பினரான அவர் நீதிக்கட்சியில் தனது செல்வாக்கினை ஏற்படுத்தி ஒடுக்கப்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்தார்.

B.R.அம்பேத்காரின் நெருக்கமானவரான அவர், லண்டனில் (1930 மற்றும் 1931) நடைபெற்ற முதல், இரண்டாம் வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டு சமூகத்தின் விளிம்புநிலை மக்களின் கருத்துக்களுக்காகக் குரல் கொடுத்தார். 1932இல் செய்துகொள்ளப்பட்ட பூனா ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களுள் அவரும் ஒருவர்.

**மயிலை சின்னதம்பி ராஜா:**

மயிலை சின்னதம்பி ராஜா (1883-1943) மக்களால் எம்.சி.ராஜா என அழைக்கப்பட்ட அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பைச் சேர்ந்த தலைவர்களில் முக்கியமானவர். ஒரு ஆசிரியராகத் தனது பணியைத் தொடங்கிய அவர் பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கான பல்வேறு பாடப்புத்தகங்களை எழுதினார். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) உருவாக்கியவர்களில் ஒருவராவார். சென்னை மாகாணத்தில் ஒடுக்கப்பட்ட வகுப்பிலிருந்து சட்டமேலவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் உறுப்பினராவார் (1920-1926). சென்னை சட்ட சபையில் நீதிக்கட்சியின் துணைத் தலைவராகச் செயல்பட்டார்.

பின்னாளில் அவர் நீதிக்கட்சியிலிருந்து விலகினார். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் எனக்கோரிய அவர் பொது நீர்நிலைகள், பாதைகள் முதல் இடுகாடுகள் வரைப் பயன்படுத்தும் எரிமை ஒடுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் வேண்டுமெனக் கோரி பல பொதுக் கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தினார். மேலும் ஆதிதிராவிடர், ஆதிஆந்திரர் எனும் வார்த்தைகளைப் பயன்படுத்துமாறு பரிந்துரைத்தார். 1928இல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக நீண்டகாலம் பணியாற்றினார். தொடக்கத்தில் தனித்தேர்தல் தொகுதி வேண்டுமெனக் கோரிய அவர் பூனா உடன்படிக்கைக்குப் பின்னர் அந்நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டு கூட்டுத்தொகுதி முறையை ஆதரித்தார்.

**தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்கள்:**

இந்தியாவில் தொழில்கள் வளர முதல் உலகப்போர் (1914-1918) உத்வேகம் அளித்தது. போர்க்காலத்தேவைகளை நிறைவு செய்துவந்த இத்தொழிற்சாலைகள் மிக அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்தியிருந்தன. போர் முடிவடைந்ததால் போர்காலத் தேவைகளும் குறைந்தன. எனவே, அனைத்து தொழிற்சாலைகளிலும் ஆட்குறைப்பு செய்யப்பட்டன. இத்துடன் ஏற்பட்ட விலைவாசி ஏற்றமும் தொழிலாளர் இயக்கங்கள் தோன்றுவதற்கு உந்து சக்தியாக அமைந்தன. அணி திரட்டப்பட்டத் தொழிலாளர்களின் பலத்தை உணர்ந்திருந்த தேசியவாதிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு நல்கத் தொடங்கினார். சென்னை மாகாணத்தில் பி.பி.வாடியா, ம.சிங்காரவேலர், திரு.வி.கல்யாணசுந்தரம் போன்றவர்கள் தொழிலாளர் சங்கங்களை அமைப்பதில் முன்முயற்சி மேற்கொண்டனர். 1918இல் இந்தியாவின் முதல் தொழில் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கம் (Madras Labour Union) உருவாக்கப்பட்டது.

அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31இல் பம்பாயில் நடைபெற்றது. பல தீர்மானங்கள் குறித்து பிரதிநிதிகள் விவாதித்தனர். தொழிலாளர்களின் பிரச்சனைகளில் காவல்துறை தலையிடுவதிலிருந்து பாதுகாப்பு, வேலையில்லாதவர்களுக்கென ஒரு பதிவேட்டைப் பராமரித்தல், உணவுப் பண்டங்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடு, காயமடைந்தோர்க்கு ஈட்டுத்தொகை மற்றும் உடல்நலக் காப்பீடு ஆகியவை இவற்றில் அடங்கும். இவைகளைத் தவிர தொழில் முதலாளிகளுக்கு சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருப்பது போல தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமெனப் பிரதிநிதிகள் கோரினர்.

சென்னை மாகாண தொழிலாளர் இயக்க நடவடிக்கைகளில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தவர் ம.சிங்காரவேலர் (1860-1946) ஆவார். சென்னையில் பிறந்த அவர் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த மாநிலக் கல்லூாயீல் பயின்று பட்டம் பெற்றார். இளமைக் காலத்தில் பௌத்தத்தைப் பரிந்துரை செய்தார். அவர் தமிழ், ஆங்கிலம், உருது, இந்தி, ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் ரஷ்யன் என பலமொழிகள் அறிந்திருந்ததோடு காரல் மார்க்ஸ், சார்லஸ் டார்வின், ஹெர்பர்ட் ஸ்பென்சர், ஆல்பர்ட் ஐன்ஸ்டின் ஆகியோரின் கருத்துக்களைத் தமிழில் வடித்தவர். 1923இல் முதல் முதலாக மே தின விழாவை ஏற்பாடு செய்தவரும் அவரே. அவர் இந்திய பொதுவுடைமை (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஆரம்பகால தலைவர்களில் ஒருவராக இருந்தார். தொழிலாளி வர்க்கத்தின் பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்காக தொழிலாளன் (Worker) என்ற பத்திரிக்கையை வெளியிட்டார். பெரியாரோடும் சுயமரியாதை இயக்கத்தோடும் நெருக்கமாக இருந்தார்.

**இந்திய விடுதலைக்கு முன்பு மொழிப் போராட்டம்:**

பொதுவாக, மொழி என்பது அடையாளத்தின் வலிமையான குறியீடாகும், மேலும் இது ஒரு சமூகத்தின் பண்பாடு மற்றும் உணர்வுகளுடன் இயைந்து நிற்பது. தமிழ்மொழி பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தனது மேன்மையை மீட்டுப் பெற்றது. மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம், பெரியாரின் மொழிச் சீர்திருத்தம் மற்றும் தமிழிசை இயக்கம் ஆகியவை தமிழுக்கு வலுச்சேர்ந்தன. திராவிட உணர்வுக்கு இட்டுச் சென்ற தமிழ் மறுமலர்ச்சி நவீனத் தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் அதன் கலை வடிவங்களுகடைய வளர்ச்சியிலும் பெரும் பங்களிப்பைச் செய்தது. ஆகம கோவில்களில் செய்யப்படும் சடங்குகள் தமிழில் செய்யப்படுவதில்லை. இசை நிகழ்ச்சிகளிலும் தமிழ் பாடல்கள் ஓரளவிலான இடத்தையே பெற்றிருந்தன. ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார். 1912இல் தஞ்சாவூர் 'சங்கீத வித்யா மகாஜன சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அதுவே தமிழிசை இயக்கத்தின் கருமூலமானது. இசை நிகழ்வுகளில் தமிழில் பாடல்கள் பாடப்படுவதற்கு இவ்வியக்கம் முக்கியத்துவம் வழங்கியது. தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க 1943-இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் வெவ்வேறு காலப்பகுதிகளில் இந்தி கட்டாயமொழியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. தமிழ்மொழிக்கும், பண்பாட்டிற்குமான அச்சுறுத்தலாகவே கருதப்பட்டது. சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த ராஜாஜி இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக அறிமுகம் செய்தார். இது சென்னை மாகாணத்தில் கடுமையான எதிர்ப்பை உருவாக்கியது. தமிழுக்கு மேலாக இந்தியை அறிமுகம் செய்வது திராவிடர்களுக்கான வேலைவாய்ப்புகளை மறுப்பதாக அமையுமென பெரியார் அறிவித்தார். இந்திமொழி அறிமுகம் செய்யப்பட்டால் தமிழ்மொழி பாதிப்புக்குள்ளாகும் என மறைமலை அடிகள் சுட்டிக் காட்டினார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் போராட்டத்தை பிராமணியத்திற்கும் தமிழின் மீதான சமஸ்கிருதத்தின் ஆதிக்கத்திற்கும் எதிரான கருத்தியல் போராகவே கருதினார். பிராமணியத் தத்துவத்தைப் பரப்புவதற்கும் அதன்மூலம் சாதிப்படிநிலைகளையும், பாலின சமத்துவமின்மையையும் பாதுகாப்பதற்குமான வாகனமே சமஸ்கிருதம் என அவர்கள் கருதினர். போராட்டத்தின்போது பெருவாரியான மக்கள் கலந்துகொண்ட பொதுக்கூட்டங்களும்,பேரணிகளும், உண்ணாவிரதங்களும் அரங்கேறின. பல்லாயிரக்கணக்கான மக்கள் இப்போராட்டங்களில் பங்கேற்றனர்.

**பெண்கள் இயக்கங்கள்:**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னை மாகாணத்தில் பெண்களை வலிமையுள்ளவர்களாக மாற்றுதல் எனும் நோக்கத்துடன் பல பெண்ணிய இயக்கங்கள்

நிறுவப்பெற்றன. அவைகளுள் தமிழ் நாட்டில் உருவான இந்தியப் பெண்கள் சங்கம் (Women's India Association – WIA) அகில இந்தியப் பெண்கள் மாநாடு (All India Women's Conference – ALWC) ஆகியவை முக்கியமானவையாகும். இந்தியப் பெண்கள் சங்கம் (WIA) என்பது 1917இல் அன்னிபெசன்ட், டோரதி ஜினராஜதாசா, மார்கரெட் கசின்ஸ் ஆகியோர்களால் சென்னை அடையாறு பகுதியில் தொடங்கப்பெற்றது. இவ்வமைப்பு தனிநபர் சுகாதாரம், திருமணச் சட்டங்கள், வாக்குரிமை, குழந்தை வளர்ப்பு மற்றும் பொது வாழ்வில் பெண்களின் பங்கு ஆகியவை குறித்து பல்வேறு மொழிகளில் துண்டுப்பிரசுரங்களையும்ட செய்தி மடல்களையும் வெளியிட்டன. இதே சமயத்தில் இந்தியப் பெண்கள் சங்கம், பெண்கல்வி குறித்த பிரச்சனைகளைக் கையாள்வதற்காக 1927இல் அகில இந்திய பெண்கள் மாநாட்டை நிறுவியது. மேலும் அரசு பெண்களின் மேம்பாட்டிற்காகப் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமெனப் பரிந்துரை செய்தது.

பெண்களின் விடுதலை என்பது சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பெரியாரின் தலைமையிலான சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தோர், பாலின சமத்துவம் மற்றும் பாலினம் குறித்த சமூகத்தின் உணர்வுகளை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காகப் பணியாற்றினர். தங்களுடைய கருத்துகளைப் பங்கிட்டு கொள்வதற்கான ஒரு இடத்தை பெண்களுக்கு இவ்வியக்கம் ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வியக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றிய பெண்கள் பலர் இருந்தனர். முத்துலட்சுமி அம்மையார், நாகம்மை, கண்ணம்மா, நீலாவதி, மூவலூர் இராமாமிர்தம், ருக்மணி அம்மாள், அலமேலு மங்கை தாயாரம்மாள், நீலாம்பிகை மற்றும் சிவகாமி சிதம்பரனார் ஆகியோர் அவர்களுள் முக்கியமானவர்கள் ஆவர்.

கடவுளுக்கு இறைப்பணி செய்யும் சேவகர்களாக இளம் பெண்களை இந்து கோவில்களுக்கு அர்ப்பணிக்கும் வழக்கம் இருந்தது அவ்வாறு அர்ப்பணிக்கப்பட்டோர் தேவதாசி என்று அறியப்பட்டனர். கடவுளுக்குச் செய்யப்படும் சேவை எனும் நோக்கில் அமைந்திருந்தாலும் நாளடைவில் இம்முறை பெரும் ஒழுக்கக்கோட்டிற்கும் பெண்களைத் தவறாகப் பயன்படுத்துவதற்கும் இட்டுச்சென்றது. இத்தேவதாசி முறையை ஒழிப்பதற்காகச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதற்காக நடைபெற்ற இயக்கத்தில் டாக்டர்.முத்துலட்சுமி அம்மையார் முதலிடம் வகித்தார். மதராஸ் (அர்பணிப்பைத் தடுத்தல்) தேவதாசி சட்டம் 1947 எனும் சட்டம் அரசால் இயற்றப்பட்டது.

, , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , ,

**11th political science**

**14. தமிழகத்தில் அரசியல் வளர்ச்சி**

**தமிழக அரசியல் வரவாறு:**

இந்தியாவின் பிற பகுதிகளுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாடானது, ஆரோக்கியமான நிர்வாக மற்றும் அரசியல் பண்பாடும், கிட்டத்தட்ட நிலையான பொருளாதார வாழ்வு மற்றும் மிக தொன்மையான காலத்திலிருந்து தற்காலம் வரை தொடர்ச்சியான மரபுகளையும் கொண்டதாகும். தென்னிந்தியவின் சென்னை மாகாணம் என்பது (The Madras Presidency) ஆங்கிலேயரின் அரசியல், நிர்வாக தேவைகளுக்காக தோற்றுவிக்கப்பட்டது. சென்னை மாகாணம் கி.பி. (பொ.ஆ) 1801-இல் உருவாக்கப்பட்டது. இந்த மாகாணமானது, 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் தற்பொழுதுள்ள மாநிலங்களான ஆந்திரா, கேரளாவின் மலபார் பகுதி, தெற்கு கரடநாடகா, ஒடிசாவின் வடபகுதி முழுவதும் கர்நாடகா, ஒடிசாவின் வடபகுதி ஒன்றிய பிரதேசம் ஆகியவை உள்ளடக்கிய பகுதிகளாகும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் சென்னை மாகாணத்தின் அரசியலானது பிராமணர் - பிராமணரல்லாதோரின் மோதல் தொடர்பான ஆதிக்கம் கொண்டதாக இருந்தது. அறிஞர்களும், அரசியல் சிந்தனையாளர்களும் இந்த பிராமணர் - பிராமணரல்லாதோர் என்ற இரு பிரிவினரிடையே உள்ள மோதல்கள் பற்றி புரிந்து கொள்வது என்பதுதான் தென்னிந்தியவின் அரசியல் மற்றும் சமூக வாழ்வை புரிந்து கொள்வதற்கு அவசியமானது என்று நம்பினார்கள்.

**சென்னை மாகாணம்:**

அதே நேரத்தில், சில பிலாமணரல்லாத சாதி குழுக்களின் உறுப்பினர்கள் தொழிற்துறை வாணியம் நிறுவனங்களில் வேலை வாய்ப்பினை கோரினர். கணிசமான அளவிற்கு, பிராமணரல்லாத சாதிபிரிவினர்கள் கிராமப் புறங்களில் இருந்து மாகாணத்தின் நகர்புறத்திற்கு புலம்பெயர்ந்தனர்.

அவர்கள் தங்களின் அடையாளத்தை உறுதி செய்ய விரும்பினார்கள் மற்றும் படிப்படியாக கமூகத்தில், அரசியலில், நிர்வாகத்தில் பிராமணர்கள் அனுபவித்த ஏகபோக அதிகாரம் மற்றும் தனி உரிடை சலுகைகளை சவாலாக நின்று எதிர்த்தனர்.

''திராவிடன்'' என்ற வார்த்தை அறிஞர்கள் மற்றும் தமிழரல்லாதோர்/ஆரியரல்லாத தமிழ் பேசுவோரை அடையாளம் கண்டுகொள்ள பயன்படுத்தப்பட்டது. அதே நேரத்தில் பிராமணர்கள் ''ஆரியர்கள்'' எனவும் அடையாளப்படுத்தப்பட்டனர் மற்றும் பிராமணரல்லாதோர் ''திராவிடர்கள்'' எனவும் அவர்கள் தமிழ்மொழி, பண்பாடு மற்றும் நாகரீகத்தின் பாதுகாவலர் எனவும் கருதப்பட்டனர்.

**திராவிட இயக்கத்தின் தோற்றம்:**

சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதோரின் தமிழ் அடையாளம், சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை பாதுகாப்பிற்காக ஓர் பராமணரல்லாத குழுவால் துவங்கப்பட்டதே ''திராவிட இயக்கமாகும்''.

**திராவிடர்கள் மற்றும் பிராமணரல்லாதோர்:**

1801 ஆம் ஆண்டு பன்மொழி கொண்ட சென்னை மாகாணமானது (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் துலு) காலனிய ஆட்சியால் உருவாக்கப்பட்டது. இந்தியாவினுடைய பன்மை தன்மையை சென்னை மாகாணத்தில் அரசியல் வளர்ச்சியில் காணமுடியும். வங்காளத்திலும், வடஇந்தியவின் பிற பகுதிகளிலும் சமஸ்கிருதம் மற்றும் வேதங்களை மையப்படுத்திய இந்திய பண்பாடு முன் எடுக்கப்பட்டது. இவற்றோடு இந்தோ-ஆரிய (அ) இந்தோ – ஜெர்மன் மொழிக் குடும்பம் அங்கீகரிக்கப்பட்டது. வேதமல்லாத, சமஸ்கிருதம் அல்லாத பண்பாடு அங்கீகரிக்கப்படவில்லை.

தமிழ் ஆர்வலர்களால் எல்லிஸ் தமிழை நேசிப்பவராகவும், வள்ளுவரின் குறளை மிகவும் விரும்புவராகவும் பாராட்டப்படுகிறார். இவர் பிற தமிழ்ப் படைப்புகளையும் நேசிப்பவராக இருப்பினும், எல்லிசின் காரனிய மற்றும் மதப் பின்னணி அறியப்படவில்லை.

**பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸ்**

பிறப்பு: மே 7இ 1814 கிளாடி இங்கிலாந்து.

இறப்பு: ஆகஸ்ட் 28, 1891 கொடைக்கானல், இந்திய.

**ராபர்ட் கால்டுவெல்**

1837 ஆம் ஆண்டு ஜேம்ஸ் பிரின்சிபே மற்றும் இதர ஆய்வாளர்களால் பிராமண முல ஆவணங்கள் மற்றும் தென்னிந்திய மொழிகள் மீதான ஆய்வுகள் (எல்ஸிஸ் 1816 மற்றும் கால்டுவெல் - 1856) போன்றவைகள் இந்திய கலாச்சாரம் கொண்டது அல்ல என்றும், புத்த, திராவிட மரபுகள கூட இந்தியாவில் இருந்தன என்பது நிரூபிக்கப்பட்டது. தென்னிந்தியாவில், குறிப்பாக, பன்மொழி கொண்ட சென்னை மாகாணத்தில், பிராமணரல்லாதோர் இடத்தில், திராவிட மொழிக்குழுக்கள் மற்றும் திராவிட பண்பாட்டு தொன்மை ஆகியவை, திராவிட அடையாள எழுச்சிக்கு இட்டு சென்றது.

(1) பிராமணர்கள், பிராமணரல்லாதோர் மீது தங்களது மேன்மையை கோருவது மற்றும் (2) பிராமணர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளை ஏகபோகமாக்கியது ஆகிய இரண்டு திராவிட அடையாளமாக மாற்றியமைத்தது. மகாவாஷ்டிராவில் கூட மகாத்மா ஜோதிபா புலே இதே போன்று ஓர் பிராமணரல்லாதோர் என்பதை குறிப்பதாயிற்று.

சென்னை மாகாண பிராமணரல்லாதோரின் பிரச்சனையை புதியதாக தேசியத் தசைவர்கள் குறைபாடு இருந்தது. 1852 ஆம் ஆண்டு கங்காலு லட்சுமி நராஷ் என்பவர் இதனை வெளிப்படுத்தி, ஆங்கிலேய இந்திய கழகத்திலிருந்து வெளியேறி, சென்னை வாழ் மக்கள் சங்கம் என்ற பெயரில் ஓர் அமைப்பை தொடங்கினார். சிப்பாய்க் கலகத்திற்கு பிந்தைய காலங்களில் பிராமணரல்லாத தரைவர்கள் அரசியல் சீர்திருத்தங்களைக் காட்டிலும் சமூக சீர்திருத்ததின் மீது கவனம் செலுத்தினார். 1909 ஆம் ஆண்டு மிண்டோ மார்லி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, சென்னை மாகாணரல்லாதோருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் போதிய பிரதிநிதித்துவம் இல்லை என்று எதிர்ப்பு காட்ட துவங்கினர். 1913 ஆம் ஆண்டு ஆளுனரின் செயற்குழு உறுப்பினர், திரு. சர். அலெக்சாண்டர் ஜோர்டன் கார்டிவ் என்பவர் அளித்த புள்ளியியல் விவரமானது, மக்கள் தொகையில் மூன்று சதவீதம் மட்டும் அங்கம் வகிக்கும் பிராமணர்கள் வாய்ப்புகளையும் எடுத்து கொண்டார்கள் என்பதை நிருபித்தது.

**நீதிக் கட்சி:**

அக்காலத்தில் இருந்த முதன்மையதன அரசியல் கட்சியான இந்திய தேசிய காங்கிரசானது பிராமணர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. எனவே பிராமணரல்லாத உறுப்பினர்களின் கோரிக்கைகளை அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. எனவே சென்னை மாகாணத்தில் உள்ள பிராமணர் அல்லாத தலைவர்கள் பிராமணரல்லாதோர் அரசியல் அமைப்பு ஒன்றினை துவங்க நினைத்தனர். முதலாவது உலகப் போருக்கு பிறகு ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் நிறுவனங்களில் பிரதிநிதியாகும் வாய்ப்பு போன்றவை இவர்களின் செயல்பாடுகளை ஊக்குவித்தன.

1916 ஆம் ஆண்டு டாக்டர். டி.எம். நாயர், சர் பிட்டி தியாகராயர் மற்றும் டாக்டர்.சி.நடேசனார் போன்றோர்கள் பிராமணரல்லாதோரின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார நலன்களை முன்னேற்றுவதற்காக தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பை நிறுவினர். இவ்வாறு உருவான பின்னர் தென்னிந்திய விடுதலை கூட்டமைப்பு (SILF) புகழ் பெற்ற நீதிக்கட்சியானது. “நீதிக்கட்சி” என்ற பெயர் ஆங்கில இதழான “நீதி” என்பதன் அடிப்படையில் பெயரிடப்பட்டது. இவர்களின் ஓயாத முயற்கியால் பிராமணரல்லாதோருக்கு மாகாண சட்டமன்ற தேர்தலில் இட ஒதுக்கீடு பெற்றுத்தந்தனர்.

**நீதிக் கட்சியின் முக்கிய நோக்கங்கள்:**

a) தென்னிந்தியாவின் அனைத்து பிராமணரல்லாதோரின் கல்வி, சமூக பொருளாதார மற்றும் செல்வ மேம்பாட்டினை உருவாக்கி முன்னேற்றுதல்.

b) அரசமைப்பிலான அரசாங்கத்தைக் கொண்டு பிராமணரல்லாதோரின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல்.

c) அரசமைப்பிலான உண்மையான பிரிதிநிதித்துவ அரசாங்கமாக ஆக்குதல்

d) பிராமணரல்லாதோரின் கோரிக்கைகளுக்கு ஆதரவாக பொதுக்கருத்தை உருவாக்குதல்.

1919 ஆம் ஆண்டு மாண்டேகு செம்ஸ்போ∴ர்டு சீர்திருத்தமானது மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையைக் கொண்டு வந்ததன் மூலம் சில துறைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்திய அமைச்சருக்கு என ஒதுக்கப்பட்டது. இரட்டை ஆட்சியின் கீழ் 1920 ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி ஒத்துழியாமையின் ஒரு பகுதியாக தேர்தலை புறக்கணித்தது. ஆனால் பல்வேறு அடையாளங்களில் காங்கிரசைச் சேர்ந்த பலர் தேர்தலில் போட்டியிட்டனர்.

நீதிக் கட்சி பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று சென்னை மாகாணத்திற்கு எ. சுப்பராயலு முதலமைச்சரானார், அவரின் இறப்பிற்கு பிறகு பனங்கல் ராஜா முதலமைச்சாரானார்.

அவர்கள் சூத்திரர்களுக்கு மற்றும் பஞ்சமர்களுக்கு எதிராக இருந்க பொது வழி, போக்குவரத்து, உணவு விடுதிகள் மற்றும் பொது கிணறுகளைப் பயன்படுத்துதல் போன்றவற்றில் இருந்த பாகுபாடுகளை நீக்கினர். இந்து சமய அறநிலைய வாரியத்தை அமைத்ததின் மூலம் ஆலய விவரங்களை ஒழுங்குபடுத்தினர். பஞ்சமர்களுக்கு நிலத்தை ஒதுக்கீடு செய்து கொடுத்தனர் (பஞ்சமி நிலம்). புதிய நகரங்களையும், தொழிற்பேட்டைகளையும் அறிமுகப்படுத்தினர். ஒடுக்கப்பட்டோரின் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்கு சிறப்பு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதனால் சில பள்ளிகளில் "மதிய உணவு திட்டத்தை" பரிசோதனை முறையில் கொண்டுவந்தனர். மருத்துவ கல்விக்கு சமஸ்கிருதம் அறிவு அடிப்படைத் தகுதி என்பது நீக்கப்பட்டு பிராமணரல்லாத மாணவர்கள் மருத்துவக் கல்வியில் நுழைவதற்கு வழி செய்யப்பட்டது. டாக்டர். முத்துலட்சுமி அவர்களின் முயற்சியால் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டதுடன், பெண்கள் வாக்குரிமையைப் பெற்றனர்.

கூட்டுறவு சங்கங்கள் மேம்படுத்தப்பட்டன. மிராசுதார் முறை ஒழிக்கப்பட்டதுடன் மற்றும் 1923 ஆம் ஆண்டு நீர்ப் பாசனத்திட்டங்களும் உருவாக்கப்பட்டன. மேலும் இந்த ஆட்சிகாலத்தில் தான் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் ஆந்திரா பல்கலைக்கழகம் ஆகியவை உருவாக்கப்பட்டன. சில துறைகள் ஒதுக்கப்பட்டாலும் நீதிக் கட்சி மட்டுமே மிகவும் சிறப்பான அரசாங்கத்தை கொடுத்தது.

**பெரியார் ஈ. வெ. ராமசாமி:**

ராஜாஜி அரசாங்கம் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது என முடிவெடுத்ததை தமிழ் மொழி மற்றும் பண்பாட்டை அழித்து "வட இந்திய ஏகாதிபத்தியத்தை" நீறுவும் முயற்சி என பெரியார் கருதினார். மேலும் இந்தி திணிப்பு என்பது திராவிடர்களை அடிமைப்படுத்தி ஆரியர்களின் மேலதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சசி என்று பெரியார் கூறினார்.

சென்னை மாகாணத்தில் மாபெரும் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றதன் விளைவாக மாகாண அரசாங்கத்தால் பெரியார் சிறையில் அறையபட்டார். பதினைந்து ஆண்டுகள் இருபத்து மூன்று சிறை சென்றனர் என்பதால் 'சிறைப்பறவை' என்றும் அடைமொழியிட்டு அழைக்கப்பட்டார். 1938 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது அவர் நீதிக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு நீதிக் கட்சியானது ஆங்கிலேய அரசாங்கத்தின் கீழ் தமிழ்நாடு தனிநாடாக வேண்டும் என்ற தீர்மானத்தை இயற்றியதுடன் இது ஆங்கிலேய ஆரசாங்கத்தின் இந்தியாவிற்கான அமைச்சருடைய நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்றது. சென்னை மாகாண காங்கிரவில் பெரியார் முன்னோடியாக இருந்ததால் அரசியல் அரங்கில் பிராமணரல்லாதோர் அரசியலில் பங்குபெறுவதற்கான விகிதாச்சார பிரதிநித்துவத்திற்க்குச் சாதகமாக காங்கிரசில் தீர்மானம் கொண்டு வந்ததில் மிகச் சிறப்பாக தனது முயற்சியை செய்தார். வைக்கம் சத்தியாகிராக போராட்டத்திற்கு தனது சிறப்பான

தலைமையை அளித்ததுடன் காங்கிரஸ் கட்சி நிறுவிய சேரன்மா தேவி குருகுலத்தில் நடந்த சாதிப்பாகுபாட்டிற்கு எதிராக பிரச்சாரம் செய்தார்.

பெரியார் தன்னுடைய திட்டங்களை காங்கிரசு கட்சி ஏற்றுக்கொள்ளச் செய்வதில் எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்தபோது காங்கிரசை விட்டு விலகி 1925 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். இவ்வியக்கம் தேர்தல் அரசியலை தவிர்த்ததுடன் சமூக சீர்திருத்தம், சாதிமுறையை நீக்குவது, பெண்கள் மீதான பாலின அடிப்படையிலான தடை நீக்கம், பரம்பரை அர்ச்சகர் உரிமையை எதிர்ப்பது போன்றவற்றிற்காக பிராச்சாரம் செய்தது. சுயமரியாதை இயக்கம் மிக தீவிரமான பிரச்சாரத்தை மேற்கொண்டு பழங்காலம் முதலான மூடநம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் எதிர்த்துடன் பகுத்தறிவற்ற மரபுகள் மற்றும் சமத்துவமற்ற தன்மைகள் நீடித்திருப்பதை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் மகத்தின் பங்குப்பற்றியும் வினா எழுப்பியது. இந்த சுயமரியாதை இயக்கம், பகுத்தறிவு மாண்பு மறுப்பினை எதிர்த்தல் மற்றும் தனிமனித சமத்துவம் (பெண்கள் உட்பட்ட) போன்றவை மரபு மற்றும் மதத்தின் கோரப்பிடியின் கீழ' இருப்பதை எதிர்த்து பிராச்சாரம் செய்தது.

சுயமரியாதை இயக்கம் அதன் இயக்க உறுப்பினர்களுக்கு சாதி துணைப்பெயர்களை துறப்பதுடன், சாதி – மத அடையாளங்களையும் கைவிட ஆணையிட்டது. அது சாதியற்ற, புரோகிதர் அற்ற தவிர சம்பிராதாய சடங்குகள் அற்ற ஒப்பந்தத் திருமணங்களை அறிமுகம் செய்தது. இது சுயமரியதைத் திருமணம் எனப்பட்டது. இவ்வியக்கம் தீண்டாமைக்கு எதிராக மட்டும் போராடவில்லை, மாறாக சாதிமுறை அமைப்பு மற்றும் சாதி அடிப்படையிலான பலவீனங்கள், தனிமனிதர்கள் மீது திணிக்கப்படும் மாண்பு குறைவு நடவடிக்கைகள் ஆகியவற்றினையும் எதிர்த்து போராடியது.

சுயமரியாதை இயக்கம் வெறும் பெயருக்காக மட்டும் பெண்ணுரிமை பற்றி பேசவில்லை. அது பெண்களின் சம உரிமை, சமநிலை மற்றும் சம வாய்ப்புக்காக பிராச்சாரம் செய்தது. பெண் விடுதலையில் சுயமரியாதை இயக்கத்தின் பங்குப்பணி ஓர் ஈடு இணையில்லாதது, என்பதால் அதன் காரமாகவே பெண்கள் மாநாட்டில் ஈ.வெ. ராமசாமிக்கு ‘‘பெரியார்’’ என்ற பட்டம் வழங்கப்பட்டது. பெரியாரின் நாளேடுகளான ‘‘குடியரசு,’’‘‘புரட்சி’’, பின்பு ‘விடுதலை’ போன்றவை சுயமரியாதைக் கருத்துக்களை சிறப்பான முறையில் பிரச்சாரம் செய்தன.

**சுயமரியாதை இயக்கம்:**

1929 ஆம் ஆண்டு செங்கல்பட்டில் முதலாவது சுயமரியாதை மாநாடு நடந்தது. 1937 ஆம் ஆண்டு ராஜாஜி என்று புகழ்பெற்ற C. ராகோபாலச்சாரியின் தலைமையில் வழிநடத்தபட்ட காங்கிரசு கட்சி ஓரிடத்தை தவிர அனைத்து இடங்களிலும் வெற்றிப் பெற்றது. ஆனால் காங்கிரசு கட்சியின் வெற்றியானது நீதிக்கட்சியின் வீழ்ச்சினால் கிடைத்ததாகும். காங்கிரசு அரசாங்கம் அமைக்கப்பட்டு, சென்னை மாகாணத்தின் முதன்மை அமைச்சராக ராஜாஜி ஆனார்.

அதிகாரத்திற்குப் வந்த உடனே காங்கிரசு அரசாங்கம் பள்ளிக் கூடங்களில் இந்தியினை கட்டயப்பாடமாக அறிமுகப்படுத்தியது. பெரியார் இந்தி எதிர்ப்பு போராட்டத்தினை தொடங்கினார்.

இக்கால கட்டத்தில் பொதுவுடைமைக் கட்சி (முன்னதாக 1925-இல் உருவாக்கப்பட்டது) சமதர்மத் திட்டங்களுக்காக தொழிலாளர் இயக்கங்களை ஒன்றிணைந்து தீவிராமாக பரப்புரை செய்து கொண்டிருந்து. M. சிங்காரவேலர் மற்றும் அவரின் உடன் இருந்தோர் சுயமரியாதை இயக்கத்தின் சமூக சீர்திருத்த திட்டங்களால் கவரப்பட்டனர். இதன்படி சமூகங்களின் பொருளாதார திட்டங்களுக்கான, ஓர் பொது திட்டத்தின் அடிப்படையில் செயலாற்ற ஒத்துக்கொண்டனர். (ஈரோடு திட்டம்).

**சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள்:**

1. திராவிட சமுதயத்தை சீர்திருத்துவது மற்றும் அதனை உண்மையான பகுத்தறிவுடையதாக்குதல்.

2. திராவிடர்களின் பண்டைய தமிழ் பண்பாட்டின் அவர்களுக்கு கற்பித்தல்.

3. ஆரிய பண்பாட்டின் ஆதிக்கத்தில் இருந்து திராவிட சமூகத்தைக் காப்பாற்றுதல்

4. மூடநம்பிக்கையான நடவடிக்கைகளை நீக்குவதன் மூலம் இந்து மதத்தை சீர்திருத்துவதுடன் பிராமணர்களின் செல்வாக்கினைக் குறைத்தல்.

பெரியார் பொதுவாக பிராமணரல்லாதவர்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் தொன்மையான திராவிட பண்பாட்டின் புகழை மீட்டெடுக்க விரும்பினார். பிராமண புரோகிதர்கள் இல்லாத சுயமரியாதைத் திருமணத்தை மேற்கொள்ள ஆதரவு தெரிவித்தார். அவர் மத விழாக்களை மக்கள் பின்பற்றுவதை ஆதரிக்கவில்லை. எந்த ஒரு சமூக நிகழ்வுகளிலும் பிராமணர்களின் சேவைகளை பயன்படுத்தாமல் இருக்கச் செய்தார்.

**நீதிக் கட்சியின் வீழ்ச்சி:**

1929-ஆம் ஆண்டு வரை சுயமரியாதை இயக்கமானது சென்னை மாகாணத்தில் ஓர் முன்னோடி இயக்கமாக இருந்தது. 1930 ஆம் ஆண்டுகளில் சென்னை மாகாணத்தில் அதன் புகழ் மங்கத்தொடங்கியது. இந்த வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங்கள் இருந்தன. ஒன்று இந்த இயக்கமானது ஒடுக்கப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவு மக்களிடையே ஆதரவை இழந்து. இராண்டாவதாக, பெரியார் தலைமையில் இருந்த சுயமரியாதை இயக்கம் மிகவும் புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமானது. இறுதியாக உயர்குடியின மற்றும் ஆங்கில ஆதரவு கண்ணோட்டம் ஆகியவை பெருமளவு அதன் வீழ்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களித்தன.

**இந்தி எதிர்ப்பு போராட்டம்:**

நீதிக் கட்சியன் வீழ்ச்சியும், தேர்தல் அரசியலில் நுழைய பெரியார் மறுத்ததும், வளர்ந்து வந்த மகாத்மா காந்தியின் புகழும், இந்திய தேசிய காங்கிரசை 1937 ஆம் ஆண்டு சென்னை மாகாண தேர்தலில் வெற்றிபெற செய்தது. ராஜாஜி முதல் அமைச்சரானார்.

அவர் முழுமையான மது விலக்கு (மது விற்கத் தடை) மற்றும் ஜமீன்தாரி முறை ஒழிப்பை நடைமுறைப்படுத்தினார். மேலும் ஒடுக்கப்பட்டோர் ஆலய நுழைவுக்கு இருக்கும் தடையை நீக்குவதற்கு சட்டம் கொண்டுவந்தார். இருந்தாபோதிலும், இந்தி மொழியை கட்டாயமாக பள்ளியில் அறிமுகப்படுத்திய நடவடிக்கையானது பல பள்ளிக் கூட்டங்களை மூடுவதற்கு காரணமானது. இது சுயமரியாரதக்காரர்கள் மறைமலை அடிகள் போன்றறோரை ஆத்திரமடையச் செய்தது. இதனால் 1937 ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்திற்கு அனைவரும் ஒன்று சேர்ந்தனர். பெரியார் உள்ளிட்ட ஆயிரக் கணக்காண போராட்டகாரர்கள் கைதானார்கள், மேலும் பல பேர் சிறையிலேயே இறந்தனர்.

**உங்களுக்கு தெரியுமா:**

| **வ.எண்** | **சென்னை மாகாணம் முதலமைச்சர்கள்** | **ஆண்டு** |
|---|---|---|
| 1. | அ. சுப்பராயலு | 1920-1921 |
| 2. | பனகல் ராஜா | 1921-1926 |
| 3. | பி. சுப்புராயன் | 1926-1930 |
| 4. | பி. முகுசாமி | 1930-1932 |
| 5. | பொப்பிலி ராஜா | 1932-1937 |
| 6. | பி.டி. இராஜாஜி | 1936 |
| 7. | கே.வி. ரெட்டி | 1937 |
| 8. | சி. இராஜாஜி | 1937-1939 |
| **(குறிப்பு: தமிழ்நாடு அரசு மாநில ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்ட வருடம் 1946 அக்டோபர் 20 முதல் ஏப்ரல் 30)** | | |
| 9. | த. பிரகாசம் | 1946-1947 |
| 10. | ஓ.பி. இராமசாமி | 1947-1949 |
| **முதலமைச்சர்கள் (தேர்தல் நடைமுறைக்குப் பிறகு)** | | |
| 11. | பி.எஸ். குமாரசாமி ராஜாத | 1949-1952 |

| | | |
|---|---|---|
| 12. | சி. இராஜாஜி | 1952-1954 |
| 13. | கு. காமராஜ் | 1954-1957 |
| 14. | கு. காமராஜ் | 1957-1962 |
| 15. | கு. காமராஜ் | 1962-1963 |
| 16. | எம். பக்தவச்சலம் | 1963-1967 |
| 17. | சி.என். அண்ணாதுரை | 1967-1969 |
| 18. | மு. கருணாநிதி | 1969-1971 |
| 19. | மு. கருணாநிதி | 1971-1976 |
| 20. | எம். ஜி. இராமச்சந்திரன் | 1977-1980 |
| 21. | எம். ஜி. இராமச்சந்திரன் | 1980-1984 |
| 22. | எம். ஜி. இராமச்சந்திரன் | 1985-1987 |
| 23. | ஜானகி. இராமச்சந்திரன் | 1988 |
| 24. | மு. கருணாநிதி | 1989-1991 |
| 25. | ஜெ. ஜெயலலிதா | 1991-1996 |
| 26. | மு. கருணாநிதி | 1996-2001 |
| 27. | ஜெ. ஜெயலலிதா | 2001-2001 |
| 28. | ஓ. பன்னீர்செல்வம் | 2001-2002 |
| 29. | ஜெ. ஜெயலலிதா | 2002-2006 |
| 30. | மு. கருணாநிதி | 2006-2011 |
| 31. | ஜெ. ஜெயலலிதா | 2011 |
| 32. | ஓ. பன்னீர்செல்வம் | 2012 (இடைக்கால) |
| 33. | ஜெ. ஜெயலலிதா | மே 16இ 2016 – டிசம்பர் 5 2016 |
| 34. | ஓ. பன்னீர்செல்வம் | டிசம்பர் 2016- பிப்ரவரி 2017 |
| 35. | க. பழனிசாமி | பிப்ரவரி 2017 – தொடர்கிறார் |

**1994-சேலம் மாநாடு:**

1994-ஆம் ஆண்டு பெரியார் தலைமையில் நடைபெற்ற சேலம் மாநாட்டில், ஏற்கெனவே பெரியாரின் தளபதியாகிவிட்ட திறமையான சொற்பொழிவாளரான சி.என். அண்ணாதுரை நீதிக் கட்சியின் பெயரை திராவிடர் கழகம் (தி.க) என்று வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை கொண்டுவந்தார். பெரியார் ‘‘திராவிட நாடு’’ மாநாட்டை கூட்டி திராவிடர்களுக்குத் தனி ‘‘திரவிட நாடு’’ கோரினார். மேலும் அவரின் புகழ் பெற்ற வாசகமான ‘‘திராவிட நாடு திரவிடர்களுக்கே’’ எனவும் முழக்கமிட்டார்.

தனித் ‘‘திரவிட நாடு’’ கோரிக்கையைத் தவிர திராவிடர் கழகமானது சாதியற்ற சமூகத்தை ஏற்படுத்துதல், மதச் சடங்குகளைக் கண்டித்தல், பழமை மற்றும் மூடநம்பிக்கைகள் அற்ற சமூகத்தை அமைத்தல் ஆகியவற்றை விரும்பியது.

திராவிடர் கழகமானது கிராட மற்றும் நகர் புறங்களில் குறிப்பாக மாணவர்களிடத்தில் மிகவும் புகழ்பெற்ற, பல பிராமணர் அல்லாத தலைவர்கள் மற்றும் மாணவர்கள் தங்களுடைய பெயர்களை தூய தமிழில் மாற்றி கொண்டனர்.

**இந்தி எதிர்ப்புப் போராட்டம்-1965:**

1965 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாள் இந்திய அரசு அமைப்புச் சட்டத்தின் உறுப்பு 313-ன் படி இந்தி மொழி இந்திய நாட்டின் அலுவலன மொழியாக ஆக்கப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் இந்த முடிவை எதிர்த்து 1965 ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் நாளை தி.மு.க துக்க தினமாக அனுசரிக்கத் தீர்மானித்தது. அதன் பல தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழ்நாடு பெருமளவிலான இந்தி எதிர்ப்பு போராட்டங்களை சந்தித்தது. இந்த கிளர்ச்சியால் தி.மு.க மாணவர் சமூகத்திடம் இருந்து பெருமளவு ஆதரவை பெற்றது. இதன் மற்றொரு பக்கம் காங்கிரசு கட்சி தமிழ்நாட்டில் தனது ஆதரவையும், தளத்தையும் இழந்தது. இதற்கிடையில் தி.மு.க. ‘‘திராவிட நாடு’’ கோரிக்கையை திரும்ப பெற்றுக்கொண்டு தமிழ் நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற தேர்தல் அரசியலில் ஊக்கத்துடன் பங்கெடுத்து.

**திராவிட இயக்கம்: இரண்டாம் உலகப்போர் காலத்திலும் அதன் பின்னரும்:**

1939 ஆம் ஆண்டு இந்திய இரண்டாம் உலகப்போரில் ஆங்கிலேய அரவாங்கத்தால் ஈடுபடுத்தப்படுவதை விரும்பாத காங்கிரசு அமைச்சரவை பதவியை துறந்தது. பெரியார் திராவிட நாடு கோரிக்கையை எழும்பினார். 1944 ஆம் ஆண்டு நீதிக்கட்சி பெரியார் தலைமையிலான சேலம் மாநாட்டில் அதன் பெயரை ''திராவிடர் கழகம்'' என மாற்றியும், திராவிட நாடு அடைவதே தனது லட்சியம் என்றும் அறிவித்து, சமூக பண்பாட்டு சமத்துவத்திற்கு முன்பாக விடுதலை அடைவது தமிழர்களின் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் என்று கூறினார். 1949 ஆம் ஆண்டில், திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாதுரையால் ஆரம்பிக்கப்பட்டது.

1951 ஆம் ஆண்டில் உச்ச நீதி மன்றமானது உயர்கல்வியில் சாதிவாரி இட ஒதுக்கீட்டை உடைத்து எறிந்தது. உடனடியாக பெரியாரின் திராவிடர் கழகம் மீண்டும் சாதிவாரி இட ஒதுக்கீடு திரும்ப பெற போராட்டத்தை துவங்கியது.

சட்டமும் விதிமுறைகளும் மக்களுக்காகவே ஏற்பட்டவை சட்டத்துக்காகவும், விதிமுறைக்களுக்காகவும் மக்கள் இல்லை.
**-பெருந்தலைவர் காமராஜ்**

திராவிட முன்னேற்ற கழகமும் கூட இந்த போராட்ட இயக்கத்தில் சேர்ந்து கொண்டது. காங்கிரசு தலைவர் காமராஜர் இந்த சிக்கலை மத்தியில் இருக்கும் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றார். இதனைத் தொடர்ந்து சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பின்தங்கிய பிற்படுத்தபட்ட சகுப்பினருக்குச் சாதகமாக இட ஒதுக்கீடு அளிக்கும் முதலாவது நாடாளுமன்ற சட்டத் திருத்தம் இயற்றப்பட்டது.

**ராஜாஜி ஆட்சி:**

சென்னை மாகாண அரசியலானது குடியரசு இந்தியவில் பழமை மாறா சக்திகளுக்கும், சீர்திருத்தவாதிக்ளுக்கும் இடையே தொடர்ந்து நடக்கும் போராட்டத்தின் சாட்சியாகவே இருந்தது. சென்னை மாகாணத்தின் முதல் தேர்தெடுக்கப்பட்ட திரு. சி. ராஜகோபாலாச்சாரி, மீண்டும் குடியரசினுடைய அரசரமைப்பின் கீழ் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை குறைத்தார். பள்ளிகளில் இந்திய மொழியை திணித்தார், புதிய பள்ளிக் கூடங்களில் பகுதி நேரமாக கற்பதற்கு பரம்பரைக் தொழில் எனப்படும் (குலக்கல்வி) புதிய தொடக்க கல்வி திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**உங்களுக்குத் தெரியுமா?**
**தண்டி யாத்திரை பற்றிய அருந்ததி ராயின் கருத்து…**

அரசியல் களத்தின் வழியே எதிர்ப்புகள் பிரதிபலிக்கப்படுவதற்கு ஓர் வரலாறு இருக்கிறது. 1930-இல் தண்டிக்கு காந்தி மேற்கண்ட உப்பு யாத்திரை மிகவும் சிறப்பான உதாரணமாகும். ஆனால், உப்பு யாத்திரை என்பது ஓர் களம் மட்டுமல்ல. அது உண்மையில் சட்டமறுப்பு செயல்பாட்டினைப் பெருமளவில் உணர்த்துவதாகும். காந்தியின் தலைமையில் பல சுதந்திரப் போரட்ட வீரர்கள் குஜராத் கடற்கரைக்கு நடந்கு சென்ற கடல் நீரிலிருந்து உப்பெடுக்க முனையும் போது ஆயிரக்கணக்கான இந்தியர்கள் நாடு முழுவதும் ஆங்கிலேயரின் உப்பு வரிச் சட்டங்களுக்கு எதிராக தாங்களே சட்டத்தினை மீறி உப்பெடுக்கும் செயலை மேற்கொண்டனர். ஆங்கிலேய ஏகாதிபத்ய உப்புச் சட்டத்தினால் உள்நாட்டு உற்பத்தி தடைபடுவதுடன் ஆங்கிலேய இறக்குமதிகளுக்கும் ஆதரவாக அமைந்தது. இச்செயல் ஆங்கிலேய பேரரசின் பொருளதார அடித்தளத்தின் மீதான நேரடித் தாக்குதலாக இது அமைந்தது.

**-(அருந்ததி ராய், பேரரசிற்கான ஓர் சாமானியனின் வழகாட்டி, பக்கம்)**

ராஜாஜியின் இந்த நடவடிக்கைகளை எதிர்த்து திராவிடத் தலைவர்கள் மாநிலம் முழுவதும் போராடத் தொடங்கினார். காங்கிரசு தலைவர்களின் ஒரு பகுதியினரும் ராஜாஜியின் திட்டத்தால் கோபம் அடைந்தனர். இதுவே ராஜாஜி பதவி விலகுவதற்கு காரணமாக அமைந்தது. அவரைத் தொடரடந்து காமராஜர் முதலமைச்சரானார்.

**காமராஜர் காலம் (1954-1963):**

காமராஜர் தொடக்கக் கல்வித்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்ததுடன் குலக்கல்வி திட்டத்தை ஒழித்தார். பள்ளிகளின் எண்ணிக்கையை பன்மடங்கு உயர்த்தினார், பல அணைகளைக் கட்டி நீர்பாசன வசதியை உயர்த்தினார். நிறைய தொழிற்பேட்டைகளை (Industrial Estates) அமைத்தார். அதன் மூலம் மாநிலத்தில் வியக்கத்தக்க அளவிற்கு தொழில்வளர்ச்சிழயை உறுதிசெய்தார். ஏழை கிராமபுற குழந்தைகளுக்கு கல்வி பெறச் செய்தார். அவர் குழந்தைகளும் மிதிய உணவுதிட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

**திராவிட கட்சிகளின் ஆட்சி:**

1967-ஆம் ஆண்டு பொது தேர்தலில் காங்கிரசு கட்சி தோற்கடிக்கப்பட்டது. தி.மு.க. வெற்றி பெற்று சி.என். அண்ணாதுரை முதலைமச்சரானார்.

**உங்களுக்குத் தெரியுமா?**

1956-இல் மாநில மறுசீரமைப்புச் சட்டத்தின் மூலமாக சென்னை மாகாணத்தில் இருந்து மலையாளப் பகுதிகள் கேரளாவிற்கும், தெலுங்கு பகுதிகள் ஆந்திராப் பிரதேசத்திற்கும், கன்னடப் பகுதிகள் மைசூர் மாநிலத்திற்க்கும் தரப்பட்டது. இங்ஙனம் சென்னை மாகாணம் தமிழர்களின் மாநிலமாக உருவானது. காமராஜர் ஓர் நிலையான ஆட்சியைத் தந்தார்.

அனைத்து ஏழைகளுக்குமான வீட்டு வசதி, படியரிசி திட்டத்தின் மூலம் உணவு பாதுகாப்பிற்கு முன்னோடியாக இருந்து மற்றும் குடிசை மாற்றுவாரியம் அமைந்தது போன்றவற்றால் நகர்புற ஏழை மக்களிடம் போதுமான அளவு அண்ணாவிற்கு ஆதரவு பெருகியது. மிகவும் முக்கியமாக 1969 ஆம் ஆண்டு சி.என். அண்ணாதுரையின் தலைமையிலான அரசாங்கம் ‘‘மெட்ராஸ்’’ மாநிலத்தின் பெயரை ‘‘தமிழ்நாடு’’ என பெயர்மாற்றம் செய்தது. அக்கட்சியின் இதர முக்கிய சாதனைகள்.

1. 75 மைல் தொலைவிற்கு மேல் உள்ள பேருந்து தடங்களை தேசியமயமாக்கியது.
2. அனைத்து சாதி ஏழை மாணவர்களும் பல்கலைக்கழக்கத்திற்கு முந்தைய கல்வி மற்றும் தொழிற்கல்விக்கு முந்தைய படிப்புகளுக்கு கல்வி கட்டன விதிவிலக்கு அளிக்கப்பட்டது.
3. இராண்டாவது உலக தமிழ் மாநாடு நடத்தப்பட்டது.
4. தமிழக ஏழை மக்களுக்கு மானிய விலையில் அரிசி வழங்கப்பட்டது.

**தமிழ்நாட்டில் சுதந்திரத்திற்குப் பிறகு திராவிட ஆட்சி:**

கடந்த 62 ஆண்டுகளாக தழிழகத்தை கிராவிட கட்சிகள் ஆட்சி செய்து வருகின்றன. 1957-ஆம் ஆண்டு தி.மு.க. தேர்தல் அரசியலில் நுழைய தீர்மானித்தது. இந்திய பகுதிகளை சீனா ஆக்கிரமிப்பு செயததின்

## அலகு– 15
## தமிழக அரசியல் சிந்தனைகள்

**வரலாற்றுப் பின்னணி:**

அடிப்படையில் செம்மொழியான தமிழின் தாய்நாடு (தமிழகம்) என்பதை தமிழ்நாடு என்று அழைக்கின்றோம். இதன் அருகில் உள்ள சில பகுதிகளாக கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகாவை உள்ளடக்கியதாக தமிழகம் இருந்தது. ஸ்ட்ராபோ (கி.மு. (பொ.ஆ) 63-முதல் கி.பி. (பொ.ஆ) 24 வரை). வாழ்ந்த கிரேக்க வரலாற்று சிந்தனையாளர் மற்றும் புவியியலாளர் ஆவார். இவர் தமிழ் முடியாட்சியின் பாண்டியர்கள் காலத்தில் உள்ள இராஜதந்திர வரலாற்றை உற்றுநோக்கியிருந்தார். கடல் பயணங்களின் மூலமாக சோழ, சேர மற்றும் பாண்டியர்கள் கடலருகில் வாழும் மக்களிடம் தமிழரின் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். இந்தியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் இந்தியா மற்றும் மத்தியத்தரைக்கடல் பகுதிகளில் வர்த்தகத்தை வளர்ப்பதற்காக தமிழக கரையோரங்களில் இருந்த துறைமுகங்கள் முக்கிய மையமாக செயல்பட்டன. குறிப்பாக கி.மு (பொ.ஆ.மு) 200 முதல் காலகட்டத்தைச் சார்ந்த கி.பி. (பொ.ஆ) 300 வரையானது ஆகும்.பண்டையகால துறைமுகங்களான கொற்கை,

கற்றலின் நோக்கங்கள்:

- ❖ மாணவர்கள் எளிதில் தமிழத்தின் பண்டைய அரசியல் கருத்துக்களைக் கற்பர்.
- ❖ திருவள்ளுவரின் அரசியல் கருத்துக்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளுதல்.
- ❖ பாரதியாரின் மூலமாகத் தேசியவாதத்தை புரிந்து கொள்ளுதல்
- ❖ தமிழ்நாட்டில் தோன்றியுள்ள பொதுவுடைமைவாத கருத்துக்கள் பற்றி தெரிந்து கொள்ளுதல். குறிப்பாக சிங்காரவேலரின் பொதுவுடைமைவாத படைப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல்.
- ❖ திராவிடக் கொள்கையைப் பற்றி புரிந்துகொண்டு மற்றும் தமிழ்நாட்டின் அரசியல், சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ளதாக்கத்தை பற்றி அறிந்துகொள்ளுதல். குறிப்பாகஈ.வெ.ரா. பெரியாரின் பங்களிப்பின் மூலமாக சமுகநீதி, சமத்துவம் மற்றும் உயர் சாதியினரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை போன்றவற்றை புரிந்துகொள்ளுதல்.
- ❖ தமிழ் இயக்கம் மற்றும் திராவிட இயக்கத்தின் முக்கிய விளக்கங்களைத் தெளிவாக விவரித்தல் மற்றும் இவற்றின் அரசியல் போக்கினை விவரித்தல்

பூம்புகார், வசவசமுத்திரம், பெரிமுளா, அரிக்கமேடு, அழகன்குளம், மாமல்லபுரம் போன்றவை சிறந்தமுறையில் செயல்பட்டன. குறிப்பாக வர்த்தகம், வாணிபம் மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றங்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகள், இலங்கை, சீனா எகிப்து, கிரேக்க மற்றும் ரோமாபுரி போன்ற நாடுகளுடன் திறம்பட மேற்கொள்ளப்பட்டது. கப்பல் கட்டுதலில் பாரம்பரியமிக்க தமிழர்கள் சிறந்த கடலோடிகளான நமது முன்னோர்கள் உலகின் அடிப்படை தன்மைகளின் தாக்கங்களாக அரசியல், சமுதாயம், பண்பாடு, வர்த்தகம் மற்றும் வாணிபத் தொடர்புகளை உலகின் மற்ற நாடுகளுடன் ஏற்படுத்தினர்.

ஏறத்தாழ கி.மு (பொ.ஆ.மு) 300 முதல் கி.பி. (பொ.ஆ) 300. வரையிலான சங்க இலக்கியங்களில் முக்கிய ஆதாரங்களாக விளங்குவதுடன் அக்கால சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு மற்றும் அரசியலை பிரதிபலித்திருக்கின்றன. சங்கப்பாடலின் வகைப்பாட்டியலில் அகம் (அன்பு சார்ந்து இருத்தல்) மற்றும் புறம் (போர், நன்மை மற்றும் தீமை, சமூகம், நீதி மற்றும் முடியரசு) போன்றவற்றால் தமிழ் அரசியல் முறைமை பற்றி கூறியிருக்கின்றன. சங்க இலக்கிய புத்தகங்கள் (எட்டுத்தொகை) எட்டு நூல் திரட்டு ஆகும், அவையாவன:

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பற்று
5. பரிபாடல்

6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு,

இவை தவிர மேலும் ஒன்பதாவது குழுவாக விளங்கும் பாட்டுகளான பத்துப்பாட்டும் காணப்பட்டது. ஆரம்ப காலத்தில் தொல்காப்பியத்தின் முதல் இரண்டு புத்தகங்களும் தமிழ் இலக்கணமாகக் கருதப்பட்டதும் இக்காலக்கட்டத்தில் தான் என்பது நினைவு கூறத்தக்கதாகும்.

சங்க இலக்கியங்களுக்கு பிறகு சேகரிக்கப்பட்ட பிரபலமான நூற்கோவை /பாடல் திரட்டு என்பது "கீழ்கணக்கு" என அழைக்கப்படுகிறது. இப்பதினெட்டு நூல்களின் ஒரு பகுதிதான் மிகவும் பிரபலமான சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பதினெட்டு சிறிய நூல்கள் (பதினென் கீழ்க்கணக்கு, இது திருக்குறளையும் உள்ளடக்கியதாகும்) அக்காலகட்டத்தில் எழுதியதாகும். பிரபந்த இலக்கியம் பல்வேறு வகையான பாடல்களைக் கொண்டிருந்தது அவை: "கோவை", என்பது குறிப்பிட்ட கருத்திலான வரிகளைக் கொண்டிருப்பதுடன் (பொதுவாக அரசன் மற்றும் வீரத்தை குறிப்பிடுதல்) மேலும் "பரணி" என்பதற்கும் வழி வகுக்கிறது. இது பாரம்பரியத்தின் சிறந்த எடுத்துக்காட்டாக பாண்டிக்கோவை, நந்திக்கலம்பகம் மற்றும் கலிங்கத்துப் பரணி அகியவற்றைக் குறிப்பிடலாம்

பண்டைய கால தமிழ் இலக்கியங்களை திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை பல சங்க கால அரசியலின் தன்மை, சமுதாயம் மற்றும் பண்பாட்டினைப் பற்றிய ஆழ்ந்த நுண்ணறிவுடன் படைக்கப்பட்டு இருந்தன. தமிழ் மொழியானது தமிழ் அடையாளம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் மரபுகளின் அடிப்படியாக உள்ளதாகும். நிலம், புவியமைப்பு, ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்களால் வேறுபட்டு இருந்தாலும் தமிழ் பேசும் பகுதிகளில் தமிழரின் நாடு மற்றும் தேசக் கூட்டமைவு என்பது இருந்தது. கலிங்க அரசன் காரவேலா கி.மு. (பொ.ஆ.மு) 165 காலத்தின் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்தான் 132 வருடமாக இருந்த "தமிழ் கூட்டமைவு" என்பதை அழித்தார்" என்று அக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இதுபோன்றே தமிழ் அரசர்களின் கூட்டமைவின் பிறநாட்டு படையெடுப்பிற்கு எதிராக சண்டையிட்டதை சங்க கால இலக்கியமான அகநானூறு" விவரித்துள்ளது. ஆனால் தமிழ் தேசியவாதம் என்பது காலனி ஆதிக்கத்தின் விளைவினால் தோன்றியது என்று சாதாரணமாக கூறிவிட முடியாது.

**கண்ணகியின் சிறப்புகளாக எரிக்மில்லர் கூறுவது:**

கண்ணகி என்பவர் ஓர் அறிமுகமற்ற ஊரில் ஆதரவிற்கு யாருமற்ற நிலையில் கைச்செலவிற்கு ஏதுமின்றி இருந்த சூழ்நிலையிலும் அரசவையில் தனது வழக்கினை உரைத்து வெற்றி கண்டது அனைவருக்கும் உத்வேகம் அளிக்கக்கூடியதாகும்.

நான் அவர் உலகளாவிய நீதி மற்றும் தனிமனித மாண்பிற்கும் அடையாளமாக திகழ்கிறார். இந்த கதை அவருடைய சிலப்பதிகாரம் எனப்படும் காவியத்தின் மூலமாக அறியப்படுகிறது. எனக்குத் தெரிந்தவரையிலும் கோவலன் மற்றும் கண்ணகிக்கு கிழக்கு கடற்கரையோரம் உள்ள பூம்பூகாரில் திருமணம் நடைபெற்றது. சில காலத்திற்கு பின்னர், கோவலன் மாதவி எனப்படும் நாட்டின் மங்கையுடன் வாழ்ந்து வரலானார். ஒரு வருடத்திற்கு பிறகு அவர் வீடு திரும்பினார். அவரும் கண்ணகியும் 250 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மதுரைக்கு சென்றனர். அங்கே அவர்கள் புதிய வாழ்க்கையைத் தொடங்கினர். கோவலன் நீதி நியாயமற்ற முறையில் பாண்டிய அரசரால் கொல்லப்படுகிறார். கோவலன் அரசியாரின் கால் சிலம்பைத் திருடியதாக பொய்யான முறையில் குற்றம் சாட்டப்படுகிறார். கண்ணகி அரசவைக்கு வந்து தன்னுடைய கணவன் நிரபராதி என்பதுடன் ஒன்றும் அறியாதவர் என்று வாதிட்டு உண்மையை நிருபிக்கிறார். அரசர் நீதி தவறியதற்காக "யானோ அரசன்; யானே கள்வன்" என ஓலமிட்டவாறு தரையில் வீழ்ந்து மடிந்தார். பின்னர் கண்ணகி மூன்று முறை மதுரையை வலம்வந்து அரசன் நீதி தவறியதற்காக மதுரையையே எரிக்கின்றார். ஆனால் நல்ல மனிதர்கள், விலங்குகள் பாதிக்கப்படாமல் இருக்குமாறு அக்னி கடவுளை வேண்டுகிறார். அவரும் இதை ஏற்றுக்கொள்கிறார். பின்னர் மேற்கு தொடர்ச்சி மலைகளுக்கு சென்ற கண்ணகியை மக்கள் தெய்வமாக வழிபடுகின்றனர்.

எரிக்மில்லர் நாட்டுபுறவியலில் தன்னுடைய முனைவர் பட்டத்தை அமெரிக்காவில் உள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பெற்றார். இவருடைய ஆய்வோடு தமிழ் குழந்தைகளின் பாடல், விளையாட்டு மற்றும் மொழியினைக் கற்றல் பற்றியதாகும். சிலப்பதிகாரத்தினை ஆராய்ச்சி செய்வதற்காக இவர் கண்ணகியின் அடியொற்றிய

பூம்புகாரிலிருந்து மதுரை வரை நடை பயணத்தினை, குறிப்பாக அதிலும் மேற்குத் தொடர்ச்சி மலை வரை மேற்கொண்டார்.

தமிழ் தேசியத்தின் மூல ஆதாரங்கள் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டினுடைய வரலாற்றுடன் தொடர்புடைய பங்கு வகிப்பதாகும். இதனால் அரசியல் வரையறுக்கப்பட்டிருப்பதனை சங்க காலம் முதல் காணலாம்.

இங்கே அரசு கருத்தாக்கமும், லட்சிய அரசன் எனும் பதமும், கிரேக்கத்தில் நில எல்லைகளில் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்த நகர அரசை போன்று இருந்தது. பண்டைய தமிழ்நாடு என்பது தமிழகம் என்று அழைக்கப்பட்டது. இது மேற்கு மலையைச் சார்ந்த திருப்பதியிலிருந்து கன்னியாகுமரியின் நுனிவரை உள்ளடக்கியதாகும். இந்த நிலமானது பாரம்பரியமாக ஐந்து புவியியல் சார்ந்த பிராந்தியமாக (திணை) இயற்கைத் தன்மையுடன் பிரிக்கப்பட்டுள்ளது. மலையை சார்ந்த பகுதி (குறிஞ்சி), காடுகளை சார்ந்த பகுதி (முல்லை), வயல் சார்ந்த பகுதி (மருதம்), கடல் சார்ந்த பகுதி (நெய்தல்), மணல் சார்ந்த பகுதி (பாலை) ஆகியன ஐந்திணைகள் ஆகும்.

தமிழ் மொழி பேசும் பகுதிகள் சோழர்கள் (தலைநகரம் உறையூர்), பாண்டியர்கள் (தலைநகரம் மதுரை), சேரர்கள் (தற்போதைய கொங்கு நாடு மற்றும் கேரளா), பல்லவர்கள் (தலைநகரம் காஞ்சிபுரம்) என பலவாறு பிரிக்கப்பட்டு இருந்தது. தமிழ்நாடு பல்வேறு அரசர்கள் மற்றும் குறுநில மன்னர்களால் ஆளப்பட்டது. கடை ஏழு வள்ளல்கள் புலவர்களுக்கு வாரி வழங்கியதை பற்றி சங்கபுலவர்கள் புகழ்ந்து பாடியுள்ளனர். கபிலர் மற்றும் ஔவையார் கடை ஏழு வள்ளல்களான ஆய், பாரி, ஓரி, காரி, அதியமான், பேகன் மற்றும் நல்லியை பற்றி குறிப்பிடுகின்றனர். ஓர் சிறந்த அரசனின் குணங்களாக அவன் பாகுபாடற்ற நீதி வழங்கும் அரசனாகவும், மக்களிடத்தில் அன்பு உடையவனாகவும் போர்களத்தில் எதிரிகளிடம் வீரத்தை வெளிப்படுத்துபவனாகவும் இருக்க வேண்டும் என குறிப்பிடப்படுகிறது.

சபை அல்லது மன்றம் மன்றம் எனப்படுவது அரசன் தலைமையேற்று நடத்தும் நாட்டின் உயர்ந்த நீதிமன்றம் ஆகும். இதை போலவே ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மன்றம் உண்டு. அது அந்த கிராமத்தின் பொது இடத்தில் கூடி அந்த கிராமத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து விவாதிக்கும். போர் வீரர்கள் மிகவும் மதிப்புடன் நடத்தப்பட்டனர். போரில் அவர்கள் இறக்க நேரிட்டால் அவர்களின் நினைவாக, நினைவுத்தூண் ஒன்று ஊரில் எழுப்படும். ஆனால் போரில் ஒருவீரன் தன் பின்புறம் காயப்பட்டு அதனால் இறந்தால் சங்க இலக்கிய காலங்களில் அது அவமானமாக கருதப்படும்.

போரின் நல்ல நடைமுறைகள் பலவற்றை சங்க இலக்கியங்கள் நிறைய தெரிவிக்கின்றன. புறநானூறு என்பது ஒரு சங்க இலக்கியம் ஆகும். இது பாண்டிய அரசனை புகழ்கிறது. அவன் பெண்கள், குழந்தைகள், நோயாளிகள் மற்றும் வயோதிக மக்கள், கால்நடைகள் இவைகள் அனைத்தையும் பாதுகாப்பான இடங்களில் போர்காலங்களில் இடம் பெயரச் செய்தான். நீதி என்பது அரசு மற்றும் அரசனின் மனசாட்சிக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். நீதி என்பது அரசனின் ஆட்சியில் ஒரு முக்கியமான கூறாக இருக்க வேண்டும். ஓர நல்ல அரசன் எந்த சூழ்நிலையிலும் நீதியை தியாகம் செய்யக் கூடாது. அரசனின் நல்லாட்சி மற்றும் நற்சசெயல்கள் எப்பொழுதும் நிலையான நீடித்த புகழை கொண்டு வரும். இவைகள் தான் முக்கிய அரசியல் கொள்கைகளாக சங்க காலங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மன்னராட்சி முடியாட்சி தன்மையைச் கொண்டிருந்தாலும் அரசனின் சட்டப்படியான முடிவுகள் மக்களின் ஒப்புதலைச் சார்ந்தே இருந்தது. அரசன் மக்களின் ஆதரவு இருக்கும் வரை சட்டப்படியான முடிவுகளை அனுபவிப்பவராகவும் அதே சமயம் அவற்றை தவறாக பயன்படுத்தினால் மக்கள் ஆதரவை இழக்கவும் நேரிடும். சங்க இலக்கியம் (பட்டினப்பாலை) பல்வேறு வகையான வரிகளைப் பற்றி கூறுகின்றது. அவைகள் சுங்கவரி, வருமானவரி, பொருள் மீதுள்ள வரி மற்றும் பல வரிகள் அரசின் வருவாய்களை பெருக்கும் ஆதரமாக கூறப்பட்டுள்ளன. எளிமையான நிர்வாக கட்டமைப்பின் வழியே (அமைச்சர்கள், அதிகாரிகள்) தமிழ் அரசர்கள் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர் வெளிநாட்டு வர்த்தகம், சுங்க வரி முதலானவை அரசின் வருவாயில் பெரும் பங்கு வகித்தன. பாண்டியர் கல்வெட்டில் முத்துக்குளித்தல் (கலாத்திகர்) பற்றியும் மற்றும் முதன்மை எழுத்தர் (கணத்திகன்) பற்றியும் கூறப்பட்டுள்ளது. சோழர்களின் கொடியிலும் மற்றும் நாணயங்களிலும் புலி சின்னத்தை

பொறித்து இருந்தார்கள், சேரர்கள் வில் மற்றும் அம்புகளையும், பாண்டியர்கள் மீன் சின்னத்தையும் மற்றும் பல்லவர்கள் சிங்கத்தை சின்னமாக பெற்று இருந்தனர்.

ஒற்றர்கள் மூலம் உளவு பார்த்தல் என்பது நிறுவனப்படுத்தப்பட்டு நாட்டின் முக்கியமானதொரு அங்கமாக இருந்தது. நாட்டின் நிலைத்தன்மையும் அமைதியும் இதன் செயல்பாட்டை பொறுத்தே அமைந்திருந்தது. நிறுவனப்படுத்தப்படாமல் இருந்தாலும் அடிமைகள் இல்லாமலில்லை அடிமைகளை படையெடுத்தபின் பிடிப்பதும், அடிமைகளை வர்த்தகத்திற்கு பயன்படுத்தவும், பரிசுக்காக பரிமாற்றம் செய்யவும் அரசாட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. குறிப்பாக கட்டுமானம் மற்றும் கட்டிட வேலைகளுக்கு அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர்.

பண்டைய தமிழில் சாதி முறை என்பது காணப்படவில்லை. வர்க்க கொள்கை மற்றும் வர்க்க கொள்கை மற்றும் வர்க்க கருத்து வேறுபாடுகள் அவரவர்களின் தொழில் சார்ந்த முறையில் காணப்பட்டன. சங்ககால சமுதாயத்தில் சாதிய முறை என்பது வெளியிடத்திற்குரியதாகவும் மற்றும் அறியப்பட்டாததாகவும் இருந்தது. சமுதாயப் பிரிவுகளை வர்க்கத்தின் அடிப்படையில் சங்க புலவர்கள் தரம் பிரித்தினர்.

அவைகள்: (குடி) துடியன், பாணன் மற்றும் கடம்பன் அல்லது அரசர் (ஆட்சிபுரிபவர்), வைசியர் (வர்த்தகர்கள்) மற்றும் வேளாளர் (விவசாயிகள்) என்று குறிப்பிட்டுள்ளனர். தகுதிநிலைகளில் காணப்பட்ட வித்தியாசங்கள் தவிர்க்க முடியாததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் வர்ண முறை எனும் சாதி அமைப்பு சங்ககால சமுதாயத்தில் சிறிதளவே காணப்பட்டன.

பண்டைய தமிழ் சமூக அமைப்புகளில் மனுதர்மம் மூலமாக சட்டமாக்கப்படவில்லை. ஆரம்பக்கால ஆரிய-பிராமண சாதிய அமைப்புகள் சங்க காலத்தில் குறிப்பிடப்படவில்லை. இதுபோன்ற அமைப்புகள் சங்க காலத்திற்கு பிறகே தோன்றின. பண்டைய தமிழ் மதங்கள் நாட்டுபுற கலையை சார்ந்தே இருந்தது. இயற்கையை வழிபடுதல் மற்றும் இயற்கை காரணிகளே பொதுவாக காணப்பட்டன. முருகக்கடவுளை வழிபடுவதே தமிழ்நாடு பழங்குடியினரின் வழிபாட்டு மரபு ஆகும். முருகக் கடவுளை போராளிகளின் / மாவீரர்கள் கடுவுளாக நாட்டுப்புற கலாச்சாரமாக செயல்படுத்தினர். உலகில் பற்றுடைய கடவுளாக தமிழ் - திராவிட மரபுகளின் கட்டுரைகளில் வேர் ஊன்ற ஆரம்பித்தது. கி.பி. (பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டுக்கு பிறகே தமிழ் மற்றும் சமஸ்கிருதம் போன்ற எழுத்துகள் தோன்ற ஆரம்பித்தது.

சமஸ்கிருதமயமாதல் பொதுவாக பொது வெளிக்கு பரவ ஆரம்பித்தது. பிராமணர்கள் அரசனுக்கு ஆசி வழங்குபவர்களாகவும், மற்றவர்களை விட உயர்ந்தவர்களாகவும் கருதும் மனப்பாங்கு தொடங்கியது. இக்கால கட்டத்திற்கு பின் பிராமணர்களிடம் ஆசி பெறுவது சட்டபூர்வ வழியாக துங்கியது. சமஸ்கிருதமயமாதலுடன் சேர்ந்து, வேத சடங்குகள், மனு கொண்டு வந்த வர்ணாசிரமம் அமைப்பு போன்றவை, எற்கனவே தொழில் ரீதியாக பிரிக்கப்பட்டு இருந்த திராவிட சமூகத்தை மேலிருந்து கீழாக சாதி ரீதியாக பிரித்தது.

மரபு வழி கொள்கையும் இயற்கை வழிபாடும் தமிழ் மன்னர்களிடம் பொதுவாக காணப்பட்டது. முடியாட்சியும் கலாச்சார மையத்திலிருந்து அதிகார மையத்தை நோக்கி நகர்ந்தது. இதனால், சங்க காலத்துக்கு பிந்தைய காலத்தில் அரசனின் அதிகாரங்கள் அதிகரித்து நாட்டின் மொத்த அதிகாரமும் பெற்ற ஒரே அமைப்பாக அரியனை உயர்ந்தது.

அரசுரிமையானது புனிதத் தன்மையுடையதாகவும், மரபு வழியானதாகவும் பல்லவர்கள் கூறினர். பல்லவர் காலத்தில் வட இந்தியாவில் இருந்த ஆரிய கலாச்சாரம் தமிழ்நாட்டில் ஊடுருவியது. இரண்டு கலாச்சாரங்களிலும் உள்ள கருத்துக்கள், அமைப்புகள், சில ஒன்றிணையும் முரண்பட்ட சில வழக்கொழிந்து போகவும் இந்த ஊடுருவல் வழி வகுத்தது. இந்த கலப்பின் விளைவாக தமிழ் பக்தி கலாச்சாரம் தோன்றியது.

பெண்கள் மிகவும் உயரிய மரியாதையுடன் நடத்தப்பட்டனர் மற்றும் இவர்கள் அரசர்களுக்கு பாதுகாவல் மற்றும் பல்வேறு வகையான பணிகளையும் செய்தனர். ஆனால் அதிகாரங்கள் அனைத்தும் ஆண்களிடம் மட்டுமே இருந்தது. பெண்கள் பொது அவையில் பங்கேற்கலாம். ஆனால் ஆண்களே நிர்வாகிகளாகவும் மற்றும் ஆட்சியாளர்களாகவும் இருந்தனர். பெண்கள் சமூக சடங்குகளில் முக்கிய பங்கு வகித்தனர். மேலும் மரபு வழி

உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் ஆண்களிடம் இருந்தாலும், குடும்பத்தில் பெண்ணின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

தமிழகச் சமூகத்தில் பெண்களின் பங்கை பற்றி விவாதிக்கையில் ஔவையார் பற்றி குறிப்பிடுவது அவசியமாகிறது. (ஔவையார் என்றால் மதிப்புக்குரிய பெண் என்று பொருள்) தமிழ் இலக்கியத்திற்கு எந்த பெண்மணிகளெல்லாம் முக்கிய பங்களித்தனரோ, அவர்கள் ஔவையார் என்று பட்டப்பெயரிட்டு அழைக்கப்பட்டனர். வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த ஆறு பெண் தமிழ் புலவர்களுக்கு இப்பட்டப்பெயர் வழங்கப்பட்டது.

சங்க காலத்தில் வாழ்ந்த ஔவையாரும் மற்றும் சோழர்களும் சிறந்த சிறப்புத்தன்மை வாய்ந்தவர்களாக கருதப்பட்டனர். இலக்கியம், காலாச்சாரம், உலகளாவிய அறநெறி, அரசியல் தன்மை, போர், அமைதி மற்றும் இராஜதந்திரம் போன்றவற்றில் இவர்கள் பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தினர். இந்த ஔவையார் ஒன்றாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டு (பொ.ஆ) காலத்தில் வசித்தவர். இவர் அதியமானின் அவையில் இருந்தார். இவர் திருவள்ளுவர் மற்றும் கபிலரின் சம காலத்தவர் ஆவார். நற்றினை குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு இவற்றில் குறிப்பிடத்தக் பங்களிப்பை செய்துள்ளார். இவர் சிறந்த ஒரு தூதராகவும் இருந்தார். அதியமானுக்காக பலமுறை பல அரசர்களிடம் தூதுவனாக சென்றுள்ளார். அதியமான் அவையில் புலவராகவும், அதியமானின் உற்ற தோழராகவும் இருந்தார். தன் தூது திறமையின் மூலம் போர்களைக் கூட இவர் தவிர்த்துள்ளார்

ஒரு முறை காஞ்சியை ஆண்ட தொண்டைமான், அதியமான் ஆண்ட தகடூரை தாக்கி போர்புரியும் எண்ணத்துடன் இருந்தான் இதை அறிந்த ஔவையார் காஞ்சி சென்று தொண்டைமானை சந்தித்து பின் வருமாறு கூறினார்.

”தொண்டைமான் அரசரே உங்களுக்கும் அதியமானுக்கும் தான் எவ்வளவு வேறுபாடு உங்களது ஆயுதக்கிடங்கில் ஆயுதங்கள் சுத்தமாகவும் பளபளப்பாகவும் நெய் பூசப்பட்டு அழகாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் பாவம் அதியமானின் ஆயுதங்கள் உடைந்தும், ரத்தக்கரை படிந்தும், பட்டறைகளில் பழுது நீக்கும் பணியிலும் உள்ளன” என்றார். தொண்டைமானை புகழ்வது போல், ஔவையார் அவனது போர் அனுபவமின்மையும், அதியமானின் தொடர்ந்த போர்களையும், போர் திறனையும் தெரிவித்து போர் வந்தால் தொண்டைமான் வெற்றி பெறுவது கடினம் என்பதையும் உணர்த்தினார்.

சோழர் காலத்தில் பத்தாம் நூற்றாண்டில் இன்னொரு புகழ்பெற்ற ஔவையார் இருந்தார்.

இவரே குழந்தைகளுக்கான நீதி கதைகளையும் ஆத்திச்சூடியையும் கொன்றைவேந்தனையும் எழுதியவர். சற்றே வளர்ந்த குழந்தைகளுக்காக மூதுரை மற்றும் நல்வழி என்ற இரண்டு நூல்களை இவர் எழுதியுள்ளார்.

**திருக்குறள்:**

நம் பண்டைய இலக்கியங்கள் நம் கலாச்சாரம் மற்றும் இலக்கிய மரபுகளை பற்றி குறிப்பிடுகிற அதே வேளையில் நம் தமிழ் கலாச்சாரத்தின் வரலாற்றை குறிப்பாக தமிழ் சமூக அமைப்பு மற்றும் மத நம்பிக்கைகள். வாழ்வாதாரம், விதிமுறைகள், தொழிற்கல்வி மற்றும் பெண்களின் தகுதிநிலை, திருமணம், பாலினம், வர்க்க கட்டமைப்பு, சாதி அமைப்பின் தோற்றம், அமைதி, ஆட்சி முறை, கடற்படை, மீன்பிடித்தொழில் பாரம்பரியம், வர்த்தகம், வணிகம், கப்பல் கட்டும் பணி, மற்றும் கடற்பயணங்கள் பொருளாதாரம், நிலம், அமைப்பு, விவாசயம், கலை, நாட்டியம், பாடல்கள், இசை, கட்டடக்கலை மற்றும் அயல் நாடுகளுடன் உறவு மற்றும் தொலை தூர தேசங்களைப் பற்றியும் கூறுகின்றன.

**அறிமுகம்:**

அரசியல் என்பது சமுதாயத்தின் நடைமுறைச் செயல்பாடுகளை அப்படியே கிரகித்துக் கொள்வதற்கு மாறாகச் சமுதாயத்தின் விழிப்புணர்வை மாற்றுவதற்கான நடவடிக்கை ஆகும். இத்தகைய நடவடிக்கைகள் ஏழ பல காரணிகள் உள்ளன. சமூக, பொருளாதார, தொழில்நுட்ப வளர்ச்சிக் கட்டங்களில் பழைய சிந்தனைகளால் இடையூறுகளுக்கு உள்ளாகும். சமூகத்தில் புதிக காரணிகள் நெருக்கடிகளை உருவாக்குகின்றன. இவை சமூகத் தளத்தில்

புதிய சிந்தனையாளர்களை தோற்றுவிக்கின்றன. இவர்களில் நீண்டகாலத் தாக்கங்களை உருவாக்குபவர்கள் அரசியல் சிந்தனையாளர்களாக உருவாகிறார்கள்.

**அரசியல் சிந்தனையாளருக்கான வரையறைகளாக கீழ்க் காண்பவற்றைக் கூறலாம்:**

- சமூகத்தில் சமூக மாற்றத்தை ஏற்படுத்திய கொள்கைகள், நிகழ்வுகளுக்குக் காரணியாக இருத்தல்; மக்களின் பொதுப் புத்தியில் மாற்றத்தை உருவாக்குதல்.
- சமூகத்தில் திருப்புமுனை ஏற்படுத்திய அரசியல் முடிவுகளை எடுத்தல்.
- சமூகத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த பயனாளர்களுக்கும் பலன்கள் அளித்த அரசு முடிவுகளுக்குக் காரணமாக இருத்தல்.
- சமூகத்தின் பல பிரிவு மக்களின் முன்னேற்றத்துக்குக் காரணமான அரசியல் கருத்துகளை பொதுக் கருத்தாக உருவாக்குதல்.

அரசியல் சிந்தனையாளர்களின் நடவடிக்கைகள் புதிய அரசியல் சிந்தனைகளுக்கு ஆதரவாக மக்களின் ஈடுபாட்டினையும் பகுத்தறிவினையும் உருவாக்குகின்றன. சமகால அரசியல் களங்களில் அவர்கள் ஊடாட்டம் கொள்வதால் புதிய சமூக விழுமியங்கள் உருவாகின்றன. அடுத்த காலகட்டத்துக்கு அறைகூவல் விடுக்கும் அரசியல் மாற்றத்துக்கான அரசியல் முடிவுகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். அவர்களது அரசியல் முடிவுகள் அநேக மக்களின் அன்றாட வாழ்வில் நீண்டகால மாற்றங்களை உருவாக்குகின்றன.

நவீன அரசியல் கருத்தாக்கங்களின் படி தேசிய அரசியல் சிந்தனையாளர்கள், பொதுவுடைமைவாத் அரசியல் சிந்தனையாளர்கள், திராவிடப் பண்பாட்டு

திருவள்ளுவர் தம் நூலின் முதல் பகுதியாகிய அறத்துப் பாலில் அறத்தின் சிறப்பைத் திடமாக எடுத்துரைத்துக் கற்பவரின் நெஞ்சில் பதியுமாறு செய்கிறார். இங்கே நெறி தவறாத ஓர் அறவோராக விளங்கி, உணர்ச்சி வயப்படாமல், கற்பனைக்கு இடம் தராமல், நடுநிலையில் நின்று தாம் உணர்ந்த உண்மைகளைத் தெளிவாக விளக்குகிறார். இரண்டாம் பகுதியாகிய பொருட்பாலில் உலக வாழ்க்கையின் இயல்புகளையும் நடைமுறைகளையும் அலசி ஆராயும் ஓர் அனுபவம் நிறைந்த அறிஞராகத் திகழ்கிறார் பல காலத்தும் பல துறைகளிலும் கண்டும் கேட்டும் அறிந்தவற்றை எல்லாம் தம் சிந்தனைத் திறத்தால் தெளிவாக உணர்ந்து வகைப்படுத்திக் கூறுகிறார். மூன்றாம் பகுதியாகிய காமத்துப் பாலில் படைப்புத் திறன் மிக்க ஒரு கவிஞராக நின்று குறள் மணிகளை இயற்றியுள்ளார். தாம் மறைந்திருந்து, நாடகப் போக்கில் காதலனையும் காதலியையும் பேசச் செய்துள்ளார்.

**பொருட்பாலின் ஏழு பகுதிகள்:**

”அரசியல் ஐந்துः அமைச்சியல் ஈரைந்து;
உருவவல் இரண்டு; ஒன்று ஒண்கூழ் - இருவியல்
திண்படை; நட்புப் பழனேழ்; குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை”.

என்பது போக்கியார் என்னும் புலவர் பெயரால் அமைந்த பழைய வெண்பா. இதன் படி, பொருட்பால் ஏழு பகுதிகளை உடையது அரசியல் 25, அமைச்சியல் 10, அரண் 2, கூழ் 1, படை 2, நட்பு 17, குடி 13 ஆக பொருட்பாலின் எழுபது அதிகாரங்கள் ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

”படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு” (குறள் : 381)

என வரும் பொருட்பாலின் முதல் குறட்பாவிலேயே இந்த வேறுபாட்டிற்கான அடிப்படையும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இக்குறட்பாவில் உள்ளவாறு அரசாங்கம் (அரசின் அங்கம்) என்பதன் அமைச்சு, அரண், கூழ், படை, நட்பு, குடி என்னும் ஆறு அங்கங்களையும் தனித்தனியே வகுத்து, இந்த ஆறு அங்கங்களையும் உடைய ஆட்சித் தலைவனைப் பற்றித் தனியே சில அதிகாரங்களில் கூறி ஏழு வகையாக வேறுபாடு செய்வது திருக்குறளின் அமைப்பு முறைக்கு ஏற்றதாக உள்ளது.

**அரசனது இயல்பு கூறும் இருபத்தைந்து அதிகாரங்கள்:**

பொருட்பாலின் முதலில் அரசனது இயல்பு கூறும் அரசியலை மிக விரிவாக இருபத்தைந்து அதிகாரங்களில் கூறியுள்ளார் திருவள்ளுவர். “இறைமாட்சி“ (அதிகாரம் 39) தொடங்கி “இடுக்கண் அழியாமை“ (அதிகாரம்ட 63) வரையிலான இருபத்தைந்து அதிகாரங்களில் “அரசர்“, “வேந்தர்“, “நிலன் ஆண்டவர்“, “மன்னவர்” முதலான பெயர்களால் நாற்பத்தாறு முறை அவர் ஆட்சித் தலைவனைச் சுட்டிக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. கல்வி வேண்டும் (40), கேள்வி வேண்டும் (42), அறிவு வேண்டும் (43), குற்றம் கடிந்த வாழ்வு வேண்டும் (44), பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும் (45), சிற்றினம் சேராமல் வாழ வேண்டும் (46), தெரிந்து (அராய்ந்து) செய்யும் இயல்பு வேண்டும் (47), வலியும் காலமும் இடமும் அறிந்து வினை செய்யும் திறம் வேண்டும் (48 – 50),தெரிந்து தெளியும் ஆற்றல் வேண்டும் (51), தெரிந்து வினையை ஆளும் வன்மை வேண்டும் (52), சுற்றம் தழுவ வேண்டும் (53), மறதி (சோர்வு) இல்லாமல் கடமைகளைச் செய்ய வேண்டும் (54), செங்கோன்மை (நேர்மை) வேண்டும் (55), கொடுங்கோன்மையை வெறுக்க வேண்டும் (56), வெருவந்த (பிறர் அஞ்சி நடுங்கும் செயல்கள்) செய்யாமை வேண்டும் (57), கண்ணோட்டம் (இரக்கம்) வேண்டும் (58), ஒற்று (உளவு) ஆளும் முறை வேண்டும் (59), ஊக்கம் வேண்டும் (60), சோம்பலை ஒழிக்க வேண்டும் (61), முயற்சி வேண்டும் (62), இருக்கண்ப் (துன்பத்தைப்) பொருட்படுத்தாத உறுதி வேண்டும் (63), இவைகளே அரசியலில் ஆட்சித் தலைவர்களுக்குத் திருவள்ளுவர் வலியுறுத்தும் இயல்புகள். இவை யாவும் நன்மக்கள் எல்லோருக்கும் வேண்டும் பண்புகளே என்பது நெற்றித் திலகம்.

குடியாட்சிக் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரைகள்:
அரசனைப் பற்றியும், அரசியல் அமைப்பினைப் பற்றியும் திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள கருத்துக்கள் இன்றும் பொன் போல் போற்றத்தக்கனவாக விளங்குகின்றன. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக்காலம். எனினும் அந்தக் காலத்தில் அவர் அரசனுக்குச் சொன்னவைகளாக அமைந்த அறிவுரைகள், இன்று குடியாட்சி முறையில் உள்ள தலைவர்களுக்கும் பொருந்தும் நன்மொழிகளாக உள்ளன. திருவள்ளுவர், அரசு எப்படி இருக்க வேண்டும் என்று முடியாட்சி எங்கும் பரவியிருந்த காலத்திலேயே அழகாக எடுத்துக்காட்டியிருக்கிறார்.

திருவள்ளுவர் காட்டுகின்ற அரசு எந்தக் காலத்திற்கும், எந்த அமைப்பிற்கும் பொருத்தமாகக் காணப்படுகிற நிலையினை நாம் காண்கின்றோம். அவருடைய அரசியல் கருத்துக்கள் எந்தக் காலத்திற்கும் எந்த அமைப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறப்பினைப் பெற்று விளக்குகின்றன.

**மக்கள் நல அரசு:**

சுருங்கக் கூறின், திருவள்ளுவருடைய அரசியல் அமைப்பு ஒரு “மக்கள் நல அரசு“ (Welfare State) அடிப்படையில் அமைந்தது எனலாம் (திருக்குறளில் அறிவுத் துறைகள், பக்கம் 114 : 118)

என்ற குறப்பாவில், அரசு குடும்பத்தில் பிறந்து வளர்ந்து, அரசனாகப் பொறுப்பு ஏற்றால் மட்டுமே ஒருவன் அரசனாகச் சிறக்க முடியாது“ என்னும் கருத்தியலைத் தெள்ளத் தெளிவாகப் பறைசாற்றியுள்ளார் திருவள்ளுவர். ஒரு மன்னன் நீதி நெறி வழுவாமல் தன் கடமையைச் சரிவரச் செய்தால் - குடிமக்களைக் காப்பாற்றினான் என்றால் - அவன், “இறை என்று வைக்கப்படும்“ - “முறை செய்து காப்பாற்றும்” அவனை மக்கள் காணும் கடவுளாகவே கருதுவார்கள் என்கிறார் அவர். மன்னனைக் கடவுளாக நினைத்த ஒரு காலக்கட்டத்தில், “நீ ஒன்றும் கடவுள் அல்ல, நல்ல வண்ணம் நடந்தால், நீதி நெறி வழுவாமல் காப்பாற்றினால் உன்னை மக்கள் கடவுளாகவே கருதுவார்கள்“ என்று வள்ளுவர் கூறியிருப்பது, ஆழ்ந்து

சிந்திக்கத்தக்கது. இக்கருத்து, முடியாட்சிக் காலத்திற்கு மட்டுமின்றி, குடியாட்சி மலர்ந்துள்ள இக்காலக்கட்டத்திற்கும் பொருந்தி வருவதே.

திருவள்ளுவரின் கண்ணோட்டத்தில் “அறம் வழுவாது, தீமைகளை நீக்கி, மறம் வழுவாது, மானம் காப்பது அரசு“ ஆகும்.

”அறனிழுக்கா தல்லாவை நீக்கி மறனிழுக்கா
மானம் உடைய தரசு” (குறள் : 384)

என்னும் குறட்பா இவ்வகையில் கருத்தில் கொள்ளத்தக்கது.

“மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி“. நாடாளும் மன்னன் தனது குடிமக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டியவன் ஆவான். அவன் ஒருவன் தீய வழியில் நடந்தால், மற்றவர்களுக்கு அதுவே தூண்டுகோல் ஆகிவிடும். அவன் தலைவனாக இருப்பதால், அவனுடைய ஒழுக்கம் மற்றும் தனிவாழ்வு பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவுதல் எளிது. ஆகவே, அவனுக்கு அறநெறி கட்டாயம் வேண்டும் என்று திருவள்ளுவர் வலியுறுத்தியுள்ளார். மானம் வேண்டும் என்று கூறும் போதும், தனிவாழ்க்கை பற்றிய மான உணர்ச்சியைக் குறிப்பிடாமல், “மறன் இழுக்கா மானம்“ என வீரத்திற்கு ஏற்புடைய மானத்தைக் குறிப்பிட்டு, நாட்டின் மானமே தன் மானமாகக் கொண்டு மன்னன் வாழ்க்கை நடத்த வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார்.

“செங்கோன்மை“ அதிகாரத்திலும் நல்லாட்சி பற்றி எக்காலத்திற்கும் பொருந்தி வருகின்ற அடிப்படையான கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் திருவள்ளுவர். உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழ்கின்றன அது போல், குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை – நல்லாட்சியை – எதிர்பார்த்து வாழ்கின்றனர் என்கிறார்.

”வானோக்கி வாழும் உலகெல்லாம்; மன்னவன்
கோல்நோக்கி வாழுங் குடி” (குறள் : 542)

என்ற குறட்பாவில் ”மன்னவன் கோல்” என்னும் முடியாட்சிக் காலத்திற்கான தொடரின் இடத்தில், “நல்லாட்சி” என்ற பொதுவான இன்றைய மக்களாட்சிக்கு ஏற்ற தொடரைப் பொருத்திக் கொள்ளும் வகையில் பாடியிருப்பது திருவள்ளுவரின் தனிச்சிறப்பாகும்.

”குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு” (குறள் : 544)

என்னும் குறட்பாவும் திருவள்ளுவரின் காலம் கடந்து நிற்கும் பொதுமை நோக்கினைத் தெற்றெனப் புலப்படுத்தி நிற்கின்றது. “குடிமக்களை அன்போடு அணைத்துக் கொண்டு ஆட்சி புரியும் அரசனுடைய அடிகளைப் பொருந்தி நிற்குமாம் உலகம்”.

இக்கருத்தினையே “கொடுங்கோன்மை“ அதிகாரத்தில் வரும் குறட்பா ஒன்றில் எதிர்மறை வாய்பாட்டால் தெளிவுபடுத்தியுள்ளார் திருவள்ளுவர். கொடுமையைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல் துன்புற்றுக் குடிமக்கள் அழும் கண்ணீருக்கு மிகுந்த ஆற்றல் உண்டு அதுவே ஆற்றல் மிக்க படையாகி முறை செய்யாத மன்னனுடைய அரசையே அடியோடு அழித்துவிடும்.

”அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை” (குறள் : 555)

இங்கே அல்லற்பட்டு ஆற்றாது குடிமக்கள் அழும் “கண்ணீரை“, அழித்துவிடும் “படையாக“ உருவகம் செய்திருக்கும் திருவள்ளுவரின் சிந்தனை புதுவது; இதுவரை யாரும் கூறாதது. ஹிட்லர், முசோலினி, ஜார் முதலான உலகின் கொடுங்கோலர்களுக்கு எதிராகத் திருவள்ளுவர் இக்குறட்பாவில் அடித்திருக்கும் சாவுமணி வலிமையானது.

**வருவாயைப் பெருக்குவதற்கான நான்கு வழிவகைகள்:**

ஒரு மன்னன் தனது அரசின் வருவாயைப் பெருக்கும் துறையிலும் வரவு – செலவுத் திட்டத்திலும் (Budget) வல்லவனாக விளங்க வேண்டும். இவ்வகையில் திருவள்ளுவர் "இறைமாட்சி" அதிகாரத்தில் கூறியுள்ள ஓர் அடிப்படையான அரசியல் சிந்தனை வருமாறு:

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலுமட் வல்ல தரசு" (குறள் : 385)

முதலாவதாக, ஒரு மன்னன் பொருள் வரும் வழிவகைகளைப் பெருக்க வேண்டும்; இதனை "இயற்றல்" என்ற சொல்லால் குறிப்பிடுகிறார் வள்ளுவர். அடுத்து, அரசுக்குப் பல வழிகளிலே வந்த வருவாயைத் திரட்டி ஒன்று சேர்க்க வேண்டும்; இதனை "ஈட்டல்" என்கிறார் வள்ளுவர். மூன்றாவதாக ஒன்று சேர்த்த பொருளை அழிவு நேராமல் காக்க வேண்டும் இது "காத்தல்" ஆகும். மிக இன்றியமையாத நான்காவது படிநிலை, இயற்றியும் ஈட்டியும் காத்தும் வைத்துள்ளவற்றைச் செலவிடுவதற்கு உரிய துறைகள் இவை இவை, அவற்றிற்கான தொகைகள் இவ்வளவு இவ்வளவு என்று வகுத்துச் செலவு செய்தல் ஆகும். இதுவே "வகுத்தல்" எனப்படும். இங்ஙனம் இயற்றல்,ஈட்டல், காத்தல், வகுத்தல் என்னும் நான்கு வழிமுறைகளில் அரசின் வருவாயைச் சேர்த்து, பகிர்ந்து, திட்டமிட்டு, பயன்படுத்திக் கொள்வது ஒரு சேர்ந்த மன்னனின் தலையாய கடமை ஆகும் என்கிறார் திருவள்ளுவர்.

இக்கருத்து இன்று அரசியல் மற்றும் பொருளியல் சார்ந்த அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சமதர்மம் அடிப்படைக் கருத்துக்களில் ஒன்றாகும். ஓர் அரசு தனது வருவாயை எவ்வாறு எல்லாம் சிறந்த முறையில் திட்டமிட்டுக் கையாள வேண்டும் என்ற முற்போக்கான கருத்தினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நறுக்குத் தறித்தாற் போல் "இயற்றல்,ஈட்டல், காத்தல், வகுத்தல் என நான்கே நான்கு சொற்களில் வடித்துத் தந்துள்ள பாங்கினை இங்கே நம்மால் காண முடிகின்றது.

அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியனவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால்தான் அவர் அரசனுக்கென்று திருவள்ளுவர் பொருட்பாலில் கூறியுள்ள நல்லியல்புகள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வேண்டியவாக, பொருந்தக் கூடியனவாக இருக்கின்றன. அதனால் தான் அவர் அரசனுக்கு என்று கூறத் தொடங்கிய "கல்வி" முதலாக "இடுக்கண் அறியாமை" வரையிலான பண்பு நலன்களை "வாழும் உயிர்க்கு" என்றும் "மாந்தர்க்கு" என்றும் பலர்க்கும் பொதுவாக்கிக் கூறியுள்ளார். திருவள்ளுவர் பொருட்பாலில் வலியுறுத்தியுள்ள அரசியல் சிந்தனைகளில் அறநெறியே முதன்மையான இடத்தினைப் பெறுகின்றது. அவரது அரசியல் அமைப்பில் மக்கள் நலமே அடிப்படையாக விளங்குகின்றது. வேறு சொற்களில் கூறுவது என்றால், முடியாட்சிக் காலத்தைச் சார்ந்த திருவள்ளுவரின் பெரும்பாலான அரசியல் சிந்தனைகள் இன்றைய குடியாட்சிக்கு காலத்திற்கும் ஏற்புடையனவாகத் திகழ்கின்றன.

திருக்குறள் ஓர் மதச்சார்பற்ற நூல்

திருக்குறளை நாம் படிக்க ஆரம்பித்த உடனேயே அது ஒரு மதச்சார்பற்ற நூல் என்ற உண்மையை நாம் அறியலாம். திருவள்ளுவர் வாழ்ந்த காலத்தில் பௌத்த மதம், சீக்கிய மதம், ஜைன மதம், மற்றும் இந்த மதம் போன்ற பல மதங்கள் இருந்தன. அதைப்போலவே இறை மறுப்பாளர்களும் இருந்துள்ளனர். ஆனால் மதச்சார்பற்ற தன்மை எனும் கருத்தாக்கத்தை யாரும் அறிந்திருக்கவில்லை. வள்ளுவரே மத நம்பிக்கை உடையவர் தான். கடவுளைப் புகழ்ந்தே பத்து குறள்களை கொண்ட ஒரு அதிகாரத்தை படைத்துள்ளார். அவரும் ஒரு மதத்தில் இருந்திருக்கலாம். ஆனால் எந்த ஒரு மதத்துக்கும் ஆதாரமாக இந்நூல் இல்லை. குறிப்பாக சொல்வதென்றால் எந்த மதத்தைப் பற்றியும் குறிப்பிடக்கூட இல்லை.

**தேசியவாதம்:**
**சுப்ரமணிய பாரதியார் (1882 – 1921)**

| |
|---|
| ஜாதி மதங்களைப் பாரோம் - உயர் ஜன்மம் இத் தேசத்தில் எய்தின ராயின்<br>வேதிய ராயினும் ஒன்றே – அன்றி<br>வேறு குலத்தின் ராயினும் ஒன்றே<br>நாம் சாதி மதங்களைப் பார்க்க வேண்டாம். இந்த நிலத்தில் வாழும் அனைத்து மனிதர்களும் ஒன்றே அவர்கள் எந்த சாதியினரை சார்ந்திருந்தாலும் அல்லது எந்த வேதத்தை போதிப்பவராக இருந்தாலும் நாம் அனைவரும் ஒன்றே அது மனிதகுலம் ஆகும்.<br>சுப்ரமணிய பாரதியார் |

சி. சுப்ரமணிய பாரதியார் தமிழகத்தின் தலைச்சிறந்த கவிஞர், சுதந்திரப் போராளி மற்றும் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் மகாகவி பாரதியார் என்று மிகவும் போற்றப்படுகிறார். மகாகவி என்றால் மிகப்பெரிய கவிஞர் எனப்பொருள்படும் இவர் இந்தியாவின் தலைசிறந்த கவிஞராகக் கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசிய உணர்வைத் தூண்டி தேச விடுதலைக்காக மக்களைத் திரட்ட உதவியதுடன் தமிழகத்தில் இந்திய சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவாகவும் இருந்தன.

| |
|---|
| ”நாம் ஆயிரம் பிரிவுகளாக வேண்டுமானாலும் பிரிந்து இருக்கலாம். ஆனால், எப்படி இருந்தாலும் அந்நிய படையெடுப்பை நியாயப்படுத்த முடியாது”. |

பாரதி: ஓர் பாடலாசிரியர் மற்றும் ஓர் தேசியவாதி
தமிழ் இலக்கியங்களின் ஓர்புதிய சகாப்தமே சுப்ரமணிய பாரதியாரிடமிருந்து தொடங்கியுள்ளது எனலாம். இவருடைய பெரும்பாலான படைப்புகள் தேசபற்று, பக்தி மற்றும் மறைபொருள் பற்றியதாகும். பாரதியார் மிகவும் உணர்ச்சிப் பெருக்குள்ள கவிஞர் ஆவார். ”கண்ணன்பாட்டு” ”நிலவும் வான்மீனும் காற்றும்” ”பாஞ்சாலி சபதம்” போன்றவை பாரதியாரின் மிகச் சிறந்த படைப்புகளின் வெளிப்பாடுகளாகும்.

| |
|---|
| பாரதியாரின் ”பாஞ்சாலி சபதம்” என்பது ஓர் தலைசிறந்த படைப்பாகும். இதுஇந்தியாவை திரௌபதியாகவும், ஆங்கிலேயரை கௌரவர்களாகவும் சுதந்திர போராட்ட வீரர்களை பாண்டவர்களாகவும், உருவகப் படுத்தியிருந்தார். திரௌபதியின் போராட்டம் மூலமாக அவர் இந்திய தாய் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுள்ளதை மறைமுகமாக வெளிப்படுத்தினார். |

பாரதி ஓர் தேசியக் கவிஞராக கருதப்படுகிறார். இவருடைய பாடல்கள் தேசப்பற்று மிக்கதாக மக்கள் மத்தியில் போற்றப்பட்டுள்ளன. இதனால் மக்கள் ஈர்க்கப்பட்டு சுதந்திரப் போராட்டத்தில் மிகுந்த ஈடுபாடுடன் பங்கேற்று நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டனர். பாரதியார் நாட்டின் பெருமையை மட்டும் கூறாமல் சுதந்திர இந்தியாவைப் பற்றிய தெலைநோக்குப் பார்வையை கோடிட்டுக் காட்டுகிறார். இவர் 1908 ம் ஆண்டு ”சுதேச கீதங்கள்” எனப்படும். உணர்ச்சிமிக்க பாடல் தொகுப்பினை வெளியிட்டார்.

**ஓர் இதழாசிரியகராக பாரதியார்:**

பாரதியார் (பல வருடங்களைப்) தன்னுடைய வாழ்க்கையில் பத்திரிக்கையாளராக செலவிட்டார். பாரதி இளம் வயதில் தன்னுடைய வாழ்க்கையை ஓர் பத்திரிக்கையாளர் மற்றும் துணை ஆசிரியராக ”சுதேச மித்திரன்” என்ற பத்திரிக்கையில் 1904ஆம் ஆண்டு தொடங்கினர். 1906-ஆம் ஆண்டு மே மாதம் ”இந்தியா” எனப்படும் ஓர் புதிய நாளிதழ் தொடங்கப்பட்டது. இது பிரஞ்சு புரட்சியின் மூன்று முக்கிய முழக்கங்களான சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் போன்றவற்றை தனது குறிக்கோளாக அறிவித்தது. இது தமிழ் பத்திரிக்கை துறையில் ஓர் புதிய பாதையை ஏற்படுத்தியது எனலாம். இது புரட்சிகரமான புதிய முயற்சியாக தோன்றியது. தனது புரட்சிகரமான முனைப்புகளை வெளியிடுவதற்கு பாரதியார் அவர்கள் வார இதழை சிகப்புதாளில் அச்சிட்டு பிரசுரித்தார். அரசியல் கேலிச் சித்திரத்துடன் வெளியிடப்பட்ட தமிழ் நாட்டின் முதல் நாளேடு “இந்தியா“ என்பதாகும். இவர் மேலும் விஜயா என்கிற தமிழ் தினசரியின் அதன் பதிப்பாசிரியராகவும் இருந்து வெளியிட்டார். “பால பாரதா” என்கிற ஆங்கில மாத இதழையும், பாண்டிச்சேரியில் ”சூர்யோதயம்” எனும் உள்நாட்டு வார இதழை வெளியிட்டார்.

சுயராஜ்ய தினம்" கொண்டாடுவதற்காக 1908-ஆம் ஆண்டு சென்னையில் மிகப்பெரிய பொதுக் கூட்டத்திற்கு இவர் ஏற்பாடு செய்தார். "வந்தே மாதரம்" "எந்தையும் தாயும் ஜெய பாரத்" போன்ற பாரதியாரின் கவிதைகள் அச்சிட்டு இலவசமாக மக்களுக்கு வினியோகிக்கப்பட்டன.

சுப்ரமணிய பாரதியார் (டிசம்பர்) பதினோராம் நாளில் 1882-ஆம் ஆண்டு எட்டயபுரம் என்னும் கிராமத்தில் பிறந்தார். இந்த ஊர் தமிழ்நாட்டில் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இவருடைய குழந்தை பருவ பெயர் சுப்பையா ஆகும். இவரது தந்தையார் சின்னசாமி, தாயார் லட்சுமி அம்மாள் ஆவார்.

பாரதியார் ஏழு வயதில் தமிழ்க் கவிதைகளை எழுத ஆரம்பித்தார். தன்னுடைய பதினோராம் வயதில் அவருடைய படைப்புகள் மற்றும் திறமைகள் கற்றறிந்த அறிஞர்களால் புகழப்பட்டது. பதினோராம் வயதில் சுப்பையா அனைத்து பெருமக்கள் மற்றும் அறிஞர்கள் கூடியிருக்கும் சபையில் ஓர் சவால் விட்டார். யாரேனும் என்னுடன் எந்தவித முன்னறிப்பு மற்றும் பயிற்சி இல்லாமல் எந்த தலைப்பில் வேண்டுமானாலும் பேச தயாரா? என சவால் விட்டார். இந்த போட்டி எட்டையபுர அரசவையில் ஓர் சிறப்பு அமர்வாக எட்டயபுர அரசரின் தலைமையில் நடைபெற்றது. சவாலில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பு "கல்வி" ஆகும். சப்பையா பேச்சுப் போட்டியில் வென்றார். இது சுப்பையாவின் வாழ்க்கையில் ஓர் திருப்பு முனையாக அமைந்தது. இந்த மறக்க முடியாத நிகழ்வுக்கு பிறகு "எட்டயபுர சுப்பையா" என்று அழைக்கப்பட்ட அவர் "பாரதி" என்றும் பிற்காலத்தில் பாரதியார் என்றும் மரியாதையுடன் அழைக்கப்பட்டார். "பாரதியார்" என்ற பெயர் அனைவராலும் குறிப்பாக தேசவாதிகளாலும் உலகெங்கிலும் உள்ள கோடான கோடி தமிழப் பற்றாளர்களால் மரியாதையுடனும் நினைவு கூறப்படுகிறது.

ஜீன் 1897- இல் பாரதியாருக்கு பதினைந்து வயது நிரம்பியிருந்த போது செல்லமாளுடன் திருமணம் நடந்தது. இதன்பிறகு பாரதியார் காசிக்கு சென்றார். அங்கு தனது அத்தை குப்பாள் மற்றும் மாமா கிருஷ்ணசிவனுடன் இரண்டு ஆண்டுகள் இருந்தார். அங்கிருந்த போது தான் சமஸ்கிருதம், இந்தி மற்றும் ஆங்கில மொழியறிவினை பெற்றார். அகலாபாத் பல்கலைக்கழக நுழைவுத் தேர்வில் அவர் வெற்றி பெற்றார். காசியில் தங்கியருந்தது பாரதியின் ஆளுமையில் பெரும் மாற்றங்களை எற்படுத்தியது. முறுக்கு மீசை, சீக்கியர்களின் தலைப்பாகை மற்றும் வீறு கொண்ட நடையினை தனக்கே உரித்தானதாக்கினார். இத்தகைய வெளிப்படையான மாற்றங்களும் பாரதியாரிடம் ஏற்பட்டன.

"இந்தியா" என்கிற இதழின் பதிப்பாசிரியராக இருந்து செயல்பட்டதனால் பாரதியாருக்கு கைது ஆணைப் பிறப்பிக்கப்பட்டது. இதனால் நிலைமை மிகவும் மோசமானதால் 1908-ஆம் ஆண்டு பாண்டிச்சேரிக்கு செல்ல முடிவு எடுத்து அவர் அங்கே சென்றார். அந்த கால கட்டத்தில் பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அங்கு பாரதியாரின் வாழ்வில் பல்வேறு சாதகமான சூழ்நிலைகள் ஏற்பட்டன. இதன் மூலம் பல தலைவர்களை சந்திக்கவும், சுதந்திரப்போராட்டத்தில் ஆயுதமேந்திய இயக்கத்தின் தலைவர்களான அரவிந்தோ, லாலா லஜபதிராய் மற்றும் வி.வி. சுப்ரமணியம் ஆகியோரையும் பாண்டிச்சேரியில் தஞ்சம் புகுந்திருக்கும் பொழுது சந்தித்தார். மிகவும் ஆதாயத்திற்குரிய பாரதியாரின் வாழ்க்கை என்பது பாண்டிச்சேரியில் பத்து வருடம் அவர் தங்கியிருந்த காலமாகும். இவர் தமிழ் இளைஞர்களை ஒன்று திரட்டி தேசிய பாதைக்கு இட்டுச் சென்றார். பாரதியாரின் படைப்புகள் ஆங்கிலேய அரசுக்கு மிகவும் எரிச்சலூட்டின, இவரின் எழுத்துக்கள் மூலம் தாய் நாட்டுப்பற்றை தமிழ் இளைஞர்களிடம் விதைத்தார். பாரதியார் 1919-ஆம் ஆண்டு சென்னையில் ராஜாஜி வீட்டில் மகாத்மா காந்தியை சந்தித்தார். பாரதியார் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த இந்தியாவிற்கு அருகில் 1918-ஆம் ஆண்டு கடலூரில் நெருங்கினார். அப்பொழுது அவர் கைது செய்யப்பட்டார். இவர் சிறையில் இருக்கும்பொழுது தன்னுடைய நேரத்தை சுதந்திரம், தேசியவாதம் மற்றும் நாட்டின் நலத்தைப் பற்றிய கவிதைகள் எழுதுவதற்கு செலவிட்டார். பாரதியார் தன்னுடைய இளமைக்காலத்தில் தமிழ் தேசியத் தலைவர்களிடம் நல்ல உறவுகளை ஏற்படுத்தினார், குறிப்பாக வ.உ. சிதம்பரம், சுப்ரமணிய சிவா, மண்டயம் திருமலச்சாரியார் மற்றும் சீனுவாச்சாரி போன்றவர்களிடம் நல்லுறவுகளை வளர்த்தார். இந்த தலைவர்களிடம் ஆங்கிலேயர் ஆட்சியினால் ஏற்படும் பிரச்சனைகளை பற்றி விவாதித்தார். பாரதியார் இந்திய தேசிய காங்கிரசின் வருடாந்திர மாநாட்டில் கலந்து கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் தேசிய பிரச்சனைகளை தீவிரமான இந்திய தேசியவாதத் தலைவர்களான பிபின் சந்திரபால், பாலகங்காதரதிலக் மற்றும் வி.வி. சுப்ரமணியம் போன்றோரிடம் விவாதித்தார். பாரதியாரின் பங்கேற்பு மற்றும் செயல்பாடுகளால் 1905-ஆண்டு பனாரஸ் மற்றும் 1907-ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் இந்திய தேசிய காங்கிரசு

தலைவர்களை இவரது தேசபற்று மிகவும் கவர்ந்து இழுத்ததுடன் பல தாய் நாட்டை நேசிக்கும் சேதத் தலைவர்களால் மதிக்கப்பட்டார். சில தேசத்தலைவர்களுடன் தேசம் பற்றிய சிந்தனைகளைப் பகிர்ந்து கொண்டார். அதுமட்டும் இல்லாமல் பல்வேறு முறையில் தேசிய இயக்கத்தை வலுப்படுத்துவதற்கு அவர் அறிவுரைகளை வழங்கினார். சந்தேக மில்லாமல் பாரதியாருடைய அறிவுரைகள் மூலமாகப் பல தேசிய தலைவர்கள் புத்துணர்வு பெற்று தேசியவாதத்திற்கு பங்காற்றினார். இவ்வாறு பாரதியார் இந்திய சுதந்திரத்திற்காக முக்கிய பங்காற்றினார் என்பதை நாம் அறிவோம்.

**ஓர் சமூக சீர்திருத்தவாதியாக பாரதியார்:**

பாரதியார் சாதிய அமைப்புக்கு எதிராக செயல்பட்டவர். இவர் உலகில் இரண்டு சாதிகள் உள்ளன. ஒன்று ஆண்சாதி மற்றொன்று பெண்சாதி என்பதைத் தாண்டி வேறு ஒன்றுமில்லை என்று பிரகடனப்படுத்தியிருக்கிறார். இவற்றிற்கெல்லாம் இவர் தனது பூநூலை அகற்றினார். மேலும் அட்டவணை சாதியினரையும் பூநூல் அணியச் செய்து வேதம் ஓதச் செய்தார். இவர் முஸ்லிம்கள் நடத்தும் கடையில் தேநீர் பருகினார். இவர் தன்னுடைய குடும்ப உறுப்பினர்களுடன் தேவாலாயத்திற்கு அனைத்து விழாக்களிலும் பங்கேற்றார். இவர் பட்டியல் இனத்தவரை கோயிலுக்கு அனுமதிப்பதை ஆதரித்தார். இவருடைய அனைத்து சீர்திருத்தங்களுக்கும் இவருடைய அக்கம் பக்கத்தினரிடையே பெரிய எதிர்ப்பு இருந்தது. பாரதியார் மிகவும் திறமையானவர். இந்தியர், தெளிவாக அனைவரும் பாரதத்தாயின் குழந்தைகள் என ஒன்றுபட்டு செயல்பட்டால் அன்றி இந்திய விடுதலை சாத்தியமாகாது என்று கூறினார். இவர் பெண்களின் உரிமைகள், பாலினச் சமத்துவம் மற்றும் பெண்களின் ஆற்றலாதல் ஆகியவற்றை மிகவும் நம்பினார். இவர் குழந்தை திருமணம், வரதட்சணை முறையைத் தீவிரமாக எதிர்த்தார். ஆனால் விதவை திருமணத்தை அவர் ஆதரித்தார்.

| |
|---|
| ஆணும் பெணும் சமமாகக் கருதப்பட்டால் மட்டுமே இவ்வுலகம் அறிவு மற்றும் புத்திக்கூர்மையில் சிறப்புறும். – சுப்பிரமணிய பாரதியார் |

| |
|---|
| விவேகானந்தரின் சீடரான சகோதரி நிவேதிதாவுடனான பாரதியாரின் சந்திப்பு பெண்களுக்கான உரிமைகள் பற்றி சிந்தனையைப் பாரதியாரிடம் ஏற்படுத்தின. இது சாதியப் பிரச்சனையிலிருந்து சுதந்திரம் வரைக்கும் மற்றும் ஆன்மீகம் வரை பாடுபட்டவர். இவர் தற்கால பெண்களுக்கு சக்தி என்கிற அடையாளத்தை ஏற்படுத்தியவர். குறிப்பாக நவீன பெண்களின் அதிகாரம், பலமான, சுதந்திரமான மற்றும் ஆண்களுக்கு சமமான பங்குதாரர் என்று பெண்களை குறிப்பிடுகிறார். |

**ஓர் தொலைநோக்குச் சிந்தனையாளராகப் பாரதியார்:**

பாரதி என்பவர் ஒரு கவிஞர், பத்திரிக்கை ஏழுத்தாளர், சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவர் தமிழக சமுதாயத்தில் மிகப் பெரியத் தாக்கத்தை ஏற்படுத்தியவர். இவர் சொன்னதைச் செய்துக் காட்டியவர் என்பது இவரின் உயர்வைக் காட்டுகிறது. இவருடைய தொலை நோக்கான முன்கணிப்பு போல அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளில் இந்தியா சுதந்திரம் பெற்றது. ஓர் மக்கத்தான இந்தியா பற்றிய இவரின் தொலை நோக்கு சிந்தனைகள் சுதந்திர இந்தியாவில்

| |
|---|
| பாரதியார் செப்டம்பர் பதினோராம் நாள் 1921-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். ஆனால் இவரின் இறுதி சடங்கில் பதினான்கு நபர்கள் மட்டுமே பங்கேற்றனர். இதற்கு சாதியை விட்டு தள்ளி வைக்கப்படுவோம் என்பதுடன் ஆங்கிலேய அரசாங்கத்தின் அடக்கு முறையினால் ஏற்பட்ட பயமே காரணமாகும். |

செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாரதியார் தனக்காக வாழாமல் மக்களுக்காகவும் தேசத்திற்காகவும் வாழ்ந்தவர். ஆகையால்தான் மரியாதையுடன் இவரைப் பாரதியார் எனப் போற்றுகின்றனர். பல ஆண்டுகளுக்குப் பிறகும் சுப்ரமணிய பாதியார் இந்திய சுதந்திரத்தின் சின்னமாகவும் தமிழ் தேசியவாத அதிர்வலையை ஏற்படுத்தியவராகவும் விளங்குகிறார்.

**பொதுவுடைமைவாதம்:**

ம. சிங்காரவேலர் (1860 – 1946)

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுச்சிபெற்ற சுதேசி மற்றும் தன்னாட்சி இயக்கங்களால் நாடு முழுவதும் விடுதலை உணர்வு பரவியது. சமூகரீதியிலும் இந்து மத்திற்குள் சில சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அரசியல் ரீதியாக இந்தியத் தன்மை அல்லது தேசிய உணர்வு உருவாவதில் இந்த இயக்கங்கள் முக்கியப் பங்கு வகித்தன.

இருந்த போதும் இவை மதவாதத் தன்மையை கொண்டிருந்தன. அதேபோல இந்த இயக்கங்களில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் படித்த மேல்தட்டு வர்க்கத்தினராக இருந்தனர். அவர்கள் கோரும் விடுதலை மட்டுமே அரசியல் விடுதலையாக இருந்தது. அடித்தட்டு மக்களான விவசாயிகள், தொழிலாளர்களின் பொருளாதார நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. பெரும்பாலான விவசாயிகள் ஏழைகளாக இருந்தனர். மேலும், காங்கிரசு கட்சிக்குள் சாதிப் பாகுபாடுகள் நிலவின. குறிப்பாக, தமிழகத்தில் பிரமாணர், பிராமரல்லாதவர் என்ற பாகுபாடு நிலவியது.

இந்த நிலைமையில் தமிழக அரசியல் இயக்கத்தில் பகுத்தறிவு கருத்துகள், அறிவியல் பார்வை ஆகியன உருவாவதிலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஒரு வட்டாரத் தன்மை அளிப்பதிலும், விடுதலைப் போராட்டத்தில் விவசாயிகள், தொழிலாளர்கள் நலன்களை இணைப்பதிலும் இந்திய அரசியலில் சமதர்மக் கருத்துகள் பரவியதிலும் ம. சிங்காரவேலரின் அரசியல் சிந்தனைகள் முக்கியப் பங்காற்றின.

**காங்கிரசு அரசியலில் சிங்காரேவேலருடைய சிந்தனைகளின் தாக்கம்:**

தொடக்கத்தில் இந்தியாவில் இருந்து இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து மூலப்பொருட்களாகத் தங்கள் நாட்டுக்கு ஏற்றுமதி செய்த ஆங்கிலேய அரசு, தங்கள் தேவைகள் அதிகரித்ததால் இந்தியாவிலேயே தொழிற்சாலைகளைத் தொடங்கியது. ஏற்கனவே இந்தியாவில் பாரம்பரியத் தொழில்களை காலனியாதிக்க அரசு முடக்கிவிட்டதால் மக்கள் வாழ்வாதாரங்களை இழந்து பசி, பட்டினி, வறுமையில் வாடினர். இதனால் மக்களின் வாழ்க்கை தரத்தினை மேலும் மோசமாக்கியது. இதனால் கூலி வேலை கிடைத்தால் போதும் என்ற நிலைக்குத் தொழிலாளர்கள் தள்ளப்பட்டனர்.

இதனால் பின்னர் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகள் அனைத்திலும் தொழிலாளர்கள் மிகக் குறைவான கூலிக்கு வேலையில் அமர்த்தப்பட்டனர். அடிமைகளைப் போல் உழைத்தனர். போராடினால் கடுமையான அடக்குமுறையால் ஒடுக்கப்பட்டனர்.

இவ்வாறு பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்காகத் தொழிலாளர் அமைப்புகள் உருவாகத் தொடங்கின. அன்றைய சென்னை மாகாணத்தில் இந்த அமைப்புகளுக்கு திரு.வி. கல்யாணசுந்தரனார், தி. வரதராஜுலு போன்றோர் தலைமை தாங்கினர். இந்த தொழிலாளர் அமைப்புகள் உருவாக முன்முயற்சிகள் எடுத்து பாடுபட்டவர் ம. சிங்காரவேலர் ஆவார் என்பது மிகையில்லை.

இந்த தொழிலாளர்களை அரசியல்மயப்படுத்தி விடுதலை இயக்கத்தோடு இணைக்க வேண்டும் என்று ம. சிங்காரவேலர் விரும்பினார். ஆனால் காங்கிரசு கட்சி இதனை விரும்பவில்லை. ம. சிங்காரவேலர் இதனைக் கடுமையாக விமர்சித்து 1920 ஆம் ஆண்டிலேயே காங்கிரசு தலைமைக்கு தந்தி அனுப்பினார். தொடர்ந்து அண்ணல் காந்திக்குப் பகிரங்கக் கடிதமும் எழுதினார். அத்துடன் ஹிந்து. சுதேசமித்திரன் உள்ளிட்ட முன்னணி நாளிதழ்களிலும் நவசக்தி போன்ற பருவ இதழ்களிலும் ஏராளமான கட்டுரைகள் எழுதினார். காங்கிரசு தொண்டர்கள் மத்தியிலும் பிரச்சாரம் செய்தார். இச்சமயத்தில் 1922-ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டத்தில் தமிழகப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட அவர் அங்கும் விவாதத்தை உருவாக்கி தமக்கு ஆதரவு திரட்டினார். அவரது கருத்துக்கள் வருமாறு.

- இந்திய விடுதலை என்பது விவசாயிகள். தொழிலாளர்களின் பொருளாதார சுதந்திரத்தை உள்ளடக்கியதாகும்.
- தொழிலாளர்கள், விவசாயிகள் நலன்களுக்காகவும் காங்கிரசு பேரியக்கம் போராட வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தில் தொழிலாளர்கள், விவசாயிகளையும் இணைத்துக் கொள்ளவேண்டும்.

பல்வேறு அமைப்புகளில் உள்ள மக்களை ஒன்று திரட்ட காங்கிரசு தலைவர்கள் உதவ வேண்டும்.
இதன் விளைவாக 1922-இல் இந்திய தேசிய காங்கிரசு தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக ஒன்று திரட்டத் தீர்மானம் நிறைவேற்றியதுடன் இதற்கென ஓர் குழுவினை அமைத்தது. ஆறுபேர்கொண்ட அக்குழுவில் சிங்காரவேலரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க சட்டம் இயற்ற வேண்டும் என்று போராடினார். அதனை வலியுறுத்தி அன்றைய முன்னணி நாளிதழ்களில் தொடர்ந்து எழுதினார். இதுபோன்ற முயற்சிகளின் பலனாக முதல் முறையாக 1926-இல் தொழிலாளர் நலன்களைப் பேணும் சட்டம் இயற்றப்பட்டது.

இதேபோல காங்கிரசு தலைவர்கள் அந்தந்த வட்டார மொழிகளில் பேசினால்தான் விடுதலைக்கருத்துகள் மக்களைச் சென்றடையும் என்பதுடன் மக்களுக்கும் காங்கிரசு பேரியக்கத்துக்கும் இடையே நெருக்கம் உருவாகும் என்றார். மக்கள் பிரச்சனைகளைப் பொதுமக்களிடம் பேசும்போது தமிழ் மொழியிலேயே பேச வேண்டும் என உறுதியாக இருந்தார். இதையொட்டி 1918-இல் சென்னை மாகாண சங்கத்தின் மாநாட்டில் இது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாட்டில் சிங்காரவேலர் மற்றும் ஈ.வெ.ரா. பெரியார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுயமரியாதை,பொதுவுடைமைவாதம் இயக்கங்களின் மீதான ம. சிங்காரவேலரின் தாக்கம்: பிராமணர், பிராமணரல்லாதோர் பாகுபாடு காங்கிரசு கட்சியில் நிலவுவதைக் கண்டித்து பெரியார் விலகியபோது ம. சிங்காரவேலர் அவரை ஆதரித்தார். சோவியத் ஒன்றியம் சென்று வந்து ஈ.வெ.ரா. பெரியார் அதன் தாக்கத்தில் பொதுவுடைமைவாதக் கருத்துகளை ஏற்றுக்கொண்டு சுயமரியாதை இயக்கத்தினை சுயமரியாதை சமூக நீதிக்கட்சி என்று பெயர் மாற்றினார். அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்தளிப்பதில் ம. சிங்காரவேலர் உறுதுணையாக நின்றார். இந்த அமைப்பு தமிழ்நாடு முழுவதும் பரவ ம. சிங்காரவேலர் அயராது பாடுபட்டார்.

பெரியார் நடத்திய "குடியரசு" உள்ளிட்ட இதழ்களில் மூட நம்பிக்கைகளுக்கு எதிராக ஏராளமாக கட்டுரைகளையும் எழுதினார். அவரது கட்டுரைகள் எளிமையான நடையில் புரிந்துகொள்ளும் வகையில் இருந்தன.

ம. சிங்காரவேலர் பொதுவுடைமைவாதத் தத்துவத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டவர். காங்கிரசு பேரியக்கம் தொழிலாளர் அமைப்புகளை ஆதரிக்க வேண்டும் என்று 1920-இல் தலைமைக்குத் தந்தி அனுப்பினார். அது சென்னை சமதர்மவாதிகள் சார்பில் அனுப்பப்படுவதாக அதில் தெரிவித்திருந்தார். அகில இந்திய காங்கிரசு குழுவின் கூட்டங்களிலும். மாநாடுகளிலும் பொதுவுடைமைவாதப் பிரதிநிதியாகவே வாதிட்டார்.

தொழிலளர்கள் பலமாகத் திகழ்ந்த சென்னை நகரில் இந்தியாவின் முதல் உழைப்பாளர் தினத்தை 1923 மே முதல் நாளன்று நடத்திக்காட்டினார். அதே நாளில் தொழிலாளர் விவசாயிகள் கட்சி அமைக்கப்படுவதாகவும் அறிவித்தார்.
அக்கட்சியின் குறிப்பிடத்தக்க கோரிக்கைகள் பின்வருமாறு.

தொழிலாளர்களுக்கான கோரிக்கைகள்:

- எட்டுமணிநேர வேலை
- சங்கம் அமைக்கும் உரிமை
- தங்கள் கோரிக்கைகளை வென்றெடுக்க கடைசி ஆயுதமாக வேலைநிறுத்தம் செய்யும் உரிமை
- கோரிக்கைகளை பரிசீலிக்க முத்தரப்பு பேச்சு வார்த்தைக் குழு
- குறைந்தபட்ச ஊதியம்
- அடிப்படை வசதிகளுடன் கூடிய சுகாதாரமான குடியிருப்பு வசதி
- மருத்துவம் மற்றும் ஆயள் காப்பீடு
- வருங்கால வைப்பு நிதி
- சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு
- இலவச மருத்துவ உதவி

- ❖ பேறுகால விடுப்பு
- ❖ ஒப்பந்த முறை ஒழிப்பு

**விவசாயிகளுக்கு**

- ❖ இலவச நீர்ப்பாசனம்
- ❖ சமீன்தார முறை ஒழிப்பு

**பொதுமக்களுக்கு:**

- ❖ அனைவருக்கும் வாக்குரிமை
- ❖ அடித்தட்டு மக்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் போன்றோர் தேர்தலில் போட்டியிட அனுமதி.

1925 ல் கான்பூர் நகரில் இந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதம் மாநாடு நடந்தபோது அதற்குத் தலைமை ஏற்று நடத்தித் தந்தார். அப்போது “வன்முறையற்ற மார்க்சியப் பாதை” யை வலியுறுத்திப்பேசினார். மேலும், ”இந்தியாவுக்கேற்ற மார்ச்சியப் பாதையைத் திட்டமிட வேண்டும்” என்றும் கேட்டுக்கொண்டார். ”காங்கிரசு கட்சியில் இருந்துகொண்டே பொதுவுடைமைவாதிகள் தனிப்பிரிவாக இயங்க வேண்டும்” என்றார். இதையொட்டி காங்கிரசு கட்சிக்குள் சமதர்ம பிரிவு உருவானது.

**ம. சிங்காரவேலரின் வாழ்வும் சமூக பணியும்**

ம சிங்காரவேலர் இளம் வயதிலேயே இந்து மதத்தில் நிலவும் வர்ண அமைப்பிலும் மூட நம்பிக்கைகளிலும் அதிருப்தி அடைந்திருந்தார். இதன் விளைவாக 1890 களிலேயே பல இடங்களில் பௌத்த சங்கம் அமைத்து வர்ண அமைப்புக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகப் பரப்புரை செய்தார்.

வசதி மிக்க குடும்பத்தில் பிறந்து சட்டம் பயின்ற சிங்கார வேலர் சென்னை மாநகராட்சி மன்றத்தில் உறுப்பினராகவும் அதன் சுகாதாரக் குழுவிலும் பணியாற்றினார். அப்போது குடிசைப் பகுதிகளில் கொள்ளை நோய் தாக்கம் அதிகமாக இருந்ததால் சுகாதாரம், கல்வி ஆகிய பிரச்சனைகளுக்கு முன்னுரிமை அளித்தார்.

தொடர்ந்து குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடினார். இதன் அடிப்படையிலேயே காங்கிரசு இயக்கத்தில் செயலாற்றினார். பின்னர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார்.

தனது ஐம்பது வயதைக் கடந்தபின்பே அரசியலில் இறங்கினாலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக முதுமையையும் பொருட்படுத்தாமல் பகுத்தறிவு மற்றும் பொதுவுடைமைவாதக் கருத்துக்களையும் விடாது பிரசாரம் செய்தார்.

தனது ஐம்பது வயதைக் கடந்தபின்பே அரசியலில் இறங்கினாலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமாக முதுமையையும் பொருட்பாடுத்தமால் பகுத்தறிவு மற்றும் பொதுவுடைமைவாதக் கருத்துகளையும் விடாது பிரசாரம் செய்தார். ம. சிங்காரவேலர் தென்னிந்தியாவின் முதல் பொதுவுடைமைவாதி என்று நேசத்துடன் நினைவு கூறப்படுகிறார்.

**திராவிடக் கொள்கைவாதம்**
**அறிமுகம்:**

தமிழக அரசியல் சிந்தனையாளர்களில் இ.வெ.ரா. பெரியார் மிகச்சிறந்த சிந்தனையாளராக கருதப்படுகிறார். ஏனெனில் இவர்க தமிழகத்தின் தலைசிறந்த சீர்திருத்தவாதி ஆவார். இவரைப்பற்றி விரிவாக இப்பாடத்தில் காணலாம்.

பன்னெடுங்காலமாக தமிழகத்தைப் பீடித்திருந்த மூடப்பழக்க வழக்கங்கள், பெண்ணடிமை, சமூகப் பின்னடைவுகளுக்கு அறிவையும், சுய மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டு தனது நெடிய 106 வாழ்நாள் முழுவதும் போராடியவர். இதற்காகத் தந்தை பெரியார் என்று தமிழக மக்களால் அழைக்கப்படுபவர். பண்பாட்டு ரீதியாக அவர் வகுத்துத் தந்த திராவிடக்

கருத்துக்கள் இன்று இந்தியா முழுவதும் ஒளி வீசுகிறது என்று புகழ்பெற்ற சமூக நீதி அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஈ.வெ. ராமசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட தந்தை பெரியார் ஈரோட்டில் செல்வச் செழிப்புள்ள வணிகக் குடும்பத்தில் 1879-இல் பிறந்தார். இளமைப் பருவத்திலேயே தனது குடும்பத்திலும், சுற்றியுள்ள சமுதாயத்திலும் நிலவிய மூட நம்பிக்கையை எள்ளி நகையாடிய பெரியார், தொடக்கத்தில் தீவிர அரசியலில் ஈடுபடவில்லை. ஆனாலும்,ஈரோடு நகர்மன்றத்தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தார்.

காந்தியின் அரசியல் வருகையால் ஈர்க்கப்பட்ட பெரியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்து சுதந்திரப் போராட்ட இயக்கத்திலும், சமூக சீர்திருத்தத்திற்காகவும் தீவிரமாகப் பங்காற்றினார். (காங்கிரசு இயக்கத்தில் மேட்டுக்குடியினரின் செல்வாக்கு கோலோச்சிய 1920-களில் அடித்தட்டு மக்களிடம் காங்கிரசு பேரியக்கத்தைக் கொண்டு சென்றதிலும், ஆலய நுழைவு போராட்டங்கள் வெற்றி பெற்றதிலும் பெரியார் பெரும் பங்காற்றினார். ஆனால், காங்கிரசு கட்சியில் வர்ணாசிரம கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதால் அதிலிருந்து விலகி நீதிக்கட்சியில் இணைந்து சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இதற்குப் பின்னர் தந்தை பெரியாரின் பங்களிப்புகள் மற்றும் செயல்பாடுகள் இந்திய மற்றும் தமிழக அரசியலில் பிரிக்க முடியாத வரலாறாயின.

தேசத்தின் பெயரால் ஓர் குழு மக்களைச் சுரண்ட நினைத்தால் அத்தேசம் போராடிப்பெற்ற உண்மையான சுதந்திரம் அதுவல்ல என்றார் ஈ.வெ.ரா. பெரியார் பல்வேறு நிலைகளில் தேசம், இனம் மற்றும் தேசியவாதம் ஆகியவற்றை பெரியார் கடுமையாக விமர்சித்தார். தேசம்,தேசியவாதம், மற்றும் தேசிவாதம் ஆகியவை ஒரே மாதிரியான கருத்தாக்கங்களே என அவர் கருதினார். இவ்வேறுபாடுகளே அந்நாட்டிலுள்ள ஒட்டுமொத்த குடிமக்களின் சுயமரியாதையைக் குறிப்பதாக அவர் கூறுகிறார். அவர் மேலும் கூறுகையில் தமிழகத்தில் தேசியவாதத்தைப் பற்றி யாரேனும் பேசுகையில் அசர்கள் மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்களா? என தாம் வியப்பதாகப் பெரியார் வினவுகிறார்.

**தேசியவாதம் என்பது சுருண்டலாகும்**:

இந்தியர்கள் மற்றும் தமிழர்களை மட்டுமல்லாமல் மக்களின் சுயமரியாதையைப் பற்றியும் கவலைப்படாத மனிதர்களும் உள்ளனர். அவர்கள் தங்களின் சுயநலன் மற்றும் மேம்பாட்டிற்காக மக்களை தேசம் மற்றும் தேசியவாதத்தினை நம்பவைத்து ஏமாற்றுவர், தேசம் மற்றும் தேசியவாதத்திற்காக சுயமரியாதை மறைக்கப்படுமானால் அது தேசத்திற்கு எதிரான குற்றமாகும் என்றார் பெரியார்.

தேசிய வாதம் என்பது ஓர் கற்பனையான உணர்வாகும். ஆகவே தேசிய உணர்வு என்பது வசதிமிக்க மற்றும் அதிகாரத்தில் உள்ளவர்களால் மக்களை ஏமாற்றி அவர்களின் எதிர்மறை உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் சதியாகும். அது ஓர் தவறான அனுமானமாகும். இதனை வசதிபடைத்த உயர் குடியினர் ஏழை சமுதாயத்தின் உரிமைகளைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துகின்றனர்.

தேசியவாதம் என்பது மக்களுக்கு ஓர் மயக்கத்தையும் உணர்வுப்பூர்வமான வெறியையும் குறிக்கும் சொல்லாகி விட்டது எனக் கூறுகிறார்.

உலகளாவிய தேசியவாதத்திற்கு மறுப்பு பெரியார் தனது இலங்கைப் பேருரையில்,

பெரியார் ஓர் கடவுள் மறுப்புக் கொள்கையுடைய முற்போக்கான சமூக சீர்திருத்த
பொரியாரின் படைப்புகள் மற்றும் மரபு:
சராசரித் தமிழனுக்குப் பெரியார் ஓர் கொள்கையாக உள்ளார். சமூக

தேசம், தேசியவாதம் என்பதைக் கடுமையாக எதிர்த்துள்ளார். "இந்திய தேசியவாதம்" என்ற கருத்தை சிலர் தங்கள் ஆயுதமாகக் கையிலெடுத்த காலத்தில் தேசியவாதத்தைப் பற்றி பெரியார் எதிர்த்துப் பேசியுள்ளார். இந்திய தேசியவாதத்தை மட்டுமின்றி, உலகில் உள்ள மற்ற நாடுகளின் தேசியங்களையும் சான்றாகக் காட்டி, தேசியவாதத்தை மறுக்கிறார் பெரியார்.

”தேசியவாதம் என்பது முதலாளித்துவவாதிகள் தங்கள் தங்கள் மூலதனத்தை பெருக்கிக் கொள்ள ஏழை மக்களை பலி கடாவாக்குவதற்காகக் கற்பித்துக் கொண்ட தந்திர வார்த்தையாகும்.

உதாரணமாக, “இங்கிலாந்து நாட்டின் பணக்கார சமூகத்திற்கு அமெரிக்கா நாட்டின் பணக்கார சமூகத்துடன் மோதல் வந்தால் இங்கிலாந்து தேசத்து முதலாளிகள் அந்நாட்டின் ஏழைமக்களைப் பார்த்து “ஓ இங்கிலாந்து மக்களே! தேசபக்கதர்களே! தேசத்துக்கு நெருக்கடி வந்து விட்டது, என்று கூறி ஏழை சமுதாயத்தை தூண்டுகின்றனர்.

இவ்வகைப் பொய்யுரைகள் மூலம் மக்களைச் சுரண்டி பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்கிறார்கள் என்று கூறுகிறார்.

பல்வேறு தேசிய இனங்களையும் - தேசங்களையும் உள்ளடக்கிய நாடு ரஷ்யா, அந்த ஒன்றுபட்ட ரஷ்யாவில் எந்த வகையான ஏற்றத் தாழ்வுகளும் இல்லை என்று கூறி, அந்த வகையான புரட்சிக்கு ஆதரவாக நின்றவர் பெரியார்.

”கடவுள், மதம், மற்றும் தேசியவாதம் ஆகியவை அடியோடு அழிக்கப்பட்ட நாடுகளில் பணக்காரக் கொடுமையும், சோம்பேறி வாழ்க்கையும், பட்டினி கஷ்டமும். உயர்வு தாழ்வு நிலையும் காணப்படவில்லை. அது போன்ற நாடுகளில் கடவுள், மதம் மற்றும் தேசப்பற்று ஆகியவை இல்லை. ஆனால் மனித சமூக சமத்துவ சமுதாயமே அந்நாடுகளில் முக்கியமாக்க கருதப்பட்டது. அங்கு பணக்காரன் - ஏழை. முதலாளி – தொழிலாளி, அதிகாரி – குடிமக்கள் என்கின்ற பாகுபாடு காணப்படவில்லை. மேன்மக்களுக்கு சமத்துவ விரும்பிகளும் கடவுள் மற்றும் தேசியவிவாதத்திற்கு முன்னுரிமை தரும் தேசத்திற்கு சமமானவர்கள் அல்ல.

உலகில் உள்ள அனைத்து தேசங்களையும், தேசியங்களையும் கடுமையாக எதிர்த்தது போல “இந்திய தேசம்“ என்பது, பல்வேறு தேசிய இனங்களை – பல்வேறு தேசங்களை இணைத்து உருவாக்கப்பட்ட ஒன்று – அந்த இணைப்பு ஒரு சிலரின் ஆதிக்கத்திற்குக் கருவியாக இருந்தால் அதையும் பெரியார் எதிர்க்கிறார்.

இந்தியாவில் வேறுபாடுகளின் தேசம்

“தேசம் என்ற கருத்தியல் இந்தியாவுக்குப் பொருந்துமா? என்ற கேள்விக்கு அவரே சிறப்பான பதில் அளித்துள்ளார்.

“மதராஸ்“ என்பது ஒரு தனித் தேசம் அல்லவென்றும் அது தனித்து செயல்பட முடியாது என்றும் தோழர்கள் சிலர் சொல்கிறார்கள். மதராஸ் ஒரு தனி தேசமாக இருந்தது. இன்றும் இருக்கிறது. அதுதான் “திராவிடம்“. அதனுடைய நாகரிகம், பண்பாடு பழக்கவழக்கங்கள் ஆகியவை வங்காளம், பம்பாயிடம் இருந்து வேறுபட்டது. ஆங்கிலேயர் ஆட்சியால் ஆங்கில மொழி அறிமுகம் ஆகி இருக்கிறது. ஆங்கிலமும் ஆங்கிலேயர் ஆட்சியும் ஒழிந்து ஹிந்தி மொழி வந்தால் அன்றே மதராசானது ஜெர்மனி, இத்தாலி, பிரான்சு முதலிய ஏதோ ஒரு நாட்டுடன் சேர்ந்துவிடும்.

”இந்தியா ஒரு “தேசம்“ என்று சொல்வதைவிட, “திராவிட நாடு“ ஒரு “தேசம்“, ஆந்திராநாடு ஒரு “தேசம் வங்காள நாடு ஒரு “தேசம்“ என்று சொன்னாலும் பொருந்தும். உதாரணமாக திராவிட நாட்டை எடுத்துக்கொண்டால் திராவிடநாடு என்று தனிப்பட்ட பண்பாடு கலை, மொழி, நாகரிகம், மற்றும் ஆட்சியின் கீழ் ஆயிரக்கணக்கான வருடங்கள் இருந்து வந்ததென்று சரித்திரம் கூறுவதை யாராலும் மறைக்க முடியாது.

மாறுபட்ட ஆட்சிகளின் கீழ் இருந்துவரும் ஒரு நாட்டை ஒரு “தேசம்“ என்று சொல்லி எல்லா மக்களையும் ஒன்றுபடுத்தி அன்னியனிடமிருந்து விடுதலையடைந்த பின்னர் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரை ஆளலாம் என்றால், இதை யார் ஒப்புகொள்வார்கள் என்று கேட்கிறார். பெரியார் முன்மொழிந்த “திராவிட தேசியவாதம்“ முற்றிலும்ட பெருவாரியாக மத ஆதிக்கங்களுக்கு எதிராக இருந்தது.

**மொழிக் கொள்கை:**

"அவர்வர் மொழியைக் காப்பாற்றிக்கொள்வதற்கு அவரவருக்கு உரிமை உண்டு. இந்த உரிமை திராவிட சமதர்மக் குடியாட்சியில் பாதுகாக்கப்படும். எந்த ஒரு மொழியும், மற்றொரு மொழி பேசுபவர் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படக்கூடாது. பிரிவினை வாதத்திற்கான ஆயுதமாக மொழி பயன்படுத்தப்படக்கூடாது. மக்களின் அனைத்து தேவைகளுக்கும் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்திருப்பது எதனையும் வெளிப்படுத்தாது. ஒருவேளை மொழியானது தேசியமயமாக்கப்பட்டால் மக்களுக்கு அதனால் பட்டினியில் இருந்து விடுதலை கிடைக்குமா? தெளிவாகக் கூறுவதெனில் தமிழ் உழைப்பாள்கள் தமிழ் பேசும் முதலாளிகளாலேயே சுரண்டப்படுகின்றனர்.

**சாதியற்ற சமுதாயம்:**

பெரியார் "தமிழ்நாடு தமிழருக்கே, திராவிடநாடு திராவிடருக்கே" என்று தொடர்ச்சியான பரப்புரைகள், போராட்டங்களை நடத்தினார். பொதுச்செயல்திட்டம்,பொதுவேலைத்திட்டம், இஸ்லாமுக்கு மதமாற்றம், திராவிடநாட்டுப் பிரிவினை போன்றவற்றில் பல்வேறு வடிவங்களில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போராடினார்.

ஆனால், ஆதிக்க சக்திகள் மிக எளிதாக, தமிழன், தமிழ்த் தேசியவாதம், தேசிய இனம் போன்ற உணர்வுகளை ஏற்றி, சில தமிழ் தேசியத் தலைவர்கள் மூலமாக மீண்டும் தங்களது ஆதிக்கத்தைத் தொடரும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்ட போது, ஒருகால கட்டத்தில் பெரியார், இந்தத் திராவிடநாடே கூட வேண்டாம். சாதி ஒழிப்பே முக்கியம் என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரின் சிந்தனைத் தொகுப்புகள் வழியாக அறியலாம்.

"திராவிடநாடு பெறாவிட்டாலும் சரி சில ஆதிக்க சக்திகளை ஒழிக்க முடியாவிட்டாலும் சரி முதலாளித்துவத்தை அழிக்க முடியாது போனாலும் சரி சாதியை ஒழிக்கின்ற ஒரே காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்தால் போதும் என்கிறார். இது ஒன்றே திராவிடர் கழகத்தின் லட்சிய வெற்றி என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அந்த அளவுக்கு இந்த சாதி வெறியானது, திராவிட இனத்தைச் சின்னாபின்னப்படுத்தி ஆரியத்துக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறது" என்று 1950 களின் தொடக்கத்தில் அவர் தனது அரசியல் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

, , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , , ,